மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI

தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்

DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION

TIRUNELVELI

# பணித்தேர்வுத் தமிழ்

## STAS41

முதுகலை இரண்டாமாண்டு

நான்காம் பருவம்

2025

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012

## பணித்தேர்வுத் தமிழ்

அலகு 1

தமிழ்ச் சங்கம் - அகத்தியர்- தொல்காப்பியம்- சங்க இலக்கியம்-அற இலக்கியம்- இரட்டைக் காப்பியம்

அலகு 2

பக்தி இலக்கியங்கள் – நாயன்மார்கள் – ஆழ்வார்கள் - சமயமும் தமிழும் - பௌத்தம் - சமணம் – சைவம் – வைணவம் - புராணங்கள்

அலகு 3

சிற்றிலக்கியங்கள்- பதினெண் சித்தர்கள்- உரையாசிரியர்கள்-பிற்காலப் புலவர்கள்- கிறித்தவமும் தமிழும்- இசுலாமியமும் தமிழும்

அலகு 4

19ம் நூற்றாண்டு தமிழ் - கவிஞர் பெருமக்கள் - புதுக்கவிதை-உரைநடை இலக்கியம் – வரலாறு - சிறுகதை இலக்கியம் - நாவல் இலக்கியம்

அலகு 5

நாளிதழ்கள் - இசைத்தமிழ் வரலாறு - நாடக வரலாறு - 20ம் நூற்றாண்டு தமிழ் வளர்ச்சி - பிறநாடுகளில் தமிழ் - ஹைக்கூ-சென்ட்ரியூ

## அலகு 1

### தமிழ்ச் சங்கம்

சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்களும், குறுநில மன்னர் பலரும், தமிழ்ப்புலவர்களை மதித்துப் போற்றினர்; அவர்களுக்குப் பெரும் பொருளைப் பரிசாக அளித்தனர். இச்செய்தி சங்க இலக்கியங்களால் அறியப்படுகிறது. எனினும், தம் தலைநகர்களில் தமிழ் வளர்ச்சிக்கு எனச் சங்கங்களை நிறுவிப் பன்னூறாண்டுகள் தமிழ்ப்பணி புரிந்தோராகப் பாண்டியர்களே அறியப்படுகின்றனர்.

பிற்கால இலக்கியங்கள் பாண்டிய நாட்டையே சிறப்பாகத் தமிழ்நாடு என்று பாராட்டியுள்ளன. சங்க இலக்கியத்தில்

'தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின்

மகிழ் நனை மறுகின் மதுரை'

'தமிழ் வையைத் தண்ணம்புனல்'

'இவனே, தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே'

என்று வரும் பகுதிகள் மதுரைக்கும் தமிழுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கும்.

பாண்டியர் மூன்று சங்கங்களை நிறுவித் தொண்டு செய்த விவரத்தினை கி.பி. 8ம் நூற்றாண்டைச் சார்ந்த இறையனார் களவியல் உரையே முதன் முதல் தருகின்றது.

### சங்கம் இருந்தமைக்குச் சான்றுகள்

இடைச்சங்கம் இருந்த இடம் பாடமாம். இது கடலால் அழிக்கப்பட்டது. எனவே சான்றுகள் இல்லை. எனினும் இந்நகர் பற்றி வடமொழியின் பெரும் புலவர்கள் வால்மிகி, வியாசர் பிற்காலச் சாணக்கியர் குறிப்பிடுகின்றனர். இதனால பாண்டியர்தலைநகராய் இந்நகர் இருந்த உண்மைவினங்கும் இதன் அடிப்படையே வரும் பரம்பரைக் கதைகள் சங்கம் பற்றிச் கட்டுகின்றன.

இலக்கியங்கள் மூவேந்தர்களில் பாண்டியர்களைத் தமிழோடு இணைத்துப் பாராட்டுதலை வெறும் புகழ்ச்சி என்று கூறி ஒதுக்கிவிட முடியாது. அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டை உணர்ந்தே அவை அவர்களைத் தமிழாய்க் கழ பாராட்டின என்பது உண்மையாகும். எனவேதான் அவர்தம் தலைநகர் மதுரையும்

"பாடுதமிழ் வளர்த்த கூடல்" (புறத்திரட்டு)

"தமிழ்நிலைபெற்றதாங்கரும் மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை (சிறுபாண்)

"தென்தமிழ்நன் நாட்டுத் தீதுதீர்மதுரை" (சிலம்பு)

"தென்தமிழ் மதுரை செழுங்கயைப் பாவாய்" (மேகலை)

என மதுரையைத் தமிழோடு இணைத்துப் பாராட்டுகின்றன.

இமிழ்குரல் முரசும் மூன்றுடனாளுத்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே (புறம் 38)

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை ( புறம் 72)

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் பாடிய இப்பாடல் ஒன்றே போதும் மதுரையில் சங்கம் என்ற அமைப்பு இருந்து தமிழ் ஆய்ந்தமைக்கு,

"சோமன் வழிவந்த பாண்டியதின்
நாடுடைத்து நல்லதமிழ்"

எனத் திருமுருகாற்றுப்படை உரையில் நச்சினார்க்கினியர் கூறும் மேற்கோள் எண்ணத்தக்கது.

"தொல்லாணை நல்லாசியோ
புணர் கூட்டுண்ட புகழ் சால் சிறப்பின்
நிலந்தரு திருவினெடியோன்" (மதுரைக்காஞ்சி)

எனப் பாண்டிய மன்னர்களும் தமிழோடு இணைந்தனர்.

தலைநகரும் மன்னரும் மட்டுமின்றித் தலைநகரில் ஓடும் வையை த்தி கூடத் தமிழால் மலர்ந்தது என்பதைத் 'தமிழ் வையைத் தண்ணம் புனல்' (பரிபாடல் 6) எனும் தொடர் விளக்கும்.

சங்கம் இருந்தமைக்குப் பிற்கால இலக்கியங்கள் மிகுதியான சான்றுகள் தருகின்றன.

திருமங்கையாழ்வார் 'சங்கமுகத்தமிழே. சங்கமலிதமிழ்' என்பார். திருநாவுக்கரசரும் சிவன் தருமிக்கு அருளியதைக் கூறும்போது 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி' என்கிறார்)

'சங்கத் தமிழ் மாலை முப்பதும்'

எனஆண்டாளும்,

"தலைச்சங்கப் புலவனார்தம்முன்'

எனச்சேக்கிழாரும்.

சங்கத் தமிழ்மூன்றும்தர்"

என ஔவையாரும்.

'தமிழ்ச்சங்கம் சேர்கிற் பிரேல்'

எனக் கம்பரும் சங்கம் என்ற கொல்லைப் பல்வேறு இடங்களில் அமைத்துப்

பாடியுள்ளமை இங்கு எண்ணத்தக்கது.

மேலும் உரையாசிரியர்களில் பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்றோரும். முச்சங்கம் இருந்தமையைத்தங்கள் உரையில் குறிப்பிட்டுள்ளனர்.

கி.பி.10.ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ன்ெனமனூர்ச் தமிழ்நாட்டில் சங்கம் இருந்தமையைச் சுட்டுகின்றது.

'மாபாரதம் தமிழ்ப்படுத்தும்
மதுராபுரிச்சங்கம் வைத்தும்'

என்கிறது. எனவே மதுரையில் அமைந்த சங்கம் மகாபாரதத்தைத் தமிழ்ப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகின்றது. பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற புலவர் பெயரும் அதை உறுதிப்படுத்துகிறது.
கடைச்சங்கம் மதுரையில் அமைந்தது. வடமதுரையில் 1850 ஆண்டுகள் நிலைபெற்றது. சேந்தம்பூதனார், மருதன் இளநாகனார், நக்கீரர், சிறுமேதாவியார் உட்பட 49 புலவர்கள் சங்கத்தில் வீற்றிருந்தனர். 449 புலவர்கள் தமிழாய்வு செய்தனர். அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலி, பரிபாடல், கூத்து,வரி, றிசை, பேரிசை போன்ற இலக்கியங்களும் இசை நூல்களும் தோன்றின. அகத்தியமும் தொல்காப்பியமும் இலக்கண நூல்களாக விளங்கின. முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 பாண்டிய மன்னர்கள் வீற்றிருந்து சங்கத்தை வளர்த்தனர்.

**சங்கம் பற்றிய அறிஞர்கள் கூற்று**

1. 'சங்கம்' என்ற சொல் தமிழ்ச் சொல்லன்று. சங்க இலக்கியங்களில் இச்சொல் பயின்று வரவில்லை என்று கூறி, முச்சங்கங்கள் தமிழரின் கற்பனை என்று கூறுவோருண்டு. அவர்களில் முதன்மையானவர்கள் கே.என்.சிவராசப் பிள்ளை, பி.டி.சீனிவாச ஐயங்கார், எஸ்.வையாபுரி பிள்ளை ஆகியோர். இதற்கு இவர்கள் பொதுவாகக் கூறும் காரணங்களில் சிலவற்றைக்காணலாம்.

2.சங்கம் மரபு வழிப்பட்டதன்று. சமயம் சார்ந்தோரின் கற்பனை. புத்த, சமண சமயங்களைப் போல் மொழிவளர்க்கும் சங்கம் இருந்தது எனக் கூறவேண்டும் எனும் கருத்தில் இத்தகைய சங்கம் பற்றிய பொய்க் கதைகளைப் பரப்பினர்.

3.சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்திருப்பின் பழந்தமிழ் இலக்கியங்களில் சங்கம் பற்றிய குறிப்பு ஏன் இல்லை? என்று வினவுகின்றனர்.

4. அகத்தியம் முதல் நூல் என்றால் அதற்கு முன்பு பல இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். அவற்றைப் பற்றி ஏன் எந்தக் குறிப்பும் இல்லை?

5. 4400, 3700, 1850 ஆண்டுகள் என்பதும் 4449, 3700, 449 புலவர்கள் பாடினர் என்பதும் 89 மன்னர்கள் 4440 ஆண்டுகள் ஆண்டனர் எனும் கணக்கும் கற்பனைக்கு உதவும்; கணக்கிற்கு உதவா. இது சங்கம் கற்பனையே என்பதை எடுத்துரைக்கும் என்பர்.

6. மூவேந்தர்களும் வாழ்நாளில் பெரும் பகுதியைப் போரும் பூசலுமாய் நடத்திச் சென்ற நிலையில் இவர்கள் ஒன்று கூடிச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் என்பது ஏற்புடைத்தாக இல்லை என்பர். பாண்டியர் அவையில் சங்கம் இருந்தது எனின் பாண்டியனைக் குறை கூறி, பிற மன்னர்களைப் பாராட்டும் புலவர்களின் பாடல்களைப் பாண்டிய மன்னர்கள் எப்படி அரங்கேற்றினர் எனும் கேள்வியும் சங்கம் இருந்திருக்க முடியாது என்ற எண்ணத்தை வலுப்படுத்தும் என்பர்.

7.இறுதியாக கே.என்.சிவராசப் பிள்ளை, பி.டி.சீனிவாச ஐயங்கார் ஆகிய இருவரும் சங்கம் என்ற சொல்லே தமிழ்ச்சொல்லன்று. தமிழ் வளர்க்க உருவாக்கிய அமைப்பிற்குத் தமிழ்ச் சொல்லைவிட்டு வேற்று மொழிச் சொல்லை வைப்பார்

**சங்ககால இலக்கண நூல்கள்**

**1.அகத்தியம்**

அகத்தியம்,அகத்தியர் பரந்த இலக்களநூல் நூல் இடைக்காலி 1டிட இலக்கிய உலகில் பெரும் புகழ் பெற்ற புலவர் அகத்தியர். இவரைப்பற்றிழ புராணக் கதைகள் மிகுதி அவை ஏற்புடைத்தல்ல, முச்சங்கத்திலு பெருமைக்குரிய நூலாக அகத்தியம் பேசப்படும் என்னும்நூல் கிடைக்கவி உரையாசியர்கள் மேற்கோளாகக் கையாண்டுள்ள சில நூற்பாக்களே அகத்திய எனக் கிடைத்துள்ளன. நூற்பாக்களும் தொல்லாப்பியம் அளவிற்குச் செய்ய இல்லை இடைச் செருகல் போன்று உரையாசிரியர்கள் எழுதித் தம் புலமை அகத்தியத்தில் மேல் ஏற்றினரோ என்று எண்ண இடமுள்ளது.

தொல்காப்பியத்தின் மூல நூல் அகத்தியம் 1200 சூத்திரங்கள் கொண்டது கண் அகத்தியத்தில் எழுத்து, சொல் பொரும் இடம்பெற்றுள்ளளயல், அமைச்சிய பார்ப்பனவியல், சோதிடம் போன்றவையும் என்பர்.

தொல்காப்பியம் குறிப்பிடும் முதல் நூல் அகத்தியம். இதனை, "ஆனாப் பெருமை அகத்தியன் என்னும் அருத்தவமுனிவன் ஆக்கிய முதல்நூல்"

எனப் பன்னிருபடலமும் இக்கூற்றினை அரண் செய்கின்றது. அகத்தியம் நம் அகத்திய முனியர் புலவர் பலராலும் பாராட்டும் பேறு பெற்ற பெர முனிவராவார்.

சும்பர் அகத்தியரை " என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டாள்' எனப் பாராட்டுகின்றார்.

வில்லிப்புத்தூராகும்'அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு' என்பர்.

பொதிய மலையில் தங்கிய அகத்திய முனிவர் அங்குத் தமிழ்ச் சங்கத் நிறுவினார் எனும் கருத்து உள்ளது. அவர் பற்றிப் பல்வேறு புராணக் கதை உள்ளன. அகத்தியர் பவர் என்று கூறும் அறிஞர்கள் உள்ளனர். அகத்தியரின் சீடர்ல் பன்னிரண்டு பேர் அவர்களுள் ஒருவரே தொஸ்காப்பியர் தொல்காப்பியப் பாடே பாடிய பணம்பாரனாகும் அகத்தியரின் சீடர்களுள் ஒருவரே. மற்றொருய அதங்கோட்டாசான்.

புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிரு படலம் ஆகிய இலக்கண நூல்களில் பாயிரங்கள் அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவருள் தொல்காப்பியரே த மாணாக்கர் எனக் கூறிச் சிறப்பிக்கின்றது.

**தொல்காப்பியம்**

தமிழ் இலக்கண நூல்களில் பழமையானதாக அகத்தியம் இருப்பினும். தமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் முதல் நூல் தொல்காப்பியம். தொன்மைக்கும், இலக்கியப் பழமைக்கும் சான்றாக இருப்பது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் இதனை வழி நூல் என்பர். எனினும் இக்கருத்து ஏற்புடைத்தன்று காலத்தால் முந்திய சமுதாயப் பண்பாடுகளை தமக்கு உணர்த்தும் கருவூலம் தொல்காப்பியம், ஆசிரியர் பற்றி அதிகமாக அறிய முடியவில்லை. நாப்பியர் குடியைச் சார்ந்தவர், எழுதியோன் பெயரால் நூல் அமையும் மரபு உண்டு அதன்படி தொல்காப்பியர் இயற்றிய நூல் தொல்காப்பியம் ஆயிற்று.

**காலம்**

தொல்காப்பியர் காலம் பற்றிய அய்யில் இன்றுவரை சரியான முடிவு ஏற்படவில்லை. மாறுபட்ட கருத்துக்கள் அறிஞர்களிடையே உருவாகியுள்ளன.

தொல்காப்பியம் ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்று கூறுவோரும் உண்டு. அது போன்று எஸ்.வையாபுரிப் பிள்ளை போன்றோர் சங்க

இலக்கியத்திற்கும் பிந்தியது என்பர். இதுவும் மிகையான கூற்றே, வையாபுரிப்பிள்ளையின் இக்கருத்தினை க.வெள்ளைவாரணர் காரண காரியங்களோடு மறுத்துள்ளார். எனினும் வெள்ளைவாரணர் தொல்காப்பியர் கி.மு. 5320 இல் வாழ்ந்தார் என்பர், இக்கருத்திற்கும் வலிமையான சான்றுகளில்லை

மா.இராசமாணிக்கனார் கருத்தும் (கி.மு. 400) சேஷ அய்யங்கார் கருத்தும் (கி.மு.300) கிட்டத்தட்ட ஏற்புடையதாக உள்ளன. எப்படி ஆராயினும் கிருத்துவிற்கு (கில் தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம் என்பதில் கருத்து வேறுபாடு மிகுதியாக இல்லை, கிருத்துவிற்குப் பின் தொல்காப்பியத்தைக் கொண்டு வருவோர் தரும் காரணங்களும் ஏற்புடைத்தாக இல்லை எனலாம்.

**சான்றுதரும் தொல்காப்பியம்**

தொல்காப்பியத்திற்கு முன்பே பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும். இலக்கியத்திலிருந்தே இலக்கணம் தோன்ற முடியும். தொல்காப்பியம் இதனை நன்கு விளக்குகின்றது. தொல்காப்பியர் விதிகளை, மரபுகளைக் கூறும்போது பலவிடங்களில் தான் கூறுவதாக அமைக்காது'என்ப', 'மொழிப','யாப்பறிபுலவர்", 'என்மனார் புலவர்' எனமுன்னோர் கூற்றைச் சுட்டிச் செல்லும் முறையினைக் காண முடிகின்றது. தொல்காப்பியர் ஏறத்தாழ 250க்கும் மேற்பட்ட இடங்களில் தமக்கு முன்பிருந்தோரைச் சட்டிச்செல்கின்றார்.

எஸ்.வையாபுரிப்பிள்ளை தொல்காப்பியத்தைச் சங்ககாலத்திற்கும் பித்தியது எனக் கூறிக் கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்குக் கொண்டு வருவார். இது ஏற்புடைத்தன்று, மொழிக்கு முதலில் சகரம் வரக்கூடாது என்பது தொல்காப்பிய விதி ஆயின் காலப் போக்கில் மாறுபட்டு இது மாறிச் சங்க இலக்கியத்தில் சகரம் மொழிக்கு முதலில் வருகிறது (எ.கா, சவட்டு, சதுக்கம்). இதனால் புதியன புகுதல் வழுவல.

**நூல்பகுப்பு முறை** :

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்கள். அமைந்துள்ளது. அதிகாரத்திற்கு ஒன்பது இயல்கள் எனும் முறையில் 27 இயல்களைப் கொண்டு 1602 நூற்பாக்களைக் கொண்டு அமைகிறது. முழுமையாக உரைகண்டவர் கல்லாடர், தெய்வச் ஆகியோரும் உரை

எழுதியுள்ளனர். இந்நூல் தமிழ் உலகிற்கு அச்சில் கிடைக்க! காரணமாக இருந்த பெரியார் சி. வை. தாமோதரன் பிள்ளையாவார். (1892)

**எழுத்ததிகாரம்** :

நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல்,புணரியல், தொகை மரபு, உருபியல் உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என ஒன்பது இயல்கள். இவை 483 நூற்பாக்களைக் கொண்டுள்ளன. எழுத்துக்களின் வகை, பெயர், மொழி முதல், இறுதி எழுத்துக்கள், எந்த எழுத்துக்களுக்கு முன் எந்த எழுத்து வரும் என்பன போன்ற விதிகளை எழுத்தியல் எடுத்துரைக்கின்றது.

தமிழ் எழுத்துக்களின் பிறப்பினைக் கூறும் பிறப்பியல் மேயை நாட்டறிஞர்களும் போற்றும் வகையில் நுட்பமாக அமைந்துள்ளது.

**சொல்லதிகாரம்** :

சொற்களின் இலக்கணத்தைக் கூறுவது சொல்லதிகாரம். கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல்,எச்சவியல் என ஒன்பது இயல்கள் 463 நூற்பாக்களில் அமைந்துள்ளன.

திணை, பால், எண், இடம் எனும் வகைகளை விளக்குவதோடு சொற்றொடர்களின் அமைப்பையும் சொற்பொருள்கள் இடத்திற்கேற்ப மாறுந் தன்மையையும் விளக்குகின்றது.

வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

எனும் நூற்பா உணர்ந்தும். இதனால் தொல்காப்பியர் காலத்திலேயே தமிமிய வடசொற்கள் புகுந்துவிட்டமையும், அவலளப்பியர் காடியே விட்டு விடா தமிழுக்கேற்ப எவ்வாறு மாற்ற வேண்டுமென்ற விடுயினையும் தருகின்றார் இவ்விதியின்

சொல்லதிகாரத்தில் அமையும் இடையியல் உரியியல் ஆகிலை இரண்டும் இயல்கள் அளவிற்கு முக்கிஅமையும் இடையியல், உரி சிறுமக்க இவை பிற்காலத்தில் தோன்றியதிகண்டுகளுககு வழிகாட்டியாய் அமைத்துள்ளன.

**பொருளதிகாரம் :**

அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் மெய்ப்பாட்டியல், உயல், புறத்திணையியல் மரபியல் ஆகிய ஒன்பது இயல்கள் 656 நூற்பாக்களில் அமைந்துள்ளன.

இலக்கணம் எழுத்திற்கும் சொல்லிற்கும் அமைந்து அதன் அடிப்படையிலும் என்பது எழு தி க் பெவற்றிற்கு அரண் செய்யும் இதுவேம். உலக மொழியில் தோன்றிய பலலக்களங்களின் இயல்பு. ஆயின் தொல்காப்பியம் குறிக்கோளோடு வாழும் மனிதனுக்குச்சில நெறிமுறைகளை ஏற்படுத்தி தற்கெ விதி அமைத்துப் பொருளதிகாரம் படைத்துள்ளது தமிழர் அனைவரும் எண்ணி மகிழ்ந்து போற்றத்தக்கதாகும்.

ஒன்பது இயல்களில் அகத்திணையியல், களவியல், கற்பியல்,பொருளியல் எனும் நான்கு இயல்களும் அகப்பொருள் நவில்வன. புறத்திணையியல், மரபியல் புறப்பொருள்கூறுவன. ஏனைய மூன்றும் அகம் புறம் இரண்டையும் விளக்குவன.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனும் முப்பிரிவில் முதற்பொருளில் ஐவகை நிலம் பற்றியும், அவற்றின் பொழுது பற்றியும், கருப்பொருளில் நிலம் சார்ந்து வாழும் உயிர்கள் பற்றியும், உரிப்பொருளில் இவ்வுயிர்களில் பகுத்தறிவு பெற்ற மனிதர்களின் அக ஒழுக்கப்பாடுகளின் உரிப்பொருள் பற்றியும் தொல்காப்பியம் நுட்பமாகவும் சுவையாகவும் விளக்குகின்றது. உள்ளத்து ஒழுக்கமே அகத்திணையாயிற்று. (அகம் - உள்ளம், திணை ஒழுக்கம்). அகத்திற்கு மாறாய்ப் புறத்தே நிகழ்வது புறத்திணையாயிற்று. நம் தமிழ் இலக்கியங்களை இந்த இரண்டு திணைகளுக்குள்ளும் அடக்கிவிட இயலும்.

**அகத்திணை:**

"கைக்கிளை முதலாப் பெருந்திணையிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"     (தொல். பொருள்.அகத்.1)

அகத்திணை ஏழு, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் இடையில் அவையாவன முல்லை, குறிஞ்சி, மது நெய்தல், பாலைத் திணையாகும். இவ்வைந்திற்கும் நிலம் அன்பின் ஐந்திணையாகும். ஏனைய இரண்டிற்கும் நிலம் கூறாமை அவ சிறப்பின்மை கருதி என்பர். இக்கருத்து ஏற்புடைத்தன்று. கைக்கிை தொல்காப்பியம் பெருந்திணையும் ஐவகை நிலத்தில் எங்கும் அமையலாம் எனக்கரு நிலம் விடப்பட்டது எனக் கருதுதல் பொருந்தும்.

போன்று புறத்திணையும் ஏழு. வெட்சி, வஞ்சி,உழி தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் முதலிய ஏழும் புறத்திணையாகும். பிற்காலத்தி அகத்திணை ஏழு தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணையை மேலும் பெருக்கிச் சொல்லும்.

மெய்ப்பாட்டியல் மெய்வழியாக வெளிப்படும் உணர்வுகளை வெளிப்படுத்துவது. எட்டுவகை மெய்ப்பாட்டினைத் தொல்காப்பி உணர்த்துகின்றது. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம் வெளிப்பாடே மெய்யில் வெளிப்பட்டு மெய்ப்பாடாயிற்று எனலாம்.

பாக்களின் தன்மையை விரிவாக உரைப்பது செய்யுளியல். செய்யுளுக்கு அழகு சேர்க்கும் உவமவியல் வகைகளை உவமையில் சுட்டும். இலக்கிய வழக்கிலும் உலகுக்கும் வழக்கிலும் வழங்கும் மரபுகளைச் சுட்டுவது மரபியல். பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களும் தனித்தன்மை பெற்று இலக்கணத்திற்கு புது மரபாக்கம் தருகின்றன.

புது மரபினைத் தரும் தொல்காப்பியம் பழைய மரபையே பின்பற் சொல்லும் பிற்போக்கு எண்ணம் கொண்ட நூலன்று. பழையன கழிதலும் புதி புகுதலும் காலத்தின் கட்டாயம் எனக் கூறும் நன்னூல் விதிக்கு முன்னி தொல்காப்பியம் 'கடி சொல் இல்லைக்காலத்துப் படினே' எனக்கூறிப் பழமைக்கு புதுமைக்கும் பாலமாகி விடுகிறது.

**சங்க இலக்கியங்கள் :**

தமிழ்மொழியின் பேச்சு வழக்கில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனும் பொருளில் பாட்டுதொகை எனும் வழக்குள்ளது. இதன்படி பத்துப்பாட்டு முதல் அமையினும் காலத்தால் எட்டுத்தொகையே முந்தியது என்பர்.

எட்டுத் தொகை என்பது தனிமனிதப்படைப்பன்று. பலர்பலகாலங்களில் பொருள் பற்றிப் பாடிய நூல்களின் தொகுப்பு.எனவே இத்தொகுப்பு தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும் என்பது உறுதி. குறைந்தது 2000 ஆண்டுகளுக்கு முனிய தமிழ் இலக்கியங்கள் செழித்து வளர்ந்தமையை எட்டுத் தொகையின் மூலம் அறிய முடிகின்றது.

"நற்றிணை நல்லகுறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிறறுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை"

எட்டுத்தொகையில் 2352 தனிநிலைச்செய்யுள் அளமந்துள்ளன. வாழ்த்துப்பாடல்களைச் சேர்ப்பின் 2358 என்க. அகப்பொருள் பற்றியன புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறப்பொருள் பற்றியன. அகப்பொருள் புறப்பொருள் இரண்டும் கலந்து அமைவது பரிபாடல்.

**அகம் சார்ந்த நூல்கள்**

**1. நற்றிணை**

ஒன்பதடி சிற்றெல்லையும் பன்னிரண்டு அடி பேரெல்லையும் கொண்டது. நற்றிணையைத் தொகுப்பித்தோன் பன்னாடு தந்த மாறன் வழுதி. தொகுத்தவர் பற்றிய குறிப்பு இல்லை. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரையே நற்றிணைக்கு முதல் உரையாகும். 1988 இல் நூலைப் பதிப்பித்தவரும் இவரே. இவருக்கு பின் ஓளைவ துரைசாமி பிள்ளை அவர்கள் நற்றிணைக்கு விளக்கமான உரையாத்துள்ளனர்.

பண்டைக்காலத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள் நற்றிணையில் பெரிதும் இடம் பெறுகின்றன. தண்பர்கள் நல்ல நட்பிற்காகத்தம் உயிரையே கொடுப்பர்.

"முந்தை இருந்து நட்டோகொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்!".............

என்கிறது. காதல் என்பது வெறும் அன்பு மட்டுமன்று. அதனையுங் கடந்த உணர்வு கலந்த நிலை தலைவனின் அன்பு எப்படிப்பட்டது என்பதை நற்றிணை அழகு ஓவியமாய் தருகிறது.

"நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிக்பதி யலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
................................"

தாமரையின் மணமிக்க தேனை எடுத்து வரும் தேனீ சந்தன மரத்தில் கூடுகட்ட அந்தத் தேன் கூட்டிலுள்ள தேன் சந்தனத்தின் மணமும் தாமரையின் இனிமையும் கலந்து எத்தகைய இன்பத்தைப் பயக்குமோ அத்தகையது தலைவன் நட்பு என்கிறாள் தலைவி.

இன்னொரு பாடலில் சாவதற்கு அஞ்சேன், இறப்பில் பிறப்பு பிறிதாகி மறக்க வேண்டுமோ என அஞ்சுவல்' என்னும் பொருள்பட

சாதல் அஞ்சேன்.அஞ்சுவல் சாவிற்
பிறப்புப் பிறி தாகுவதாயின்.

இது போன்ற நற்றிணைப் பாடல்கள் அகத்திற்கு வலிமை சேர்க்கின்றன.

**குறுந்தொகை**

சிற்றெல்லை 4 அடி பேரெல்லை 8 அடி எனினும் 307,391 ஆகிய இருபாடல்களும் ஒன்பது அடிகள் கொண்டு அமைந்தவை. 205 புல்வர்கள் பாடியுள்ளனர் தொகுப்பித்தவன் பூரிக்கோ. தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை. முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியர் உரை விளக்கம் தந்துள்ளார். எஞ்சிய 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். இவை இன்று கிடைக்காத நிலையில் உ.வே.சாமிநாத ஐயர் உரையே கிடைக்கிறது. முதலில் பதிப்பித்தவர் சி.வை தாமோதரம் பிள்ளையாவார்.

கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதற்கேற்ப எட்டுத்தொகையில் அளமயும் அகப்பாடல்களில் சிறப்பு மிக்கது குறுந்தொகை எனலாம். உள்மையின்றி உணர்ச்சியாய் அமையும் பாடல்களும், ஓர் உவமையோடு அமையும் பாடல்களும். பல உவமைகளைக் கொண்டு நெஞ்சில் பதியும் பாடல்களும் குறுந்தொகையில் உள்ளன. தலைவன் தலைவியின் காதல்உள்ளத்கை,

`அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே
எனும் பாடல் விளக்கும்.

காதல் வந்திட அதைத் தவிர்த்தல் அரிது என்பதை

ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கின்
அகயில் ஊமன் கண்ணில் காக்கும்

வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய், நோன்றுகொளற்கு அரிதே:

கைகளும் இன்றி, வாய்பேசவும் முடியாத ஒருவன் சூரியனின் வெம்மையில் பாறை மீது இருக்கும் வெண்ணெய் உருகும் போது கையில்லாததாய் எடுக்க முடியாமலும். பேச முடியாததால் யாரையும் அழைக்க முடியாமலும் எப்படித் துடிப்பானோ அதுபோல் நானும் துடிக்கின்றேன்; வெண்ணெய் உருகுவதைப் போல் தோயும் வேகமாய்ப் பரவுகிறது என்கிறாள் தலைவி.

வினையே, ஆடவர்க்கு உயிரே,
வாணுதல் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்

எனும் பாடல் சமூகத்தில் ஆண்பெண் நிலையினை எடுத்துரைத்தலோடு, சமூகம் ஆணைச் சார்ந்தே இருந்தமையை விளக்கும்.

அன்பால் இணைந்த நெஞ்சங்களையும், பிரிவால் வருந்தும் உள்ளங்களை அஃறிணைப் பொருட்களின் அன்பையும், காட்டு வழியின் கடுமையினை என்று தன்னிடத்து வலைளை இகழ்ந்து பேசும் பரத்தை நிலையினை சொற்ரமாகக் குறுந்தொகைகருகின்றது.

பெயர் அறியாப் புலவர்களுக்கு அவர்கள் பாடிய கவிதையில் நாம் வடியெபெஅதனாயின் அலாடு முஸ்றிலார். காக்கை பாடினியார், செய்புகள் பெயல் நீரார், குப்பைக் கோழியார் போன்றோர் சான்றாவர்.

உரையாசிரியர்கள் தம் கருத்திற்கு வலிமை சேர்க்க மேற்கோள்க எந்தவகையில் குறுந்தொகையின் தானூறு பாடல்களிற்ற எடுத்தாள்வது இயல்பு. அந்த பாடல்கள் பல்வேறு இடங்களில் மேற்கொள்களாகக் கையாளப்பட்டுள்ளம் குறுந்தொமையின் சிறப்பினை இதனால் அறியமுடியும்.

எழுவள்ளல்களில் சிலர் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் குறுந்தொகைள் இடம்பெற்றுள்ளன. மன்னர்கள் இயற்றிய பாடல்களும் இடம் பெற்றுள்ளவ காலத்தால் அழியாது தமிழின் பெருமையை உயர்த்தும் செல்வம் குறுந்தொகை.

**3.ஐங்குறுநூறு**

குறுகிய அடிகளைப் பெற்று, இணைக்கு நூறுபாடல்களாக ஐந்தும் பாடல்களுடன் அமைந்துள்ளமையால் ஐங்குறுநூறு எனும் பெயர் பெற்றது குறுந்தொமைப் பெயர்க்காரணமும் இங்கு நினைக்கத்தக்கது.

இந்நூல் மூன்றடி சிற்றெல்லையும் ஆரடிப் பேரெல்லையும் கொண்டது ஆசிரியப்பாவில் குறைந்த சிற்றெல்வையில் வருவது ஐங்குறுநூறாகும் இந்துவை ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர்.

மருதம் ஓரம்போகி, நெய்தல் அம்மூயனார்

குறிஞ்சி கபிலன், பாலை ஓதலாந்தையார், முல்லைபேயனார்
(இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் தொகுப்பித்தவன் யானைக்கண் செய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை?

**சிறப்புக்கள்**

(ஐங்குறுநூற்றில் கிள்ளி, கொற்கைக்கோமான், கடுமான், குட்டுவன், விராவின், ஆதன் அவினி போன்ற அரசர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.) ஆமு தொண்டி, தேனூர்,எழார், கொற்கை போன்ற ஊர்களும் இடம்பெற்றுள்ளன. மனம் ஒன்றுபட்டால் துன்பமும் இன்பமே. அகவாழ்க்கையில் மன உணர்வுகள் நுட்பமாய் வெளிப்படுவதை ஐங்குறுநூற்றுப் பாடலொன்று அழகாய் வெளிப்படுத்துகின்றது. திருமணமாகிச் சென்றுவிட்ட தலைவியை நெடு நாளைக்குப் பிறகு தோழி பார்க்கிறாள். "தலைவன் நாட்டில் உண்ண நீர்கூட இல்லை என்றனரே, நீ எப்படி

மனமகிழ்வோடு இருக்கிறாய்?" என்று வினவுகிறாள். அதற்குத் தலைவி கூறும் பதில் எஸ்ணி மகிழத்தக்கது. "தோழி நீ கூறியது உண்மை தூய்மையான நீர் அங்கு இருந்தாலென்ன தலைவன் நாட்டு எச்சில் நீர்கூட நம் தோட்டத்துத் தேனைத் தீம்பாலுடன் கலந்து உண்போமே முன்பு, அதுபோல் இனிக்கும். மனமெல்லாம் இனிமை தரும்" என்று கூறுகிறாள் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் மனம்தான் காரணம் மலத்தை வளமாக்கும் அப்பாடம்

“அன்னாய் வாழிவேண்டன்னை நம் படப்பைத்
`தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவனைக் கூவத் ழே
மானுண் டெஞ்சிய கவிழிநீரே” (பாடல் 203)

அன்பால் இணைந்த நெஞ்சங்களையும், பிரிவால் வருந்தும் உள்ளங்களை அஃறிணைப் பொருட்களின் அன்பையும், காட்டு வழியின் கடுமையினை என்று தன்னிடத்து வலைளை இகழ்ந்து பேசும் பரத்தை நிலையினை சொற்ரமாகக் குறுந்தொகைகருகின்றது.

பெயர் அறியாப் புலவர்களுக்கு அவர்கள் பாடிய கவிதையில் நாம் வடியெபெஅதனாயின் அலாடு முஸ்றிலார். காக்கை பாடினியார், செய்புகள் பெயல் நீரார், குப்பைக் கோழியார் போன்றோர் சான்றாவர்.

உரையாசிரியர்கள் தம் கருத்திற்கு வலிமை சேர்க்க மேற்கோள்க எந்தவகையில் குறுந்தொகையின் தானூறு பாடல்களிற்ற எடுத்தாள்வது இயல்பு. அந்த பாடல்கள் பல்வேறு இடங்களில் மேற்கொள்களாகக் கையாளப்பட்டுள்ளம் குறுந்தொமையின் சிறப்பினை இதனால் அறியமுடியும்.

ஐங்குறுநூற்றுப் பாடல்கள் பெரும்பாலும் தொடங்கும் நிலையில் மன்னனை வாழ்த்துகின்றன. எழுவள்ளல்களில் சிலர் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் குறுந்தொகைள் இடம்பெற்றுள்ளன. மன்னர்கள் இயற்றிய பாடல்களும் இடம் பெற்றுள்ளவ காலத்தால் அழியாது தமிழின் பெருமையை உயர்த்தும் செல்வம் குறுந்தொகை

வாழி ஆதன் வாழி அவினி
நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க
விளைக வயலே, வருக இரவலர்
அறம்தளி சிறக்க அல்லது கெடுக

எனக் கூறும் பாங்கும் சிறப்புமிக்கது.

பத்து, பத்து எனும் வகையில் பாடல்கள் அமைகின்றன. முதல் பத்து வேட்கைப் பந்து எனத் தொடங்குகின்றது இந்நூலுக்குப் பழைய உரை உண்டு. அதில் 469 பாடல்களுக்கு உரை உள்ளது. 1903இல் தமிழ்த்தாத்தா உவே.சா. அவர்கள் முதன்முதலில் உரையுடன் வெளியிட்டார். ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை விரியான உரைதத்துள்ளார்.

செடிகளைப் பெயராகக் கொண்டு அமைவது போன்றே பிற கருப்பொருளாகிய விலங்குகளையும், பறவைகளையும், கொண்டு அமைகிறது. குரங்குப்பத்து, கேழற் பத்து, கிள்ளைப் பத்து, மயில் பத்து எனப் பெயர் வைத்துள்ளமை புலவர்கருப் பொருள்களிடத்துக் கொண்ட அன்பினைக் காட்டும்)

**பழக்கவழக்கம் நம்பிக்கை**

உண்ணும் நீர்த்துறையில் தெய்வம் உறையும். தினைப் புனத்திற்கு விலங்கு பறவை வராதிருக்கப் பொய்ப்புலி வைத்தல் ஆமைக்குட்டி நாய் முகம் நோக்கி வளரும், முதலை தன் குட்டிகளைத் தின்றுவிடும் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

**கலித்தொகை**

இந்நூல் கலிப்பாவால் ஆகியது. சிறந்த அகப்பாடல் இலக்கியம். கலித்தொகை 50 பாடல்களைக் கொண்டது. “கற்றறிந்தோர் ஏத்தும் கலி” கல்வி வளார் கண்ட கலி’ எனவும் சிறப்பிப்பர்.

எஸ்.வையாபுரிப் பிள்ளையும், கே.என். சிவராசப் பிள்ளையும்ஜம் பாடியது என்பதை மறுத்து ஒருவர் பாடியதே கலித்தொகை எனக் கூறிப்ப சான்றுகளும் தருவர், நெய்தற் கலியைப் பாடிய நல்லந்துவனாரே முழுமை பாடியவர் என்னும் கருத்தும் உளது

கி.பி.1887 இல் முதன் முதலில் சி.வை.தாமோதரன் பிள்ளைகளித்தொகையை பதிப்பித்தபோது அதில் நல்லத்துவனார் கலித்தொகை என்றே தலைப்பிட்டன ஈண்டு எண்ணுதற்குரியது. நூல் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உ எழுதியுள்ளார். ஒவ்வொரு பாடலும் சிறு நாடகமாக அமைக்கின்ற அளவிந்து சிறப்புமிக்கது.

"திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன் விருத்தக்கவி வளமும் வேண்டேல் திருக்குறளோ, கொங்குவேள் மாக்கதையோ கொள்ளேம், தனி ஆர்வேம் பொங்கு கலி இன்பப் பொருள்' எனப் புலவர்கள் பாராட்டும் பெருமையுடைது கலித்தொகை

சங்க இலக்கியங்களில் காலத்தால் பிந்தியது கலித்தொகை என்பர். பீர் அகத்திணை நூல்கள் அன்பின் ஐந்திணை கூறக் கலித்தொகை அவற்றோர் கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் பற்றிய பாடல்களையும் கூறுகிறது மலர்பசரதக் கதை நிகழ்வுகள் கவித்தொகையில் பெரிதும் இடம் பெற்றுள்ளன. காலத்த்தால் பித்தியது எனக் கூற இது ஒரு காரணமாக இருக்கலாம்.

கலித்தொகை மூவேந்தர்களில் பாண்டிய மன்னனைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகின்றது மேலும் மதுரையாம் கூடலைப் பற்றியும், வையையைப்பற்றியும் மாடல்கள் அமைவதால் கலித்தொகை மதுரையில் தோன்றியது எனும் கருத்துளது.
பாலையின் கொடுமையைச் சுட்டும்போது,

உண்ணீர்வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு'

எனும் வரிகளும் மரங்கள் பாலையில் வாடிக் கிடப்பதற்கு

வறியவள் இளமைபோல்வாடிய சினையவாய்

எனும் உவமையும் இன்பம் பயப்பன

தலைவனுடன் சென்ற தலைவியின் நிலையைக் கலித்தொகைப் பாடல் ஒன்று பின்வருமாறு கட்டுகின்றது. சந்தனம் மலையே பிறப்பினும் மலைக்கு அதனால் பயனில்லை. முத்து கடலில் கிடைப்பினும் கடலுக்கு அதனால் பயனில்லை, யாழிலே இசை பிறப்பினும் பாழுக்கு அதனால் பயனில்லை அதுபோல் பெண்ணும் திருமணத்திற்குப் பில் பிறந்த இடத்திற்குப் பயனில்லை, கணவனுக்கே பயனுடையாள் எனும் கருத்தில் அமையும் பாடல் அன்றைய நடைமுறையைநன்கு) படம் பிடித்துக்காட்டுகிறது.

பல உயர்ந்த கருத்துக்களை இந்நூல் தருகின்றது.

பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்!

'அன்பு எனப்படுவது தன்கினை செறாஅமை'

'பொறை எனப்படுவது போத்தாரைப் பொறுத்தல்' (கலி.133)

சங்க மரபிற்கு மாறாகிய ஏறு தழிலி மணம்புரிதலைக் கவித்தொகைப் பாடல்கள் நன்கு எடுத்துரைக்கின்றன.

**அகநானூறு**

சிற்றெல்லை 13 அடி பேரெல்லை 31 அடி குறுகிய அடியால் குறுந்தொகை பெயர் பெற்றதைப் போன்ற அகநானூறு நீண்ட அடியால் நெடுந்தொகை நா எனும் பெயர்பெற்றது. பின்னர் இதில் அமைந்துள்ள அகப்பாடலின் அருமை கரும் அகநாநூறாயிற்று.

நூலைத் தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிக்கிழார் மகனார் உருக்கிர சன்மனார்..

(400 பாடல்களில் 1 முதல் 120 பாடல்கள் களிற்றியானை நிரை எனவும், 121முதல் 300 வரையுள்ள பாக்களை மணிமிடை பவளம் எனவும் 301, முதல் 100 முடிய அமையும் பாக்களை நித்திலக் கோவை எனவும் பாகுபாடு செய்துள்ளனர்.)

ஒற்றை எண்ணாக வருபவை (1,3,5,7,9,11.) பாலைப் பாடல்கள்; நான்கு எனும் எண்ணைப் பெறுபவை (4,14,24,36,46.) முல்லைத் திணைப் பாடல்கள் ஆறு எனும் எண்ணைப் பெறுபவை (6,16,26,36, ) மருதத்திணைப் பாடல்கள் 10,20,30

வரிசையில் இறுதியில்பூஜியம் பெற்றுப் பத்துப் பத்தாக வருமநெய் திணைப் பாடல்கள் 21 மணலும் எண்களை இறுதியில் கொண்டு

அக்தாறு பனை தமிழரின் திருமணமுறையையிகேட்டு பி.டி.சீனிவ ஐயங்கார் வரலாற்றுச் செய்திகள் மிகுதியாக Ourfufusது。 பாடலிபுத்திரத்தை ஆண்டந்தபறாய குறிப்புகளும் இடம்பெற்றுள் 25) asat, urwer திரையர் பற்றிய குறிப்புகளும் செய்திகளையும் அதனுறு தருகின்றது குறிப்பாக மாமூலனார். போன்றோர்வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றனர். இராமன், முருகன் கண்ணல்) இடம் பெற்றுள்ளன. இதிகாச புராணச் செய்திகளும்

தமிழக அரசர்கள் நெடுஞ்செழியன் நித்தன், தரீகாமன், ஆ ஆட்டனத்தி, அன்னி,நன்னன், பார் காரி செய்திகளைத்தருகின்றது. கோசர்களை' வாய்மொழிக் கோசர்" என்று புகழ்கின்ற

யவன நாட்டொடு தமிழகத்திற்கு இருந்த தொடர்பு கட்டப்படுகிறது. வினைமாண் நன்கலம் பொன்னோடு வந்து கறியொடு பெயரும் எனப்படுகிறது தலைவிக்கும் தோழிக்கும் உள்ள நட்பினை 'இருதலைப்புள் ஓர் உயிரம்மே' எனப் புகலும், கார்கால வருணனை அகநானூற்றுப் பாடல்களில் அழகுற அமைந்துள்ளது. ஒரு பாடலிலேயே பல உவமைகள் பங்குனித் திருவிழாநடை பெறுவது பற்றியும் அகநானூறு கூறுகிறது.

**புறம் சார்ந்த நூல்கள்**

**புறநானூறு**

புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. புறநானூற்றும் பாடல்களை எடுத்தாளரியர் இல்லை என்று கூறுமளவிற்கு அறிஞர்களாலும் கையாளப்பட்டுள்ளது. நானூறு பாடல்களில் இரண்டு பாடல்க (287,008) முழுமையாக கிடைக்கயில்லை இதனைப் பதிப்பித்தவர் உ.வே.சா 400 பாடல்கள் பாடிய புலவர்கள் 157, 14 பாடல்களைப் பாடிய புலவர்கள் பற்றி அறியப்படவில்லை.

தமிழகத்தில் பல்வேறு புலவர்கள் பல்வேறு குழலில் பாடிய பாடல்களைக் கொண்டு புறநானூறு ஒரு சமயத்தைச் சார்ந்த தூவன்து அரசியல் கருத்த்துக்களும், வாழ்க்கை நெறிமுறைகளும். பண்டைய மாபுகளும், போர் நெறிகளும் தன்னனகத்தே கொண்ட பல்கலைக் களஞ்சியம் புறநானூறு.

தொகுப்பித்தவர் அரசரைவிடப் புலவரைப் பெரிதும் போற்றியுள்ளார். இதனால் விளங்கும். அவன் - அரசன் புலவர் என்பது எண்ணி மகிழத்தக்கது அரசினும் மேலாக அறிவு போற்றப்பட்டமை இத்னால் விளங்கும்.

தமிழகத்தின் பண்டைய வரலாற்றை அறிய வரலாற்று மூலங்கள் குறைந்த நிலையில் வாலாற்றுப் பெட்டகமாகப் புறநானூறு விளங்குகிறது. முதல் 260

பாடல்களுக்குப் பழைய உரை உண்டு. எனினும் 1894இல் டாக்டர். உவே.சா. அவர்கள் புறநானூற்றைம் பதிப்பித்துப் பழைய உரையோடு நூல் முழுமைக்கும் குறிப்புரையும் எழுதி வெளியிட்டார். ஔவை.சு. துரைசாமிப் பிள்ளை நூல் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்.

புறநானூறு திருக்குறளுக்கு முன்னோடி. புறநானூறு கூறும் கருத்துக்கள் சில குறின் வெண்பாவைப் போல் இரண்டு வரியாகவுள்ளன.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்....
'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்

இப்புறநானூற்று வரிகள் அறக்கருத்துகளைத் தன்னகத்தே கொண்ட பொன் வரிகள்

மூவேந்தர்கள், சிற்றரசர்கள், ஏழு வள்ளல்கள் பற்றிய குறிப்புக்களைப் புறநானூறு வாரி வழங்குகின்றது. கபிலர் பாரியிடம் காட்டிய அன்பும், அதியமான் ஔவையிடம் காட்டிய அன்பும் மன்னனும் புலவனும், புலவனும் மன்னனும் எனும் நோக்கில் கண்டு மகிழத்தக்கது.

புறநானூறு சங்க காலத்தின் வீரயுகத்தைக் கண்முள் நிறுத்துகிறது. வேல் எடுத்து, களம் புக ஆளில்லா நிலையில் பால் குடிக்கும் பாலகனும் வேல் ஏந்தும் வீரக்கதையை நினைவூட்டுகிறது. தமிழகத்தின் பொற்காலக் கதவுகளைத் திறக்கும் சாவிதான் புறநானூறு, சிவன், திருமால், முருகன் மூன்று தெய்வங்கள் மிகுதியாக வணங்கப்பட்டமையைப் புறநானூறு எடுத்துரைக்கின்றது. மேல் சாதி கீழ்ச்சாதிப் பாகுபாடு இருப்பினும் அதனை, கல்வி நீக்கும் என ஆரியப்படை கட்ட பெண்பாற்புலவர்கள் பாகுபாடு இருப்பினும் நெடுஞ்செழியனின் பாடல் சுட்டுகின்றது. பெண்பாற்புலவர்களும் புறப்பாடல்களைப் பாடியுள்ளனர்.

'உண்பது நாழி, உடுப்பவை இரண்டே' என அரசனுக்கும் வேடனுகு பொதுவான தத்துவம் கூறும் நக்கீரர் பாடல் சிறப்புமிக்கது.

**2. பதிற்றுப்பத்து**

புறப்பொருள் பற்றியது. சேரவேந்தர் பதின்மர் பற்றிய நூல். பாடாண் திணை மட்டுமே பாடல்கள் அமைந்துள்ளன. பத்துச் சேர மன்னர்களையும் பத்துப் பத்தாக பாடல்களில் புகழ்கின்றது. முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

சேர மன்னர்களின் சிறப்பை இந்நூல் நன்கு எடுத்தோதுகின்றது. அவர்களின் கொடைச் சிறப்பும் வெளிப்படுகிறது. இருமணத்தின்போது அருந்ததி என்னு விண்மீனை வணங்கும் வழக்கத்தை இந்நூல் சுட்டுவது சேர நாட்டில் இவ் வழகம் மரபைச் சேர்ந்த இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும் இச் செய்தியைச் சுட்டுவது எண்ணத்தக்கது.

பதிற்றுப்பத்தைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை ஒவ்வொரு பாடலிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் தலைப்பு ஆகியன இட பெற்றுள்ளன. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் உள்ளது. ஒவ்வொறு பாட்டும் பாட்டில் வரும் தொடரையே தலைப்பாகக் கொண்டுள்ளது. பதிய பிற்காலச் சோழர் காலத்து மெய்க்கீர்த்திபோலப் பாடலுக்குரிய அரசன் புகழினைப் பேசுகிறது.

கடற்கொள்ளையரை இமயவரம்பனும், செங்குட்டுவனும் வென்ற செய்தி பகைவர் நாட்டுப் பெண்களின் கூந்தலை அரிந்து கயிறாக்கி யானையை இழுத்து பகை நாட்டை அவமதிக்கும் வழக்கம், மக்களின் பல்வேறு பழக்க வழக்கங்கள் போன்றவை நன்கு விளக்கப்பட்டுள்ளன. சேர மன்னர்களின் வரலாற்றும் களஞ்சியமாகப் பதிற்றுப்பத்து விளங்குகிறது.

வஞ்சி மாநகரின் சிறப்பும், நீர்நிலைகள் நெடுஞ்சாலைகள் பராமரிக்கப்பட்ட நிலையும் பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளன. மேலும், சேரநாட்டின் தொண்டி நறவு, மாந்தை ஆகிய நகரங்கள் பற்றியும் அறிய முடிகிறது.

இந்நூலில் இன்று வழக்கில் இல்லாத பசொற்களைக் காண முடிகின்றது பதிற்றுப்பத்தில் வடமொழிச் சொற்களின் கலப்பு மிகுதி. பிற்காலத்தில் தமிழும் வடமொழியும் கலந்து மலையாள மொழி சேர நாட்டில் தோன்றுவதற்குரிய சூழ ஏற்பட்டு விட்டமையைப் பதிற்றுப்பத்து மொழி நடை உணர்த்துவதாகக்கருதலாம்.

இரவலர் வராதபோதும் தேடிச் சென்று அவர்களைத் தேரிலே ஏற்றி அரண்மனைக்கு அழைத்துவந்து வரிசை செய்யும் வள்ளல் என ஆடுகோட்பாட்டும் சேரலாதனின் வள்ளன்மையை நச்செள்ளையர் பாராட்டுகின்றார்.

பதிற்றுப்பத்தை 1904இல் டாக்டர்.வே சாமிநாதையர் முதன் முதலாக பதிப்பித்தார் ஔவை துரைசாமிப் பின்னை இதற்கு மிகச் சிறந்த முழுமை உறை எழுதியுள்ள எழுத்து புளா உஅருளம்பலனார் பதிற்றுப்பத்திித்து சிறந்ததொரு ஆராய்ச்சியுரை தல்லயுள்ளார்!.]

**அகம் புறம் சார்ந்த நூல்**

**1.பரிபாடல்**

பரியாட்டுக்களின் தொகுப்பு என்பது பரிபாடலாயிற்று. பரிந்து செல்லு ஓசையுடைய செய்யுட்களால் அமைந்தது. நான்கு வகைப் பாக்களும் பல அடிகளும் கொண்டு வரும். தொல்காப்பியம் பரிபாடலைப் பற்றிக் குறிப்பிடும்போது காமம் கருத்தாக அமைய சிற்றெல்லை 25 பேரெல்லை 400 அடியும் பெற்றுவரும் என்கிறது. எனவே இலக்கணப் பரிபாடல் அகப்பாடல் ஆகும். ஆயின் பாடல்களில் புறக்கருத்துக்கள் மிகுதியாக உள்ளமையால் அகம்புறம் இணைந்தது எனலாம்.

பரிபாடல் என்பது 70 பாடல்களின் தொகுப்பு. ஆனால் இன்று பாதியே கிடைத்துள்ளன. அவற்றுள் வையை 8 அகப்பொருள் பாடல்கள் திருமால்-6முருகன்-8 பாடிய புலவர்கள் 13 பேர் பாட்டின் இறுதியில் பண்கள் இடம்பெற்றுள்ளன. பரிபாடலுக்குப் பரிமேலழகர் உரை உள்ளது.

.

நமக்குக் கிடைத்துள்ள வெண்பா மூலமாக பரிபாடல் 70 பாடல்கள் என அறிய முடிகிறது.

திருமாற்கு இருநான்கு செவ்வேள் முப்பத்
தொகுபாட்டு காடுகாட்கு ஒன்று மருவினிய
வையை இருபத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்ய பரிபாடல் திறம்.

திருமால் 8, முருகன் 31 காளி 1 வையை 26, மதுரை 4 (மொத்தம் 10) திருமால் பற்றிய பாடங்கள் மாலின் நெடிய உருவம் கூறி அவர்தம் அவதாரச் சிறப்பினை எடுத்துச் சொல்கின்றன. அகப்பொருள் கருத்து இல்லை முருகனைப் பற்றிய பாடல்கள் முருகன் பிறப்பு, சூரனை வென்றமை வள்ளியை மணந்தமை. பனது கருணைத் திறம், முருகளை வணங்குவோர் இயல்பு விரிவாகக் கூறப்படுகிறது.

வையை அலையும் முழை இருடவும் மக்கள் கூட்டமும், ஆடவர் வையை நுரையுமாய் தொட்டு ஓடுகின்ற அழகும். வெள்ள திருநீராடும் தன்மையும் பற்றிப் பரிபாடல் அழகுற விளக்குகின்றது.

தெய்வ வணக்கத்திற்கு ஏற்ற வகையாகப் பரிபாடல்கள் அமைந்துள்ளன.

தீயினுள் தெறல் நீ
பூவினுள் நாற்றம் நீ!
கல்லினுள் மணியும் நீ
சொல்லிலுள் வாய்மை
அறத்தினுள் அன்பு நீ! மறத்தினுள் மைந்து நீர்...

இதுபோல் முருகளிடம் கடுவன் இளவெயினனார்

'யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல,
நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்'

எனப் பரவுவார்.

அகலிகை. மன்மதன் போன்றோரின் ஓவியங்கள் திருப்பரங்குன்றத்தில் தீட்டப்பட்டிருந்தமையைப் பரிபாடலால் அறிய முடிகிறது. நெய்தல், குவளை, ஆம்பல்,சங்கம்,கமலம், வெள்ளம் ஆகிய சொற்கள் நூறு, ஆயிரம், பதினாயிரம் கோடி போன்ற எண்களுக்குக் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டமையைப் பரிபாடலால் அறிய முடிகிறது. எட்டுத் தொகையில் அகம் புறம் இரண்டும் கலந்து அமையும் ஓரே நூல் பரிபாடல்.

**பத்துப்பாட்டு**

தொகை நூல்கள் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும். எட்டுத் தொகை நூல்களின் பாடல்களைவிட சங்க இலக்கியங்கள் பதினெண்மேல் கணக்கு என வழங்கப் படும். அட ஒவ்வொன்றும் பல புலவர்களின் பாடல்களைக் கொண்டவை. ஆனா பத்துப்பாட்டு நூல்கள் அடிகளால் பெரியவை. எட்டுத் பத்துப்பாட்டில் ஒவ்வொரு பாடலையும் இயற்றியவர்கள் தனித்தனிப் புலவர்கள் ஆவர்

(எ.கா.) புறநானூறு (எட்டுத் தொகை) பல புலவர்கள் பாடியது; திருமுருகாற்றுப்படை (பத்துப்பாட்டு) நக்கீரர் பாடியது.'

சங்க இலக்கியப் பாடல்கள் பெரும்பான்மையும் ஆசிரியப்பாவில் அமைந்தவை. பத்துப்பாட்டும் ஆசிரியப் பாவிலேயே அமைகிறது பத்துப்பாட்டை எண்மர் பாடியுள்ளனர். பழம் பாடலொன்று இவற்றில் பெயர்களைத் தருகின்றது.

முருகு பொருநாறு பாணிரண்டு
முல்லை பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப்
பட்டினப் பாலை கடாத்தொடும் பத்து

இவற்றில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள். முல்லைப் பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை. அகம் பற்றியன. மதுரைக் காஞ்சி புறம் நெடுநல்வாடை அகமும் புறமும் கலந்து வருவது.
பத்துப்பாட்டின் சிறப்பை உணர்ந்த மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

பத்துப்பாட்டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே எனக் கூறிப் புகழ்கின்றார். பத்துப்பாட்டிற்கு நச்சினார்க்கினியர் உரை முழுமையாகக் கிடைத்துள்ளது. தேவையற்று வருவித்துக் கொண்டு கூட்டிப் பொருள் காணும் இயல்பு நச்சினார்க்கினியர் உரையில் இருப்பினும் இது மிகச்சிறந்த உரையாகும் இவ்வுரை இல்லையேல் பாடல்களின் பொருளை உணர்தல் அரிதாகும். பட்டினப்பாலைக்கும், முல்லைப் பாட்டிற்கும் மறைமலையடிகள் சிறந்த ஆராய்ச்சி உரை எழுதியுள்ளார். பத்துப்பாட்டில் முதலில் பெரிய அளவில் இடம் பெற்றுள்ள ஆற்றுப்படை நூல்களைக் காணலாம்.

**திருமுருகாற்றுப்படை**

சங்க இலக்கியத்தில் வெண்பா, ஆசிரியம், வஞ்சி, கலி, பரிபாடல் பாவகைபல இருந்தும் ஆசிரியப்பாவே மிகுதியாக அரசாட்சி செய்கிறது. அதுபோல் தெய்வந்தள் பல இருப்பினும் முருகனுக்கே முதலிடமாக

பத்துப்பாட்டின் கடவுள்வாழ்த்து போல் திருமுருகாற்றுப் படை அமைகிறது. இப்பாடலை இயற்றியவர் நக்கீரர்.. இவரே நெடுநல்வாடையையும் இயற்றியுள்ளார். 317 அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் இயன்றது.

தொல்காப்பியம் கூத்தர், பாணர், பொருநர், விறலி இவர்கள், வளத்தை வறுமையில் வாடும் பிறரும் பெற வேண்டும் என்பதற்காக அவர்களை தாம் பொருள் பெற்ற வள்ளலிடத்தில் வழிப்படுத்துவது ஆற்றுப்படை எனக் கூறுவர். இங்கு முருகன்

அருள்பெற்ற ஒருவன் அருள்வேண்டும் ஒருவனை ஆற்றுப்படுத்து வகையில் புதுமை நோக்கில் அருளுக்காக ஆற்றுப்படுத்துவதாக அமைத்திரும் சிறப்புமிக்கது.

நெடுநல்வாடை நக்கீரர் சங்க காலத்தவர், இந்த நக்கீரர் பிற்காலத்தவர் கருத்தும் உண்டு இது ஆய்விற்குரியது எனினும் பத்துப்பாட்டில் முதலில் இடம்பெறும் திருமுருகாற்றுப்படை காலக் கணிப்பில் வரிசைப்படுத்தின் பத்துப்பாட்டின் இறுதி யிலேயே அமைய முடியும். திருமுருகாற்றுப்படைபுலவராற்றுப்படை எனவும் வழங்கப்படும்.இந்த தோளறியமைக்குக் கர்ண பரம்பரைக் கதையொன்று உள்ளது. நக்கீரச், புடைத்து உண்ண அடைத்து வைத்திருந்த கற்கிமு என்னும் பூகத்திடமிகும். காப்பாற்றுமாறு முருகப் பெருமானை நினைத்துப் பாடி அவன் அருளால் விடுபட்டார் அப்பொழுது அவர் பாடியது திருமுருகாற்றுப்படை என்பர். முருகளின் அறுபடை வீடுகளைப் பாராட்டிப் பரவுகின்றது. 1.திருப்பரங்குன்ற உதிருகிகிரலைவாய் (திருச்செந்தூர்)3, திருவாவினன்குடி (பழனி) 4. திருவேரகம் மலை/S.குன்றுதோறாடல் & பழமுதிர் சோலை என இத்தால் ஆறு பகுதிகள் அமைகின்றது முதற் பகுதி முருகனின் அழகையும் அவனை வணங்கும் மகளிரின் செய்லகளையும், சூரனை வதைத்த வீரத்தையும், மாநகர் மதுரையைய அடுத்துள்ள குன்றமாம் திருப்பரங்குன்றத்தின் பெருமையையும் எடுத்துரைக்கிளைய இரண்டாம் பகுதி ஆறு திருமுகங்களின் இயல்பு, பன்னிரண்டு திருக்கரங்கள் செயல்கள் செந்தூரில் முருகளின் தோற்றம் ஆகியவற்றைக் கூறுகிறது. மூன்றாம்பரு முருகனை வணங்குவோரின் இயல்புகளைக்கூறும் நிலையில் முனிவரும், மாவி வருணிக்கப்படுகின்றனர் திருவாவினன்குடியின் அழகு போற்றப்படுகிறது.

குன்றக்குரவையின் சிறப்பு: குன்றுதோதாடல், முருகளின் அணி ஆடை செய்யும் செயல் ஆறாம்பகுதி நித்துறையில் முருகன் இருந்தல், வழிபடுமுறை அருள்பெறும் முறை

இன்பத்தமிழ் முருகனைக்கண்முன் நிறுத்துகின்றது.

> கச்சினன், கழனிவன், செச்சைக்கண்ணியன்
> குழலன், கோட்டன், குறும்பல்லியத்தன்
> தகரன், மஞ்ஜையன், புகர்இல் சேவல்கம்
> கொடியன் நெடியன், தொடிஅணி தோளன்

இயற்கையை இறைவனோடு இணைக்கும் போக்கை இந் நூலில் கண முடிகிறது காலைக் கதிரவனின் உதயத்தை விளக்கித் தொங்கும் இந்நூல் அவ்வியற்கையை முருகவாய்க் காட்டுகிறது.

முருகன் இல்வாத இடம் இல்லை, அவன் வடிவழகு கண்டு வணங்குவோர் கூறும் துதி இன்றும் பக்தர்கள் பாடும் பகுதியாய் மினர்ல்ன்றது.

மலைமகள் மகனே! மாந்தோர் கூறவே
யெற்றி வெல்பேர்க் கொற்றவை சிறுவர்
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில்த சனைத் தலைவ
மாலை மார்பர், நூலறி புலவ......

என முருகள் இயல்பைக் காட்டுவர்.

**சிறப்புக்கள்:**

திருமுருகாற்றுப்படையின் சிறப்புக் கருதிப் பள்னிரு திருமுறைகளில் பதினோராம் திருமுறையில் சேர்த்துள்ளனர். அருணகிரிநாதர் போற்றி மகிழ்கின்றார். சங்க காலத்தில் இயற்கை மட்டும் அறியச் சங்க இலக்கியங்கள் துணை புரிந்த நிலையில், தெய்வங்களைப் பற்றி அறிய இந்நூவ் பெரிதும் துணை புரிகிறது. இன்றும் முருக பக்தர்கள் இந்நூலைப் பாராயணம் செய்து இறையருள் பெறுகின்றனர்.

**பொருநர் ஆற்றுப்படை**

பாடியோர் முடத்தாமக் கண்ணியார் என்னும் பெண்பாற் புலவர். பரிசில் பெறக்கருதிய பொருநனைப் பரிசில் பெற்ற பொருதன்வரிலால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைவது வஞ்சியடிகள் விரவிவந்த தேரிசை ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. 248 அடிகளை உடையது.

விழாக்காலம், விழாக்காலத்தில் பொருதன் இயல்பு பாலையாழின் அமைப்பு, கேசாதிபாத வருணனை ஆகியவை நன்கு விளக்கப்பட்டுள்ளன. பாட்டுடைத் தலைவனாகக் கரிகாலன் அமைகிறான் கரிகாலனின் கொடைத் திறனும் பொன்னையும் பொற்றாமரையையும் வாரி வழங்கும் பண்பும், வெண்ணிப் போரின் வெற்றியும், தாய் வயிற்றிலிருக்கும்போதே அரசு எய்திய குறிப்பும் பொரு ஆற்றுப்படையில் கட்டப் பெற்றுள்ளன.

அம்மைக் கோலத்தோடு விளக்கிய ஆடை யை நீக்கிப் பாம்பின் கொவம் மெல்லிய ஆடையைக் கரிகாலன் வழக்குடை காவிரியில் ஜெயார் சோழிக எனும் நிலையில் பொருநர் ஆற்றுப்படை காவிரியின் சிறப்பை நயம்பு எடுத்துரைக்கின்றது.

யாழினை மணப்பெண்ணிற்கு உவமையாக்குவதும் யாழின்ன் பல்வேறு உறுப்புகளை விளக்குவதும் ஆசிரியரின் நுட்பமான வளர, இசை அறிவை விளக்குவதாகும். விறலியின் தலை முதல் பாதம் வரையிலான வருணனை படித்துப்படித்து இன்புறத்தக்கது.
கரிகாலன் பட்டினப் பாலையிலும் இடம்பெறுதல் குறிப்பிடத்தக்கது.

**சிறுபாணாற்றுப்படை**

209வரிகள், ஆசிரியப்பாவால் இயன்றது. பாடியவர்நல்லூர்நத்தத்தனார். இ பிறந்த ஊர் இடைக்கழிநாடு, இன்றைய செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. பரிசில் பெற்ற பாணன், வறுமையில் வாடும் பாணன் ஒருவனை ஒய்மாநாட்டு நல்லிய கோடனிடம் ஆற்றுப்படுத்துவது.

சேர சோழ பாண்டிய நாட்டின் தலைநகர்களாகிய வஞ்சி, உறையூர், மதுவு ஆகிய நகரங்களின் சிறப்புக்கள், ஆமூர், வேலூர், மாவிலங்கை, ஏழு வள்ளல்களில் 4 கொடைத்திறம், விறலியின் அழகு, பாணனின் வறுமை ஆகியவை ஆசிரியரின் கவிதை வங்களில் மணம் வீலகின்றன.

பாணன் சிறிய யாழை வைத்திருந்தமையால் சிறுபாணாற்றுப் படை எனும்
பெயர் பெற்றது என்பர்.

இன்குரற் சீறியாழ் இடவயின் தழீடு
முனிவிகந் திருந்த முதுவாய் இரவல

பாணனின் வறுமை நிலை நத்தத்தனாரால் நன்கு விளக்கப்படுகிறது.

இமயமலைவில் வில் பொறித்த குட்டுவன் வரலாறு சுட்டப்படுகிறது. சங்கம் யளர்த்த மதுரையில் தமிழ் நிலை பெற்றது எனும் பொருளில்

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை....
எனப் பாராட்டும்.

நல்லியக் கோடனில் வாயில் இரயலாக்கு அடையாவாயில் எனப் பரராட்டுகின்றார். ஏனைய பத்துப்பாட்டு நூல்கள் குறிப்பிட்டமன்னர்களைப் பாடிய நிலையில் சிறுபாணாற்றுப்படை மூவேந்தர்களின் சிறப்பையும், ஏழுவள்ளல்களின் சிறப்பையும் கூறுவது சிறப்புமிக்கது.

வறுமை மிகுந்த பாணனின் வீட்டு அடுக்களையில் நாய், குட்டி ஈன்று கிடக்கும்: புலவரின் வறுமை காரணமாக உணவின்றி வாடும் தாயிடம் அதன் குட்டி பால்

குடிக்க முனையும், அப்போது பாலின்றி இருக்கும் புனிற்று நாய் வலி தாங்காமல் குரைக்கும் என்பதை

திறவாக் கண்ண, சாய்செவிக்குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்.

என்று பாடியுள்ளார்
நத்தத்தனார். எழு வள்ளல்களின் சிறப்பையும் நல்லியக் கோடனிடம் ஒருங்கே காண்பதாக கூறுகின்றார்.

**பெரும்பாணாற்றுப்படை**

ஆசிரியர்கடியலூர் உருத்திரங் கண்ணனார். பட்டினப் பாலையின் ஆசிரியர் இவரே. 500 வரிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் இயன்றது. தலைவன் தொண்டைமான் இளந்திரையன் வறுமையால் வாடும் பாணனை இம்மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைகிறது. இந்நூலுக்குப் பாணாறு என்ற பெயரும் உண்டு. சிறியாழ் கொண்ட சிறுபாணலைப் பாடியது சிறுபாணாற்றுப்படை, பேரியாழ் கொண்ட பாணனைப் பாடியதால் பெரும்பாணாற்றுப் படை என்பர்) அடிமிகுதி கருதியும் பெரும்பாணாற்றுப் படையாயிற்று என்பர்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திலங்களில் வாழும் மக்களின் இயல்பு இந்நூலில் நன்கு படம் பிடித்துக் காட்டப்படுகிறது. யாழின் இயல்பு, வறுமைத்துன்பம், மக்களின் விருந்தோம்பல் பண்பு, போகுமிடங்களின் சிறப்பு,அங்குக்கிடைக்கும் பொருட்கள் இவற்றைப் படிக்கும் போது வழிப்படுத்திச் செல்லும் இந்நூல் ஆற்றுப்படை எனும் பெயர் பெற்றது பொருத்தமே என்பது விளங்கும்.

திருவெஃகாலில் திருமாலின் பள்ளி கொண்ட தோற்றத்தை இந் கரின் வீரத்தைப் புறநாநூறு பேசுவது போன்று வீரக்குடி மகளிரீ,ல் வீரத்தை, கருவுற்ற நிலையிலும் இடிய கலங்கா ஔசிரியர் வயிற்றில் உதிக்கப் போகும் வீர மரபை ஆசிரியர் நுட்பமாக யிெற்றுதற்குரியது. சிறுபாணாற்றுப்படை ஆதை பின் மென்மையை சொலித்தளை அறுவை' (மூங்கிலின் உட்புறத் தோல்) எவக் சொருபொணாற்றுப் படையோ அதனினும் மேலாக 'ஆவி அன்லக கலிங்கம்' எனக்கூறிச் சிறப்பிக்கின்றது.

காஞ்சி மாநகரின் சிறப்பு பலாப்பழத்தில் மணத்திற்கு ஈடாக எடுத்துரைக்கப்படுகிறது.

**மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)**

பாடியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார். பாடப்பட்ட மன்னன் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் பரிசில் பெற்ற கூத்தன், பரிசில் வேண்டிய கூத்தனை ஆற்றுப்படுத்துவதால் கூத்தராற்றுப்படை என்பர். 583 அடிகள், நேரிசை ஆசிரியப்பா ஆற்றுப்படையில் அதிக உடையது. இந்நூல் நன்னனின் மலையை யானைக்கு உவமித்து, அதன் கஸ்ரே ஓசையுடன் விழும் அருவியை யானையின் மத நீர் ஒழுகும் ஒசைக்கு கடாம்/ உடி கூறிச் சிறப்பித்தமையால் இதனை மலைபடுகடாம் என்பர்.

மலை வழிகள் நன்கு விளக்கப்படுகின்றன. வேடுவர்தாம் செல்லும் அடையாளம் காணப் புல்லை முடித்துவைப்பர். தன்னனின் நவிரமலை, அதில், சேயாறு, இதன் முடியில் மன்னனின் செங்கண் மாநகரம் விளக்கப்படுகிறது. வழிப்பாதைகளை ஒரு சுற்றுலா வழிகாட்டிபோல் கலை கூறிச் செல்லும் நூல் மலைபடுகடாம்.

காட்டிலுள்ள பலாப்பழத்திற்குக் கூத்தரின் மத்தளம் உவமையால் ஆந்தையின் அலறலுக்குச் சிறுபறையின் ஓசை உவமையாகிறது. இடம் இயல்பாய் அமையும் உவமைகள் பெருமை சேர்க்கின்றன.

**அகப்பாடல்கள்**

பத்துப்பாட்டில் மூன்று அகப்பாடல்கள் அவை

1. முல்லைப்பாட்டு 2.பட்டினப்பாலை 3. குறிஞ்சிப்பாட்டு.

பத்துப்பாட்டுள் குறைவான அடிகளைக் கொண்ட பாடல் இதுவாகும் அடிகளைக் கொண்டு நேரிசையாசிரியப்பாவில் அமைந்தது. பாடியவர் காவி பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார். நற்றிணையில் 29ஆம் பாடலையும் இவர் பாடியதாகக் கூறுவர்.

கார்காலம் தொடங்கின் தேர்வந்து நிற்கும் எனக் கூறிப்பிரிந்த தலைவவன் வரும் வரை ஆற்றியிருந்து வழிமேல் தன் விழி வைத்து நிற்கும் தலைவியின் அழகை இயற்கை அழகோடு இணைத்து ஒவியமாக்கியுள்ளார் நப்பூதனார்.

இதனை தலைவன் வரும் வரை ஆற்றியிருந்தமை கருதி'நெஞ்சாற்றுப்படை" எனக் கூறுதலும் உண்டு.

போர்மேற் சென்ற தலைவன் வரும்வரை காத்திருந்து, கூறியபடி கார்காலம் வந்ததும் வரவில்லையே என்று ஏங்கி நிற்க, அவளைச் சார்ந்த பெண்கள்

நல்வார்த்தையாம் விரிச்சி கேட்டுத்தலைவன் வருவான் என்று கூற, போர்க்களத்தில் கடமையாற்றி முடித்தபின் தலைவி நினைவோடு தலைவன் தேரில் புறப்படுகிறான்.

தலைவனை நினைத்து ஏங்கி, கை மெலிய, வளை கழல, கண் நீர் சொரியத் தலைவி வருந்தும் போது முல்லைக் காட்டைத் தாண்டித் தலைவனின் தேர் வரும் ஓசை தலைவி காதில் அமுதமாய் விழுகிறது என்ற செய்தியைக் கூறி, இனி தலைவிக்கு இன்பமே என்பதை நயம்பட விளக்குகிறார்தப்பூதனார்.

திருமால் வாமனனாய் அவதாரம் எடுத்த கதை இதில் உவமையாய் வெளிப்பட்டுள்ளது. நல்லது கெட்டது அறிய விரிச்சி கேட்கும் பழக்கம் யானையைப் பயிற்றுவிக்க வடமொழியைப் பயன்படுத்துதல், மாலையில் வீட்டின் முன் விளக்கேற்றுதல், பொழுது அளந்து அறிய நாழிகை அறிவித்தல், அரசன் பள்ளி கொள்ளுமிடத்தில் காவலுக்கு ஊமையரை நியமித்தல் போன்ற அரிய செய்திகளை இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

கார்காலத்தில் விலங்கின் மகிழ்வும் துயரும் கூறி, இறுதியில் கார்காலமும் தலைவனின் தேர்வரும் காலமும் ஒரேஒலியாய் இணைய இரு இதயமும் இணையப் போவதை நுட்பமாய்க் கூறி முடியும் முல்லைப்பாட்டு கார்காலப் பாடல்களில் தலை சிறந்தது எனலாம்.

**குறிஞ்சிப்பாட்டு**

இந்நூல் 261 அடிகள், நேரிசையாசிரியப்பாவால் இயன்றது. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அகப்பொருள் மரபை அறிவுறுத்தக் கபிலர் பாடியதாகக் கூறுவர். அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்தது. இதற்குப் பெருங் குறிஞ்சி எனும் பெயருமுண்டு என்பர் நச்சினார்க்கினியரும், பரிமேலழகரும்

குறிஞ்சித்திணையைப் பாடுவதில் வல்லவர் கபிலர். குறிஞ்சிக்கோர் கபிலர் எனப் போற்றப்படுபவர். அகப்பாடல்களிலும் இவரது குறிஞ்சிப் பாடல்கள் சிறப்பு. மிக்கவை.புறநானூற்றிலும் இவர்பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

கானகத்தில் காவலுக்குச் சென்ற தலைவி ஊழ்வினையால் காதல் வயப்பட்டு, காதலனைக் காண இயலாத நிலையில் உடல் மெலிய, தாய் தெய்வக் குற்றம் ஏற்பட்டதாகக் கருதி வெறியாடின் நோய் நீங்கும் என தம்ப, இந்நிலையில் தோழி செவிலியிடம் தலைவியின் காதலைக் கூறி காமவொழுக்கத்தை இயற்கைப் பின்ன்ணியில் பூவோடு இணைத்துப் புணர்ச்சியைக் காட்டும் புதுமை இலக்கியம்

இது எனலாம். 99 வகையான பூக்களைத் தலைவியும். தோழியும் பறித்துக்குவிப்பதைப் பட்டியலிட்டுக் காட்டும் குறிஞ்சிபாட்டு.

தலைவனது மலைவளம் கூறும் பகுதியில் கபிலர் தமக்கே உரியம் கூறும் பண்பினை வெளிப்படுத்துகின்றார். முத்து, மாணிக்கம், அணிகன் கெடின் உரியோரிடம் கொடுத்து முன்பு போல் முறைப்படுதால் நல்ல குணங்கள் கெடின் எப்படி முறைப்படுத்த இயலும் என்கிறார்"

அக்காலத் திருமண முறையில் தாலி கட்டுவதை விடக் கைப் பிடிக்கும் சடங்கே முதன்மையாகக் கருதப்பட்டது என்பதை

நேரிறை முன்கை பற்றிறுமர்
தர தாடறி நன்மணம் அயர்கம் சின்னாள்......

எனும் வரிகள் இனிது விளக்கும்.

**பட்டினப்பாலை,**

பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். மொத்தம் 301 வரிகள் 163 அடிகள். ஆசிரியப்பா 136 அடிகள். ஆசிரியவடிகள் இடையிடையே விரவிவரப்பெற்று வஞ்சிப்பாவில் அமைந்தது. வஞ்சி நெடும் பாட்டு என்பர். இளம்பூரணர் இதை வஞ்சிப்பா என்பர்

காவிரிப் பூம்பட்டினத்தைச் சிறப்பித்துப் பாலைத் திணையைப் பாடியதால் இப்பெயர் பெற்றது. பொருள் காரணமாகத் தலைவியைப் பிரிய கருதிய தலைவன் காரணமாகப் பிரிவை நிறுத்தியது இதன்துறையாகும்.

காவிரியின் சிறப்பு 'வான் பொய்ப்பினும் தான்பொய்யா, மலைத் கடற்காவிரி' எனயும், காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பை 'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்' எனவும், அன்பின் சிறப்பை

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார்இருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே......

எனவும், சிறப்புடன்எடுத்துரைக்கின்றது.

பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகச் சிறப்பை நன்கு வெளிப்படுத்துகின்றது. கடல் வணிகத்தின் சிறப்பைச் சங்க காலத்தின் வழியே வப் பட்டினப்பாலை பெரிதும் உதவுகின்றது. வணிகர்களின் நேர்மை, வணிகர் கடற்கரையில் கங்க வரி விதிக்கும் முறை, காவிரிப்பூம்பட்டினத்தின் முக்கிய இடங்களாகிய பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கத்தின் சிறப்பு, பரதவர்களின் வீரம் ஆகியவை நன்கு விளக்கப்படுகின்றன்.

பட்டினப்பாலைக்கு மறைமலை அடிகளும் இராகவையங்கார் அவர்களும் சிறந்த ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளனர். பட்டிமைா? பாலையா? எனும் பட்டி தலைப்போடு தொடங்கித் தலைவனின் மனமெனும் நடுவரின் நல்ல தீர்ப்பால் நம்மை மெய்ம் மறக்கச் செய்யும் அகப்பாடல் பட்டினப்பாலை,

மதுரைக் காஞ்சி

புறம் பற்றிய நூல்

இப்பாட்டு பத்துப்பாட்டில் அதிக அடிகளைக் கொண்டது. 782 அடிகள் இடையிடையே வஞ்சியடிகள் விரவிவந்த ஆசிரியப்பா ஆசிரியர் மாங்குடி வகுதனார். தலைவன் தலையாலங் பாட்டுடைத் செழியன். கானத்துச் செருவென்ற

பத்துப்பாட்டு வெண்பா இதனைப் பெருகுவளமதுரைக் காஞ்சி என்று பாற்றும் மதுரையையாண்ட பாண்டிய மன்னனுக்கு வீடுபேறு கருதி வாழ்க்கை நிலையாமையைப் போதிக்க எழுந்த நூல் எனவே மதுரைக் காஞ்சியாயிற்று

782 அடிகளில் பெரும்பகுதி மாநகர் மதுரையின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது. மதுரையை ஒரு நாள் முழுக்கச் சுற்றி வரும் அனுபவத்தை குடி மருதனார்தமக்குத் தருகின்றார்.

அறநெறி தவறா அரசர்கள் எனவே கோள்கள் தம் செயல் திறம்பாதிருக்க நாடு ளங் கொழிக்கும். ஐந்திணைவளம் கூறி, மன்னன் கடமைகளை எடுத்துரைக்கும், சண்டியன் தலையாலங் கானத்தில் எழுவரை வென்றமையும் ஆட்சிச் சிறப்பும் கூறி இன்பங்களில் தன்னை மறந்த மன்னனிடம் உடனடியாக நிலையாமையைக் ஹாது மனம் மகிழ அவன் முன்னோர் பெருமையும் அவன் பெருமையும் இத்துழைத்து எத்தனை சிறப்புக்கள் அடையினும் மண்நமக்குச் சொந்தமன்று என்ற ண்மையைக் கூறி இறுதியில் வீடுபேற்றின் சிறப்பை எடுத்துரைக்கும் மாங்குடி குதவாரின் பணி துட்பமானது, இளமை, யாக்கை, செல்வம் இவை நிலையாமை கூறி வீடு பேறே நிலைத்தது என முடிக்கிறார்.

மதுரையின் நாளங்காடியும் (பகற்கடை)அல்லங்காடி (இரவு நேரக்கடை அழகுற விளக்கப்படுகின்றன. மதுரையின் தெருக்கள் 'ஆறு கிடந்தன்ன அகன்ற தெரு' எனவும் பாண்டிய நாட்டின் அறங்கூறவையம் எப்படியிருந்தது என்ப,

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச் செற்றமும் உவகையும் செய்யாது காத்து ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச் சிறந்த கொள்கை அறங்கூறு அவையமும் என்னும் அடிகளில் பொதிகிறார்.

போட்டுடைத்தலைவன் நெடுஞ்செழியன் புறப்பாடலில் கூறும் வஞ்சிறை ஞ்சின மதுரைாட்டுஞ்சி தந்த மாங்குடி மருதனாடி மருதன் தலைவன் ஆ காக்கவும் மலரைக் காம்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவன் ஆக, உலக்கிறு சிலை இயபலர் புகழ் சிறப்பின் புலவர் பாடாது வரைக என் நிலவரை' எனும் விளக்கும். (புறம் -72)

மதுரைக் காஞ்சி தவிர அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநாஜ் ஆகிய எட்டுத்தொகை நூல்களிலும் மாங்குடி மருதனார் பாடம் இடம்பெற்றுள்ளன.

**அகப்புறப் பாடல்**

**நெடுநல்வாடை**

188 அடிகள் நேரிசை ஆசிரியப்பா. பாடியவர்நக்கீரர். திருமுருகாற்றுப்படை இவர் பாடியதே ஆகும். தலைவனின் (பாண்டியன் நெடுஞ்செழியன்) பிரிவு வருந்தும் தலைவிக்கு (பாண்டிமாதேவி) நல் வார்த்தை கூறி ஆற்றுவிக்கு பகைவரை வென்று வேந்தன் விரையில் வருவானாக எனச் செவிலியர் கூற்ற இந்நூல் அமைகிறது. அகத்திணை மரபுப்படி பெயர் குறிப்பிடாத சிறந்ததொரு பாடலாகவே நெடுநல்வாடை அமைகிறது. தலைவனின் படை வீரர்கம் குறிப்பிடும் நிலையில் வேலின் முனையில் வேப்பம் பூசூடியதைச்சுட்டியமையா பாண்டிய வீரர்கள் என்பது வெளிப்பட்டுவிட்டது, அப்போதைய பாண்டிய மண் நெடுஞ்செழியன் என்பதும் உய்த்துணரப்படுவதால் இந்நூலைப் புறம் என்பர். அவ புறமா என்பது இன்றளவும் அறிஞர்கள் இடையே கேள்விக் குறியாக உள்ளது. ஆ அகம் பற்றிய அழகிய நூல் நெடுநல்வாடை எனலாம்.

நெடுநல்வாடை - நெடிதாகிய நல்வாடை வேறு தொழிலின்றித்தலைவளை நினைக்கும் தலைவிக்கு நெடிதாகவும் துன்பமாகவும், கடமை தலைவனுக்கு நல்லதாகவும் அமையும் வாடை. எனவே நெடுநல்வாடை ஆயிற்ழ்

கூதிர் காலத்தின் கொடுமை நன்கு வருணிக்கப்படுகிறது. விலங்கும் மேய்ச்சலை மறந்தன, குரங்குகள் குளிரில் நடுங்கின, பறவைகள் நடுங்கி நிலத்தி வீழ்ந்தன. குளிர்காரணமாகப் பசுக்கள் கன்றுகளுக்குப் பாலூட்டாது உதைக்கின்றன மலையைக் குளிர்ச்சியடையச் செய்த குளிர்காலம் எனும் பொருளில்

"மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப் பன்ன கூதிப் பானாள்" (வரி 9-12)

என்று கூறப்பட்டுள்ளது.

அரசமாதேவியின் அந்தப்புரமும் அங்குள்ள ஓவியமும் அதில் புனையா எலியமாய்ப் பாண்டிமாதேவி படுத்திருக்கும் கட்டிலின் அழகும் நம் கண்முன் தோன்றுகின்ற அளவு நக்கீரர் படைத்துள்ளார். மலரின் மலர்ச்சியால் பொழுதறிந்து மாலைப் பொழுதில் பெண்கள் நெல்லையும் மலரையும் தூவி விளக்கேற்றி இல்லுறை தெய்வத்தை வணங்கும் வழக்கம் சுட்டப்படுகிறது. மன்னனின் பாசறைத் தொழிலும் அவனது கடமையுணர்வும் வீரர்களுக்கு ஆறுதல் கூறும் நிலையும் நன்கு விளக்கப்படுகின்றன.

நெடுநல்வாடையின் சிறப்புக் கருதி திரு.வி.க. 'நெடுநல்வாடை ஒரு பெருஞ் சுரங்கம் நக்கீரர் கண்ட சுரங்கம்; தமிழ்ச் சுரங்கம்' எனப் பாராட்டுவர்.

**அற இலக்கியம்**

பிற்காலத்தினர் தொகை நூல்களை மேல்வரிசை நூல்கள் என்றும் கீழ்வரிசை நூல்கள் என்றும் பிரித்தனர். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் மேல்வரிசை - மேற்கணக்கு நூல்கள்; பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கீழ்வரிசை - கீழ்க்கணக்கு நூல்கள்.

குறைந்த அடிகளையுடைய பாடல் நூல்களுக்குக் கீழ்க்கணக்கு நூல்கள் என்று பெயர் வைத்தனர். நிறைந்த அடிகள் அமைந்த பாடல்களைக் கொண்ட நூல்களை மேற்கணக்கு நூல்கள் என்று கூறினர். மேலும் நூல்கள் தோன்றிய காலங்களின் அடிப்படையிலும் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு எனப் பிரிக்கப்பட்டதாகவும் கருத வாய்ப்புண்டு.

மேற்கணக்கு நூல்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும். அவற்றின் எண்ணிக்கையும் பதினெட்டு; கீழ்க்கணக்கு நூல்களும் பதினெட்டு.

கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இன்னின்னவை என்பதைக் குறிக்கும் பழம் பாடல் ஒன்று உண்டு.

நாலடி, நான்மணி, நால்நாற்பது, ஐந்திணைமுப்
பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்,
இன்னிலைய காஞ்சியோடு, ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு

"நாலடியார், நான்மணிக்கடிகை, கார் நாற்பது, களவழி நாற்பது, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திணை ஐம்பது, ஐந்திணை ஐம்பது, கைந்நிலை (ஐந்திணை அறுபது), ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, முப்பால், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், இனிய நிலையை எடுத்துக் கூறுகின்ற முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பவையே ஒழுக்க நிலையைக் கூறுகின்றனவாகிய கீழ்க்கணக்கு நூல்களாகும்" என்பது இதன் கருத்து. கைந்நிலை என்பது ஒரு நூலைக் குறிப்பிடவில்லை என்று கருதுபவர்கள் 'இன்னிலை' என்றும் ஏற்றுக் கொள்கின்றனர்.

**அற நூல்கள்:**

நாலடியார்
நான்மணிக்கடிகை
இனியவை நாற்பது
இன்னா நாற்பது
திரிகடுகம்
ஆச்சாரக்கோவை
சிறுபஞ்சமூலம்
முதுமொழிக் காஞ்சி
பழமொழி நானூறு
ஏலாதி

திருக்குறள் ஆகிய பதினொரு நூல்களும்,

**அகப்பொருள் பற்றிய நூல்கள்:**

கார் நாற்பது
ஐந்திணை ஐம்பது
திணைமொழி ஐம்பது
ஐந்திணை எழுபது
திணைமாலை நூற்றைம்பது
கைந்நிலை ஆகிய ஆறு நூல்கள்

**புறப்பொருள் பற்றிய நூல்:**

களவழி நாற்பது

**நாலடியார்**

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல். இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இதனால் இது நாலடி நானூறு எனவும் பெயர் பெறும். பல சந்தர்ப்பங்களில் இது புகழ் பெற்ற தமிழ் நீதி நூலான திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது. வாழ்க்கையின் எளிமையான விடயங்களை உவமானங்களாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகிறது.

நீதிகளைக் கூறுவதில் திருக்குறளும் நாலடியாரும் ஏறக்குறைய ஒரே முறையைப் பின்பற்றுகின்றன. திருக்குறளைப் போன்றே நாலடியாரும், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பிரிவுகளை உடையதாக விளங்குகிறது.திருக்குறள் இரண்டு அடிகளில் சொல்ல, நாலடியார் நான்கு அடிகளில் சொல்கிறது.திருக்குறள் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டது. நாலடியாரோ சமண முனிவர் நானூறு பேர் பாடிய வெண்பாக்களின் தொகுப்பாகும். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி', 'சொல்லாய்ந்த நாலடி நானூறும் நன்கு இனிது', 'பழகுதமிழ் சொல்லருமை நாலிரண்டில்' என்கிற கூற்றுகள் இதன் பெருமையை திருக்குறளுக்கு இணையாக எடுத்தியம்புவன.

கல்வி கரையில; கற்பவர் நாள் சில;
மெல்ல நினைக்கின் பிணி பல; - தெள்ளிதின்
ஆராய்ந்த் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

நாம் கற்கவேண்டிய நூல்கள் மற்றும் பெறவேண்டிய அறிவு அளவில்லாதது. ஆனால் நம் வாழ்நாளோ குறைவு. எண்ணிப்பார்த்தால் இதிலும் நோய், நொடிகள். எனவே வாழ்நாளை வீணாக்காமல், அன்னப்பறவை எப்படி நீரைப் பிரித்து பாலை மட்டும் உண்கிறதோ, அதுபோல நாம் சிறந்த நூல்களை மட்டும் கற்றுப் பயன்பெறவேண்டும்.

**நான்மணிக்கடிகை**

நான்மணிக்கடிகை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள், ஒன்று. இது ஒரு நீதி நூல். விளம்பி நாகனார் என்னும் புலவரால் இயற்றப்பட்ட இந்நூல் நூற்றியொரு பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நான்மணிக்கடிகை என்பது நான்கு இரத்தினத் துண்டங்கள் என்னும் பொருளைத் தரும். ஒவ்வொரு பாடலிலும் நான்கு சிறந்த கருத்துக்களைக் கூறுவதால் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது.

எள்ளற்க என்றும் எளியரென்று என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேற்பட - உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து. . . . .[001]

எவரையும் எளியவர் என்று எண்ணி இகழ்ந்து விடாதே. மிகச் சிறந்த பொருளாக இருந்தாலும் தகுதியற்றவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளாதே. செய்யக் கூடாதவற்றைச் செய்தாலும் ஏழை மக்களிடம் கோபம் கொள்ளாதே. சொல்லத் தகாத சொற்களைக் கோபத்திலும் கூறக்கூடாது.

**இனியவை நாற்பது**

இனியவை நாற்பது பூதஞ்சேந்தனார் இயற்றியது. 40 வெண்பாக்களைக் கொண்டது. நான்கு பாடல்களில் இன்பம் தருவன நான்கினைக் கூறியுள்ளார். மற்ற பாடல்களில் மூன்று இன்பங்களை கூறியுள்ளார்.

பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகஇனிதே
நற்சலையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவும் மேலாயார்ச் சேர்வு. . . . .[01]

பிச்சையெடுத்தாவது கற்பது இனிது. அப்படி கற்ற கல்வி நல்ல சபையில் உதவுவது மிக இனிது. முத்தையொக்கும் மகளிரது வாய்ச்சொல் இனிது. அதுபோல பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல் இனிது.

**இன்னா நாற்பது**

இன்னா நாற்பதில் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்களைக் கொண்டு, ஒவ்வொன்றையும் 'இன்னா' என எடுத்துக் கூறுதலின் 'இன்னா நாற்பது' எனப் பெயர்பெற்றது. இந்நூலை இயற்றியவர் கபில தேவர். ஆசிரியர் தமது கடவுள் வாழ்த்தில் சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் ஆகியோரைக் குறித்துள்ளார்.

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா

தடுமாறி வாழ்த லுயிர்க்கு. . . . .[03]

கொடுங்கோல் அரசனது கீழ் வாழ்தல் துன்பம். தெப்பம் இல்லாமல் பெரிய ஆற்றினைக் கடந்து செல்லுதல் துன்பம். வன்சொல் கூறுவோரது தொடர்பு துன்பம். உயிர்கள் மனம் தடுமாறி வாழ்தல் துன்பம்.

**திரிகடுகம்**

திரிகடுகம் என்பது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் நல்லாதனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டதாகும். திரிகடுகம் என்பது மூன்று மருந்துப் பொருட்களைக் குறிக்கும். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூலிகைகள் உடலுக்கு நன்மை செய்வது போல் இந்நூலில் ஒவ்வொரு பாட்டிலும் உள்ள மூன்று கருத்துக்கள் வாழ்விற்கு நன்மை செய்யும் ஆதலால் இந்நூல் இவ்வாறு அழைக்கப் படுகிறது.

கல்லார்க்கு இன்னா ஒழுகலும், காழ்க் கொண்ட
இல்லாளைக் கோலால் புடைத்தலும், இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும், - இம் மூன்றும்
அறியாமையான் வரும் கேடு. . . . .[03]

கற்றறியாதவருடன் நட்பாய் இருப்பதும், கற்புடை மனைவியை அடித்தலும், சிற்றறிவினரை தம் வீட்டுள் சேர்ப்பதும் அறியாமையினால் விளைகின்ற கேடுகளாகும்.

**ஆசாரக்கோவை**

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆசாரங்களை அதாவது ஒழுக்கங்களை எடுத்துக்கூறும் ஒரு நூல் ஆசாரக்கோவை. பண்டைக்காலத் தமிழ் நூல்களின் தொகுப்புக்களில் ஒன்றான பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றாக வைத்து எண்ணப்படும் இது ஒரு நீதி நூல். வண்கயத்தூரைச் சேர்ந்த பெருவாயின் முள்ளியார் என்னும் புலவர் இதனை எழுதினார்.

பல்வேறு வெண்பா வகைகளால் அமைந்த 100 பாடல்களால் ஆனது இந்நூல். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விடயம் தொடர்பான ஒழுக்கத்தை எடுத்து இயம்புகின்றது. இவ்வொழுக்கங்களின் பட்டியல்.

நன்றி அறிதல், பொறையுடைமை, இன் சொல்லோடு,

இன்னாத எவ் உயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு,

ஒப்புரவு ஆற்ற அறிதல், அறிவுடைமை,

நல் இனத்தாரோடு நட்டல், - இவை எட்டும்

சொல்லிய ஆசார வித்து. . . . .[001]

தனக்குப் பிறர் செய்த நன்றியறிதலும், பொறையும், இன்சொல்லும், எல்லா உயிர்க்கும் இன்னாதன செய்யாமையும், கல்வியும், ஒப்புரவை மிக வறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தாரோடு நட்டலும் என இவ்வெட்டு வகையும் நல்லோராற் சொல்லப்பட்ட ஆசாரங்கட்குக் காரணம்.

**சிறுபஞ்சமூலம்**

சிறுபஞ்சமூலம் என்பது ஐந்து சிறிய வேர்கள் என்று பொருள்படும். அவையாவன சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்தரி வேர் என்பனவாம். இது போன்றே வில்வம், பெருங் குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை, இவற்றின் வேர்களைப் பெரும் பஞ்சமூலம் என்பர். சிறுபஞ்சமூலம் ஆகிய மருந்து உடல் நலம் பேணுமாறு போல, சிறுபஞ்சமூலப் பாடல்களில் குறித்த ஐந்தைந்து பொருள்களும் உயிர் நலம் பேணுவன. அதனால் இந்நூல் சிறுபஞ்சமூலம் என பெயர் பெற்றது.

இந் நூலை இயற்றியவர் காரியாசான் என்பவர். காரி என்பதுவே இவரது இயற்பெயர். ஆசான் என்பது தொழில் பற்றி வந்த பெயராகலாம். இவரை மாக் காரியாசான் என்று பாயிரச் செய்யுள் 'மா' என்னும் அடை மொழி கொடுத்துச் சிறப்பிக்கின்றது.

கல்லாதான் தான் காணும் நுட்பமும், காது இரண்டும்

இல்லாதாள் ஏக்கழுத்தம் செய்தலும், இல்லாதான்

ஒல்லாப் பொருள் இலார்க்கு ஈத்து அறியான் என்றலும்,

நல்லார்கள் கேட்பின் நகை. . . . .[03]

கல்லாதா னொருவன் தான் ஆராய்ந்து காணும் நுண்மைப்பொருளும், காதிரண்டும் இல்லாதாள் அழகுடையேன் என்றெடுத்த முகத்தினளா யொழுகலும், பொருளில்லாதவன் இல்லாதார்க் கீய்த்தளியா னென்றாலும், ஒருவன் தான் தனக்கியன்ற பொருளன்றி யியலாத பொருளை ஈயாதா னென்றலும் அறிவுடைய நல்லோர் கேட்பின் நகையாம்.

முதுமொழி என்பது பழமொழி என்னும் சொற்பொருளோடு தொடர்புடையது. காஞ்சி என்பது மகளிர் இடையில் அணியும் ஒருவகை அணிகலக் கோவையையும் குறிக்கும். பல மணிகள் கோத்த காஞ்சி அணி போல முதுமொழிகள் பல கோத்த நூல் முதுமொழிக் காஞ்சி எனப் பெயர் பெற்றது எனச் சிலர் கூறுவர். இந்நூலை இயற்றியவர் மதுரைக் கூடலூர் கிழார்.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம் ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை

கடல் சூழ்ந்தஉலகத்து மக்கட்கெல்லாம் ஓதலினும் மிக்க சிறப்புடைத்து ஆசாரமுடைமை.

2. காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்

பிறர் தன்மேற் செய்யும்காதலினும் சிறந்தது கற்றவரால் கண்ணஞ்சப்படுதல்.

3. மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை

தானாக ஒன்றை மதியுடைமையான் அறியும் அறிவினும் மிக்கசிறப்புடைத்துத் தான் கற்றதனைக் கடைப்பிடித்திருத்தல்.

4. வண்மையிற் சிறந்தன்று வாய்மை உடைமை

செல்வத்தினும் மிக்கசிறப்புடைத்து மெய்யுடைமை

5. இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை

இளமையினும் மிக்கசிறப்புடைத்து உடம்பு நோயின்மை.

6. நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று

அழகுடைமையினும் மிக்கசிறப்புடைத்து நாணுடைமை.

7. குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று

நல்ல குலமுடைமையினும்கல்வியுடைமை சிறப்புடைத்து.

8. கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று

தான் ஒன்றைக் கற்குமதனினும்சிறப்புடைத்துக் கற்றாரை வழிபாடு செய்தல்.

9. செற்றாரைச் செறுத்தலின் கற்செய்கை சிறந்தன்று

பகைவரைச் செலுத்தலினும் மிக்கசிறப்புடைத்துத் தன்னைப் பெருகச்செய்தல்.

10. முற்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று

செல்வம் முற்காலத்துப் பெருகிப் பின்அழிதலின் நின்ற நிலையிற் சிறுகாமை சிறப்புடைத்து.

**பழமொழி நானூறு**

பழமொழி நானூறு சங்கம் மருவிய காலத் தமிழ் நூல் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. அதன் சிறப்புப் பாயிரத்தையும், கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு (401) பாடல்களைக் கொண்டது. இது முன்றுறையர் அல்லது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. இதன் ஒவ்வொரு பாட்டிலும் ஒரு பழமொழி சார்ந்த நீதி கூறப்படுவதால் பழமொழி நானூறு என்ற பெயர் பெற்றுள்ளது. இதன் காலம் கி. பி.

ஐந்தாம் நூற்றாண்டு ஆகும். இந்நூலில் 34 தலைப்புகளின் கீழ் பாடல்கள் அமைந்துள்ளன.

பல் ஆண்டும் ஈண்டிப் பழுதாய்க் கிடந்தது
வல்லான் தெரிந்து வழங்குங்கால், வல்லே
வளம் நெடிது கொண்து அறாஅது; - அறுமோ,
குளம் நெடிது கொண்டது நீர்?. . . . .[374]

மிகுந்த நீரைக் கொண்டதாகிய குளம் இறைத்தால் நீர் வற்றுதல் உண்டோ? (இல்லை.) (அதுபோல்) பல ஆண்டுகளாக ஒன்றுசேர்ந்து குற்றமுடைய தாய்க் கிடந்த பொருளை கொடைவல்லா னொருவன் செய்யும் நெறியறிந்து அதனை வறியோர்க்கு விரைந்து வழங்குமிடத்து செல்வத்தை மிகுதியாகக் கொண்ட அது கெடுதல் இல்லை.

**ஏலாதி**

ஏலாதி' என மருத்துவ நூல்களில் கூறப்படுவது ஏலம் ஆதியான ஆறு பொருள்கள் சேர்ந்த ஒரு வகைச் சூர்ணம். ஏலம் ஒரு பங்கு, இலவங்கப்பட்டை இரண்டு பங்கு, நாககேசரம் மூன்று பங்கு, மிளகு நாலு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு, சுக்கு ஆறு பங்கு என்ற அளவுப்படி சேர்த்து இம் மருந்தை ஆக்குவர். ஏலாதி நூலும் ஒவ்வொரு பாடலிலும் ஆறு பொருள்களைப் பெற்று, உயிருக்கு உறு துணையாக அற நெறியை விளக்கி உரைக்கும் ஒப்புமை பெற்றமையால் இப் பெயரைப் பெற்றுள்ளது.

இந் நூலின் ஆசிரியர் கணிமேதாவியார். கணிமேதை என்றும் இவர் வழங்கப் பெறுவர். கணிமேதை என்பது கொண்டு சோதிட நூற் புலமை மிக்கார் இவர் என்று கொள்வாரும் உண்டு.

தவம் எளிது; தானம் அரிது; தக்கார்க்கேல்,
அவம் அரிது; ஆதல் எளிதால்; அவம் இலா
இன்பம் பிறழின், இயைவு எளிது; மற்று அதன்
துன்பம் துடைத்தல் அரிது. . . . . [03]

யாவர்க்குந் தவஞ் செய்தல் எளிது, கைப்பொருள் வழங்கல் அரிது பெரியோர்க்குக் குற்றத்துக்குள்ளாதல் அரிது; நன்னெறியி லொழுகுதல் எளிது. கெடுதலில்லாத இன்பநெறி தடுமாறிச் சென்றால்பிறப்பிற் பொருந்துதல் எளிது. அவ்வாறு பிறந்ததின்கணுண்டாகுந் துன்பத்தை நீக்கிக் கொள்ளுதல் அரிது.

**திருக்குறள்**

திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் "முப்பால்" என்னும் பெயரோடு விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம்

ஆகிய மூன்று பால்களும் கொண்டமையால் "முப்பால்" எனப் பெயர் பெற்றது. முப்பால்களாகிய இவை ஒவ்வொன்றும் "இயல்" என்னும் பகுதிகளாக மேலும் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலும் சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒவ்வொரு அதிகாரமும் பத்து பாடல்களை தன்னுள் அடக்கியது. இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை. அக்காலத்தில் இவ்வகை வெண்பாக்களால் ஆகிய முதல் நூலும் ஒரே நூலும் இதுதான். குறள் வெண்பாக்களால் ஆனமையால் "குறள்' என்றும் "திருக்குறள்" என்றும் இது பெயர் பெற்றது. திருக்குறள் 9 இயல்களையும்; 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் கொண்டது.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கண்நீர் பூசல் தரும். . . . [071]

அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்

நண்பென்னும் நாடாச் சிறப்பு. . . . [074]

அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்: அஃது எல்லாரிடத்தும் நட்பு என்றுசொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.

**அகப்பொருள் பற்றிய நூல்கள்:**

**கார் நாற்பது**

கார் நாற்பது அகப்பொருள் பற்றிய கீழ்க்கணக்கு நூல்களில் சிறியது. கார் காலத்தின் தோற்றம் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படுகின்றமையாலும், நாற்பது செய்யுட்களை உடைமையாலும், இது கார் நாற்பது என்னும் பெயர் பெற்றது. எனவே இது காலம் பற்றிய தொகை நூலாகும். இதனை இயற்றியவர் மதுரைக் கண்ணங்கூத்தனார். கூத்தனார் என்பது இவர் இயற்பெயர். கண்ணன் என்பது இவர் தந்தையார் பெயர். இவர் வாழ்ந்த ஊர் மதுரை. இவர் இந் நூலின் முதற் செய்யுளில் முல்லை நிலத் தெய்வமாகிய மாயோனைக் குறித்துள்ளார்**.**

மண் இயல் ஞாலத்து, மன்னும் புகழ் வேண்டி,

பெண் இயல் நல்லாய்! பிரிந்தார் வரல் கூறும்

கண் இயல் அஞ்சனம் தோய்ந்தபோல், காயாவும்

நுண் அரும்பு ஊழ்த்த புறவு. . . . . [08]

பெண் தகைமையையுடைய நல்லாய்! மண் நிறைந்த உலகத்து நிலை பெறும் புகழை விரும்பிப் பிரிந்து சென்ற தலைவர் மீண்டும் வருதலைக் கண்களில் தீட்டிய மையினைப் போன்று காயாஞ் செடிகளும், நுண்ணிய அரும்புகளும் மலரப் பெற்ற காடுகள் சொல்லும்.

**ஐந்திணை ஐம்பது**

முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற ஐந்திணைக்கும் பத்துப் பாடல்களைப் பெற்றுள்ளமையால் 'ஐந்திணை ஐம்பது' எனப் பெயர் பெற்றது. பாயிரச் செய்யுள் ஒன்று நூலின் இறுதியில் அமைக்கப் பெற்றுள்ளது. இந் நூலின் ஆசிரியர் மாறன் பொறையனார். இப் பெயரில் மாறன் என்பது பாண்டியனைக் குறிப்பதாயும், பொறையன் என்பது சேரனைக் குறிப்பதாயும் உள்ளன.

முல்லை நறுமலர் ஊதி இருந்தும்பி

செல்சார் வுடையார்க் கினியவாய் - நல்லாய்மற்(று)

யாரும்இல் நெஞ்சினேம் ஆகி யுறைவேமை

ஈரும் இருள்மாலை வந்து. . . . . [06]

மாலைக் காலமாகிய வாள் தோன்றி, கரியவண்டுகள் முல்லை மலர்களில் படிந்து ரீங்காரம் செய்து, தலைவரைச் சார்ந்திருக்கின்ற மகளிர்க்கு இன்பத்தைச் செய்கின்றது. ஆனால் பிரிவினால் தனித்துத் துணையில்லாது தவிக்கின்ற உள்ளத்தோடு வாழ்கின்ற எம்முயிரைப் பிளக்கின்றது. யான் எவ்வாறு பொறுத்துக்கொள்வேன்.

**திணைமொழி ஐம்பது**

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணைகளுக்கும் பத்துப் பாடல்கள் வீதம் உள்ளன. அதனால் இந்நூல் திணைமொழி ஐம்பது என ஐந்திணை ஐம்பதிலிருந்து வேறுபட்டுப் பெயர் பெற்றுள்ளது. இந் நூலை இயற்றியவர் கண்ணஞ் சேந்தனார். இவர் சாத்தந்தையாரின் புதல்வர். இவரது பெயரைக் கொண்டே இவர் வைதிக சமயச் சார்பினர் என்று அறியலாம்.

கணமுகை கையெனக் காந்தள் கவின

மணமுகை யென்றெண்ணி மந்திகொண் டாடும்

விறன்மாலை நாட! வரிஅரிதாங் கொல்லோ

புனமும் அடங்கின காப்பு. . . . . [02]

திரட்சியையுடைய மொட்டுக்களைக் கையென்று கருதும்படி காந்தள் அழகுபெற அரும்ப, அதன் மணத்தையுடைய முகைகளென்று கருதி மந்திகள்

கொண்டாடுகின்ற மிகுதியையுடைய மலை நாடனே! நீ இங்கு வருதலரிதாங்கொல்லோ; புனங்களும் தினையரியப்பட்டுக் காவலொழிந்தன.

**ஐந்திணை எழுபது**

ஐந்திணைகளில் ஒவ்வொன்றிற்கும் பதினான்கு பாடல்களைக் கொண்டு, எழுபது பாடல்களில் இந்நூல் அமைந்துள்ளது. இந் நூலின் முதலில் விநாயகரைக் குறித்த கடவுள் வணக்கப் பாடல் ஒன்று உள்ளது. இக் கடவுள் வாழ்த்து நூலுக்குப் புறம்பாதலோடு, இதற்குப் பழைய உரைகாரர் உரை எழுதாமையாலும், இச் செய்யுள் நூலாசிரியரே இயற்றியது என்று துணிந்து கூற இயலாது. இச் செய்யுளின் நடைப் போக்கும் ஏனைய பாடல்களினும் வேறுபட்டுள்ளது. ஐந்திணை நூல்களில் வேறு ஒன்றிற்கும் கடவுள் வாழ்த்துப் பாடல் இல்லாமையும் சிந்திக்கத் தக்கது. இந் நூலில் உள்ள 70 பாடலகளில் முல்லைத் திணையில் இரண்டு பாடல்களும் (25, 26), நெய்தல் திணையில் இரண்டு பாடல்களும் (69, 70) இறந்துபட்டன. இந் நூலை ஆக்கியவர் மூவாதியார். இவரைச் சிலர் சமணர் என்று கூறுவர்.

சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி

வலியாகிப் பின்னும் பயக்கும் மெலிவில்

கயந்திகழ் சோலை மலைநாடன் கேண்மை

நயந்திகழும் என்னும்என் நெஞ்சு. . . . . [04]

அமைந்தாருடைய நட்புச் சிதைதலின்றி நிலைபெற்று அடைந்தார்க்கு வலியாகி மறுமையின்கண்ணும் பயனைச் செய்யும்; அதுபோல, நீராற்றிகழாநின்ற சோலையையுடைய மலைநாடனுடைய நட்பு மெலிவின்றி இன்பத்தைத் திகழ்விக்கும் என்றது என்னெஞ்சு.

**திணைமாலை நூற்றைம்பது**

பண்டைத் தமிழ் நூற் தொகுப்பான பதினெண்கீழ்க்கணக்கில் அடங்கியது. 153 பாடல்களைக் கொண்ட இது ஒரு அகப்பொருள் சார்ந்த நூல். கணிமேதாவியார் என்பவர் இதனை இயற்றினார். இன்னொரு பதினெண்கீழ்க்கணக்கு நூலான ஏலாதியும் இவர் இயற்றியதே.

கீழ்க்கணக்கு வரிசையில் அகப்பொருள் நூல்கள் ஆறு. அவற்றுள் இரண்டு நூல்கள் 'திணை' என்றும், வேறு இரண்டு 'ஐந்திணை' என்றும் பெயர் பெறுவன. ஐந்திணை ஒழுக்கங்களைக் கோவையாக அமைத்து மாலை போலத் தந்துள்ளமையால் 'திணைமாலை' என்றும், பாடல் அளவினால் 'திணைமாலை நூற்றைம்பது' என்றும், இந்நூல் பெயர் பெற்றுள்ளது. கீழ்க்கணக்கில் அமைந்த

ஐந்திணை நூல்களில் அளவால் பெரியது இதுவே. குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்னும் வரிசையில் ஐந்திணைகளை இந்நூல் முறைப்படுத்தியுள்ளது. திணை ஒவ்வொன்றும் 30 பாடல்களைக் கொண்டுள்ளது. எனினும் குறிஞ்சி, நெய்தல், முல்லைத் திணைகள் மூன்றும் 31 பாடல்களைப் பெற்றுள்ளன. அதனால், இந்நூலில் 153 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந் நூலின் ஆசிரியர் ஏலாதியை இயற்றிய கணிமேதாவியார். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.

மானீல மாண்ட துகில்உமிழ்வது ஒத்தருவி

மானீல மால்வரை நாட! கேள் - மாநீலம்

காயும்வேற் கண்ணாள் கனையிருளின் நீவர

ஆயுமோ மன்றநீ ஆய். . . . . [006]

மிக்க நீலமணிவரைமாட்சிமைப்பட்ட வெண்டுகிலை யுமிழ்வதுபோல, அருவிகள் மயங்காநின்ற நீல மால்வரை நாடனே! கேளாய்; கரிய நீல மலர்களை வெகுளா நின்ற வேல்போன்ற கண்ணாள், செறிந்த இருளின்கண் நீவர, நினக் கிடையூறில்லாமைஆராய வல்லளோ? உண்மையாகப் பாராய் எனப்படுகிறது.

**கைந்நிலை**

கை' என்பது ஒழுக்கம் என்றும் பொருள்படும். ஐந்திணை ஒழுக்கம் பற்றியதே இந்நூலாகும். ஒவ்வொரு திணைக்கும் பன்னிரண்டு பாடலாக அறுபது பாடல்கள் இந் நூலில் உள்ளன. இந் நூலில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், என்ற வரிசை முறையில் ஐந்திணைகளும் அமைந்துள்ளன. திணைமொழி ஐம்பதும் இவ் வகை வரிசை முறையிலே அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது. இந் நூற் செய்யுட்களில் 18 பாடல்கள் சிதைந்துள்ளன (1, 8, 14-17, 20, 26-35, 38). இவற்றுள் மூன்று பாடல்கள் ஒரு சொல் அளவில் சிதைந்துள்ளன. ஏனைய பதினைந்தின் அடிகளும் சொற்களும் பல் வேறு வகையில் சிதைந்துள்ளன. எவ்வித சிதைவும் இன்றி உள்ளவை நெய்தல் திணைப் பகுதியில் அமைந்துள்ள பாடல்களே. இந் நூலைச் செய்தவர் மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார் என்பது நூல் இறுதிக் குறிப்பில் காணப்படுகிறது

பாசிப் பசுஞ்சுனைப் பாங்கர் அழிமுதுநீர்

காய்சின மந்தி பயின்று கனிசுவைக்கும்

பாசம்பட் டோடும் படுகல் மலைநாடற்கு

ஆசையின் தேம்பும் என் நெஞ்சு. . . . . [03]

பாசம் படர்ந்த பசுமையான நீர்ச் சுனையின் பக்கத்தில் வழியும் பழமையான நீரில் மிகுந்த சினமுடைய மந்திகள் பழகி அந்நீரில் வருங் கனிகளை யெடுத்துத் தின்று சுவைத்திருக்கும் இயல்புடைய பாசமுண்டாக நீரோடுகின்ற உயர்ந்த கற்களையுடைய மலைநாட்டுத் தலைவன் பொருட்டு, என் நெஞ்சு ஆசையில் தேம்பும் என் நெஞ்சமானது காதலால் வருந்துகின்றது, (என்று தோழியினிடம் கூறினள்).

**புறப்பொருள் பற்றிய நூல்:**

**களவழி நாற்பது**

களவழி நாற்பது போர்க்களம் பற்றிய பாடல்களின் தொகுதியாகும். இந் நூலில் உள்ள பாடல்கள் எல்லாம் களத்து என்ற சொல்லை இறுதியில் கொண்டு முடிதல் கவனிக்கத் தக்கது. போர்க்கள நிகழ்ச்சிகளைச் சிறப்பித்துள்ளமையினால் 'களவழி' என்றும், பாடல் தொகை அளவினால் 'களவழி நாற்பது' என்றும், இந் நூல் வழங்கலாயிற்று. இந் நூற் பாடல்களில் நாலடி அளவியல் வெண்பாக்களும் (22), பஃறொடை வெண்பாக்களும்(19) காணப்படுகின்றன. ஐந்து செய்யுட்களைத் தவிர ஏனையவெல்லாம் 'அட்ட களத்து' என்று முடிகின்றன. மூன்று செய்யுட்கள் (15, 21, 29), 'பொருத களத்து' என்றும், ஒரு செய்யுள் (40), 'கணைமாரி பெய்த களத்து' என்றும், மற்றொரு செய்யுள் (35), 'அரசுஉவா வீழ்ந்த களத்து' என்றும் முடிவு பெற்றுள்ளன. யானை, குதிரை, தேர், தானை, என்ற நால்வகைப் படைப் போரும் குறிக்கப்படினும், யானைப் போரைப் பற்றிய செய்யுட்களே மிகுதியாய் உள்ளன. களவழி நாற்பது பாடியவர் பொய்கையார் என்பவராவர்.

உருவக் கடுந் தேர் முருக்கி, மற்று அத் தேர்ப்
பருதி சுமந்து எழுந்த யானை, இரு விசும்பில்
செல் சுடர் சேர்ந்த மலை போன்ற - செங் கண் மால்
புல்லாரை அட்ட களத்து. . . . . [04]

திருமால் போன்று சிவந்த கண்களை உடைய சோழன் பகைவர்களை அழித்த போர்க்களத்தில் தேரின் சக்கரத்தைத் துதிக்கையில் தூக்கி நிற்கிறது யானை. அது, விரிந்த வானத்தில் செல்லும் சூரியன் மாலையில் ஒரு மலையைச் சேர்ந்தது போல் இருந்தது.

**இரட்டை காப்பியங்கள்**

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இரண்டு காப்பியங்களும் பொருள் நிலையிலும், கதை நிலையிலும் ஒன்றுடன் ஒன்று ஊடுருவி ஒன்றி நிற்பதால் இப்பெயர் வந்தது.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு காப்பியங்களும் செந்தமிழில் எழுதப்பட்டுள்ளன.

- ❖ சிலப்பதிகாரம், இளங்கோவடிகள் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுதியது.
- ❖ சிலப்பதிகாரம், தமிழில் தோன்றிய முதல் காப்பியம்.
- ❖ சிலப்பதிகாரம், 'பாட்டிடையிட்ட தொடர்நிலைச் செய்யுள்' எனவும் அழைக்கப்படுகிறது.
- ❖ மணிமேகலையின் கதைக்களம், கதை மாந்தர், கதை நடக்கும் காலம் ஆகியவை சிலப்பதிகாரத்தை ஒத்து இருப்பதால், இரண்டு காப்பியங்களும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- ❖ மணிமேகலையின் நாயகி மணிமேகலை, சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியின் மகளாவாள்.

தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மை பெறுவது சிலப்பதிகாரம். நமக்குக் கிடைத்திருக்கும் காப்பியங்களில் பழமையானது இதுவே. காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி வணிகர் மரபில் உதித்த கண்ணகி, கோவலன் என்பவர்களுடைய வரலாற்றைக் கூறுவது. முத்தமிழ்ப் புலமையுடைய வித்தகப் பெருமானாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட இக்காப்பியம் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாராட்டப்படுகிறது. புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்று காண்டங்களை உடையது இக்காப்பியம். சோழ, பாண்டிய, சேர மன்னர்களின் நாட்டில் கதையை நடத்திச் செல்கிறார் இளங்கோவடிகள். கீழ்க்காணும் முப்பெரும் உண்மைகளை விளக்குவது

சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி மற்றும் கோவலனின் துணைவி மாதவி ஆகியோரது வரலாற்றை விவரிக்கின்றது. இதன் இரட்டைக் காப்பியமாகத் திகழும் மணிமேகலை, ஆடலரசி மாதவியின் மகள் மணிமேகலையின் வரலாற்றை உரைக்கும் காவியமாகும். இதனை எழுதியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் ஆவார்.

**சிலப்பதிகாரம்.**

சிலப்பதிகாரம் தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இந்நூல் 'பாட்டிடையிட்ட தொடர்நிலைச் செய்யுள்' எனவும் வழங்கப்படுகிறது. இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினையும் காணலாம். பொ.ஊ. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பர். ஏனைய நூல்கள் அரசனையோ தெய்வங்களையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டிருக்க சிலப்பதிகாரம் கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதால் இதனை 'குடிமக்கள் காப்பியம்' என்றும் கூறுவர். இன்பியலும் துன்பியலும் கலந்து

எழுதப்பட்ட இந்நூலை இயற்றியவர் இளங்கோ அடிகள் என்பவராவார். இவர் புகழ் பெற்ற சேரமன்னன் செங்குட்டுவனுடைய தம்பி எனக் கருதப்படுகின்றது.

சமயம், சமூகம், அரசியல் சார்ந்த பல கருத்துகளைக் கொண்டுள்ள ஒரு சிறந்த படைப்பு சிலம்பு. சிலப்பதிகாரத்தின் அடிப்படையாக மூன்று கருத்துகள் கூறப்படுகின்றன.

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.

(அரைசியல்= அரசியல் = ஆட்சி)

ஆட்சி செய்வதில் தவறிழைத்தவர்களை அறம் தண்டிக்கும்; ஊழ்வினை, விடாது பற்றித் தொடரும்; கற்புடைப் பெண்டிரை உயர்ந்தவர்கள் போற்றுவார்கள் என்னும் கருத்துகளையே மேற்குறித்த வரிகள் சுட்டுகின்றன.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவப் பெற்றிருப்பதால் இது முத்தமிழ்க் காப்பியம் என்றும் வழங்கப்படுகிறது. உலகத்தின் பிறமொழிக் காப்பியங்களைப் போலவோ, வடமொழிக் காப்பியங்கள் போலவோ தெய்வங்களையோ மன்னர்களையோ காப்பியத்தலைவனாகக் கொள்ளாமல் மக்களையே கொண்டதால் இதைக் குடிமக்கள் காப்பியம் என்று அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுவார். இத்தகைய சிறப்பு மிகுந்த காப்பியத்தை இயற்றிய இளங்கோவடிகள் சமண சமயத்தவர் என்பதை,

குணவாயில் கோட்டத்து அரசு துறந்து இருந்த

குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்கு

என்ற பாயிர அடிகளுக்கு உரை கூறும் அடியார்க்கு நல்லாரின் விளக்கம் தெளிவாக்குகிறது. குணவாயில் என்பது திருக்குணவாயில் என்பதோர் ஊர். கோட்டம் என்பது அருகன் கோட்டம்; அடிகள் என்பது சமணத் துறவியர்க்கானது என்பது உரை ஆசிரியர் தரும் விளக்கம். அதனால் இளங்கோவடிகளின் சமயம் சமணம் என்று ஆகிறது.

**காண்டங்கள்**

இந்தக் காப்பியத்தின் மூன்று காண்டங்களும் முறையே சோழ (முதல் காண்டம்), பாண்டிய (இரண்டாம் காண்டம்) சேர (மூன்றாம் காண்டம்) ஆகியவை தமிழகத்தின் பண்டைய அரசுகளை அடிப்படையாகக் கொண்டது.

புகார்க் காண்டம்

மதுரைக் காண்டம்

வஞ்சிக் காண்டம்

காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் கோவலன். இவன் கலையுணர்வும், வறியோர்க்கு உதவும் நற்பண்பும் மிக்கவன். காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாநாயகனின் மகள் கண்ணகி. இவள் திருமகள் போன்ற அழகும், அழகிய பெண்கள் போற்றும் பெருங்குணச்சிறப்பும், கற்புத்திறமும் கொண்டவள். இவ்விருவரும் மனையறம் பூண்டு, இன்புற்று வாழ்ந்தனர்.

கோவலன் ஆடலரசி மாதவியை விரும்பிக் கண்ணகியை விட்டுப் பிரிந்தான். அவன் மாதவி இல்லத்திலேயே தங்கித் தன் செல்வத்தையெல்லாம் இழந்தான். மாதவி இந்திர விழாவில் கானல் வரிப் பாடலைப் பாடினாள். பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்து கொண்ட கோவலன், மாதவியை விட்டுப் பிரிந்தான், பிரிந்தவன் தன் மனைவி கண்ணகியிடம் சென்றான். தான் இழந்த செல்வத்தை ஈட்ட எண்ணினான். வணிகம் செய்தற்பொருட்டு கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். அவர்களுக்கு வழித்துணையாகக் கவுந்தியடிகள் என்னும் சமணத் துறவியும் சென்றார். அவர், மதுரை நகர்ப்புறத்தில் மாதரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம் அவ்விருவரையும் அடைக்கலப்படுத்தினார். கோவலன் சிலம்பு விற்று வர மதுரை நகரக் கடை வீதிக்குச் சென்றான். விலை மதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றை கோவலன் விற்பதைப் பாண்டிய மன்னனின் பொற்கொல்லன் அறிந்தான்.

பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன், பொய்யான பழியைக் கோவலன் மேல் சுமத்தினான். அதனை , சிலம்பைக் கொணர்க என்று ஆணையிட்டான். கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியை மாதரி மூலம் அறிந்த கண்ணகி; பெருந்துயருற்றாள். அவள் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை மன்னனுக்கும் உலகோர்க்கும் உணர்த்த எண்ணினாள். மன்னனின் அனுமதியோடு, வாயிற்காவலன், கண்ணகியை பாண்டிய மன்னனிடம் அழைத்துச் சென்றான். மன்னன் கண்ணகியை நோக்கி " நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் நீ, யார்?" என வினவினான். கண்ணகி மன்னனை நோக்கி, "ஆராய்ந்து நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்றொண்டு என உரைக்கத் தொடங்கினாள். "புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும் தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயர் அறிந்து தன் ஒப்பற்ற மகனையே தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும் வாழ்ந்த, பெரும்புகழுடைய புகார் நகரமே, யான் பிறந்த ஊர். அப்புகார் நகரில் பழியில்லாத

சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய மாசத்துவான் மகனை மணம் புரிந்தேன். வீரக்கழலணிந்த மன்னனே! ஊழ்வினைப் பயனால் வாழ்வதற்காக நின் மதுரை நகரத்திற்கு வந்து, என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி, நான். கண்ணகி என்பது என் பெயர் " என்று கூறினாள்.

பாண்டிய மன்னன் கண்ணகியிடம்" கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று. அதுவே அரச நீதி என்று கூறினான். அதற்குக் கண்ணகி "அறநெறியில் செல்லாத அரசனே! என் காற்சிலம்பு, மாணிக்கப் பரல்களைக் கொண்டது" என்றாள். அதற்கு அரசன் "நீ கூறியது, நல்லதே! எம்முடைச் சிலம்பின் பரல்கள் முத்துகளே" என்றான். கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைத் தருவித்து, அவள் முன் வைத்தான். வைத்த அச்சிலம்பினைக் கண்ணகி எடுத்து ஓங்கி உடைத்தாள். அதிலிருந்து வெளிப்பட்ட மாணிக்கப்பரல் ஒன்று பாண்டிய மன்னனின் உதட்டில்பட்டுத் தெறித்தது. அம்மாணிக்கப் பரல்களைக் கண்ட பாண்டிய மன்னன் தாழ்வுற்ற குடையனாய், சோர்வுற்ற செங்கோலனாய், "பொன் தொழில் செய்யும் கொல்லனின் பொய்யுரை கேட்டு, அறநெறி தவறிய, நானோஅரசன்! நானே கள்வன். அறந்தவறாது குடிமக்களைக் காக்கும் தொன்மையாட்சி என் முதல் தவறியது. என் வாழ்நாள் அழியட்டும்" என்றவாறே மயங்கி வீழ்ந்தான். மன்னனின் மனைவி உள்ளங்கலங்கி, உடல் நடுங்கி, கணவனை இழந்த மகளிர்க்கு, எவ்விதத்திலும் ஆறுதல் கூற இயலாது என்று கூறித் தன் கணவனின் திருவடிகளை வணங்கி நிலத்தில் வீழ்ந்து இறந்தாள்.

**அரசியல்**

அரசியல் பிழைத்தோர்க்கு அறமே எமனாக மாறும்; செங்கோல் வளைந்தபின் உயிர் வாழ்தல் நன்று அன்று; அரசன் நல்லாட்சி செய்தால்தான் அந்நாட்டில் வாழும் மகளிர்க்கும் கற்பு வாழ்க்கை சிறக்கும் என்பன போன்ற பல அரசியல் உண்மைகளைப் பேசுகிறது சிலம்பு.

முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது; அடிகள் நீரே அருளுக (சிலப்பதிகாரம் - பதிகம் : 61-62) என்ற சாத்தனார் கூற்றிற்கு இணங்க இளங்கோ தம் காப்பியப் படைப்பை மூவேந்தர்க்கும் உரியதாகவே படைத்துள்ளார், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் குறிப்பிடுவது போலச் சிலம்பின் தொடக்கமும் அரசியல், முடிவும் அரசியல் என்ற நிலையில் அரசியலோடு பின்னிப் பிணைந்திருக்கிறது சிலப்பதிகாரம். புகார், மதுரை, வஞ்சி எனக் காண்டப் பெயர்களை அமைத்து, மூவேந்தர்களையும், மூன்று நாடுகளையும், அவற்றின் தலைநகரங்களையும் ஒருங்கு இணைக்கிறார் இளங்கோ. மேலும் பத்தினி வழிபாட்டில் தமிழ் மன்னர்களை மட்டுமன்றிப் பிறநாட்டு மன்னர்களையும் இணைத்து ஒற்றுமைப்படுத்துகிறார்.

**நம்பிக்கைகள்**

கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும், எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன (சிலப்பதிகாரம்: 5: 237,239) என்பதில் பெண்களுக்கு இடக்கண் துடித்தால் நன்மையும், வலக்கண் துடித்தால் தீமையும் ஏற்படும் என்ற நம்பிக்கை இருந்தது புலப்படுகிறது. கோவலன் கொல்லப்பட்ட அன்று குடத்துப்பால் உறையாது இருத்தல் முதலானவற்றை ஆய்ச்சியர்கள் தீய சகுனங்களாகக் கொள்கின்றனர். கோவல-கண்ணகியர் தாயரின் மறுபிறப்புப் பற்றிய செய்தி, பிறவிகள் தொடரும் என்ற நம்பிக்கையை எடுத்துரைக்கிறது. இறைவனுக்கு விழா எடுக்கவில்லையானால் தீமை நிகழும் என்ற நம்பிக்கை வேட்டுவ வரி மூலம் சுட்டப்பெறுகிறது. வேட்டுவ வரி வேடர்களின் பலி கொடுக்கும் வழக்கத்தை எடுத்துரைப்பதோடு, தன்மூலம் கொற்றவை வெற்றி தருவாள் என்ற நம்பிக்கை இருந்ததையும் காட்டுகிறது. பத்தினிக் கடவுளுக்காகப் பாண்டியன் வெற்றிவேற் செழியன் ஆயிரம் பொற்கொல்லர்களைப் பலியிட்டுச் சாந்தி செய்தான் என்ற செய்தியும் இத்தகைய நம்பிக்கையைத் தெரிவிக்கிறது. கனவு பலிக்கும் என்ற நம்பிக்கை இருந்ததைக் கோவலன், கண்ணகி, பாண்டிமாதேவி ஆகியோர் கண்ட கனவுகள் புலப்படுத்துகின்றன.

**மணிமேகலை**


மணிமேகலை ஐம்பெரும் தமிழ்க் காப்பியங்களுள் ஒன்று. இக்காப்பியத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார்.மணிமேகலை காப்பியத்தில் அடி இணையும், அதன் வழிபாடும், வேறு கடவுள்களின் வழிபாடும் இருக்கும் நிலையில், அஃது ஒரு மகாயான காப்பியமாகவே இருக்கமுடியும். மேலும், மகாயான பௌத்தமானது இல்லறத்தையும், துறவறத்தையும் வலியுறுத்தும் நிலையிலும், சிலப்பதிகாரமானது இல்லறத்தையும், மணிமேகலை காப்பியம் துறவறத்தையும் வலியுறுத்துவதாலும், இவை இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.

இக்காப்பியத்தின் தலைவி, மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் கோவலன் மற்றும் மாதவி என்பவர்களின் மகளாவாள். கோவலனின் துயர மரணத்திற்குப் பிறகு மாதவி தன் மகளை ஒரு புத்தத் துறவியாக வளர்த்தாள். ஒரு சமயத்தில் மணிமேகலையும் அவளுடைய தோழியும் வனத்திற்குப் பூப்பறிக்கச் சென்றிருந்தபோது, உதயகுமரன் என்ற சோழ மன்னன் மணிமேகலையின் மீது காதல் மயக்கம் கொண்டான். கடலின் கடவுளான மணிமேகலா, மணிமேகலையின் உலக இன்பங்கள் துறந்த வாழ்க்கையைப் பாதுகாக்க, அவளை தான் அறியாமலே மணிபல்லவம் என்ற தீவில் கொண்டு விட்டாள். அத்தீவில் மணிமேகலை ஒரு புத்த பீடிகை மூலம் தனது முற்பிறப்பைப் பற்றி அறிந்தாள். அதன் பிறகு, கடலின் கடவுள்

மணிமேகலா, மணிமேகலையிடம் அவள் ஏன் மணிபல்லவத்திற்கு அழைத்து வரப்பட்டாள் என்பதைக் கூறி, மூன்று அதிசய மந்திரங்களையும் கற்றுக்கொடுத்தாள்.

அத்தீவில் மணிமேகலை 'அமுத சுரபி' என்ற உணவுக் கிண்ணத்தைக் கண்டெடுத்து, அதிலிருந்து அளவற்ற உணவைப் புகாரிலுள்ள ஏழைஎளியோருக்கு வழங்கினாள். இதையெல்லாம் கண்ட உதயகுமரன், மணிமேகலை தன்னை மணக்க வேண்டும் என்று அவளை வற்புறுத்தினான். ஆனால் மணிமேகலை தான் கற்ற வித்தையைப் பயன்படுத்திக் காயசண்டிகையாக உருமாற்றிக் கொண்டாள். உண்மையான காயசண்டிகையின் கணவன் காஞ்சனன் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உதயகுமரனைக் கொலை செய்துவிட்டான். இதற்காகக் காயசண்டிகையின் உருவத்தில் இருக்கும் மணிமேகலை கைது செய்யப்படுகிறாள். ஆனால் தனது தாயாரின் உதவியோடு விடுவிக்கப்படுகிறாள். பிறகு அவள் வஞ்சி நகரத்திற்குச் சென்று தந்து ஞான ஆசிரியரான கண்ணகியிடம் உரையாடி அறிவுரை பெற்றாள். அத்துடன் அனைத்து மதங்களின் நிறைகுறைகளை வல்லுநர்களிடமிருந்து அறிந்தாள். அதன்பிறகு காஞ்சி நகரத்திற்குச் சென்று தனது ஆசானான அறவண அடிகளிடம் படிப்பினைப் பெற்று ஒரு முழுமையான புத்தத் துறவியாகி தவத்தில் ஆழ்ந்தாள்.

மணிமேகலை ஒரு சீர்திருத்தக் காப்பியம் என்ற சிறப்பிற்கு உரியது. கொல்லாமை, ஊன் உண்ணாமை, கள் உண்ணாமை ஆகியவற்றை வலியுறுத்துவதோடு அனைத்து உயிர்களிடமும் அன்பு பாராட்ட வேண்டும் என்பதையும் விளக்குகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற்றப்பட்டு அங்குள்ளோர்க்கு அமுதசுரபி கொண்டு மணிமேகலை அவர்களின் பசிப்பிணியை நீக்குவதும் காப்பியத்தின் தனிச்சிறப்பாகும்.


மணிமேகலை - கதை மாந்தர்கள்
சித்திராபதி
தாய்
மாதவி
தாய்
மணிமேகலை
தோழி
சுதமதி
போற்றிய தெய்வங்கள்
மணி மேகலா தெய்வம்
மணி பல்லவத் தீவின் தெய்வமகள்; மணி மேகலைக்குப் பல வகைகளில் உதவிய தெய்வம்
தீவ திலகை
இரத்தின தீவகம் என்ற தீவில் பதும பீடத்தின்காவல் தெய்வம்; மணி மேகலைக்கு உதவிய தெய்வம்
கந்திற் பாவை
சக்கரவாளக் கோட்டத்தில்தூணில் வாழும் காவல் தெய்வம்
போற்றிய துறவிகள்
சங்கதருமன்
பௌத்தத் துறவி
அறவண அடிகள்
மணிமேகலைக்கு அறநெறி உணர்த்திய பௌத்தத் துறவி
அமுதசுரபி வழியிலான தொடர்புகள்
ஆபுத்திரன்
அமுதசுரபியை முதலில் பெற்றவன்; இவன் பொய்கையில் விட்டுச் சென்ற அமுதசுரபியே மணிமேகலையின் கைக்கு வந்தது
ஆதிரை
கற்புக்கரசி; மணிமேகலை முதன் முதலில் அமுதசுரபியில் பிச்சை ஏற்றது இவளிடம் தான்.
கணவன்
சாதுவன்
ஆதிரையின் கணவன்; நாகர் தீவு மக்களுக்கு அறிவுரை கூறியவன்
காய சண்டிகை
கந்தர்வப்பெண்; மணிமேகலையால் சாபம் நீங்கப் பெற்றவள். உதயகுமரனிடம் இருந்து தப்புவதற்கு இவள் உருவில் தான் மணிமேகலை நடமாடினாள்.
கணவன்
காஞ்சனன்
காய சண்டிகையின் கணவன்; உதய குமரனைக் கொன்றவன்
உதய குமரன்
மன்னன் மகன்; மணிமேகலையை விரும்பிப் பின்தொடர்ந்தவன்.காய சண்டிகையாக மணிமேகலை உருமாற்றிக் கொண்ட பின்னரும், விடாது பின்தொடர்ந்து, காஞ்சனனால் கொலையுண்டவன்.

**வினாக்கள்**

**பகுதி அ** **1X10=10**

1. இடைச்சங்கம் இருந்த இடம் எது?
2. தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களிக் கொண்டது?
3. பதினெண் மேல்கணக்கு நூல்கள் எவை?
4. அகம் புறம் சார்ந்த எட்டுத்தொகை நூல் எது?
5. முருகனின் அறுபடை வீடு பற்றி எடுத்துரைக்கும் ஆற்றுப்படை எது?
6. நாலடியாரைத் தொகுத்தவர் யார்?
7. சிறுபாணாற்றுப்படை எத்தனை வரிகளை உடையது?
8. உத்தரவேதம் என்றழைக்கப்படுவது எது?
9. குடிமக்கள் காப்பியம் எது?
10. மணிமேகலையின் ஆசிரியரைக் குறிப்பிடுக.

**பகுதி ஆ** **5X5=25**

1. சங்கம் இருந்தமைக்கான சான்றுகளை எழுதுக.
2. தொல்காப்பியம் – குறிப்பு வரைக.
3. 'தமிழ் முனி அகத்தியர்' – விளக்குக.
4. எட்டுதொகையின் புறம் சார்ந்த நூலை விளக்குக.
5. 'புரட்சி காப்பியம் சிலப்பதிகாரம்'- நிறுவுக.

**பகுதி இ** **8X5=40**

1. எட்டுதொகையின் அகம் சார்ந்த நூல்களை விளக்குக.
2. ஆற்றுப்படை நூல்கள் – கட்டுரைக்க.
3. மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை – விளக்குக.
4. பதினெண்கீழ்க்கணக்கில் நீதி நூல்களை விளக்குக.
5. இரட்டைக் காப்பியங்கள் எவை? விளக்குக.

## அலகு 2

### பக்தி இலக்கியம்

பக்தி இலக்கியம் பெருமளவில் தோன்றியது பல்லவர் காலத்திலேதான். வேறு எம்மொழியிலும் தமிழில் தோன்றிய அளவு பக்தி இலக்கியம் தோன்றவில்லை. இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியம் இருவகைப்பட்டது. தனித்தனிப் பதிகங்களால் பக்தி அனுபவங்களை வெளிப்படுத்துதல், பிரபந்தங்களாக வெளிப்படுத்துதல் என அவை இருவகையாக உள்ளன. தனித்தனிப் பதிகங்களுள் சில, அகத்துறைகள் தழுவி அமைந்துள்ளன. பெரும்பாலானவை முன்னிலைப் பரவலாகக் கடவுள் வாழ்த்தாக உள்ளன.

### பன்னிரு திருமுறைகள்

பன்னிரு திருமுறைகள் என்பவை பல்லவர் காலத்திலும் அதன் பின்னரும் தோன்றிய சைவ சமய நூல்களின் தொகுப்பாகும். இவை திருமுறைகள் என்றும் அறியப்படுகின்றன. இவை மொத்தம் 12 திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

10 ஆம் நூற்றாண்டில் இராஜராஜ சோழனின் ஆட்சியின்போது, சிதம்பரம் கோயிலிலே கவனிப்பாரற்றுக் கிடந்த திருமுறைகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டு அழிந்தவை போக எஞ்சியவற்றை, நம்பியாண்டார் நம்பி என்பவர் திருமுறைகளாகத் தொகுத்தார்.

### திருஞானசம்பந்தர்

முதலாம் திருமுறை(முதல் மூன்று திருமுறை) என்பது பன்னிரு சைவத் திருமுறைகளில் இடம்பெற்றுள்ள முதலாம் தொகுப்பாகும். இவை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய தேவாரங்களில் ஒரு பகுதியை உள்ளடக்கியது. இத் திருமுறையில் 136 பதிகங்களில் அடங்கும் 1469 பாடல்கள் உள்ளன. இவற்றுள் சம்பந்தர் மூன்று வயதில் பாடிய முதல் தேவாரமும் அடங்குகின்றது. இத்தேவாரங்கள் தமிழ்நாடு முழுவதிலும் பரந்துள்ள பல்வேறு கோயில்களில் உள்ள சிவபெருமானைக் குறித்துப் பாடப்பட்டவையாகும். முதலாம் திருமுறையிலுள்ள பதிகங்கள் வாயிலாகப் பாடப்பட்ட கோயில்கள் 88 ஆகும்.

இவர் மூன்று வயது குழந்தையாக இருந்தபோது, தந்தையாருடன் கோயிலுக்குச் சென்றதாகவும், அங்கே குழந்தையைக் கரையில் அமரவிட்டுக் குளிக்கச் சென்ற தந்தையார், சிறிது நேரம் நீருள் மூழ்கியிருந்த சமயம், தந்தையைக் காணாத குழந்தை, அம்மா அப்பா என்று கூவி அழுததாகவும், அப்போது உமாதேவியார், சிவபெருமானுடன் இவர் முன் காட்சி கொடுத்து ஞானப்பால் ஊட்டினார். அதனைப் பருகிய குழந்தை சிவஞானத்தைப் பெற்றது எனப்படுகிறது.

நீராடி முடித்து விட்டு வந்த தந்தை வாயில் இருந்து பால் வடிவதைக் கண்டார். அது பற்றி வினவிய போது, குழந்தை கோயிலைச் சுட்டிக்காட்டித் தோடுடைய செவியன்... என்று தொடங்கும் தேவாரத்தைப் பாடியது என்றும் சொல்லப்படுகிறது.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்

காடுடையசுட லைப்பொடிபூசிஎன்1 உள்ளங்கவர் கள்வன்

ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த

பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

காதில் தோடு அணிந்து, எருதின் மேல் ஏறி, வெண்மையான மதியை சூடி, சுடு காட்டில் உள்ள சாம்பலை உடல் எல்லாம் பூசி என் உள்ளத்தை கவர்ந்த கள்வன், தாமரை மலரின் மேல் இருக்கும் பிரமன் அன்று பணிந்து பூசை செய்ய, அவனுக்கு அருள் வழங்கிய சிறந்த சீர்காழி என்ற ஊரில் இருக்கும் பெருமான் அவனே

என்று கூறி அருளினார்.

**திருநாவுக்கரசர்**

அப்பர் திருநாவுக்கரசு நாயனார் பொ.ஊ. ஏழாம் நூற்றாண்டு தொடக்கத்தில், தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்தை வளர்த்த சிவனடியார்களுள் ஒருவரும், சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் ஆவார். இவரைத் தேவார மூவருள் இரண்டாமவர் என்றும், இறைவனிடம் பக்தி செலுத்துதலில், தொண்டை அடிப்படையாகக் கொண்டவர் என்றும் புகழ்கின்றனர்.[1] இவர் தமிழகத்தில் முதன்முதலாகச் சிவன் கோயில்களில் உழவாரப் பணியை அறிமுகப்படுத்தியவர் ஆவார்.

இவரைத் திருஞானசம்பந்தர், 'அப்பர்' (தந்தை) என்று அழைத்தமையால் அப்பர் என்றும், நாவுக்கரசர் என்றும் அறியப்படுகிறார். இவர் தாண்டகம் எனும் விருத்த வகையைப் பாடியமையால், இவரைத் தாண்டகவேந்தர் என்றும் அழைக்கின்றனர்.

நாயன்மார்களில் பல்வேறு பெயர்களைக் கொண்டவர் இவர். இயற்பெயர், மதம் மாறியமையால் பெற்றமை, செயல்களாலும், கவியாலும் பெற்றவை எனப் பல பெயர்கள் இவருக்கு உள்ளன.

மருணீக்கியார் - இயற்பெயர்

தருமசேனர் - சமண சமயத்தைத் தழுவிய போது கொண்ட பெயர்

நாவுக்கரசர், திருநாவுக்கரசர் - தேவாரப் பாடல்களைப் பாடியமையால் பெற்ற பெயர்

அப்பர் - திருஞானசம்பந்தர் அன்போடு அழைத்தமையால் வந்த பெயர்

உழவாரத் தொண்டர் - சிவாலயங்களை தூய்மை செய்யும் பணியைச் செய்தமையால் பெற்ற பட்டப்பெயர்

தாண்டகவேந்தர் - தாண்டகம் எனும் விருத்த வகையைப் பாடியமையால் பெற்ற பட்டப்பெயர்.

திருநாவுக்கரசர், 49,000 தேவாரப் பதிகங்களைப் பாடியுள்ளார். இவற்றில் சில பதிகங்கள், தாள அமைப்பினைச் சேர்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு தாள அமைப்புடன் பாடப்பட்டவற்றைப் பண்ணாங்கப் பாடல்கள் என்றும், தாள அமைப்பு இல்லாத பாடல்கள் சுத்தாங்கப் பாடல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. திருத்தாண்டகம், திருவிருத்தம், திருக்குறுந்தொகை ஆகியவை அப்பர் பாடிய சுத்தாங்கப் பதிகங்கள்.[5] அப்பரின் பாடல்கள் தமிழ்ச் சுவையும் பக்திச் சுவையும் தோய்ந்தவை. உதாரணத்திற்கு,

"மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே"

ஈசனுடைய அடிகளில் சரணடைந்தால், மர நிழல் தரும் குளுமை போன்று இருக்கும்" என்று கூறிய அப்பர் அடிகள், "அந்த நிழலானது குற்றமற்ற வீணை இசை போன்றது; இளம் மாலையில் தோன்றிய நிலவின் குளுமையை ஒத்தது; வீசுகின்ற தென்றல் போன்றது; இளவேனிற் காலத்தின் உயிர்ப்பைக் கொண்டது; தாமரை மலர்களைச் சுற்றும் வண்டுகளைக் கொண்ட குளம் போன்றது" என்கிறார். அவர் உதாரணமாகக் கூறிய "அனைத்தும் மனதுக்கு இனிமை சேர்ப்பவை. அனைத்து இனிமைகளையும் ஒரு சேர அளிப்பது இறைவனது பாத நிழலே" என்கிறார் அப்பர்!

**மாணிக்கவாசகர்**

மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராவர். முன்னைய மூவரும் தேவாரம் பாடியிருக்க இவர் பாடிய நூல்களாவன: திருவாசகமும் திருக்கோவையாருமாகும். இவர் பொ.ஊ. 9-ஆம் நூற்றாண்டில் வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலையமைச்சராகப் பணியாற்றினார்.

மாணிக்கவாசகர், சிறந்த சிவ பக்தரான இரண்டாம் வரகுணன் (பொ.ஊ. 863–911) காலத்தில் வாழ்ந்தவர்.இவர் பாடியது எட்டாம் திருமுறையாகும்.

இவர் பாடிய பாடல்கள் "திருவாசகம்" என அழைக்கப்படுகின்றன. பக்திச் சுவையும் மனதை உருக்கும் தன்மையும் கொண்ட திருவாசகப் பாடல்கள், தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது. "சிறை பெறா நீர் போல் சிந்தை வாய்ப் பாயும் திருப்பெருந்துறையுறை சிவனே" (பா.392) என்பதாலும், "இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க." எனும் அடிகளால் தமிழின் அருட் திறத்தையும் வாதவூரரிற்கும் இறைவனுக்குமான நெருக்கத்தையும் உணரலாம். "நரியைக் குதிரைசெய்" எனும் திருநாவுக்கரசர் பாடல் மூலம் இவர் காலத்தால் அப்பருக்கு முந்தியவர் எனக் கருதப்படுகிறது.

"திருவாதவூரார் பாண்டிய நாட்டில் சம்புபாத சரிதருக்கும், சிவஞானவதிக்கும் மகனாகப் பிறந்தார். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து, மன்னன் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராகப் பதவி அமர்ந்தார். அரிமர்த்தன பாண்டியன் மதுரையை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டுவந்தான். தன் புலமையால் "தென்னவன் பிரமராயன்" எனும் பட்டத்தையும் பெற்றார். உயர்ந்த பதவி, செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்தபோதும் இவை வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை உணர்ந்த திருவாதவூரார் சைவசித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாடு மேற்கொண்டு ஒழுகி வரலானார்.

உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்,

கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்,

குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா! உன் குரை கழற்கே,

கற்றாவின் மனம் போலக் கசிந்து உருக வேண்டுவனே!!!

சொந்த பந்தங்கள் எனக்கு வேண்டாம், ஊர் வேண்டாம், நல்ல பெயர் வேண்டாம், நல்ல கல்வி அறிவு எதுவும் வேண்டாம், உங்கள் அருள் இருந்தால் அது எல்லாமே எனக்கு தானாகவே கிடைக்கும். குற்றாலத்தில் வீற்றிருக்கும் ஆனந்த கூத்தனே!! உன்னுடைய திருவடிகளை தேடி, தாய் பசுவினை கண்ட கன்றினைப் போல நான் அன்பில் மனம் உருக வேண்டும். நீ கன்றினை ஈன்ற தாய் பசுவின் மனம் போல என் பக்தியில் உருகி போக வேண்டும் என்று வேண்டுகிறேன் என்கிறார். சிறந்த பக்தி எது? என்பதை இவ்வுலகிற்கு பறைசாற்றிய இப்பாடல்கள் தினமும் படித்து பாருங்கள். உங்களுக்கு ஆசை என்பதே வராது! பக்தி பெருக்கெடுத்து வேண்டியவை எல்லாம் நீங்கள் வேண்டாமலேயே கிடைக்கும்.

**ஒன்பதாம் திருமுறை**

ஒன்பதாம் திருமுறை என்பது சைவத் திருமுறைகள் வைப்பினிலே திருமாளிகைத் தேவர் உட்பட 9 பேர் பாடிய பாடல்களை உள்ளடக்கிக்கொண்டுள்ளது. இதில் 303 பாடல்கள் அடங்கியுள்ளன..இத் திருமுறையிலுள்ள பாடல்கள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என இரண்டு வகையாகப் பார்க்கப்படுகின்றன. ஒன்பதாம் திருமுறையிலுள்ள பதிகங்கள் வாயிலாகப் பாடப்பட்ட கோயில்கள் 14 ஆகும்

1. திருமாளிகைத்தேவர் அருளிய திருவிசைப்பா (1-45)
2. சேந்தனார் அருளிய திருவிசைப்பா (46 -79)
3. கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா (80 - 182 )
4. பூந்துருத்திநம்பி காடநம்பி அருளிய திருவிசைப்பா (183 - 194)
5. கண்டராதித்தர் அருளிய திருவிசைப்பா (195 - 204)
6. வேணாட்டடிகள் அருளிய திருவிசைப்பா (205 - 214)
7. திருவாலியமுதனார் அருளிய திருவிசைப்பா (215 - 256)
8. புருடோத்தம நம்பி அருளிய திருவிசைப்பா (257 - 278)
9. சேதிராயர் அருளிய திருவிசைப்பா (279 - 288)
10. சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு (289 - 301)

**பத்தாம் திருமுறை**

திருமூலர் இயற்றிய திருமந்திரம் ஒன்பது தந்திரங்களை (இயல்களை)க் கொண்டது.மூவாயிரம் பாடல்களை உடையது. வேதம், ஆகமம் ஆகிய இரண்டிற்கும் இத்திருமந்திரம் அரிய விளக்கமாய்ப் பொலிந்து விளங்குகின்றது. மேலும் இந்நூல் சைவ ஆகமம் எனறு போற்றப்படும் பெருமையினை உடையது. திருமந்திரம். வேதாந்தம் - சித்தாந்தம், சித்தி - முக்தி, யாகம் - யோகம் ஆகியவற்றிற்கு விளக்கம் அளிக்கிறது.

திருமூலருடைய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். திருமூலர் கூடுவிட்டுக் கூடுபாயும் வல்லமை பெற்றவர். இக்கலை பற்றி அவர் தொடர்பாகக் கதையொன்று வழங்கப்படுகிறது. இவர் எழுதிய திருமந்திரம் ஏனைய திருமுறைகளைவிட காலத்தால் முந்தியது. இவர் வடபுலத்து முனிவர் பதஞ்சலி போ என்பர் மூலன் என்ற உடம்பில் புகுந்து வாழ்ந்ததால் மூலன் எனும் பெயர்பெற்றுத் திருமூலரானார்.

இவர் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு. திருமந்திரம் 3000 செய்யுட்களை உடையது. 9 தந்திரங்களாகவும், அவை 232 அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளன. தமிழ் மூவாயிரம் என்றும் அழைப்பர். வெண்பாவிற்கும் விருத்தத்திற்கும் இடைப்பட்டு வெண்டளை பயின்று வரும் யாப்பில் அமைந்த நூல் இதுவாகும்.

பாடல்கள் பெரும்பாலும் உருவகங்களாகவே அமைகின்றன. தத்துவக் கருத்துக்களைக் கொண்டு மிளிர்கின்றன. மந்திரம் போல் அமைவதால் திருமந்திரமாயிற்று. சொற்களில் எளிமை, கருத்துக்களில் அருமை என அமையும். இறைவன் இல்லாத இடமில்லை. இக்கருத்தினை

"தேனுக்குள் இன்பம் சிவப்போ? கறுப்போ?

வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்!

தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற்போல்

ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே'

என எளிமையாகத் தருவார்.

திருமூலரின் தாரக மந்திரம் அன்பே சிவம் என்பது. இதனை

'அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்'

என்பார்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே

என்பதும் திருமந்திர வரிகளே ஆகும்.

**பதினோராம் திருமுறை**

பதினோராம் திருமுறை என்பது சைவத் திருமுறை வைப்பினிலே காரைக்கால் அம்மையார் உட்பட் 12 அடியவர்கள் பாடிய பாடல்களை உள்ளடக்குகின்றது. இதில் நாற்பது பதிகங்கள் அடங்கியுள்ளன. இத் திருமுறை சைவப் பிரபந்த மாலை அல்லது சைவப் பிரபந்த திரட்டு என அழைக்கப்படுகின்றது.

திருவாலவாயுடையார் (சிவபெருமான்)

- காரைக்கால் அம்மையார்
- ஐயடிகள் காடவர்கோன்
- சேரமான் பெருமாள் கழறிற்றறிவார்

- நக்கீரர்
- கல்லாடர்
- கபிலர்
- பரணர்
- இளம்பெருமான் அடிகள்
- அதிராவடிகள்
- பட்டினத்தடிகள்
- நம்பியாண்டார் நம்பி

**பன்னிரண்டாம் திருமுறை**

பன்னிரண்டாம் திருமுறை, சேக்கிழார் பாடிய பெரியபுராணத்தை உள்ளடக்கியுள்ளது. இது சைவ சமய நூல்களின் தொகுப்பான பன்னிரு திருமுறைகளில் ஒன்று.

பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம் என்பது சேக்கிழார் அவர்களால் பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் கொண்டதாக இயற்றப்பெற்ற சைவ காப்பியமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை எனும் நூலை முதல் நூலாகக் கொண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காப்பிய தலைவராகக் கொண்டும், அவர் போற்றிய சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றினையும் இந்நூலை சேக்கிழார் விவரிக்கிறார்.

திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை மூலநூல்களாகக் கொண்டும், இரண்டாம் குலோத்துங்க சோழனிடம் அமைச்சராக இருந்த சேக்கிழார் பல ஊர்களுக்கும் சென்று திரட்டிய தகவல்களைக் கொண்டும் பெரியபுராணம் எழுதப்பெற்றுள்ளது.[1][2] இரண்டாம் குலோத்துங்க சோழனின் ஆணையின்படி தில்லைக்குச் சென்றவர், அங்கிருக்கும் இறைவனான நடராசர் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார் உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் எனப் பெரியபுராணத்தினைத் தொடங்கியதாக நம்பப்படுகிறது.

**பன்னிரு ஆழ்வார்கள்**

ஆழ்வார்கள் திருமாலைப் போற்றித் தமிழ்ச் செய்யுட்களால் பாடியவர்கள் ஆவர். தென்மொழியாம் தமிழ் மொழியில் வைணவ இலக்கியங்களை வளர்த்தவர்கள் பரம்பரையில், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (அல்லது) ஆழ்வார் அருளிச்செயல் என்னும் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பாடிய ஆழ்வார்கள் 12 பேர். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை தொகுத்தவர் நாதமுனிகள் ஆவார்.

- பொய்கையாழ்வார்
- பூதத்தாழ்வார்
- பேயாழ்வார்
- திருமழிசையாழ்வார்
- நம்மாழ்வார்
- மதுரகவி ஆழ்வார்
- குலசேகர ஆழ்வார்
- பெரியாழ்வார்
- ஆண்டாள்
- தொண்டரடிப்பொடியாழ்வார்
- திருப்பாணாழ்வார்
- திருமங்கையாழ்வார்

**முதலாழ்வார்கள்**

பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் எனும் ஆழ்வார்கள் ஒரே காலத்தில் வாழ்ந்தவராவார். இவர்கள் மூவரும் ஞான, பக்தி, வைராக்கியங்கள் மிக்க துறவறம் பூண்டு, ஆண்டவனின் நினைவிலேயே உருகி உள்ளம் கனியப் பாடியவர்கள். உண்டியே உடையே என உகந்தோடும் மக்களோடு கலவாமல் ஒரு நாள் இருந்த இடத்தில் ஒரு நாள் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துக்கொண்டிருந்தனர். இவர்கள் மூவரையும் முதலாழ்வார்கள் என்று அழைப்பர்.

**பொய்கையாழ்வார்**

இவர் காஞ்சிபுரத்தில் ஐப்பசி மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் திருவெக்கா எனும் பகுதியிலுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோவிலில் உள்ள பொய்கையில் பிறந்தார். காஞ்சிபுரத்தில் பொற்றாமரைப் பொய்கையில் தோன்றியதால் பொய்கையாழ்வார் எனப் பெயர் பெற்றார்.[3] சில ஆழ்வார்கள் திருமாலின் கையில் உள்ள ஆறு ஆயுதங்களில் ஒன்றின் அம்சமாகப் பிறந்தவர்கள் என்பது வைணவ நம்பிக்கை. இதன்படி பொய்கையாழ்வார் பாஞ்சசன்யம் எனப்படும் புனித சங்கின் அம்சம் ஆவார்.

இவர் திருவரங்கம், திருவிண்ணகரம், திருவேங்கடம், திருவென திருக்கோவலூர் ஆகிய இடங்களில் உறையும் திருமாலின் பெருமையை பாடியுள்ளார். அந்தாதித் தொடைக்கு முன்னோடியாக இவர் பாடல் அமைகின்றன. 100 பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று

வையந்தகளியா வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காகச் –

செய்ய சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை

இடராழி நீங்குகவே என்று'

திருமாலைச்சுடராழியான் எனப் பரவுகின்றார்.

**பூதத்தாழ்வார்**

திருமாலைப் பூதம் எனப் பல இடங்களில் பாடியுள்ளமையால் இப் பெயர் பெற்றார். திருக்கடல் மல்லையூரில் (மாமல்லபுரம்) ஐப்பசி திங்கள் அவிட்ட திருமாலின் கதாயுதத்தின் அம்சமாகத் தோன்றினார். பொய்கையாழ்வார். மறுநாள் இவர் பிறந்ததாகக் கூறுவர். திருவேங்கடம், திருவரங்கம், திருப்ப திருவத்தியூர்,திருக்குடமூக்கு ஆகியன இவர் பாடிய தலங்களாகும். இவர் அழகைப் பக்தியோடு இணைத்துப் பாடுகின்றார். தமிழ் மீது இவர் பற்றினைத் திருமாலை நோக்கிப் பாடும் பாடலில் காணமுடிகிறது.

இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேள்

பெருந்தமிழில் நல்வேன் பெரிது''

எனப் பாடுவார். மேலும் தன் தமிழை 'ஞானத் தமிழ்' என்பர்.

பொய்கையார் வையந்தகளியா" எனத் தொடங்க இவர்தம் பாடலை 'அன்பே ககனியா ஆர்வமே நெய்யாக....' எனத் தொடங்குகின்றார். இவர் பாடியது இரண்டாம் திருவந்தாதி. 100 பாடல்கள் உள்ளன.

**பேயாழ்வார்**

இவர் பிறந்தது மயிலாப்பூர். திருமால் மீது மயக்கம் வருமளவிற்கு மிகுதியான பக்தி கொண்டு பேய்போல் ஆடிப்பாடித் திரிந்ததால் இப்பெயர் பெற்றார். ஐப்பசி திங்கள் சதய நாளில் பிறந்தார். கி.பி.6ஆம் நூற்றாண்டு என்பர். இவர் பாடியது மூன்றாம் திருவந்தாதி. 100 பாடல்கள். திருக்கோவலூரில் இம்மூன்று ஆழ்வார்களும் சந்தித்துத் திருமால் பெருமையைப் பாடியதாகக் கூறுவர். இங்குத் திருமாலின் கோலத்தைப் பாடும் பாடல் நயமிக்கது.

'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்

அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்

பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக் கண்டேன்

என்னாழி வண்ணன்பால் இன்று'

எனப் பாடுகின்றார். ஆழ்வார்களில் வைணவம் சைவம் என்ற வேறுபாடின்றி திருமாலோடு சிவனையும் இணைத்துப் பாடிய பெருமைக்குரியவர். இவர் சிவன் கோலத்தையும் இணைத்துத் திருமாலாய்க் காண்கிறார்.

**திருமழிசையாழ்வார்**

பிறந்த ஊர் தொண்டை நாட்டு திருமழிசை. தைத்திங்கள் மக நட்சத்திரத்தில் பிறந்தவர். சக்கரத்தின் அம்சம் என்பர். பெற்றோரின்மையால் தாழ்ந்த குலத்தில் வளர்ந்தார் என்பர். பத்திசாரர் என்றொரு பெயருண்டு. கி.பி. ஆறாம் நூற்றாண்டு. முதல் மூன்று ஆழ்வார்களும் பிற சமயத்தைக் கடிந்துரைக்கவில்லை. ஆயின் இவ்வாழ்வார் பிற சமயத்தாரைச் சாடுகின்றார்.

சித்தர் சிவவாக்கியர் இவர் என்பர். இக்கருத்து ஆய்விற்குரியது. இவர் வீரவைணவர். சமண பௌத்தர்களை மட்டுமின்றிச் சைவர்களையும் இழிவாகப் பேசுகின்றார்.

*அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர் சிறியார் சிவப்பட்டார்'

என்பது இவரது வாக்காகும். இவர் பாடல்களில் திருமாலின் திருவிளையாடல் களும், அவதாரங்கலும் இடம் பெறுகின்றன.

இவரது சீடர்கணிகண்ணன். சீடருக்காகத் திருமாலையே காஞ்சிபுரத்திலிருந்து புறப்படும்படிக்கூறி, மன்னன் வேண்ட மறுபடியும் காஞ்சிக்கு வரும்படி கூறியவம் மணிவண்ணனாம் திருமாலைப் பற்றிப் பாடிய பாடல்

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி

மணிவண்ணா நீ கிடக்க வேண்டாம் துணிவுடைய

செந்நாப் புலவன்யான் செல்கின்றேன்;

நீயுமுன்றன் பைந்நாகப் பாய்சுருட்டிக்கொள்'

சுருட்டிக்கொள் என்றவுடன் திருமால் புறப்படுகின்றான், பைந்நாகப் பாய் விரித்துக் கொள் என்றவுடன் திருமால் திரும்பி வருகின்றான். அடியாரின் அன்பிற்கு ஆண்டவன் கட்டுப்படுதலை இந்நிகழ்ச்சி விளக்கும்.

**நம்மாழ்வார்**

இவர் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு. பாண்டிய நாட்டின் திருக்குருகூர் பிறந்த ஊர். இவர் தாயார் உடையநங்கையார் ஊர் குமரி மாவட்டத்தில் நாஞ்சில் நாட்டிக் தோவாளை வட்டத்தில் அமைந்துள்ள திருப்பதிசாரம் (திருவெண்பரிசாரம்).

இவ்வூர் 108 திருப்பதிகளுள் ஒன்று. அங்குள்ள திருமாலை 'என் திருவாழ்மார்பன் என உரிமையுடன் போற்றுகின்றார் நம்மாழ்வார். திருக்குருகூர் இன்று ஆழ்வார்த் திருநகரி என்று வழங்கப்படுகிறது. வேளாளர் மரபு. தந்தை காரியார். தாய் உடைய நங்கை. பிரமாதி ஆண்டு வைகாசித் திங்கள் பௌர்ணமியில் உதித்ததாகக் கூறுவர்.

16 ஆண்டுகள் புளிய மரத்தடியில் இருந்ததாகக் குரு பரம்பரைக் கதை கூறும் பிறந்தவுடன் பேசாது ஊமையாக இருந்தவர் .இவருக்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. ஒவ்வொன்றும் காரணப் பெயராகவே அமைகின்றது. சடம் எனும் வாயுவைச் சினந்தமையால் 'சடகோபர்'; உரிமை காரணமாக 'நம்மாழ்வார். உலகியலுக்கு மாறாக இருந்தமையின் 'மாறன்'; இவர் யாத்த நூலின் பெருமை கருதி 'திராவிட சிசு'; பிறமதங்களாகிய யானைக்கு அங்குசம் போன்று விளங்கியமையால் 'பராங்குசர்' என அழைக்கப்பட்டார்.

திரு. வி.க. நம்மாழ்வாரைப் பெரிதும் புகழ்வர். 'இவர் பிறந்த தமிழ்நாட்டை மனத்தால் நினைத்து, வாயால் வாழ்த்தி, கையால் தொழுகிறேன்' என்பர். நம்மாழ்வார் குன்றினை நெடுமாலாகவே காண்பர், மழையைத் தன்னை ஆளுட் நாராயணன் வருகையாகவே காண்பர்.

நம்மாழ்வார் திருவாசிரியம், திருவாய்மொழி,திருவிருத்தம்,பெரிய திருவந்தாதி என நான்கு நூல்கள் இயற்றியுள்ளார். இவற்றை வைணவர்கள் சது (நான்கு) வேதமாகப் போற்றுவர். இவற்றுள் திருவாய்மொழி வைணவர்கள் நாளு ஓதும் பெருமை பெற்றது. 'திராவிட வேத சாரம்' செந்தமிழ் வேத 'ஆன்றதமிழ்மறைகள் ஆயிரம்' என்றெல்லாம் போற்றப்படும். இதனை தந்தமையால் இவர் திராவிடசிசு எனப்போற்றப்படுவர். தென்கலை வைணவர்கள் திருவாய் மொழியை மந்திரமாகக் கருதுவர்.

'பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற

காவி மலரென்றும் காண்டொறும் - பாவியேன்

மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை

எல்லாம் பிரான் உருவே"

என்கிறார். பாவியேன் என்று தன்னை அழைப்பது மாணிக்கவாசகரை நினைவூட்டுவதாக உள்ளது.

**மதுரகவியாழ்வார்**

(அந்தணர்குலம். ஊர் திருக்கோவலூர். பாடல்களின் இனிமை கருதி மதுரகவி எனப்பட்டார். வடநாட்டுத் தலங்களைக் காணச்சென்ற பொது அயோத்தியில் ஒரு சோதி தெரிய அதைப் பின்பற்றி வந்து நம்மாழ்வாரின் திருக்குருகூர் அடைந்தார்.

அங்கு யோக நிலையில் இருந்த நம்மாழ்வார்க்கு அடிமையாகி, அவரையேதெய்வமாகக் கண்டு பாடினார். திருமாலைப் பாடாது திருமாலின் தொண்டர் நம்மாழ்வாரை மட்டும் பாடிய ஒரே ஆழ்வார் இவரே. இதனால் இவரைப் பள்ளிகு ஆழ்வார்களில் சேர்க்காது விட்டனர் என்பர்.

இவர் நம்மாழ்வாரைப் பாடிய பாசுரம் கண்ணி நுண் சிறு தாம்பு எனப்படும். பத்துப்பாடல்களே உள்ளன. அப்பாடல்களில்

'.... தென்குருகூர் நம்பியென்றக்கால்

அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே'

எனவும்

தேவுமற்றறியேன் குருகூர் நம்பி

பாவி னின்னிசை பாடித்திரிவனே'

எனவும் பாடுவர். திருமால் உட்பட நம்மாழ்வார் தவிர வேறு தெய்வமில்லை எனும் போக்கில் இவர் பாடல்கள் அமைகின்றன.

வேளாளர், அந்தணர் நோக்கில் அப்பர் சம்பந்தர் போன்று, அதனினும் மேலாக அந்தணர் மதுரகவி, வேளாளர் நம்மாழ்வாரைத் தெய்வமாகக் கருதியது இறையன்பு சாதி கடந்தது என்பதை விளக்கும்.

**குலசேகராழ்வார்**

இவரது ஊர் திருவஞ்சைக்களம். சேர அரச மரபில் தோன்றியவர். மாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர். கௌத்துவமணி அம்சம். இயற்பெயர் குலசேகரர் பெருமாளிடம் கொண்டாடுபாட்டால் குலசேகரப் பெருமாள் என்றும் அழைப்பர். திருவரங்கத்துத் திருமாலிடம் கொண்ட அன்பினால் அரசைத் துறந்து அடியார் சேவையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். அதற்காக அரசுதுறந்தமையைத் தம்பாடலில் 'கம்பமதயானைக் கழுத்தகத்தின் மீதமர்ந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்' எனக் கூறுவதால் உணரலாம்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. வடமொழியிலும் தென் மொழியிலும் சிறந்த புலமை பெற்றவர். அரங்கனைப் போன்று இராமனிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.இராமனைப் பற்றிய சமயச் சொற்பொழிவுகளை விரும்பிக் கேட்டு, அதில் ஒன்றிப் போனவர். தமிழில் பெருமாள் திருமொழியும் (105 பாடல்கள்) வடமொழியில் முகுந்தமாலையும் இவர் இயற்றிவை. பாடல்களில் தம்மைக் கோழிக்கோன் கூடல் நாயகன், கொல்லிக் காவலன் என்பர். கொல்லி நாட்டை ஆண்டதாகக் கூறுவர். இவர் வித்துவக் கோட்டம்மானையும், திருவேங்கடத்தானையும் பாடிய பாசுரங்கள் நெஞ்சை நெகிழ்விப்பன. 'திருவேங்கட

மலையின் படியாகக் கிடந்து திருமாலின் பவள வாய்' காண விரும்புகிறார். எனவே ஒவ்வொரு வைணவத் திருகோவிலிலும் இறைவனின் கருவறைக்கு முன் உள்ள படி 'குலசேகரன் படி' என்ற பெயரில் வழங்கப்படுகிறது. அதுபோல் 'வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல்' வித்துவக் கோட்டம்மானிடம் தான் அன்பு கொண்டு இருப்பதாகக் கூறுகின்றார். என்னதுயர் தரினும் வித்துவக் கோட்டம்மானே உனையன்றி எனக்குச்சரணில்லை என்கிறார்.

'தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை விரை குலவு மலர்ப்பொழில் சூழ்வித்துவக் கோட்டம்மானே! அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன் அருள் நினைந்தே யழும் குழவி அதுவே போன்றிருந்தேனே' எனத்தன் நிலையைக் கூறுகின்றார்.

இவர் பாடிய தயரதன் புலம்பல் இலக்கிய நயம் மிக்கது. அதில் இராமனைத் தாலாட்டும் பாடல் படிக்கப் படிக்க இன்பம் பயப்பது.

'மன்னுபுகழ்க் கௌசலைதன்

மணிவயிறு வாய்த்தவனே

தென்னிலங்கைக் கோன்

முடிகள் சிந்துவித்தாய்

செம்பொன்சேர் கன்னிநன்மா

மதில்புடைசூழ் கணபுரத்து

என் கருமணியே என்னுடைய

இன்னமுதே

இராகவனே தாலேலோ'

என நாமும் சேர்ந்து தாலாட்டும் இன்பம் பயப்பது

திருவரங்கம், திருக்கண்ணபுரம், தில்லை ஆகிய தலங்களுக்கு மங்களாசாசனம் செய்துள்ளார். திருவரங்கத்தின் மூன்றாம் மதிலை இவர்கட்டியதாகக் கூறுவர்.

**பெரியாழ்வார்**

இவர் திருவில்லிப்புத்தூரில் பிறந்தவர். ஆனித்திங்கள் சுவாதி நாள்; அம்சம் கருடாம்சம். இவருக்கு 'விஷ்ணுசித்தன் “பட்டர்பிரான்' என்னும் பெயர்களும் உண்டு. இவர் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு. பாடிய நூல்கள் இரண்டு 1. திருப்பல்லாண்டு 2. பெரியாழ்வார் திருமொழி. கண்ணனைக் குழந்தையாக்கி இவர் பாடிய பாடல்கள் பின்னர்ப் பிள்ளைத் தமிழுக்கு அடியெடுத்துக் கொடுத்தது என்பர்.

கண்ணனைத் தாலாட்டும் போது இவர் யசோதையாகவே மாறி விடுகின்றார். கண்ணன் ஊதும் குழல் கேட்டு 'புவியுள் நான் கண்டதோர் அற்புதம்' எனக் கூறி ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றார். தன்னுடைய பாற்கடலைவிட்டுத் திருமால் தன் நெஞ்சில் இருப்பதாகக் கருதிப் பெரியாழ்வார்

'தனிக்கடலே தனிச்சுடரே! தனியுலகே! என்றென்று

உனக்கிடமாயிருக்க என்னை உனக்கு உரித்தாக்கினையே'

எனப் பரவசமாகிப் பரவுகின்றார். கண்ணனின் பாத கமலங்களைக் காண வாரீர்! பவள வாயினைக் காண வாரீர்! என அழைக்கின்றார். பொழுதிருக்கும் காலத்திலேயே அரங்கனை வணங்கிவிடுங்கள் என்கிறார். கண்ணனைத் தாலாட்டும் பாடல் நம்மையும் தாலாட்டும். அந்தத் தாலாட்டு இதோ

'மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி

ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுதொட்டில்

பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்

மாணிக் குறளனே! தாலேலோ!

வைய மளந்தானே/ தாலேலோ!'

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளே ஆண்டாள்.

**ஆண்டாள்**

திருமாலுக்கு ஆட்பட நினைத்தமையாலும் திருமாலால் ஆட்கொள்ளப் "பட்டமையாலும் ஆண்டாள் ஆயினாள் என்பர். காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு துளசிப் பாத்தியில் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்டவர். ஆடித்திங்கள் நட்சத்திரத்தில் தோன்றிய இவர் பூமகள் அம்சம் என்பர். கோதை இயற்பெயர். சுடர்க்கொடி எளவும். பெரியாழ்வார் பெற்றெடுத்தபைங்கொடி எனவும் போற்றப்படுவர்.

திருமாலைக் கணவனாக அடைய விரும்பியவர். இவர் பாடிய நூ திருப்பாவையும் (30 பாடல்கள்), நாச்சியார் திருமொழியும் (143 பாடல்கள்) இரண்டுமே பக்திச் சுவை மிக்கன. மார்கழி மாகத்தில் கிருமாலை அடையும் வகைகளைப் பெண்களுக்கு நீராடும் வழியாக எடுத்துரைக்கும் நூல் திருப்பாவை. மார்கழி முடியம் பெண்களுக்கு வழிதரும் தை பிறக்கும். ஆண்டாள் கண்ணனிடம் கொண்ட காதல் உள்ளத்தைக் களவு உள்ளத்தை நாச்சியார் திருமொழி எடுத்துரைக்கும். இந்நூல் அக்காலத் திருமணச் சடங்குகளை நன்கு எடுத்துரைக்கின்றது. திருமணத்தின்போது அம்மி மிதிக்கும் சடங்கை முதன் முதலில் கூறுபவர் ஆண்டாளே.

பார்க்கும் காயும், கனியும் திருமாலாகவே ஆண்டாளுக்குக் காட்டு தருகின்றன. கண்ணன் ஊதும் சங்கைப் பார்த்து ஆண்டாள் காதலால் புலம்பும் பாடல் சங்க இலக்கிய அகப்பாடல்களை விஞ்சி நிற்பது.

'கற்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?

திருப்பவளச்செவ்வாய் தான் தித்தித் திருக்குமோ?

மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்

விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழிவெண்சங்கே.'

**தொண்டரடிப் பொடியாழ்வார்**

இவர் ஊர் சோழநாட்டுத் திருமண்டங்குடி குலம், முன் குடுமிச் சோழிய அந்தணர் குலம். மார்கழித் திங்கள் கேட்டை நாளில் திருமாலின் வனமாலை அம்சமாக அவதரித்தவர். இயற் பெயர் விப்ர நாராயணன் காலம் 9ஆம் நூற்றாண்டு, திருமங்கையாழ்வார்காலத்தவர்.

திருவரங்கத்தில் நந்தவனம் வைத்து அரங்கனுக்குச் சேவை செய்தார். பெரியாழ்வார் ஸ்ரீவில்லிப்புத்தூரில் செய்த சேவையை இவர் திருவரங்கத்தில் செய்தார். திருவரங்கத்தில் வாழ்ந்து வந்த தேவ தேவி எனும் தாசிக் அடிமையானார். இறைவன் அருளால் மனம் மாறித் தொண்டரடிப் பொடியாழ்வா எனப் பக்தி உலகம் போற்றும் பேறு பெற்றார்.

இவர் பாடியவை திருமாலை, திருப்பள்ளி எழுச்சி, திருப்பள்ளி எழுச்சியி அமைந்த இப்பாடல் சமயம் மறந்தும் போற்றுதற்குரியது. அப்பாடல்வருமாறு:

'பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்கமலச்செங்கண்

அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்

இச்சுவை தவிர யான்போய் இந்திரலோக மாளும்

அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே/'

திருமாலை'யிலும் அரங்கனையன்றி யாருமில்லை என்பதைத் தொண்டரடிப் பொடியாழ்வார் உருக்கமாகப் பாடுகின்றார்.

**திருப்பாணாழ்வார்**

இவர் சோழ நாட்டு உறையூரில் பிறந்தவர். ஸ்ரீவத்சம் எனும் திருமருவின் அம்சமாய் நெல் வயலில் தோன்றினார். பிறந்த மாதம் கார்த்திகை. நட்சத்திரம்

உரோகிணிர்பாணர் குடியில் வளர்ந்தமையால் பாணாழ்வார் எனப்பட்டார். இசையில் வல்லவர். திருவரங்கம் செல்லத் தயங்கி, காவிரிக் கரையில் நின்று அரங்கனைப் பாடினார். இழிகுலத்தார் எனக் கருதி இவர்மீது கற்களை வீசினர். அரங்கன் சாரங்க முனிவர் கனவில் தோன்றித் தலையில் இரத்த காயத்துடன் காட்சியளித்து இதற்குக் காரணம் திருபாணாழ்வாரை இழிவுபடுத்தியதே. அப்போது அவர் இதயத்தில் நாமிருந்தோம் என்றார். அவரை உன் தோளில் சுமந்து ஆலயத்திற்கு அழைத்து வருக எனக் கனவில் கூறி அரங்கன் மறைந்தார். சாரங்க முனிவரும் அரங்கன் ஆணையை நிறைவேற்றினார்.

திருவரங்கன் திரு உருவைக் கண்ட திருப்பாணாழ்வார் 'அமலனாதி பிரான்" எனும் பாசுரம் பாடினார். இத்திருமொழி பாதாதி கேசமாக அமைகின்றது. அரங்கனைக் கண்ட கண்கள் வேறு எதையும் காணாது என்பதை,

'அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்

கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'

என்று உணர்ச்சிப் பெருக்கில் பாடி இறைவனோடு இரண்டறக்கலந்து விடுகிறார்.

திருமால் ஏழு உலகையும் உண்டு ஆல் இலையில் துயின்றதை ஆழ்வார்

'ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்

ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான்'

எனப் பரவுகின்றார்.

**திருமங்கையாழ்வார்**

இவர் பிறந்த ஊர் சோழ நாட்டின் திருமங்கையில் திருவாலித் திருநகரின் அருகிலுள்ள திருக்குறையலூர். நள வருடத்தில் கார்த்திகை மாதம் வில்லின் அம்சமாய்த் தோன்றியவர். மரபு - கள்ளர் மரபு. இவர் தந்தை நீலி. படைத்தலைவர். இவரும் சோழ மன்னனின் படைத்தலைவராக இருந்து, பின்னர் மன்னன் அருளால் திருமங்கை நாட்டிற்கு அரசனாகியவர். இவர் மனைவி குமுதவல்லியார். திருமாலிடம் மிகுந்த பக்தி கொண்டவர்.

இவரது காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு, திருமாலிடத்தில் கொடி ஈடுபாட்டின் காரணமாக மன்னனுக்குச் செலுத்த வேண்டிய கிறைப் பலர்கை கொடுக்காது சிறைப்பட்டு இறையருளால் சிறை மீண்டார். கொள்ளையர விளங்கிய இவரைத்திருத்தத் திருமாலும் திருமகளும் வழிப்போக்கராய் வந்துநி இவர், அவர்கள் பொருளைக் கொள்ளையடிக்க, இறுதியில் திருமகளின் காலிலுள்ள மெட்டியைக் கூட விடமனமின்றி வாயால் கடித்தெடுத்து இறுதியி உண்மையுணர்ந்து அருள்பெற்றவர்.

குலந்தரும், செல்வம் தந்திடும். அடியார்
படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும், நீள்விசும் பருளும்,
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம் தரும், மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின் செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்'

ஆழ்வார் வாக்குப் பொய்க்காது.

## சமயம் வளர்த்த தமிழ்

### சைவமும் தமிழும்

சிவபெருமானின் புகழ்பாடும் சமயம் சைவம்.யாக்கையோன் சிவபெருமான் சைவம் என்றால் உயிர்களிடத்தில்அபு பொருள் எனலேதான் திருமூலரும் "அன்பே சிவம்' என்றார்.

இலக்கியங்களில் சிவனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. முருகனைப் பரவும் திருமுருகாற்றுப் படையேயாகும். சைவம் தமிழுக்குச் செய்த தொண்டு அளவிடற்கரியது. இத்தொண்டிம் நாம் ஐந்து வகையாகப் பகுத்துக் காணலாம்: 1.பள்னிரு திருமுறை உசைவசமய சித்தாந்த நூல்கள், 3.காப்பியங்கள், 4. தல புராணங்கள், 10 மடங்கள்.

### பன்னிரு திருமுறைகள்

சைவப் பெரியார்கள் 47 பேர் பாடிய பாடல்களின் தொகுப்பு திருமுறைகளாகும். இத்திருமுறைகளைத் தொகுத்தவர் தம்பியாண்டர்தம் தொகுப்பிக்கக் காரணமாக இருந்தவர் முதலாம் இராசராசன் என் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசர் போ முக்கியமான நாயன்மார்கள் இதில் இடம்பெறுகின்றனர். நம்பியாள். நம்பி II திருமுறைகளைத் தொகுத்தார். பின் வந்தோர் சேக்கிழாரின் பெடு புராணத்தை 12ஆம் திருமுறையாக இணைத்துப் பன்னிருதிருமுறைம் என்றனர். இப் பன்னிரு திருமுறைகளையும் முருகளின் பன்னீரல் கண்களாகச் சைவர்கள் கருதுவர்.

**சைவ சித்தாந்த சாத்திரங்கள்**

சாத்திரங்களை மெய்கண்ட சாத்திரம் என்றும் அறுபூதி நூல்கள் என்ற அழைப்பர். இந்நூல்கள் கி.பி. 12,13,14.ஆம் நூற்றாண்டில் தோன்றி தாயன்மார்கள் பாடிய திருமுறைகள் தோத்திரங்கள் எனவும், இலய சாத்திரங்கள் எனவும் வழங்கப்பட்டன். ஜி.யு.போப் அவர்கள் 'இராவிட அறிவாற்றலின் வெளிப்பாடு சாத்திரங்கள்' என்பர். பதினான்கு நூல்கள்.

உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்

பித்திருபா உண்மை பிரகாசம் வத்தவருட்

பண்பு வினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு

உண்மை தெறி சங்கற்பம் முற்று

**திருவுந்தியார்**

ஆசிரியர் உய்யவந்த தேவர் ஊர் திருவியலூர் மெய் கண்டாருக்கு முன் நான்றிய சோழர்காலம் .கி.பி 13ஆம் நூற்றாண்டு அழகிய தடைக்கு முன் பெற்றது. சமயத் தத்துவமுறைபெடுவாக விளக்கப்படுகிறது. சிவஞானபோதம். போன்று கருத்த அருள்ளாவப்பட்டுக்கி அமையவிள்ளை, இறைவன் மனித பேண்களின் விளையாட்டாகிய உத்தி பறத்தல்' எனும் சொல்லோடு (உத்திபS) ஒவ்வொரு கண்ணியும் முடிவதால் இது உந்தியார் எனப்பட்டது.

சிந்தையி னுள்ளும்என் சென்னியி னும்சேர

வந்தவர் வாழ்களன்று உத்திபற..

**திருக்களிற்றுப்படியார்**

ஆசிரியர் உய்ய வந்த தேவநாயனார். திருக்கடவூரில் பிறந்தவர். திருவுந்தியார் இயற்றிய உய்யவந்த தேவரின் மாணவர் காலம் கி.பி. 12ஆம் நிற்றாண்டு. 100 வெண்பாக்களை உடையது. நாயன்மார்களின் செய்திகளை எடுத்துரைக்கின்றது. சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கத் திருக்குறனை எடுத்தாள்கிறது.

**சிவஞானபோதம்**

ஆசிரியர் மெய்கண்டார். சைவ சித்தாந்த நூல்களில் தலைமையிடம் பெற்றது சிவஞானபோதம் என்பர். 12 சூத்திரங்கள், 32 அதிகாரங்கள், 1 முதபாக்கள் கொண்டது. இது நாயக்கர் காலம். கி.பி. 13ஆம் நூற்றாண்டு சைவ சித்தாந்த முப்பெரும் உண்மையாகிய பசு, பதி, பாசம் இவற்றிவைத் தெளிவாக விளக்குகின்றது. புலன்களால் நாம் உணர்பவை எல்லாம் அழியக் கூடியவை.

புலன்களால் உணர முடியா உயிர் அழியாதது என்கிறது. சிவஞானபோதத்திற்குச் சிவஞான முனிவர் சிவஞான மாபாடியம் எனும் உரை எழுதியுள்ளார்.

இத்நூல் பரபக்க சுபக்கம் எனும் இரண்டு பிளவுகளேடு பாடல்களைப் பெற்றுள்வது சிவபோகசாரம் இந்நூலைச் சிவத்திற்கும் தெய்வமில்லை சிவஞான சித்திக்கு மேல் சாத்திரமில்லை என்றும் பார்விரித்த தூலெல்லாம் பாசித்தியிலே ஓர் விருந்தப்பாணிபாது எனப் பாராட்டும்.

**நெஞ்சுவிடு தூது**

ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார். ஆசிரியரிடத்து நெஞ்சைத்தூதுவிடும் திளாசியர் மறை ஞான சம்பந்தராவார். இதனைச் சமய தாது இலக்கியம் எனக் கூறலாம். நம்மாழ்வார். நாவுக்கரசர் போன்று இவர் இறைவனுக்குப் படுத்துத் தருகிரியரைத் தலைவனாகயும் தம்வைத் வலியாகவும் பாவித்துத் தூதுவிடும் போக்கில் அமைத்துள்ளார். ர்மையில் அமைந்த நூல். இங்கு ஆசிரியர் என்பவர் சிவாச்சாரியாரின்

**உண்மை நெறிவிளக்கம்**

ஆறு விருத்தப்பாக்களால் அமைந்தது சைவ சித்தாந்த நூல்கள் தசகாரியம் என்று குறிப்பிடும், ஆன்ம தரிசனம், தத்துவ தரிசனம், சிவதரிசனம் போன்ற் பத்துத் தரிசனங்களை விளக்குகிறது. ஆசிரியர்உமாபதி சிவாச்சாரியார்:

**தல புராணங்கள்**

சிவபெருமானின் செயற்கரிய செயல்களை விழக்கும் வகையில் நட புராணங்கள் மிகுதியாகத் தோன்றின. சிறு பெரும் நூற்றாண்டுகள் இப்புராணங்களால் ஊர் வரவாத்தினையும் அங்கு அருள்கொண்டிருக்கும் இறைவனைப் பற்றியும், தலவிருட்சம் (மரம்) பற்றியும் அறிய முடிகிறது.

காஞ்சிய புராணம் திருத்தணிகை புராணம், புராணம், கோலத்தி புராணம், திருவுறத்தைப் புராணம், அருணாசல புராணம் திருபெருநன் பின்பற்றி அத தழுவலாய் மச்ச புராணம், அதன் இலிங்க புராணம் எனப் பல்வேறு புராணங்கள் தோன்றின (மச்ச கூடி புராணம் திருமால் பெருமை பேசுவன)

கி.பி. 17.ஆம் நூற்றாண்டில் வாழ்த்த எல்லப்ப நாவலர் தல புரசீன பாடியயர்களில் குறிப்பிடத்தக்கவர். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தல புராணங்கள் ள் பாடுவதில் சிறப்புப் பெற்றவர். பதினாறு தல புராணங்கள் பாடியுள்ளார்.

**சைவ மடங்கள்**

தமிழ் வளர்ச்சிக்குச் சைவ மடங்கள் ஆற்றிய தொண்டு சிறப்பானதாறும் மடங்கள் தமிழ்ப் பயிரை நன்கு பாதுகாத்து வளர்த்தன வறுமையில் புலவர்களை இம்மடங்கள் ஆதரித்து அவர்தம் புலமையை இலக்கியங்கள வெளிக் கொணர்த்தன. பெரும்பாலும் வேற்றரசர் ஆட்சி புரிந்த காலத்தினேல் இம்மடங்கள் தோன்றின. அக்காலக்கட்டத்தில் தமிழ் இலக்கியத்தை வளம் என்பது பெருந்தொண்டாகும். அத்தகைய சைவ மடங்களுள் திருவாவடுதுவ மடம், திருப்பனந்தாள் காசி மடம், தருமபுரம் மடம், மதுரை மடம் ஆசிபா குறிப்பிடத்தக்கன. இஸ்லாமியர் படையெடுப்பில் தமிழுக்கும் புலவர்களுக்கும் அடைக்கலம் கொடுத்ததில் இம்மடங்களுக்குப் பெரும் பங்குண்டு.

திருஞானசம்பந்தர் இம்மடத்தில் தங்கியதாகக் கூறுவர். எனவே மெடத்தை மதுரைங்கம் லயழகோடு திருஞான சம்பந்தர் மடம் என்டுவ சைவ பழமையானது மதுரை மடமாகும். இம்மடம் மீனாட்சி அம்மன் கேருவில் அருகிலுள்ளது. தற்போது மடத்தி எம்முடன் 29ஆவது குருமகாசத்திதானம். இதுவே இதன் பழமையை

**திருவாவடுதுறை மடம்**

இம்மடத்தை நிறுவியவர் நமச்சிவாய மூர்த்திகள். இவருடைய குரு திருப்பெருந்துவசிவப்பிரகாசர் இம்மடம் நிறுவபெற்ற காலம் கி.பி.14.ஆம் நூற்றாண்டு இம்மடத்தில் ஆதினத் தலைவர்களாக இருந்தோர் பத்து நூல்களை சேது புரானனர். இவற்றைத் திரம் பதி சாத்திரம் என்பர். பின்னர் 4 நூல்களைய கூர்ம புராண தந்துப் பண்டார சாத்திரம் பதினான்கு என்பர் சையத்தில் மேன்மையை நிழல்கள் எடுத்துரைக்கின்றன.

**தருமபுர மடம்**

இம்மடத்தை நிறுவியவர் குருஞான சம்பந்த தேசிகர். இவர் சிவபோக ரம், சொக்கநாத வெண்பா. முத்தி நிச்சயம் முதலான நூல்களை இரற்றியுள்ளார். மடம் தோன்றிய காலம் கி.பி. 16.ஆம் நூற்றாண்டு, இம்மடம் நுவரையில் 800க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. இம்மடத்தில் சார்பில் கலைக்கல்லூரியும், சித்தாந்தக் கல்லூரியும் சிறப்பாக இயங்கி தமிழ்படுகிறது. திருக்குறள் உரை விளக்கம் எனும் நூல் மடத்தின் சார்பாக வந்துள்ளது. பெரிதும் பாராட்டினைப் பெற்ற நூல் இதுவாகும்.

**வைணவம் வளர்த்த தமிழ்**

சிவபெருமான் போன்று திருமாலும் சங்க காலம் தொட்டு தூங்கப்படும் ஒரு தெய்யம், தொல்காப்பியம் முல்லை நிலக் கடவுளாகக் ஓம் மாயோன் திருமாவே முல்லைக்கலி, பரிபாடல் திருமால் பற்றிக் ழ்கின்றன. திருமாளை வடமொழியில்

விஷ்ணு (எங்கும் நிறைத்தவர்) குறிப்பிடுவர். திருமால் பற்றிய மிகுதியான கதைகள் களப் களப்பிரர் வத்திக்குப் பிறகே தமிழகத்தில் வழககுகின்றன. பாகவதக் கதைகள் கின் அவதாரங்களை எடுத்துரைக்கின்றன

தமிழ் இலச்சியத்தில் முத்தவாவதாகச் சிலப்பதிகாரம் திருமாவின் தலையைப் பொதும் இருத்துரைக்கின்றது. இம்மடமை கூறிப் பின்வரும் பக்தி இலக்கியங்களுக்கு விதையாய் அமைகிறது. வான்நின்ற கோலத்தையும் (திருவேங்கடம்) கிடந்த கோலத்தையும் திங்களிதவங்கம்) கட்டுகிறது, அவற்றைக் காணுதல் பெரும் பயன் தரும் என அச்சிட்ங்காட்டுமறையோன் வழி வில்கின்றது.

வைணவம் சார்ந்த புலவர்கள் பதிலெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் திதிகடுகம், நான்மணிக்கடிகை, கார்நாற்பது, களவழி நாற்பது ஆகிய மனை விற்குமால் பற்றிய குறிப்புக்களும்வும் கொடங்கி இருண் நறறும் வளரபின் திருமால் பற்றிய குறிப்புகளும், வைணவம் சார்ந்தோர் னும் கிடைப்பினும் பல்லவர் காலமே வைணவம் தமிழை வந்த

வைணவ நூல்களை தான்கு பகுப்பினுள் அடக்கலாம். 1.நாலாயிரத் துடன் இணைத்துக் கொள்க) 2.வைகாவ உரைகள், 3 வைணவக் நசியங்கள். 4. பிற வைணவ நூல்கள்.

**வைணவ உரைகள்**

நாதமுனிகள் (கி.பி. 1063 1117) ஆழ்வார்கள் பாசுரங்களைத் தமிழ்தடித்தொகுத்து வெளியிட்டார். இத்தொகுப்பே நாலாயிரத் திவ்யப் தமிழ்க்தம், இதனைப் பாடியோரை ஆழ்வார்கள் என்று அழைப்பர். ஜநூலுக்கு உரை எழுதியோரை ஆச்சாரியார்கள் என்று அழைப்பர். இவர்கள் பாரகளோடு வைணவ இலக்கியங்களையும் படைத்தனர்.

வைணவக் காப்பியங்களில் முதன்மையானது கம்பராமாயணம் வில்லி பாரதம். (இவை ஏற்கனவே இந்நூலின் முன் பகுதியில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது) வைணவப் பெரியார்கள் பலர் வைணவ இலக்கியங்கள் படைத்துள்ளனர்.

**நாதமுனிகள்**

நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தைத் தொகுத்து பெரும் தொண்டாற்றியவர் பக்தி உலகம் சைவத்திற்கு பெரும் த்ெதிற்கு நாதமுனி எனப் போற்றும் நியாய தத்துவம், னெகரே இவர் எழுதிய நூல்கள் இவரை வைணவ உலகம் தமிழ் வியாச போற்றும்.

**பின்பழகிய பெருமாள் ஜீயர்**

குருபரம்பரைப் பிரபாகம் ஆறாயிரப்படி இவர் எழுதியது. இவர் இட்டத்தட்ட தாத முனிகள் காலம் என்பர். கி.பி. 10.ஆம் நூற்ற குருபரம்பரையை முதன் முதலாகத் தொகுத்தவர் இவராகும்.

**இராமானுசர்**

கி.பி. 12.ஆம் நூற்றாண்டு, சொந்த ஊர் ஸ்ரீபெரும்புதூர். தத்தை பே சோமாஜி: தாய் காந்திமதி. மனைவி பெயர் தஞ்சம்மாள். 14 வயதி இரண்டாம் குலோத்துங்க மன்னன் காலத்தவர் என்பர். இம்மன்னன தலைமையேற்ற இவர் வைணவத்தில் பல புரட்சிகளைச் செய்த தாழ்ததப்பட்டோரைத் திருக்குலத்தார் எனக் கூறிப் பெருமைப்படுத்திதய உறுவ உயிரும் வேறு வேறு எனக்கூறுவது) இராமானுசர் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழு) மாக இந் இவ ஸ்ரீபாஷ்யம் என்ப பிரம்ம பேருரையாக இதனைக் கருதுவர். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது.

**வேதாந்த தேசிகர்**

ஊர் காஞ்சிபுரம் அருகில் துப்புல் காலம் 16ஆம் நூற்றாண்டு இவரது இயற்பெயர் திருவேங்கட முடையான் வடகலை மரபு அழகிய மணவாள யலாரையும், வித்யாரண்யரையும் வாதில் வென்றவர் தமிழ் மொழி, மாசனாதிபதிகளில் ஒருவரின் பரம்பரையில் தோன்றியவர். வடமொழியில் இவர் இயற்றிய அயக்கீரிவ தோத்திரம், தேவநாயக தோத்திரமும் மும்மணிக்கோவை, அமிர்தரஞ்சனி முதலிய பல்வேறு உவணவர்கள் ஒரு நாள் முழுக்கச் செய்ய வேண்டிய கடமைகளைத் திட்டமிட்டு ஜவாத்திய நிநூல் ஸ்ரீவைஷ்ணம் கிளசரி. இது வைணவர்தருச் வழிகாட்ட துலாகப் பயன்படுகிறது. இவை தவிர நவரத்தினமாலை, திருச்சின்னமாலை, அர்த்த பஞ்சாங்கம், பரமபத சோபனம், பன்னிரு திருநாமம், பதினேழு ரகசியம் போன்ற பல நூல்கள் எழுதியுள்ளார்.

வேதாந்த மார்க்கத்திற்குச் சிறந்த ஆச்சாரியராகத் திகழ்த்ததால் இவர் வேதாந்த தேசிகர் எனப்பட்டார் பெருவேதார் இப்பட்டங்கள் இவருக்குப் பெருமாளும் பிராட்டியாகும் மனமுவந்து சூட்டினர் என்பர். 100 வயது வரையில் வாழ்த்தவர்.

**திருக்குருகைப் பெருமான்**

இவர் இராமானுசரின் மாணவர் நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழிக்கு ஆளவந்தார் அருளிய உரையை முதன் முதல் வெளிக்கொணர்ந்த பெருமைக்குரியவர் இவர்.

**சமணம் வளர்த்த தமிழ்**

மோரியர் காலத்தில் சமணம், தமிழ்நாட்டில் புகுந்தது என்பர். சங்ககாலப் பாடல்கள் சிலவற்றில் சமணக் கோட்பாடுகளைக் காணலாம். சங்கம் மருவிய காலத்திலும், இருண்ட காலத்திலும் சமணம் வேகமாக பரவியது.அறத்தோடு கூடிய நீதியை வலியுறுத்தும் சமண இலக்கியங்கள் சமுதாயத்தில் பெரும் மாறுதலை ஏற்படுத்தின.

ஐம்பெருங் காப்பியங்களில் மூன்று சமண சமயம் சார்ந்தவை. 1.சீவக சிந்தாமணி,சிலப்பதிகாரம்..வளையாபதி ஐஞ்சிறு காப்பியங்களில் ஐந்தும் சமண சமயம் சார்ந்தவையாகும். இவற்றில் நீலகேசி சமண சமயக் கொள்கைகளைத் தர்க்க வாதத்தோடு எடுத்துரைக்கின்றது.

சமணம் என்பார் கூற்று இன்று சிலரால் மறுக்கப்படுகிறது கண்ணகி வைதீக சம்யத்தைச் சார்ந்தவளே. மாதவியும் கோவலன் இறந்த பிறகே செய்கிறாள். ஆய்ச்சியர் குரவையோ ஆழ்வார் பாடல்கள் போன்று பெருமையை எடுத்துரைக்கும் செங்குட்டுவன் சிவநெறி மன்னன் இளங்கோவடிகள் துறவியானது உண்மையெனினும் துறவியானமைக்குச் சிலப்பதிகாரத்திலோ வரலாற்றிலோ சான்றுகள் இல்லை என்பர்.

**புராணங்கள்**

சமணர்கள் இயற்றிய புராணங்களில் ஸ்ரீபுராணம், வாமன மேருமந்திர புராணம், சாந்தி புராணம், மாபுராணம் ஆகியவை செய் வடிவில் அமைத்துள்ளது ஸ்ரீபுராணம் உரை நடையில் மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளது. இத்தடையைப் புகுத்தியம்பகம் சமணர்கள் என்னும் கருத்துனது. நூலாகக் கருதுவர்.24 தீர்த்தங்கரர்கள், சமணர்கள் ஸ்ரீபுராணத்தைத் தங்கள் 12 சக்கரவர்த்திகள், வாசு தேவர்க பிரதி வாக தேவர்கள், பலதேவதாஸ் என்று நாம் மிக்க அறுபத்துது வரலாற்றைத் தருகின்றது. (சைவம் இதுபோன்று 63 நாயன்மார்கள் வரலாற்யை கூறுவது எண்ணத்தக்கது) இராமாயண, பாரதக் கருத்துக்கள் இதில் இட பெற்றுள்ளன. தமிழ் உரைநடை வளர்ச்சியில் புதியநடை புகுதி ஸ்ரீபுராணத்திற்குத் தனியிடம் உண்டு. ஜினசேனரின் மகாபுராண தழுவியது ஸ்ரீபுராணம் என்பர்.

**மேருமத்திர புராணம்**

காலம் 14ஆம் நூற்றாண்டு, மேரு, மந்திரர் எனும் அண்ணன் த இருவரின் முற்பிறப்பு வரலாற்றினையும் எத்தனை பிறவி எடுப்பினும் வினை பயனைத் துய்த்தே ஆக வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.அறக்கருத்துக்கள் மூலநூல் ஸ்ரீபுராணம் இந்நூல் 1405 பாடல்கள், 13.சருக்கங்கள் கொண்டு உத்தர புராணமும், கத்திய சிந்தாமணியும் உரைநடையில் அமைந்துள்ளன.

**இலக்கணமும் நிகண்டும்**

தொல்காப்பியர் சமணரே என்ற கருத்து உள்ளது நன்னூல் யாப்பருங்கலம் யாப்பருங்கலக்காரிகை, நேமிநாதம், வச்சணந்தி நம்பியகப் பொருள் ஆகிய சமணர் இயற்றிய சிறந்த இலக்கண நூல்கள் ஆகும்.

அகராதியில்லாத காலத்தில் தோன்றிய நிகண்டுகளில் பெரும் பில்கவரின் பிங்கலமும் சூடாமணி நிகண்டு மண்டல புருடஎன்னும் சமணராய் செய்யப்பட் திவாகரர் இயற்றிய திவாகரமும், நிகண்டுகளாகும். (திகண்டுகள் எனும் பகுதியில் விரிவாகத் தரப்பட்டுள்ளது

இலக்கியம், இலக்கணம் இவற்றோடுன கணிதம் சோதிடம் ஆகியவற்றிலும் உமணர்கள் சிறன் பெற்றிருந்தனர். சிறுகுழி வாய்பாடு இவை கணிதம் சினேந்திரன் மாம் சோதிட நீதி இவை ததிடம் பரவில் எழுதிய நூல்களாக இவ்வாறு இலக்கியத்தின் பல்வேறு தடங்களில் சமணர்கள் தங்க முத்திரையைப் படுத்துத் தமிழோடு தங்களை இணைந்துள்ளனர்.

**பௌத்தம் வளர்த்த தமிழ்**

சங்க காலம் முடிந்து சங்கம் மருவிய காலம் தொடங்கிச் சமயப் பூசல்களும் போர்களும் நடைபெறத் தொடங்கின. சமயத்தில் பூசல் இருப்பினும் சமயங்கள் தமிழ் வளர்ப்பதில் ஒற்றுமையாக இருந்தன, சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய காப்பியங்கள் இரண்டு. ஒன்று சிலப்பதிகாரம்; சமணம் சார்நத நூல் என்பர். மற்றொன்று மணிமேகலை பௌத்த நூல். பௌத்தமுட சமணமும் இலக்கிய வகையாலும், இலக்கண வகையாலும் தமிழ் வளர்த்தன

களப்பிரர்கள் காலத்தில் செல்வாக்குப் பெற்ற பௌத்தம் பக்தி காலத்தி திருநாவுக்கரசர் ஏற்படுத்திய சைவ மறுமலர்ச்சியில் தன் செல்வாக்கை இழக்க தொடங்கியது. இலக்கிய வளர்ச்சியில் சமணம் அளவிற்குப் பௌத்த தொண்டு செய்யவில்லை என்பார் பௌத்தம் தமிழ்நாட்டில் சம அளவிற்குக் காலூன்றவில்லை என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டு சைவமும் சமணமும் மோதின. பௌத்தம் பெரிய அளவிற்கு மோதியது வரலாறு இல்லை. காரணம் அந்த அளவிற்குத் தமிழகத்தில் அது வள பெறவில்லை என்பதேயாகும்.)

பிராகிருதம், பிராமி ஆகிய இரு மொழிகளின் தாக்கம் தமிழில் உள்ள இன்றைய தமிழ் எழுத்து முறைக்கு இவை முன்னோடி என்பர். இவ்விர மொழிகளும் பௌத்தர்கள் வழியாகத் தமிழகத்தில் பரவின.

சங்க காலப் புலவர் இளம்போதியார் பௌத்தர் என்பர். இவர் லொன்று நற்றிணையில் (பா.72) இடம்பெற்றுள்ளது. மதுரைக் காஞ்சியில் ம் பற்றிக் குறிப்புள்ளது. காப்பியங்களில் மணிமேகலை பௌத்த ப் பரப்பும் காப்பியம்

(இரட்டைக் காப்பியங்களில் மணிமேகலை விளக்கப்பட்டுள்ளது) ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய குண்டலகேசியும் பௌத்த சமயக் காப்பியம் ஆகும்.

**விம்பிசாரக் கதை**

மகத மன்னன் விம்பிசாரனின் வரலாற்றைக் கூறுவது. இதனைப் பிம்பிசாரக் கதை என்றும் கூறுவர். இதனைப். இம்மன்னன் தான் செய்த யாகத்தில் கொடுக்க முயன்ற போது புத்தர் அவனைத் தடுத்துத் தன் மதத்தில் சேர்க்கின்றார். மகத மன்னனின் மத மாற்றத்தை விரும்பாத தேவதத்தன். மன்னன் மகன் அஜாதசத்ருவைக் கொண்டு மன்னனைக் கொல்கிறான். தந்தையைக் கொன்ற அஜாதசத்ரு தன் மகன் மேல் உயிரையே தன்னிடத்தில் அன்புடன் இருந்த தந்தையைக் கொன்றுவிட்டோமே என வருந்தும் அவன் பௌத்த சமயத்தில் சேர்ந்து கொண்டுகள் புரிந்து மன அமைதி பெறுகிறான். விம்பிசாரக் கதை இதுவாகும். ஆசிரியப் பாவினால் ஆகிய நூல். இன்று இந்நூல் கிடைக்கவில்லை. ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. இந்நூலின் ஒரு பாடல் நீலகேசி உரையில் மேற்கோளாகச் சுட்டப்படுகிறது. காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு, விம்பிசாரன் வாழ்ந்த காலம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு என்பர்.

**சித்தாந்தத் தொகை**

பௌத்த சமயத்தின் சித்தாந்தங்களைத் தொகுத்துக் கூறும் நூல். சிவஞான சித்தியாரின் பரபக்க உரையில் மேற்கோளாக வரும் பாடலாலும், நீலகேசி உரையில் வரும் ஒரு பாட்டாலும் சித்தாந்த தொகையை அறிய முடிகிறது.

புத்ததத்தர் எழுதிய நூல் அபிதர்மாவதாரம். புத்தரின் அவதாரச் சிறப்பினை எடுத்துரைக்கும் நூல் என்பர். இதுபோன்று புத்தரின் பெருமை போற்றும் தோத்திர நூல் திருப்பதிகம். இதுவும் நீலகேசி, சிவஞான சித்தியார் உரைகளில் வரும் பாடல்களால் அறிய முடிகிறது. மானவூர்ப் பதிகமும் பௌத்த சமய நூல். நீலகேசி உரையில் சில பாடல்களை எடுத்துக்காட்டுவதால் அறிய முடிகிறது. நூல் கிடைக்கவில்லை.

**வீரசோழியம்**

தமிழில் தோன்றிய முதல் ஐந்திலக்கண நூல் வீரசோழியம் எழுத்த சொல்,பொருள், யா யாப்பு, அணி (அலங்காரம்) ஆகிய ஐந்திற்கும் இ கூறுகிறது. ஆசிரியர் புத்தமித்திரர். இவர் பௌத்தர். இந்நூலுக்கு உரையெழு பெருந்தேவனாரும் பௌத்த சமயத்தவர். சோழ மன்னன் வீரராசேந்திர சிறப்பினைச் சுட்டும் வகையில் ஆசிரியரே நூலுக்குப் இப்பெய வழங்கினர் என்பர்.

காரிகையாப்பால் இயன்றும் (கட்டளைக் கலித்துறை) காரிகையைப் அமைவதாலும் இந்நூலை வீரசோழியக் காரிகை என்று கூறுவர்.)

வீரசோழியத்தில் 181 பாடல்கள் உள்ளன. தண்டியலங்காரத்தை பின்பற்றியே இவர் அலங்காரம் என ஐந்தாம் பகுதி அமைத்தார் எனலாம் இந்நூல் மணிப்பிரவாள நடைக்கு இலக்கணம் தருகின்றது. வடமொழி சார்புடைய நூல் இதுவெனலாம். எனவே இந்நூல் இவர் காலத்திற்குப் பி மக்களிடம் செல்வாக்குப் பெறவில்லை. இன்று நாம் வட்டார வழக்குகணை போற்றுகின்றோம், மதிக்கின்றோம். (தொல்காப்பியம் கூட வட்டா வழக்குகளைத்தன் நூற்பாவின் மூலம் ஏற்றுக் கொள்கின்றது. ஆ வீரசோழியம் வட்டார வழக்குகளை அறிவற்றோர் வழக்கு ஒதுக்கிவிடுகிறது. இந்நூலின் காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு என்பர். முரு பெருமானால் போற்றப்பட்டது வீரசோழியம் எனக் கூறி அதற் கந்தபுராணத்தின் மூலமாக ஒரு கதையும் கட்டுவர்.

பௌத்தர்கள் தமிழ்நாட்டின் அரசியல் சூழலோடு தங்களை வளர்த் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே சைவ, சமண சமயத்த போன்று இலக்கியங்கள் எழுதும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கவில் அந்த வகையில் பௌத்தர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு சிறப்பானது என் கருதுதல் வேண்டும்.

**வினாக்கள்**

**பகுதி அ** **1X10=10**

1. பக்தி இலக்கியம் எக்காலத்தைச் சார்ந்தது?
2. தாண்டக வேந்தர் என்றழைக்கப்படுபவர் யார்?
3. சிவபெருமானால் அம்மையே என்றழைக்கப்பட்டவர் யார்?
4. பொய்கையாழ்வார் எந்த அம்சமாக தோன்றினார்?
5. ‘படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேன்’என்று பாடியவர் யார்?
6. முதலாழ்வார்கள் மூவரும் சந்தித்த இடம் எது?
7. மெய்க்கண்டார் பாடிய நூல் எது?
8. நாலாயிர திவ்ய பிரபந்தத்தை பாடியவர்களை எவ்வாறு அழைப்பர்?
9. ஐம்பெரும் காப்பியங்களில் சமண சமயம் சார்ந்தவைகள் எவை?
10. புத்ததத்தர் எழுதிய நூல் எது?

**பகுதி ஆ** **5X5=25**

1. பெரியபுராணம் - . குறிப்பு வரைக.
2. முதலாழ்வார்கள் பக்தி திறத்தை எழுதுக.
3. சைவ சித்தாந்த சாத்திரங்களை விளக்குக.
4. வைணவ இலக்கியங்களை ஆராய்க.
5. பெரியாழ்வார் – குறிப்பு வரைக.

**பகுதி இ** **8X5=40**

1. சைவ சமயக் குரவர்களின் பக்தி திறத்தை புலப்படுத்துக.
2. நம்மாழ்வார்,மதுரகவியாழ்வார்,குலசேகராழ்வார் – விளக்குக.
3. சமணம் தமிழுக்குச் செய்த தொண்டை கட்டுரைக்க.
4. பௌத்தம் தமிழுக்கு செய்த தொண்டு – விளக்குக.
5. ஒன்பதாம் திருமுறைகளை எழுதி விளக்குக.

**அலகு 3**

## சிற்றிலக்கியங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது சிற்றிலக்கியம் ஆகும். இவ்வகையில் தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, குறவஞ்சி போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் ஆகும். சிற்றிலக்கியங்களை முதலில் பிரபந்தங்கள் என்று வழங்கினர்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பேரிலக்கியம் சிற்றிலக்கியம் என்னும் பாகுபாடு அண்மை காலத்தில் தோன்றியது அளவால் விரிந்து மக்களுடைய வாழ்க்கையை அடையாளப்படுத்தி அவர்களை நெறிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்பட்டன அளவால் குறைந்து கற்பனை மிகுதியாக தெய்வங்களையும் செல்வர்களையும் மக்களையும் தலைவர்களாகக் கொண்டு படைக்கப்பட்டவை சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை பன்னிரு பாட்டியல் பச்ச நந்தி மாலை ஆகிய நூல்கள் எடுத்துக் கூறுகின்றன சிற்றிலக்கியங்கள் பிரபந்தங்கள் என்னும் வடமொழிச் சொல்லால் அழைக்கப்படுகின்றன இவற்றை 96 வகையாக அமைப்பர்.

தமிழின் முதல் நூலாம் தொல்காப்பியத்தில் சிற்றிலக்கிய கூறுகள் இடம் பெறுகின்றன அதன்பின் சங்க இலக்கியங்களிலும் சிறப்பாகப் பக்தி இயக்க காலத்திலும் சிற்றிலக்கியத்தின் வளர்ச்சி உயர்ந்த நிலையை அடைந்து நாயக்கர்களின் காலத்தில் சிற்றிலக்கியங்கள் அதிகமாக தோன்றின சிற்றிலக்கியங்களில் அந்தாதி கோவை கலம்பகம் பரணி பிள்ளைத்தமிழ் குறவஞ்சி அம்மானை குறிப்பிடத்தக்கன ஆகும்.

### சிற்றிலக்கியங்களின் வகைகள்:

கோவை, உலா, அந்தாதி, கலம்பகம், தூது, மாலை, பரணி, மடல், பள்ளு, குறம்.

### சிற்றிலக்கியங்களின் சிறப்புகள்:

- கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன.
- காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை ஆகியவற்றைப் பாடியுள்ளார்.
- சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை ஆகிய நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.
- சிற்றிலக்கியங்கள் அகப்பொருள், புறப்பொருள் என இரண்டு வகைப்படும்.

- தூது, கோவை முதலியன அகப்பொருள் சிற்றிலக்கியங்களுக்கும், பிள்ளைத் தமிழ், பரணி போன்றவை புறப்பொருள் சிற்றிலக்கியங்களுக்கும் சான்றுகள் ஆகும்.

**பரணி**

பண்டைத் தமிழ் இலக்கியத்தை அகம், புறம் என்று பிரிப்பர். தமிழர்களின் காதல் வாழ்க்கையைப் பாடுபவை அக இலக்கியங்கள். வீரம், கொடை, மானம் முதலியவற்றைப் பாடுபவை புற இலக்கியங்கள். பரணி புற இலக்கியம். பாட்டுடைத் தலைவனின் வீரமே இந்த இலக்கியத்தின் மையக் கருவாகும்.

**பரணி பெயர்க் காரணம்**

பரணி என்பது நட்சத்திரத்தின் பெயர்; காளியையும் யமனையும் தெய்வங்களாகக் கொண்ட நாள். பரணி நாளில் பிறந்தவன் பெரும் வீரனாவான் என்பதும் நம்பிக்கை. எனவே போர்க்களத்தில் யானைகள் பலவற்றைக் கொன்று, பல உயிர்களையும் யமன் கவர்ந்து கொள்ளுமாறு செய்து, அரசனின் வீரம் வெளிப்பட, போர்க்களத்தில் காளிக்குக் கூழ் சமைத்து வழிபட்ட நிகழ்ச்சிகளைக் கூறுவதால் இந்நூல் பரணி என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். காளிக்கு உரிய நாள் பரணி. காளியைத் தெய்வமாகக் கொண்டு பாடப்படுவதால் இந்நூலுக்குப் பரணி எனப்பெயர் வந்தது என்றும் விளக்கம் கூறுவர்.

**பரணியின் இலக்கணம்**

பரணியின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. இருந்தாலும் 'யானை மறம்' என்ற துறையைச் சுட்டி உள்ளது. யானைகளின் வெற்றியைப் பாடுவது இந்தத் துறை. சங்க இலக்கியங்களில் பரணி இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன. போர்க்களத்து வீர நிகழ்ச்சிகள் - பேய்களின் நிகழ்ச்சிகள் - முதலியவற்றைச் சுட்டலாம்.

**இலக்கண விளக்கம்**

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மாணவனுக்கு வகுப்பது பரணி (இலக்.விள. 839)

(அமர் - போர்; மானவன் - படைவீரன்.)

என்று இலக்கண விளக்கம் கூறியுள்ளது. போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனின் வெற்றியைப் பாடுவதே பரணி - என்பது இதன் பொருள்.

**தூது**

ஒருவர் மற்றொருவரிடத்து மக்களையோ அல்லது அஃறிணைப் பொருள்களையோ தூது அனுப்புவதாக அமைந்த இலக்கியம் ஆகையால் இதற்குத் தூது இலக்கியம் என்ற பெயர் ஏற்பட்டது.

**இலக்கணம்**

பல்வேறு இலக்கிய வகைகளுக்கு உரிய இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் தூது இலக்கியத்தின் இலக்கணத்தையும் கூறுகின்றன. நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கம், முத்து வீரியம், சிதம்பரப் பாட்டியல், இலக்கணச் சுருக்கம் முதலிய பாட்டியல் நூல்களில் தூது இலக்கிய வகையின் இலக்கணத்தைக் காணமுடிகின்றது. பாட்டியல் நூல்கள் கூறும் வகைப்படி தூது இலக்கியம் பின்வருமாறு அமையும்.

1) காதல் துயரம் காரணமாக ஓர் ஆண் அல்லது பெண், தான் காதல் கொண்ட பெண் அல்லது ஆணுக்குத் தூது அனுப்புவதாக அமைவது.

2) உயர்திணையைப்போல் ஓர் அஃறிணைப் பொருளைத் தூது சென்று வருமாறு வேண்டுவது.

3) தூது பெறுவோரிடம் சென்று மாலை வாங்கி வருமாறு தூது அனுப்புவோர், தூது செல்லும் பொருளிடம் வேண்டுவது.

**முதல் தூது நூல்**

தூது இலக்கிய வகையின் முதல் நூல் **நெஞ்சுவிடு தூது** என்ற நூல் ஆகும். இதனை இயற்றியவர் **உமாபதி சிவாச்சாரியர்** ஆவார். இதன் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு. தமது ஞானாசாரியரிடம் சென்று தமது குறைகளை எடுத்துக் கூறுமாறு, உமாபதி சிவாச்சாரியர் தமது நெஞ்சைத் தூது விடுக்கிறார். இந்நூலைத் தொடர்ந்து பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இப்போது முந்நூற்றுக்கும் மேற்பட்ட தூது நூல்கள் உள்ளன.

எல்லாத் தூது நூல்களும் பொதுவாகத் தூது என்ற சொல்லை இறுதியில் பெற்றுள்ளன. சான்றாக **நெஞ்சுவிடு தூது** என்ற நூலைக் கூறலாம். ஆனால் **சோம சுந்தர பாரதியார்** இயற்றிய தூது நூல் மட்டும் **மாரிவாயில்** என்ற பெயரைப் பெற்றுள்ளது. மாரி என்றால் மேகம் என்றும் வாயில் என்றால் தூது என்றும் பொருள்படும். மேகவிடு தூது என்பது இதன் பொருள் ஆகும்.

தூது நூல்கள் பெயர் பெறும் நிலையில் சில முறைகள் உள்ளன.

1)தூது அனுப்பும் பொருளின் பெயரால் பெயர் பெறுகின்றன. சான்றாக, **மான்விடு தூது** என்ற நூலைக் கூறலாம். இதில் தூது செல்வது மான் ஆகும்.

2)சில நூல்கள் தூது பெறும் தலைவன் பெயரையும், தூது செல்லும் பொருளின் பெயரையும் கொண்டு அமைகின்றன. சான்றாக, **மதுரை சொக்கநாதர் தமிழ்விடு தூது** என்ற நூலைக் கூறலாம். இதில் தூது பெறுவோர் இறைவனாகிய **சொக்கநாதர்,** தூது செல்வது **தமிழ்** ஆகும்.இவ்வாறு, தூது நூல்கள் பெயர் பெறும் முறைகளைக் காணலாம்.

**தூது நூல் வகைகள்**

தூது அனுப்புவோர், தூது பெறுவோர் ஆகிய அடிப்படையில் தூது நூல்களை மூன்று வகைகளாகப் பாகுபடுத்தலாம்.

1)ஆடவர் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்

2)ஆடவர் பெண்களுக்குத் தூது அனுப்பும் நூல்கள்

3)பெண்கள் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்

என்று வகைப்படுத்தலாம்.

**தலைவன் பெருமைகள் கூறுதல்**

தூது நூல்களில் தூது பெறும் தலைவன் பெருமைகளை விளக்கிக் கூறும் பகுதி இடம் பெறுகின்றது. இப்பகுதியில் தலைவனின் தசாங்கங்கள் (பத்து உறுப்புகள்), தலைவனின் உறுப்புகளின் சிறப்புகள், தலைவன் இன்னின்னார்க்கு இன்னின்ன உறவுடையவன் என்று கூறும் உறவு முறைகள் போன்ற பல்வேறு பெருமைகள் விளக்கிக் கூறப்படும்.

**குறவஞ்சி**

குறவஞ்சி என்பது குற+வஞ்சி என்று பிரியும். வஞ்சி என்றால் வஞ்சிக்கொடி போன்ற பெண் என்று பொருள். குறவஞ்சி என்பது குறவர் குலத்தில் பிறந்த வஞ்சிக்கொடி போன்ற பெண் என்ற பொருளைத் தரும். இந்த நூலில் குறத்தி குறி கூறுதல், குறத்தி குறவனுடன் உரையாடுதல், குறத்தியின் செயல்கள், குறி வகைகள்

போன்றவை முதன்மை இடம் பெறுவதால் இந்த இலக்கிய வகை குறவஞ்சி என்ற பெயரைப் பெற்றுள்ளது என்று விளக்கம் அளிப்பர்.

**இடத்தின் பெயரால் பெயர் பெறுதல்**

பாட்டுடைத் தலைவனின் ஊர்ப் பெயரால் சில நூல்கள் பெயர் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகத் **திருக்குற்றாலக் குறவஞ்சியைக்** கூறலாம். இந்நூலில் பாட்டுடைத் தலைவன் **குற்றால நாதர்**. அவர் எழுந்தருளியுள்ள இடம் **திருக்குற்றாலம்**. எனவே, இந்த இடத்தின் பெயரால் இந்த நூல் பெயர்

பெற்றுள்ளது.

### பாட்டுடைத் தலைவன் பெயரால் பெயர் பெறுதல்

குறவஞ்சி நூல்கள் பாட்டுடைத் தலைவனின் பெயரால் பெயர் பெறும் நிலையைக் காணலாம். எடுத்துக்காட்டாகத் **தியாகேசர் குறவஞ்சி**யைக் கூறலாம். இந்நூலின் பாட்டுடைத் தலைவன் இறைவன் ஆகிய **தியாகேசர்** ஆவர்.

### இடம், தலைவன் பெயர் இரண்டாலும் பெயர் பெறுதல்

குறவஞ்சி நூல்கள் பாட்டுடைத் தலைவனின் இடத்தின் பெயர், பாட்டுடைத் தலைவனின் பெயர் ஆகிய இரண்டினையும் பெற்றுப் பெயர் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகத் **தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சியைக்** கூறலாம். இந்த நூலில் பாட்டுடைத் தலைவர் பெயர் **வெள்ளைப் பிள்ளையார்**. அவர் எழுந்தருளியுள்ள இடம் தஞ்சாவூர் எனப்படும் **தஞ்சை** ஆகும். எனவே இந்நூல் இவ்வாறு பெயர் பெற்றுள்ளது.

### தலைவியின் பெயரால் பெயர் பெறுதல்

குறவஞ்சி நூல்கள் தலைவியின் பெயராலும் பெயர் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. எடுத்துக்காட்டாகத் **தமிழரசி குறவஞ்சியைக்** கூறலாம். இந்த நூலின் தலைவியின்பெயர் **தமிழரசி** ஆகும்.

### குறத்தியின் பெயரால் பெயர் பெறுதல்

சில நூல்கள் குறத்தியின் பெயரால் பெயர் பெற்றுள்ளதையும் அறிய முடிகின்றது. எடுத்துக்காட்டாகத் **துரோபதைக் குறவஞ்சியைக்** கூறலாம். இந்த நூலில் இடம்பெறும் குறத்தியின் பெயர் **துரோபதை** ஆகும்.

### பள்ளு

பள்ளர்களின் வாழ்க்கையை விளக்கிக் கூறும் இலக்கியம் ஆதலால் இதற்குப் பள்ளு என்ற பெயர் ஏற்பட்டது. பள்ளர்கள் என்போர் யாவர்? உழவுத் தொழில்

செய்யும் மக்கள் பள்ளர்கள் ஆவர். இவர்களில் பெண்கள் பள்ளியர், பள்ளத்தியர் என அழைக்கப்படுவர். எனவே, வயல்களில் உழவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியம் எனலாம்.

### சிலப்பதிகாரத்தில் உழவர் பாடல்கள்

**சிலப்பதிகாரம்** மருத நில மக்கள் வாழ்க்கையை, அதாவது வயலும் வயலைச் சார்ந்த இடத்திலும் உள்ள மக்களின் வாழ்க்கையைக் கூறுவதைக் காணமுடிகின்றது. அப்போது இளங்கோவடிகள் **ஏர் மங்கலம், முகவைப் பாட்டு** என்பனவற்றைக் குறிப்பிடுகின்றார். (நாடுகாண் காதை, 125 :134- 137)

ஏர்மங்கலம் என்பது யாது? முதன் முதலாக ஒரு நல்ல நாளில் ஏரைப் பூட்டி உழத் தொடங்குவதைப் **பொன்னேர் பூட்டல்** என்பர். இவ்வாறு, பொன் ஏர் பூட்டி நின்ற உழவர்கள் தம் உழவுக் கருவியாகிய ஏரை வாழ்த்தி, நன்கு விளையுமாறு வேண்டிப் பாடும் பாட்டு **ஏர் மங்கலம்** எனப்படும்.

அடுத்து, முகவைப் பாட்டு என்பது பற்றிப் பார்ப்போம். வயல்களில் நெற் பயிர்கள் நன்றாக விளைந்த பின்பு அவற்றை உழவர்கள் அறுப்பர். அவற்றை வீட்டிற்குச் சுமந்து வந்து பரப்பி, மாடுகளால் மிதிக்கச் செய்து நெல்லையும் வைக்கோலையும் பிரிப்பர். அப்போது பாடும் பாட்டு **முகவைப் பாட்டு** எனப்படும். எனவே, சிலப்பதிகாரம் காட்டும் ஏர் மங்கலம், முகவைப் பாட்டு என்பன உழவர்களின் வாழ்க்கையையே காட்டுகின்றன எனலாம்.

**பள்ளு இலக்கியத்தின் தோற்றம்**

உழவர்கள் பற்றிய செய்திகளும், **உழத்திப்பாட்டு** முதலிய வழக்காறுகளும், பாட்டும் கூத்துமாக அமைந்துள்ள பள்ளு என்ற சிற்றிலக்கிய வகை தோன்ற வழி செய்திருக்கலாம். பழங்காலத்தில் உழவுத் தொழிலில் ஈடுபட்ட பள்ளர், பள்ளியர்களின் வாழ்க்கையை ஒட்டிய கூத்து வகைகள் பாட்டும் தாளமும் பொருந்தச் சாதாரண மக்களால் விரும்பி ஆடப்பட்டு வந்தன. இந்த ஆட்டங்களையும் பாடல்களையும் கவனித்து மகிழ்ந்த புலவர்கள் அவற்றை இலக்கியமாகப் படைக்க வேண்டும் என்று விரும்பியிருக்கலாம். அதன் விளைவாகவே பள்ளு இலக்கியம் தோன்றியது என்றும் கருதுவர்.

இவ்வகையில், பள்ளு இலக்கியத்தின் முதல் நூலாக முக்கூடற்பள்ளு என்ற நூல் அமைகின்றது. இந்நூல் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது என்பர். அதன் பின்னர் ஞானப்பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, குருகூர்ப் பள்ளு, சிவசயிலப் பள்ளு, வைசியப்பள்ளு, வடகரைப் பள்ளு, திருமலை முருகன் பள்ளு, சீகாழிப் பள்ளு, செண்பகராமன் பள்ளு, தில்லைப் பள்ளு, வையாபுரிப் பள்ளு, கண்ணுடை அம்மை பள்ளு, திருப்புன வாயிற் பள்ளு, கதிரை மலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, குற்றாலப் பள்ளு, திருச்செந்தில் பள்ளு, போரூர்ப் பள்ளு, இருப்புலிப் பள்ளு, திருவிடை மருதூர்ப் பள்ளு, புதுவைப் பள்ளு போன்ற பல நூல்கள் தோன்றின.

**இலக்கணம்**

பல்வேறு சிற்றிலக்கிய வகைகளுக்கு உரிய இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. ஆனால், இப்பாட்டியல் நூல்களில் பள்ளு என்ற சிற்றிலக்கிய வகையின் இலக்கணம் காணப்படவில்லை. ஆனால், **நவநீதப் பாட்டியலில்** பிற்காலத்தில் சேர்க்கப்பெற்றுள்ள பல பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நான்கு பாடல்களில் **உழத்திப் பாட்டு** என்றால் என்ன என்று விளக்கப்படுகின்றது. உழத்திப் பாட்டைக் குறிப்பிட்டுவிட்டு இதைப் பள்ளும் என்பர் எனக் கூறுகின்றன.

வீரமாமுனிவர் இயற்றிய **சதுரகராதியில்** தொகை அகராதி என்ற பிரிவில் சிற்றிலக்கிய வகைகள் பலவற்றின் விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் உழத்திப் பாட்டு என்பதன் விளக்கமும் உள்ளது.

**வேறு பெயர்கள்**

பள்ளு என்ற இலக்கிய வகைக்குப் **பள்ளு நாடகம், பள்ளு மூவகைத்தமிழ், பள்ளேசல், பள்ளிசை** என்ற பெயர்களும் காணப்படுகின்றன. இப்பெயர்களால் பள்ளு என்ற இலக்கிய வகை நடித்தற்கு உரியது; பாடுவதற்கு உரியது; இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் உரியது என்பன தெரிய வருகின்றன.

**கலம்பகம்**

கலம்பகம் என்பதற்குக் கலவை என்ற பொருளும் உண்டு. சங்க நூல்களில் ஒன்று பெரும்பாணாற்றுப்படை. இந்நூலில்,

***பல்பூ மிடைந்த படலைக் கண்ணி (174)***

(**பல்** = பல; **பூ** = பூக்கள்; **மிடைந்து** = கலந்து)

என்று ஓர் அடி வருகின்றது. இதற்கு, பலவாகிய பூக்கள் கலந்து கட்டப்பட்ட கலம்பக மாலை என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுகின்றார். பல பூக்களைக் கலந்து கட்டிய மாலை. ஆகையால் கலம்பக மாலை என்கிறார்.

இப்பொழுது நாம் பல வகையான பூக்களைச் சேர்த்துக் கட்டிய மாலையைக் கதம்பம் என்கிறோம். இதுவே கலம்பகம் என்று வழங்கப்பட்டது எனலாம்.

பல்வேறு பூக்களால் ஆன மாலை கலம்பகம் எனப்படுகிறது. அதுபோலப் பல்வேறு உறுப்புக்களைக் கலந்து இயற்றிய நூல் கலம்பகம் என்று அழைக்கப்படுகின்றது எனலாம். **நவநீதப் பாட்டியல், *கலந்து பாடுவது கலம்பகம்*** என்கின்றது.

**கலம்பகம் - சொல் அமைப்பு**

கலம்பகம் என்ற சொல் இரண்டு சொற்களின் கூட்டு ஆகும். கலம்பு + அகம் = கலம்பகம் என்றும், கலம் + பகம் = கலம்பகம் என்றும் இந்தச் சொல்லைப் பிரிக்கலாம். பல்வேறு வகையான உறுப்புகள் இந்த இலக்கிய வகையில் அகத்தே - உள்ளே - கலந்து வருவதால் கலம்பகம் என்று அழைக்கப்படுகின்றது.

கலம் என்றால் 12 என்று பொருள். பகம் என்றால் பகுதி அல்லது பாதி என்று பொருள். இங்கும் பன்னிரண்டின் பகுதி ஆறு ஆகும். எனவே, 12 + 6 = 18. இந்த இலக்கிய வகையில் 18 உறுப்புகள் கலந்து வருவதால் கலம்பகம் என்று பெயர் பெறுகின்றது எனலாம்.

**தோற்றமும் வளர்ச்சியும்**

கலம்பக இலக்கிய வகையின் உறுப்புகள் பல **தொல்காப்பியத்தில்** இடம் பெறக் காணலாம். அம்மானை, ஊசல், காலம், வண்டு, கைக்கிளை, பாண், தழை, இரங்கல், குறம், தூது என்ற கலம்பக உறுப்புகள் தொல்காப்பிய அகத்துறை சார்ந்தவை ஆகும். இனி, மறம், புயம் என்பன தொல்காப்பியப் புறத்துறை சார்ந்தவை ஆகும். இவை பற்றிப் பின்னால் காணலாம். இவ்வாறு, தொல்காப்பிய அகத் துறையிலும் பாடிய நிலையில் கலம்பகம் என்ற இலக்கிய வகை தோன்றியது எனலாம்.

**முதல் நூல்**

கலம்பக இலக்கிய வகையின் முதல் நூல் **நந்திக்கலம்பகம்** ஆகும். இந்நூலின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. இந்த நூலின் பாட்டுடைத் தலைவன் **மூன்றாம் நந்திவர்மன்** என்ற மன்னன் ஆவான். இந்த நூலைத் தொடர்ந்து பல கலம்பக நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

**உறுப்புகள்**

கலம்பக இலக்கிய வகையின் இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் **பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், பிரபந்த தீபிகை** ஆகிய பாட்டியல் நூல்கள் பதினெட்டு உறுப்புகளைச் சுட்டுகின்றன. ஆனால், இந்த உறுப்புகளிடையே வேறுபாடுகளும் காணப்படுகின்றன. எனவே, அவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் கலம்பக உறுப்புகள் **புயம், அம்மானை, ஊசல், களி, மறம், சித்து, காலம், மதங்கி, வண்டு, மேகம், சம்பிரதம், தவம், பாண், கைக்கிளை, ஊர், தழை, இரங்கல், தூது, குறம், தென்றல்** என்ற **இருபது** என்பது தெரிய வருகின்றது.

**பதினெட்டுக்கும் குறைவான உறுப்புகள்**

பொதுவாகக் கலம்பக உறுப்புகள் பதினெட்டு என்று கூறப்படும் நிலை உள்ளது. சில நூல்களில் பதினெட்டுக்கும் அதிகமான உறுப்புகள் காணப்படுகின்றன. இதைப் போன்றே சில கலம்பக நூல்களில் பதினெட்டுக்கும் குறைவான உறுப்புகள் இடம் பெறக் காணலாம். சான்றுகளாக **ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், தில்லைக் கலம்பகம்** என்பனவற்றைக் கூறலாம்.

**சிறப்புகள்**

கலம்பகம் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. எனினும் அது பல சிறப்புகளைக் கொண்டதாகத் திகழ்கின்றது. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

கலம்பக இலக்கியத்தில் பல்வேறு உறுப்புகள் கலந்து வருவதால் அது பல்சுவை உடையதாக விளங்குகின்றது.

கலம்பகம் வேறு சில சிற்றிலக்கிய வகைகளின் கூறுகளையும் உள்ளடக்கியதாக விளங்குகிறது. சான்றாகக் கலம்பக நூலில் தூது,

சமுதாயத்தில் வாழ்கின்ற சாதாரண மக்களைப் பற்றிய உறுப்புகளையும் கலம்பகம் கொண்டுள்ளது. சான்றாக மதங்கியார், இடைச்சியார், வலைச்சியார் ஆகிய உறுப்புகளைக் கூறலாம்.

கலம்பகம் நாட்டுப்புற இலக்கியக் கூறுகளும் புலமை இலக்கியக் கூறுகளும் கலந்த கலவையாக உள்ளது.

கலம்பக நூல்கள் சில வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்தக் காணலாம். எடுத்துக்காட்டு - நந்திக்கலம்பகம்.

கலம்பகம் அகப்பொருளும் புறப்பொருளும் கலந்த கலவையாகவும் உள்ளது.

பல சமயப் புலவர்களாலும் பாடப்பட்ட சிறப்புடையதாய் விளங்குகின்றது.

**பிள்ளைத்தமிழ்**

இச்சிற்றிலக்கிய வகையினைத் தோற்றுவித்தவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான பெரியாழ்வாரே ஆவார். இவர் கண்ணனைக் குழந்தையாக எண்ணித் தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார். பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி என இவரைக் கூறலாம். இது **பிள்ளைப் பாட்டு** எனவும் **பிள்ளைக் கவி** எனவும் வழங்கப்படும்.

**பிள்ளைத் தமிழ் வரலாறு**

கி.பி.12ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தரால் இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது பாடப்பட்டுள்ள **குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே**. முதல் பிள்ளைத் தமிழ் நூலாகும். இது சோழர்களின் வரலாற்றைக் கூறும் சிறந்த இலக்கியமாகும்.

கி.பி.17 ஆம் நூற்றாண்டில் குமரகுருபரர் பாடிய **மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்** ஆகிய இரண்டும் பக்தி இலக்கிய வரலாற்றில் பெரும் புகழ் படைத்தவை. கி.பி.18ஆம் நூற்றாண்டில் பகழிக் கூத்தர் எழுதிய **திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்** சிறப்புடையது. சொற்சுவை, பொருட்சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய சுவைகள் ஒரு சேர அமையப் பெற்ற நூலாக இந்நூல் உள்ளது.

19ஆம் நூற்றாண்டில் அழகிய சொக்கநாதர் பாடிய **காந்திமதியம்மைபிள்ளைத் தமிழ்**, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய **சேக்கிழார் பிள்ளைத் தமிழ்** ஆகியவை சிறப்பானவை. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் அவர்கள் பத்துப்பிள்ளைத் தமிழ் நூல்களைப் படைத்த பெருமைக்குரியவர்.

சிவஞான சுவாமிகள் எழுதிய **அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்**, அருணாசலக் கவிராயர் எழுதிய **அனுமார் பிள்ளைத் தமிழ்** ஆகியவற்றோடு **செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ், சுந்தரர் பிள்ளைத் தமிழ்,**

**மாணிக்கவாசகர் பிள்ளைத் தமிழ்** போன்ற பிள்ளைத் தமிழ் நூல்களும் பிற்காலத்தில் தோன்றியுள்ளன.

தற்காலத்தில் **பாவேந்தர் பிள்ளைத் தமிழ், மறைமலை அடிகள் பிள்ளைத் தமிழ், காமராசர் பிள்ளைத் தமிழ், பெரியார் பிள்ளைத் தமிழ், கலைஞர் பிள்ளைத் தமிழ், எம்.ஜி.ஆர். பிள்ளைத் தமிழ்** போன்றவை தோன்றியுள்ளன. சிற்றிலக்கிய வகைகளில் மிகுதியான இலக்கியங்கள் பிள்ளைத் தமிழிலேயே தோன்றியுள்ளன.

**பிள்ளைத் தமிழ் இலக்கணம்**

புலவர்கள் தாம் விரும்பும் தெய்வத்தையோ, அரசனையோ, தலைவனையோ, வள்ளலையோ, சான்றோரையோ குழந்தையாகப் பாவித்துப் பாடுவது **பிள்ளைத் தமிழ்** எனப்படும். இது குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் 21ஆம் மாதம் வரை ஒரு பருவத்திற்கு இரண்டு திங்கள் என வகுத்துக் கொண்டு பத்துப் பருவங்களில் வைத்துப் பாடப்படுவதாகும். இதில் ஒரு பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் பத்துப் பருவங்களுக்கு மொத்தம் 100 பாடல்கள் பாடப்படும். இவ்விலக்கியம் **ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ்** என இரண்டு வகைப்படும். **வெண்பாப் பாட்டியல்** (செய்யுளியல் 7ஆவது பாடலின்) மூலம் **காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர்** எனப் பத்துப் பருவங்களை உடையது **பிள்ளைத் தமிழ்** என்பதை அறிய முடிகிறது. இதில் முதல் ஏழு பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத்

தமிழுக்கும், பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவாகும். கடைசி மூன்று பருவங்களான சிறுபறை, சிற்றில், சிறுதேர் ஆகியன ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரியன. இம்மூன்று பருவங்களுக்குப் பதிலாக, **கழங்கு, அம்மானை, ஊசல்** என்ற மூன்று பருவங்களைப் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குச் சேர்த்துக் கூறுவது மரபு.

### அந்தாதி

**பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல்** போன்ற இலக்கண நூல்கள் சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் வகுக்கின்றன. அந்தத்தை ஆதியாக வைத்துப் பாடுவது **அந்தாதி.** முன் பாடப்பட்ட பாடலின் ஈற்றில் உள்ள அடியோ, சீரோ, அசையோ, எழுத்தோ அடுத்த செய்யுளின் முதலாக அமையப் பாடுவது அந்தாதியாகும். அந்தம் (இறுதி) ஆதியாக (முதலாக) வருவதால் இப்பெயர் பெற்றது.

### பதினெண் சித்தர்கள்

செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற
சித்தர் பிறந்த தமிழ்நாடு

எனச் சித்தர்களின் பெருமையைப் பாராட்டுகின்றார் பாரதியார். சித்தர்கள் மரண பயத்தை வென்றவர்கள் ஆவர். இவர்களால் எதையும் சாதிக்க முடியும். நீரினுள் இருப்பர், நெருப்பினுள் அமர்வர், கூடு விட்டுக் கூடு பாய்வர், அந்தரத்தே (வான்வழியே) செல்லக் கூடியவர்கள். சித்தர்கள் யோகத்தின் மூலமும் தியானத்தின் மூலமும் புத்தியைக் கட்டுப்படுத்துபவர்கள். ஆன்மிகம் தழைக்கவும், மக்களின் ஆரோக்கியம் செழிக்கவும், சித்தர்கள் முக்கியப் பங்காற்றியவர்கள். அவர்கள் தத்துவ நெறியிலும், மருத்துவத் துறையிலும் மிகுதியான பல நூல்களைச் செய்துள்ளனர். இவர்கள் கடவுள் நிலை பெற்றவர்கள். கடவுளுக்குச் சமமாய்ப் போற்றி வணங்கப்பட்டனர்.

சித்தர் என்ற சொல் சித்தியில் இருந்து வந்தது. ஆன்மிகத்திலும், அறிவியல் சாதனைகளிலும் முழுமையுற்ற நிலைதான் சித்தி. சித்தி பெற்றவர் சித்தர். இவர்களைச் சமய, சமுதாயத்தின் ஆன்மிகப் புரட்சியாளர்கள் என்றும் அறிவியலின் முன்னோடிகள் என்றும் கூறுவர்.

- சித்தர்கள், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய யோகாங்கங்களைப் பயின்றனர்.
- சித்தர்கள், நீரினுள் இருப்பர், நெருப்பினுள் அமர்வர், கூடு விட்டுக் கூடு பாய்வர், அந்தரத்தே (வான்வழியே) செல்லக் கூடியவர்கள்.
- சித்தர்கள், தமிழில் பேசினர், தமிழில் பாடல்கள் எழுதினர்.

- சித்தர்கள், ஆன்மிகம் தழைக்கவும், மக்களின் ஆரோக்கியம் செழிக்கவும் முக்கியப் பங்காற்றினர்.
- சித்தர்கள், தியானப் பயிற்சியின் உச்சத்தில் சீவன் சிவனோடு கலந்து அடையும் பேரானந்த நிலையை அடைந்தனர்.
- சித்தர்கள், கைவரப் பெற்றவர்கள்.

பதினெண் சித்தர்கள் என்று கூறுவது பழமையான வழக்காகும். ஆனால் இதில் ஒரு சிக்கல் உள்ளது. பதினெட்டு என்னும் எண்ணிக்கையோடு சித்தர் பட்டியல்கள் பல உள்ளன. இதில் எது சரியானது என்று தீர்மானிக்க முடியவில்லை. எடுத்துக்காட்டாக, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி (Lexicon) தரும் பட்டியல் "திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டி, சட்டைமுனி, சுந்தரானந்த தேவர், குதம்பைச் சித்தர், கோரக்கர் என்ற பதினெட்டுச் சித்த புருஷர்கள்." நவநாத சித்தர்கள் என்று மற்றொரு குழுவினரும் உண்டு. காலப்போக்கில் மேலும் பலர் சேர்க்கப்பட்டு, இன்று எண்ணிலடங்காச் சித்தர்கள் உள்ளனர். சான்றாகச் சிவவாக்கியர், வாலைச்சாமி, பட்டினத்தார், இராமலிங்க அடிகள், மச்சமுனி முதலான பலர்.

**பதினெண் சித்தர்கள்** என்று கூறுவது பழமையான வழக்காகும். ஆனால் இதில் ஒரு சிக்கல் உள்ளது. பதினெட்டு என்னும் எண்ணிக்கையோடு சித்தர் பட்டியல்கள் பல உள்ளன. இதில் எது சரியானது என்று தீர்மானிக்க முடியவில்லை. எடுத்துக்காட்டாக, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி (Lexicon) தரும் பட்டியல் "**திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டி, சட்டைமுனி, சுந்தரானந்த தேவர், குதம்பைச் சித்தர், கோரக்கர்** என்ற பதினெட்டுச் சித்த புருஷர்கள்." **நவநாத சித்தர்கள்** என்று மற்றொரு குழுவினரும் உண்டு. காலப்போக்கில் மேலும் பலர் சேர்க்கப்பட்டு, இன்று எண்ணிலடங்காச் சித்தர்கள் உள்ளனர். சான்றாகச் சிவவாக்கியர், வாலைச்சாமி, பட்டினத்தார், இராமலிங்க அடிகள், மச்சமுனி முதலான பலர்.

**பதினெண் சித்தர்கள் :**

- நந்தீசர்
- அகத்தியர்
- திருமூலர்
- புண்ணாக்கீசர்
- புலத்தியர்

- பூனைக்கண்ணர்
- போகர்
- கருவூரார்
- கொங்கணவர்
- காலாங்கி நாதர்
- பாம்பாட்டிச் சித்தர்
- தேரையர்
- குதம்பைச் சித்தர்
- இடைக்காடர்
- சட்டை முனி
- அழுகண் சித்தர் (அழுகுணிச் சித்தர் என்றும் குறிப்பிடுவர்.)
- அகப்பேய்ச் சித்தர்
- தன்வந்திரி

நந்தீசர்

நந்தீசர் கயிலாய பரம்பரையைச் சார்ந்தவர். சிவகணங்களில் ஒருவரான நந்தீசர், கயிலாயத்தின் காவலர் எனப் புராணங்கள் கூறும். சித்தர்கள் மரபு தோன்றுவதற்கு இவர் காரணமானவர். இவர் திருமூலர், பதஞ்சலி, வியாக்ரமர், சிவயோகி ஆகியோர்க்கு உபதேசம் செய்து சித்தர் மரபு தோன்றக் காரணமாக விளங்கியவர். அகத்தியர், போகர் போன்றோர் நந்தீசரைத் தம் பாடல்களில் குறிக்கின்றனர். வைத்திய, யோக, ஞானக் கலைகளில் சிறந்து விளங்கி, தாம் இயற்றிய நூல்களைத் தமது மாணாக்கர்கள் மூலம் உலகெங்கும் பரவும்படி செய்தார்.

**அகத்தியர்**

அகத்தியர் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், சமய, சமுதாயத் தொண்டாற்றியதிலும் முன்னோடியாகத் திகழ்பவர் ஆவார். அகத்தியர் என்னும் பெயரில் தமிழுலகில் மட்டும் ஏறத்தாழ 37 அகத்தியர்கள் இருந்துள்ளதாகத் தமிழ் இலக்கிய வரலாற்றின் மூலமாக அறிய முடிகின்றது. தமிழ் இலக்கணத்தில் முதன்முதலில் ஐந்திலக்கணங்களையும் தொகுத்து அகத்தியம் என்னும் நூலைத் தந்தவர்; வாதாபி, வில்வலன் என்னும் இரு அரக்கர்களை அழித்தவர்; விந்திய மலையின் கர்வத்தை அடக்கியவர் எனப் பல கதைகள் இவரைப் பற்றிப் பேசப்படுகின்றன. இவர் முருகப் பெருமானிடம் இருந்து ஞான உபதேசம் பெற்றவர். இவரைக் கும்பமுனி, குருமுனி, பொதிகை முனி, தமிழ் முனி, குட முனி என்று பல பெயர்களால் சிறப்பித்துக் கூறுவர். அகத்தியரின் பன்னிரு மாணாக்கருள் புலஸ்தியர், தேரையர், தொல்காப்பியர் குறிப்பிடத்தக்கவர்கள். தொல்காப்பியம் இயற்றிய தொல்காப்பியர் இவருடைய மாணவர்களில் ஒருவர் என்றும் கூறுவார்கள்.

அகத்தியரிடம் இருந்தே ஒரு சித்தர் மரபு தொடங்கியது எனலாம். அகத்தியர் மருத்துவம், ஞானம், நாடி சாஸ்திரம், சோதிடம், யோகம், மந்திரம் போன்ற பல துறைகளில் பல நூல்களைப் படைத்துள்ளார் என்பர். அகத்தியர் பரிபூரணம்,ஞான காவியம்,வாத காவியம் 1000,வைத்திய காவியம் 1500 என்பன போன்ற பல நூல்கள் இவர் பெயரில் கிடைக்கின்றன.

**திருமூலர்**

இவர் கைலாய பரம்பரையைச் சேர்ந்தவர். சித்தர் மரபில் இவரே முதல் சித்தர் எனக் கருதப்படுகின்றார். கைலாயத்தில் நந்தியின் உபதேசம் பெற்றவர். கைலாயத்தில் இருந்து பொதிகைக்கு வரும்போது திருவாவடுதுறையில் பசுக்களின் துயரினை நீக்க, மூலரின் உடலில் புகுந்து வாழ்ந்தவர்.

நந்தி அருளாலே மூலனை நாடினோம் (திருமந்திரம்-169)

என்ற பாடல் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம். இவர் மூலனின் உடலில் இருந்தமையால் திருமூலர் எனப் பெயர் பெற்றார் என்பர். இவருக்குச் சுந்தரர் என்ற பெயரும் இருந்துள்ளது. இவர் நெடுங்காலம் தவத்தில் இருந்து ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடினார் என்பர்.

இவர் காலம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு. இவர் சீடர்களில் காலாங்கியும், கஞ்சமலைச் சித்தரும் இன்றியமையாதவர்கள். இவரது சமாதி சிதம்பரத்தில் உள்ளதாகக் குறிப்பிடுகிறார், போகர் என்னும் சித்தர்.

திருமூலர் இயற்றியவை : திருமந்திரம், வைத்தியம் ஆயிரம், கருக்கிடை வைத்தியம் 600, பெருங்காவியம் 1600 என்பனவாகும். திருமந்திரம், யோகத்தின் படிநிலைகளையும், சித்தாந்த வேதாந்தக் கருத்துகள், மந்திர, தந்திர முறைகளையும் விளக்கியமைக்கிறது. திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவரைப் பற்றி, திருத்தொண்டர் புராணம், திருத்தொண்டர் திருவந்தாதி, சதுரகிரித் தலபுராணம் போன்ற நூல்கள் குறிப்பிடும்.

**புண்ணாக்கீசர்**

காயகல்பம் உண்டு, அதிக ஆண்டுகள் இருந்து, பல சித்துக்களைச் செய்தவர். இவர் பாம்பாட்டிச் சித்தரின் சீடர் என்பர். இவர் கேரளத்தில் உள்ள நாங்குணாசேரி என்ற ஊரில் சமாதி பெற்றார் என்பதாகப் போகர் கூறுகிறார். மூப்பு, சுண்ண செய்நீர், ஞானப்பால், மெய்ஞ்ஞானம், யோகப் பாடல் போன்றன இவர் நூல்களாம். இவரது சீடர் மச்ச முனி.

**புலஸ்தியர்**

அகத்தியரின் முதல் மாணாக்கராக விளங்கியவர். இவர் சிவராச யோகி என்ற பெயரும் பெற்றவர். புலம் என்றால் தவம். இவர் தவத்தினால் புகழ் பெற்றவர் ஆதலால் இப்பெயர் பெற்றார் என அபிதான சிந்தாமணி நூல் குறிப்பிடுவதன் மூலம் உணரலாம். இவரே முதலில் புராணங்களை வெளிப்படுத்தியவர் என்பர். இவரது சமாதி, பொதிகை மலைச்சாரலில் பாபநாசத்தில் இருப்பதாகக் கூறுவர்.

**இவர் இயற்றிய நூல்கள் :**

வைத்திய வாதம் 1000,வாத சூத்திரம் 300,கற்ப சூத்திரம் 300,ஞான சூத்திரம்,வைத்திய 100,வாதம் 100,உழலைச் சுருக்கம் 13 என்பனவாம்.

**பூனைக்கண்ணர்**

கண்களின் நிறம் மாறுபட்டிருந்ததால் பூனைக்கண்ணன் என்றழைக்கப்பட்டார் என்பர். இவர் எகிப்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து வைத்திய யோக ஞான சாஸ்திரங்களைக் கற்று, பின்பு எகிப்து நாட்டிற்குச் சென்று அறப்பணிகளைப் புரிந்தார் எனக் கூறப்படுகிறது. இவரைப் பற்றிய செய்திகள் அதிகமாகக் கிடைக்கவில்லை.

**போகர்**

இவர் காலாங்கி நாதரின் சீடராவார். இவர் தமிழ்நாட்டில் பிறந்து பிறகு சீனதேசத்தில் பல காலம் வாழ்ந்து, பிறகு மீண்டும் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வந்து பழநியில் வசித்தவர். சீனத்திலிருந்து திரும்பும்போது இவருடன் வந்த சித்தரே புலிப்பாணி ஆவார்.

சீனத்தில் இவர் போ-யாங் என்ற பெயரில் அழைக்கப்பட்டார். இப்பெயரே போயர் என்றழைக்கப்பட்டு, பின்னர் போகர் என மருவியிருக்கலாம். இவர் சிங்கம், பூனை, பசுவிற்கு உபதேசம் தந்தவர் என்ற கதைகளும் வழங்கப்படுகின்றது. இவருடைய வாழ்க்கைக் குறிப்புகளைப் போகர் ஏழாயிரத்தில் போகரே (தன்னைப் பற்றிப்) பல இடங்களில் குறித்துள்ளார்.

கொங்கணவர், சட்டை முனி, இடைக்காடர், கருவூரார், சுந்தரானந்தர், மச்சமுனி, புலிப்பாணி, கமலமுனி போன்றோர் இவருக்குச் சீடராக விளங்கியவர்கள். பழநியில் உள்ள தண்டபாணி சிலையை நவபாஷாணக் கட்டால் அமைத்துக் கோயிலில் பிரதிஷ்டை செய்தவர் போகரே. போகரின் சமாதி இன்றும் பழநியில் தண்டபாணி சந்நிதிக்குப் பின்புறம் உள்ளது. இவர் காலம் பதினாறாம் நூற்றாண்டு என்றும், ஒரு சிலர் ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.

**நூல்கள் :**

போகர் ஏழாயிரம், போகர் 12000, சப்த காண்டம், நிகண்டு, ஜெனன சாகரம், கற்ப சூத்திரம், வைத்திய சூத்திரம், முப்பு சூத்திரம், ஞான சூத்திரம், அட்டாங்க யோகம், பூஜா விதி, கற்பம் 360, இரண வாகடம் 100 முதலான பல்வேறு நூல்களையும் இயற்றியவர்.

மூலிகைகளின் வேர், தண்டு, இலை, பூ, கால், கொட்டை இவைகளின் தனித் தன்மைகளைத் தனித் தனியாக ஆராய்ந்து, வேதியியல் பண்புகளை விரித்து, போகர் நிகண்டு, போகர் கற்பம் 300 போன்ற நூல்கள் அமைகின்றன.

பல சித்தர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பும், வாழ்க்கை நிகழ்வுகளும் பற்றிப் பேசும் போகர் ஏழாயிரம் பல சித்தர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வழி வகுக்கின்றது.

**கருவூரார்**

கொங்கு மண்டலத்தில் கருவூரில் பிறந்தவர். அதனாலேயே கருவூர்த் தேவர் என அழைக்கப்பட்டார். கொங்கு மண்டல சதகம் என்னும் நூலில் கொங்கு நாட்டில் வாழ்ந்த சித்தர்களின் வரிசையில் இவரைப் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் கருவூரான் சித்தர், கருவூரனார் தேவர் என்னும் பெயரில் இருவர் இடம் பெறுகின்றனர். ஒன்பதாம் திருமுறையில் உள்ள திருவிசைப்பா பாடல்களையும், சித்தர் பாடல்களையும் ஒப்ப வைத்து நோக்கினால் இருவரும் ஒருவர் அல்லர், வெவ்வேறானர் என்பதை அறியலாம். நெல்லைத் தலபுராணம், கருவூர்த் தலபுராணங்களில் இவர் பற்றிய செய்திகளை அறியலாம். கருவூர்த் தலபுராணம் இவரை அகத்தியரோடு இணைத்துக் கூறுகிறது. எனினும் பல அகத்தியர்கள் இருந்ததாக எண்ணப்படுவதால் இவரின் காலத்தை அறிவது கடினமே.

செம்பு, பித்தளை உலோகங்களைக் கொண்டு தொழில் செய்யும் குலத்தைச் சேர்ந்தவர் என்றும், இவரது பெற்றோர் ஊர் ஊராகச் சென்று கோயில்களில் பஞ்சலோகச் சிலைகளை அமைக்கும் தொழிலினை மேற்கொண்டனர் என்றும் 'அகத்தியர் தமது 12000 என்னும் பெருநூல் காவியம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். தஞ்சையில் சோழ மன்னன் பெரிய ஆலயம் ஒன்றினை உருவாக்க எண்ணினான். பல அழகிய வேலைப்பாடுகள் கொண்ட சிலைகள், தூண்கள் உருவாக்கிய சிற்பிகளால் சிவலிங்கத்தை உருவாக்க முடியாமல் போனது. இதனை அறிந்த போகர், காகத்தின் காலில் ஓலை கட்டியனுப்பிக் கருவூராரைத் தஞ்சைக்கு வரவழைத்தார். கருவூரார் வந்து சிவலிங்கத்தை நிறுத்தச் செய்தார் என, கொங்கணவர் வாத காவியம் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது. தஞ்சை ஆலயத்தில் கருவூரார்சிலை இன்றும் உள்ளது. கருவூரார் வாத இலக்கியம்,

வைத்தியம் 500, யோக ஞானம் 500, பல திரட்டு, குருநூல் சூத்திரம், பூரண ஞானம், பூஜா விதி, கற்ப விதி, மெய்ச் சுருக்கம் போன்றவை இவர் இயற்றிய நூல்களாம். இவர் திருக்காளத்தியில் சமாதியடைந்து அருள்புரிந்து வருவதாகக் கூறுவர்.

**கொங்கணவர்**

மேலைக் கடற்கரை கொங்கண தேசத்தவர் . வேட்டுவ குலத்தில் பிறந்தவர். போகரின் மாணாக்கர். இவர் தவத்தில் ஆழ்ந்திருக்கும்போது, மரக்கிளையில் இருந்த கொக்கு எச்சமிட, அதனால் தவம் கலைந்து, கோபமுடன் சித்தர் நோக்க, கொக்கு எரிந்து சாம்பலானது . பிறகு, நீண்டநாள் தவத்திலிருந்து கலைந்தமையால் ஆகாரம் உண்ண ஒரு வீட்டிற்குச் சென்று உணவு கேட்டார். அவ்வீட்டிலிருந்த அம்மையார் காலந் தாழ்த்தி அன்னமளித்தார். சித்தர், அந்த அம்மையாரை, சினந்து நோக்கினார். உடனே, அம்மையார், 'கொங்கணவா நான் ஒன்றும் கொக்கல்ல எரிந்து போவதற்கு' என்று அமைதியாகப் பதில் அளித்தார். 'என் கணவருக்கான பணிவிடையில் இருந்த போது உமது குரல் கேட்டது. ஆனால் எனது கடமையை முடிக்காமல் நான் எப்படி உமக்கு அன்னமளிக்க வரமுடியும்' என்றார் அவர்.

கொங்கணவர், அந்த பெண்மணியின் தொலைவில் உணர்தலை (ஞானதிருஷ்டி) எண்ணி வியந்தார். அவளுடைய கற்பின் திண்மையை மெச்சி வாழ்த்தினார். தம்முடைய சினத்தை நினைத்து வெட்கினார்.

போகரின் கருத்துப்படி திருமாளிகைத்தேவரிடம் சென்று சமய தீட்சை, நிர்வாண தீட்சை பெற்றார் என்ற குறிப்பு போகர் ஏழாயிரத்தில் காணப்படுகிறது. இவர் திருவேங்கடத்தில் யோக சமாதியில் அமர்ந்தார் என்பர். கொங்கணவர் வாத காவியம் பல வேதியியல் ரகசியங்களைப் பெற்றுள்ளது. கொங்கணவரின் முக்காண்டங்கள், வைத்தியம் 200, வாதசூத்திரம் 200, ஞான சைதன்யம், வாலைக்கும்மி, சரக்கு வைப்பு, முப்பு சூத்திரம், ஞான வெண்பா, உற்பத்தி ஞானம், சுத்த ஞானம் குறிப்பிடத்தக்கதாகும். இவர் சுமார் 24 நூல்கள் இயற்றியுள்ளார்.

**காலாங்கி நாதர்**

வேளாளர் மரபில் பிறந்தவர் காலாங்கி நாதர். கால் + அடங்கி = காற்றினை உடலாகக் கொண்டு வாழ்ந்தவர். ஆகையால் காலாங்கி எனப் பெயர் பெற்றார் எனலாம். காலாங்கி நாதரின் குரு திருமூலர் ஆவார்; சீடர் போகர். ஒரு முறை காலாங்கி நாதர் சதுரகிரியில் தவம் இயற்றிக் கொண்டிருக்கையில், சிவன் கோயில் கட்ட வேண்டும் என்ற தணியாத ஆசை கொண்ட ஒரு வணிகனுக்கு வகார தைலம் மூலம் பொருளுதவி செய்த செய்தி, சதுரகிரித் தலபுராணத்தில் குறிக்கப் பெற்றுள்ளது.

**அகப்பேய்ச் சித்தர்**

மனத்தைப் பேய் என உருவகித்துப் பாடியதால் அகப்பேய்ச் சித்தர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். அகம்+பேய்+சித்தர் = மனமாகிய பேயை வென்று சித்தியடைந்தவரென இவருக்குக் காரணப் பெயராக அமைந்துள்ளது. அகப்பேய்ச் சித்தர் நாயனார் சாதியைச் சேர்ந்தவர். துணி வணிகஞ் செய்து பிழைத்து வந்தார் என்று போக முனிவர் கூறுகின்றார்.

நஞ்சுண்ண வேண்டாமே - அகப்பேய்

நாயகன் தாள் பெறவே

நெஞ்சம் அலையாதே - அகப்பேய்

நீ ஒன்றும் சொல்லாதே.

என்று பாடி, மனம் பேய் போன்று அலைவதைத் தடுத்து நிலைநிறுத்தி விடு என்று அறிவுரை கூறுகிறார் அகப்பேய்ச் சித்தர். இவரது நூல்களுள் வாத வைத்தியம், யோக ஞானப் பாடல்கள் பரிபாஷைகளைப் பெற்று, கடினமானதாக அமைகின்றன.

**பாம்பாட்டிச் சித்தர்**

தமிழ் மக்களுக்கு அதிகம் தெரிந்த சித்தர்களில் இவரும் ஒருவர். பாம்புகளைப் பிடிப்பது, படமெடுத்து ஆடச் செய்து வேடிக்கை காட்டுவதே இவர் தொழில். எவ்வளவு பெரிய பாம்பானாலும் சரி ! எவ்வளவு கொடிய நாகமானாலும் சரி. பிடித்துவிடுவார். அவற்றின் விஷத்தைக் கக்க வைத்துச் சாதாரணமான தண்ணீர்ப் பாம்பு போல் ஆக்கிவிடுவார். விஷத்தை முறிக்கும் மூலிகைகளையெல்லாம் நன்கு தெரிந்து வைத்திருந்தார். விஷ வைத்திய ஆராய்ச்சியாளர் என்றே அவரைக் கூறலாம். மருத மலையில் விஷ வைத்திய ஆய்வுக் கூடமே நடத்தினார்.

ஒரு நாள் மலைமேல் பெரிய நவரத்தினப் பாம்பைக் கண்டு, அதைப் பிடிப்பதற்கு விரைந்தார். பாம்பைப் பிடிக்கப் போகும்போது, சட்டைமுனியைக் கண்டார். சட்டைமுனி, பாம்பாட்டிக்கு உபதேசம் செய்தார். காடுகளில் பாம்புகளைப் பிடித்து நாடு நகரில் சென்று அவற்றை ஆட்டிக் கொண்டு, பிழைத்துக் கொண்டிருந்த பாம்பாட்டி ஞானப்பால் உண்டு நானிலம் மெச்சும் சித்தராகி விட்டார்..கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழி அகராதியில் பாம்பாட்டிச் சித்தரைப் பற்றிக் கூறிய கருத்தினைக் காணலாம்.

“இவர் திருக்கோகர்ணத்தைத் தமக்குச் சன்மஸ்தானமாக (பிறந்தவூர்) உடைய ஒரு சித்தர், இவர் காலம் நன்கு புலப்படாததாயினும் சமீப காலத்தவர் என்பது எளிதில் துணியப்படும். இவர் ஆடு பாம்பே எழுந்தாடு பாம்பே என்று பாம்பை

முன்னிலைப்படுத்திப் பாடல் பாடியுள்ளமையால் இவருக்குப் பாம்பாட்டிச் சித்தர் என்றும் பெயர் வழங்கி வருகிறது. இவர் பாடல், கூத்தர் பாடல் போல் வெள்ளையாயிருப்பினும், தத்துவார்த்தங்களின் மேலதாகிய அற்புத ஞானக் கருத்தை உட்கொண்டிருக்கும். இவர் பாம்பு என்று கூறுவது பாம்புருவாக மண்டலமிட்டுக் கிடக்கும் குண்டலினி சக்தியை. அதை எழுப்புதல் யோகிகளுக்கு அவசியமாகும். அதனால் எழுப்புவாராயினார்".

பாம்பாட்டிச் சித்தர் ஜோகி என்னும் வகுப்பைச் சார்ந்தவர். இவரின் சமாதி மருதமலையில் இருக்கின்றதாகக் கூறுவர். பாம்பாட்டிச் சித்தர் பாடல், சித்தராரூடம், சில வைத்திய நூல்கள் முதலியனவாம்.

**தேரையர்**

அகத்தியருடைய மாணாக்கர்களில் ஒருவராக விளங்கியவர் தேரையர் ஆவார். இவர் மருத்துவ ஞானம் மிகுந்தவர். சித்த வைத்திய முறையில் தேரையர் கண்ட உண்மைகள் பெரிதும் உபயோகமாகின்றன. மனிதரின் தேக உணர்வையும், குரலின் தன்மையையும் வைத்தே நோய் நிர்ணயம் செய்து விடும் திறமை பெற்றவர். அவ்வண்ணமே சிகிச்சை முறைகளிலும் இவருக்கு அதிக வல்லமை இருந்தது. இவர் பதினாறு நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் வைத்திய காவியம், இரசவர்க்கம், கருக்கிடை, வைத்திய சிந்தாமணி, மருத்துவ பாரதம் என்பவை குறிப்பிடத்தக்கனவாகும். மேலும் பதார்த்த குண சிந்தாமணி, நீர்க்குறி நூல், நெய்க்குறி நூல், தயில வர்க்க சர்க்கம், சிகிச்சை ஆயிரம், யமக வெண்பா, நாடிக் கொத்து, நோயின் சாரம் முதலிய நூல்களும் பல உள்ளன.

**குதம்பைச் சித்தர்**

பதினெண் சித்தர்களில் ஒருவராக விளங்குபவர் குதம்பைச் சித்தர். இவர் தம் பாடல்களில் காதில் அணியும் அணிகலன்களுள் ஒன்றான குதம்பையை முன்னிலைப் படுத்தி, 'குதம்பாய்' என்று பாடியதால்தான் குதம்பைச் சித்தர் என்று அழைக்கப்பட்டார். குதம்பைச் சித்தரின் 246 கண்ணிகளும், 246 முத்துக்களும் மாணிக்கங்களாகும். ஓர் எழுத்துக்கு ஒரு கோடி என்று கொட்டிக் கொடுத்தாலும் கிட்டாத ரத்தினங்கள் என்று சமய உலகம் போற்றிப் பாராட்டுகிறது. இவர் மயிலாடுதுறையில் சித்தி பெற்றதாகக் கூறுவர். சித்தர் ஞானக் கோவையில் உள்ள 32 பாடல்கள் தவிர, யோக ஞான சாத்திரத் திரட்டில் இவரது பாடல்கள் காணப்படுகின்றன. இவரது பாடல்கள் புரட்சிகரமானவை. சாதி, சமயம், இனம், மதம் இவற்றைச் சாடி, மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டும் வகையில் அமைந்தன என்பதனைக் கீழ்வரும் பாடல் வரி உணர்த்துவதனைக் காணலாம்.
சாதியொன்றில்லை சமயமொன்றில்லை யென்று

ஓதி யுணர்ந்தறிவாய் - குதம்பாய்

ஓதி உணர்ந்தறிவாய். (145)

உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்ந்து அழியாத மெய்ப் பொருளை உணர்ந்த ஞானிகள் புறச் சடங்குகளில் ஈடுபட மாட்டார்கள். யோக நெறி, பக்தி நெறி, புறப் பூசை ஆகிய அனைத்தையும் கடந்த மலோன நிலையை அடைந்த அவர், கீழ்ப்பட்ட நிலைகள் தேவையில்லை எனப் பாடுகின்றார்.

நித்திரை கெட்டு நினைவோடு இருப்பார்க்கு

முத்திரை ஏதுக்கடி - குதம்பாய்

முத்திரை ஏதுக்கடி.

உள்ளத் துறவே துறவு ; புறத்துறவு துறவன்று என்பது இவர் கொள்கையாகும்.

**இடைக்காடர்**

நாட்டுப்புறப் பாடல்களில் திருவிழாக் காலங்களில் இன்றும் இப்பாடல்களைப் பாடி, ஆடிக்கொண்டு, ஒயிலாட்டம் முதலான கூத்துக்களை ஆடுபவர்களைக் காணலாம். அந்த அளவுக்குச் சித்தர் நெறியையும், சமய உணர்வையும் ஆழப்பதிக்கும் பாடல்களில் இடைக்காடர் பாடல்களையும் சேர்க்கலாம். எளிய சொற்கள், ஆழமான கருத்துகள், இனிய சந்தங்கள் இவையே இடைக்காடரின் தனிச் சிறப்புகள் எனலாம். குறிப்பாக, இவர் பாடல்களில் கோனே, கோனாரே, தாண்டவக் கோனே என்னும் சொற்கள் அமையப் பாடுதல் இவர் இயல்பாகும். மனம் தான் எல்லாத் துன்பங்களுக்கும் இன்பங்களுக்கும் காரணம். ஆசை, அழுக்காறு (பொறாமை), வெகுளி (சினம்) முதலான குற்றங்கள் தோன்றும் இடம் மனம். இது அடங்கப் பெற்றால் ஆன்மா முக்தி பெறும் என்பது இவரது கருத்தாகும். இதனை எளிய முறையில் உணர்த்துகிறார்.

மனமென்னும் மாடடங்கில் தாண்டவக்கோனே - முக்தி

வாய்த்தது என்றெண்ணடா தாண்டவக்கோனே

சினமென்னும் பாம்பிறந்தால் தாண்டவக்கோனே - யாவும்

சித்தி என்றே நினையேடா தாண்டவக்கோனே.

ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இடைக்காடருக்கு உபதேசம் செய்தவர் போகரே எனக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இடைக்காடர் திருவிடைமருதூரில் சமாதியில் வீற்றிருப்பதாக, போகர், தம் ஜனன சாகரத்தில் கூறியுள்ளார்.

**சட்டை முனி**

தமிழ்நாட்டுச் சேணிய வகுப்பைச் சார்ந்தவர். கயிலாயம் சென்று சிவபெருமானைச் சேவித்து வருபவர். எப்போதும் கம்பளத்தில் மலோடை

அணிந்ததால் சட்டைமுனி எனப்பட்டார். சுந்தரானந்தர் இவரிடம் சில சாத்திரங்கள் கேட்டறிந்ததுண்டு. இவர் சரக்கு வைப்பு, நவரத்தின வைப்புகளில் தேர்ந்தவர். நிகண்டு, வாத காவியம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு, வகாரம் தீட்சை, ஞான விளக்கம் உள்ளிட்ட 14 நூல்கள் இயற்றியுள்ளார்.

**அழுகணி சித்தர்**

தாடியும் முடியுமாக அந்த மனிதர் நடந்து கொண்டிருப்பார். அவர் கண்களிலிருந்து நீர் ஊற்றிக் கொண்டிருக்கும். அவரை அங்கே பார்த்தேன், இவ்விடத்தில் பார்த்தேன் என்பார்கள். ஆனால் எங்கும் தங்க மாட்டார். முடிவில்லாத வழிப்பயணத்தில் போய்க் கொண்டே இருப்பார். யார் எது கேட்டாலும், பதில் கூறவும் மாட்டார். அவர் கண்கள் மட்டும் அழுது கொண்டே இருக்கும். இதனாலேயே இச்சித்தருக்கு அழுகண் சித்தர் என்று வழங்கினர். காலப்போக்கில் அழுகண்ணர் என்றும் அழுகணிச் சித்தர் என்றும் அழுகுணிச் சித்தர் என்றும் வழங்கினர் என்பதும் தெரிய வருகிறது.

இச்சித்தர் ஊரைப் பார்த்து அழுதார். உலகைப் பார்த்து அழுதார், தன்னையே பார்த்தும் அழுதார்.

பையூரிலே யிருந்து பாழூரிலே பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும் என் கண்ணம்மா.
- பாழாய் முடியாதோ.

என்று பாடுகின்றார்.

**தன்வந்திரி**

முதல் சித்தரான நந்தீசரிடம் மருத்துவம் முதலான கலைகள் கற்றவர். சில காலம் வைத்தீஸ்வரன் கோயில் என்னுமிடத்தில் தமது சீடர்களுடன் வாழ்ந்து தவம் புரிந்தவர். இவருடைய நூல்கள் வைத்திய சிந்தாமணி, நாலுகண்ட ஜாலம், கலை, ஞானம், தைலம், கருக்கிடை, நிகண்டு முதலியவையாம்.

**உரையாசிரியர்கள்**

இலக்கிய இலக்கண நூல்களைக் கற்பதில் காலந்தோறும் மிகப்பலர்,

மிகுந்த ஆர்வமுடையோராய் இருந்திருக்கின்றனர்; புலமை விருந்து நாடிப்புதுப்புது நூல்களைத் தேடி நுகர்ந்திருக்கின்றனர்; அறிதோறும் அறியாமைகண்டும் நவில்தொறும் நூல் நயத்தில் திளைத்தும் தம்மை

மறந்திருக்கின்றனர்;கருத்துகளைச் சமன் செய்து சீர்தூக்கி ஆராய்ந்திருக்கின்றனர். ஆனால்அவர்களில் பலர், தம் அனுபவங்களை எழுதி வைக்கவில்லை; இலக்கியச்சுவையை வெளிப்படுத்தி நூலியற்றவில்லை; ஆராய்ச்சிக்கு வடிவம்தரவில்லை. சிலர் மட்டுமே புலமை உலகில் தமக்கு ஏற்பட்ட இன்பஅனுபவங்களை எழுதி வைத்தனர்; இலக்கியச் சுவையை வெளிப்படுத்தி நூலியற்றினர்; தம் ஆராய்ச்சிக்கு வடிவம் தந்தனர்.

இலக்கண நூல்களுக்கு உரை எழுதியோர் இலக்கண உரையாசிரியர்கள் ஆவர்.

- ❖ நக்கீரர்
- ❖ இளம்பூரணர்
- ❖ பேராசிரியர்
- ❖ நச்சினார்க்கினியர்
- ❖ சேனாவரையர்
- ❖ குணசாகரர்
- ❖ கல்லாடர்
- ❖ மயிலைநாதர்
- ❖ ஆறுமுக நாவலர்

இலக்கிய உரையாசிரியர்கள்

- ❖ அடியார்க்கு நல்லார்
- ❖ அரும்பத உரையாசிரியர்
- ❖ தெய்வச் சிலையார்
- ❖ மணக்குடவர்
- ❖ பரிதி
- ❖ பரிமேலழகர்
- ❖ பரிப்பெருமாள்
- ❖ காலிங்கர்

**இளம்பூரணர்**

இளம்பூரணர் இடைக்காலத் தமிழ் மொழி உரையாசிரியராவார். இவர் இன்றுவரை தொல்காப்பியத்துக்குக் கிடைத்த உரைகளில் மிகப்பழைய உரையை எழுதியவர் ஆவார். தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதினார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களில் இவர் காலத்தால் முந்தியவர். இவரது காலம் பொ.ஊ. 11-ஆம் நூற்றாண்டு. இவரை உரையாசிரியர் அல்லது உரை முதல்வர் என்று அழைத்தனர். ‘உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள்’ என

அடியார்க்கு நல்லார் இவரைக் குறிப்பிடுவதால் இவரது பெயரை இளமையில் அறிவு நிறையப்பெற்ற துறவி என உணர்ந்துகொள்ள வேண்டும். 'உளங்கூர் கேள்வி இளம்பூரணர்', 'ஏதமில் மாதவர்' என்றெல்லாம் இவர் போற்றப்படுகிறார்.

**நச்சினார்க்கினியர்**

நச்சினார்க்கினியர் இடைக்கால தமிழ் உரையாசிரியர்களுள் முக்கியமான ஒருவர். தொல்காப்பியத்துக்கு எழுதப்பட்ட உரைகளில் நச்சினார்க்கினியரின் உரை முக்கியமானதாகும். இவர் தொல்காப்பியத்தைத் தவிர்த்து கலித்தொகை, குறுந்தொகையில் ஒரு பகுதி, பத்துப்பாட்டு, சீவக சிந்தாமணி என்பவற்றுக்கும் உரைகள் எழுதியுள்ளார். இவர் தொல்காப்பியம் முழுவதற்குமே உரை எழுதினார். குறுந்தொகையில் உள்ள முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியர் உரை எழுதினார் என்றும், எஞ்சிய 20 பாடல்களுக்கு மட்டுமே நச்சினார்க்கினியார் உரை எழுதி நிறைவு செய்தார் என்றும் குறுந்தொகை பதிப்பாசிரியர் குழு கூறுகிறது.

**சேனாவரையர்**

சேனாவரையர் தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய இடைக்காலத் தமிழ் மொழி உரையாசிரியர்களில் ஒருவர். சேனை அரையர் என்னும் சொற்கள் புணரும்போது சேனாவரையர் என வரும்.எனவே இவரது பெயர் சேனைத் தலைவரைக் குறிக்கும். இவர் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்துக்கு மட்டுமே உரை எழுதினார். எனினும் இவ்வதிகாரத்துக்கு எழுதப்பட்ட எல்லா உரைகளிலும் சிறந்த உரை இவர் எழுதிய உரையே என்று கருதப்படுகிறது.

**அடியார்க்கு நல்லார்**

அடியார்க்கு நல்லார் தமிழில் எழுந்த ஐம்பெருங் காப்பியங்களில் முதன்மையான சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதியவர். இவர் பொ.ஊ. 12-ஆம் நூற்றாண்டினர் என்று கருதப்படுகிறது. இவருக்கு முன் எழுந்த அரும்பத உரையாசிரியரைத் தழுவி இவர் உரையெழுதியுள்ளார். இவர் சிலப்பதிகாரம் முழுவதற்கும் உரை எழுதியிருந்தாலும் தற்காலத்தில் அதன் ஒரு பகுதி மட்டுமே கிடைத்துள்ளது. இவரது உரையிலிருந்து, இவர் பல நூல்களையும் கற்றவர் என அறிய முடிகின்றது. இவ்வுரையில் இசைத்தமிழுக்கு இவர் அளித்துள்ள விளக்கங்கள் அறிஞர்களினால் போற்றப்படுகின்றன.

**தெய்வச் சிலையார்**

தெய்வச் சிலையார் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு உரை எழுதிய இடைக்கால தமிழ் மொழி உரையாசிரியர்களில் ஒருவர். இவரது காலம் பொ.ஊ. 15 ஆம் நூற்றாண்டு. இவர் வடமொழியிலும் புலமை மிக்கவர் எனக் கருதப்படுகின்றது.

தெய்வச் சிலையார் என்னும் பெயரைக்கொண்டு இவர் தெய்வங்களுக்குக் கற்சிலை வடித்து வாழ்ந்தவர் என எண்ண இடமுண்டு. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் இவரது உரை ஏனைய நால்வர் உரையினும் சிறந்தது என்று குறிப்பிடுகிறார்.

**பரிமேலழகர்**

பரிமேலழகர் திருக்குறளுக்கு உரை எழுதியவர்களுள் மிகப் புகழ்பெற்றவர் ஆவார். இவர் பரிபாடலுக்கும் உரை எழுதியுள்ளார். இவை பலரும் அறிந்த செய்தி. அத்துடன் திருமுருகாற்றுப்படைக்கும் உரை செய்துள்ளதாக ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது (அது இவருடையதன்று என்றும் சிலர் கூறுவர்[1]). இவர் பிறந்த இடமாகக் காஞ்சீபுரம், மதுரை, ஒக்கூர் போன்ற வெவ்வேறு இடங்களைப் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

திருக்குறளுக்கு உரை எழுதியவர்களுள் காலத்தால் பிற்பட்டவர் இவரே. இவரது உரையில் முன்னவர்களது உரைகள் தொடர்பான குறிப்புகளும் காணப்படுகின்றன. காலிங்கர், பரிதியார் காலம் 13 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுவதால், இவரது காலம் 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கொள்ளலாம்.

**பிற்காலப் புலவர்கள்**

பிற்காலச் சோழர்கள், பிற்காலப் பாண்டியர், நாயக்கர் ஆட்சிக் காலங்களில் இலக்கியங்கள் படைத்த புலவர்களைப் பிற்காலப் புலவர்கள் எனும் தலைப்பில் காணலாம்.

**ஒட்டக்கூத்தர்**

பிற்காலச் சோழ மன்னர்களில் மூன்று மன்னர்களின் காலத்தி வாழ்ந்தவர். விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோர் காலம் இவர் வாழ்ந்த காலமாகும். இவர் ஊர் 'மலர் என்பர். பரணியில் கலிங்கத்துப் பரணி சிறப்பாகக் கருதப்படினும் புரா வரலாற்றை விளக்கும் பரணி நூல்களில் இவருடைய தக்கயாகப் பரணி சிறப்பு மிக்கதாகும். இரண்டாம் குலோத்துங்கள் மீது பிள்ளைத் தமிழும் மாடியுள்ளார். இவர் காலத்து வாழ்ந்த மேற் குறிப்பிட்ட மூன்று சோழ மீதும் இவர் பாடிய மூவருலா வரலாற்றுச் செய்திகளைத் தரும் நூலாகும்.

கம்பரும், புகழேந்திப் புலவரும் இவருக்குச் சமகாலத்தவர் என்பர் இது தொடர்பான கதைகளும் வழங்குகின்றன. அவற்றின் நம்பகத் தன்மை குறைவு எனலாம். ஈட்டி யெழுபது, காங்கேயன் நாலாயிரக் கோவை, அரும்பைத் தொள்ளாயிரம் ஆகிய நூல்களும் ஒட்டக் கூத்தர் எழுதியவையேயாகும். சும்பர் இராமாயணத்தில் எழுதாத உத்தர காண்டத்தை ஒட்டக்கூத்தர் எழுதியுள்ளார்.

இதனால் இராமன் இராவணனைக் கொன்று பட்டாபிசேகம் சூடிய பிறகு நடந்த நிகழ்ச்சிகளை அறிய முடிகிறது.

**அதிவீரராம பாண்டியர்**

ஸ்ரீவல்லபன், வீரமாறன், இராமன் என்ற வேறு பெயர்களும் இவருக்குரியது. கி.பி. 14ஆம் நூற்றாண்டு என்பர். பாண்டிய அரச மரபில் கோன்றியவர். இவரது இயற்பெயர் அழகர் பெருமாள் என்பதாகும். பிள்ளைப் பாண்டியன் என்ற பட்டப்பெயரும் உண்டு. கவிபாடும் திறமை மிக்கவர்.

சிறந்த சிவபக்தர். தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர். சிவ பக்தராயினும் திருமாலிடமும் ஈடுபாடு கொண்டவர். இவர் 5 யெற்றிய நூல்கள் நைடதம், கூர்ம புராணம், காசிக் காண்டம், வெற்றி வேற்கை, இலிங்க புராணம், திருக்கருவை வெண்பா அந்தாதி, மகா புராணம், சைவப் பெரியோர்களால் குட்டித் திருவாசகம் எனப் போற்றப்படும் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி.

இவர் எழுதிய 'நைடதம், புலவர்க்கு ஔடதம்' (மருந்து) எனப் போற்றப்படும். எனினும் நளன் வரலாற்றைக் கூறும் இந்நூல் காமச் சுவை குந்தது. 1772 விருத்தங்கள் கொண்டது. கொக்கோகம் என்ற காம நூலையும் இவர் எழுதியதாகக் கூறுவர்.

'நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை' எனும் தொடர் நாம் அறிந்த ஒன்றாகும். இது இவரது வெற்றி வேற்கை நூலில் இடம் பெறுவது.

**பட்டினத்தார்**

காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர். வணிக மரபு. தந்தையார் சிவநேச தப்தர். தாயார் ஞானக்கலை. இயற்பெயர் திருவெண் காடர். சிறந்த சவபக்தராக விளங்கியவர். இவர் பாடல்கள் மனத்தை உருக்குவன. உலக வாழ்வை வெறுத்துத் துறவு பூண்டவர். இவருடைய வரலாறு நாடகமாகவும். திரைப்படமாகவும் வந்துள்ளது.

பட்டினத்தார் பல அற்புதங்களை நிகழ்த்தியவர் கால் இருந்த பச்சை வாழை மட்டைகளைஅடுத்துத் தீமூட்ட அது கொத்துவிட்டு எர்க்க தமக்கை கொடுத்த அப்பத்தில் தஞ்சிருப்பதையறித்து உரையில் எறியக்கூரை தீப்பிடித்தது.

தாய் இறந்தபோது இவரது தாயன்பு வெளிப்பட்டுள்ளது 'ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் தொத்துபெற்றுப் பையல் என்றபோதே பரிந்தெடுத்து செய்ய இரு கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை எப்பிறப்பில் காண்பேன் இனி' இறந்த தாயை எரிக்க வாழை மட்டையை விற்காக வைத்து அதை எரியும் செய்யப்பாடுகிறார். அப்பாடல் உள்ளத்தை உருக்கும் தன்மையது

முன்னையிட்ட தீ முப்புரத்திலே

பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்

அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே

யானுமிட்ட தீ மூள்க மூள்கவே'

**குமரகுருபரர்**

இவர் காலம் 17ஆம் நூற்றாண்டு. திருநெல்வேலி மாவட்டத்தில் வைகுண்டத்தையடுத்த கைலாசபுரத்தைச் சார்ந்தவர். தந்தை சண்மு சிகாமணிக் கவிராயர் தாய் சிவகாம சுந்தரி. ஐந்து வயது வரையில் முடியாது இருந்து பின்னர் செந்தூர் முருகனருளால் பேசும் திறன் பெற்ற அக்கணமே முருகன்மேல் கந்தர்கலிவெண்பா பாடினார் என்பர்.

இவர் எழுகிய நூல்கள் கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பர மும்மணிக் கோவை, இரட்டை மணிமாலை, பண்டார மும்மணிக்கோவை. சகலகலாவல்லி மாலை என்பவையாகும். குமரகுருபரர் தமிழ்ப் பற்று மிக்கவர். அவர் தம் பாடலைப் படிப்போர் இதனை எளிதில் உணர முடியும்.

**அருணகிரிநாதர்**

இவர் பிறந்த ஊர் திருவண்ணாமலை. தாய் தந்தையர் பற்றி அறிய முடியவில்லை. இளம் வயதில் கணிகையர்களுடன் தொடர்பு கொண்டு தம் வாழ்வை அழித்து இறுதியில் உண்மை உணர்ந்து துறவு பூண்டார் என்பாடு

'கருணைக்கு அருணகிரி' எனவும், 'வாக்கிற்கு அருணகிரி' எனவும் தாயுமானவராலும் போற்றப்பட்டவர். முருகனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர். சுந்தரருக்குச் சிவன் அடியெடுத்துக் கொடுத்தது போன்று (சிவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்டமையை ஒப்பு நோக்குக) சிவன் மைந்தன் முருகன் இவருக்கு 'முத்தைத்தரு பத்தித்திரு நகை' என அடியெடுத்துக் கொடுத்ததாகக் கூறுவர்.

இவர் இயற்றிய திருப்புகழ் தமிழுக்குச் சிறப்பு செய்தது. திருப்புகழ் 16000 பாடல்கள் என்பர். அதில் இன்று 1307 பாடல்களே கிடைத்துள்ளன. இவர் எழுதிய வேறு நூல்கள், கந்தர் அலங்காரம், திருவகுப்பு, மயில் விருத்தம், கந்தர் அநுபூதி, வேல்விருத்தம், கந்தர் அந்தாதி ஆகும்.

ஏறுமயி லேறிவிளையாடுமுக மொன்றே

ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே

கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே கு

ன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே

மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே

வள்ளியைம ணம்புணர வந்தமுக மொன்றே'

என ஆறு முகங்களின் செயல்கள் சந்த இன்பத்தில் மனதில் பதிந்து விடுகின் தாயுமானவரும் அருணகிரிநாதரின் பாடல்களில் மனத்தைப் பறிகொடும் உணர்ச்சிப் பெருக்கில்

'ஐயா அருணகிரியப்பா உனைப்போல்

மெய்யாக ஓர் சொல் விளம்பினார் யார்?'

எனப் பரவுகின்றார்.

**காளமேகப் புலவர்**

இவரது காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு. இயற்பெயர் வரதன். கும்பகோண அடுத்த நந்திபுரத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். திருவரங்கம் பெ கோயிலில் மடைப்பள்ளித் (சமையல்) தொழில் செய்தவர். வைணவா இருந்த இவர் திருவானைக்கா ஆலயத்தில் கணிகையாக இருந் மோகனாங்கி பால் காதல்கொண்டு சைவராக மாறினர் என்பர்.

காளமேகருக்குத் தேவியருள் கிடைக்க, நான்கு வகை, கவிகளை 'காளமேகம்' போல் பொழிந்தமையால் காளமேகப் புலவர் எனும் பெய பெற்றார்.

'அரியா சனத்தில் அரசரோ டென்னைச்

சரியாசனம்வைத்த தாய்'

எனக் கலைமகளைப் பரவுகின்றார். திருமலைராயன் அவையில் யாராலும் பாடுவதற்கரிய எமகண்டம் பாடி 64 புலவர்களின் தலைவரங் அதிமதுரகவிராயரை வென்றவர். ஆசுகவி பாடுவதிலும், சிலேடை பாடல்கள் பாடுவதிலும் வல்லவர்.

'நஞ்சிருக்கும்; தோலுரிக்கும்; நாதர்முடிமேலிருக்கும்;

வெஞ்சினத்தில், பல்பட்டால் மீளாது'

என வாழைப் பழத்திற்கு. பாம்பிற்கும் சிலேடை பாடியுள்ளார். காளமேகம் பாடல்களில் இயல்பா நகைச்சுவை மிகுந்துவரும். இடைச்சியின் மோர் வெறும் நீர் என்பன 'வானத்தில் கார் எனவும், பூமியில் நீர் எனவும், இடைச்சி பானையில் மோ எனவும் முப்பேரும் பெற்றாயே' எனப்பாடும் பாடல் நகைச்சுவை மிக்கது.

இருநூறுக்கு மேற்பட்ட தனிப்பாடல்கள் எழுதியுள்ளார். சரசுவதி மாலை திருவானைக்கா உலா, சித்திரமடல், பரப்பிரம்ம விளக்கம், ஆகிய நுல்கள் இவர் எழுதியவை. சமுத்திர விலாசம் இவர் எழுதியது என்பர்.

**அந்தகக் கவி வீரராகவ முதலியார் :**

இவர்காலம் 17ஆம் நூற்றாண்டு. பிறந்த ஊர் தொண்டை நாட்டுப் பொன் விளைந்த களத்தூர். காளமேகப் புலவர் போன்று வசை பாடுவதில் வல்லவர். இவர் பாடல்களில் நகைச்சுவை உணர்வு மிகுதி. இவருக்குப் பார்வையில்லை; இலங்கை சென்று தம் புகழைப் பரப்பியவர். தனிப்பாடல் திரட்டில் இருபது பாடல்கள் பாடியுள்ளார். அத்தோடு சேயூர்க் கலம்பகம், சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருக்கழுக்குன்றமாலை, திருக்கழுக் குன்றப் புராணம், சந்திரவாணன் கோவை, திருவாரூர் உலா முதலான நூல்களும் இவர் இயற்றியுள்ளார்.

**இரட்டையர்கள்**

கலம்பகத்திற்கு இரட்டையர் எனப் போற்றப்படுவார்கள். காலம் 15ஆம் நூற்றாண்டு. சோழ நாட்டு ஆலத்துறை இவர்கள் ஊராகும். ஒருவர் குருடர் மற்றொருவர் முடவர்.குருடர் தோளில் முடவர் உட்கார்ந்து வழிகாட்டப் பயணம் செய்வர். பாடல்களின் முதலிரண்டு அடியை ஒருவர் பாடப் பின்னிரண்டு அடியை மற்றொருவர் பாடி முடிப்பது இவர்களுடைய வழக்கமாகும்.

இவர்களை ஆதரித்த மன்னன் கொங்கு மன்னன் வரபதி ஆட்கொண்டான். காளமேகப்புலவர் இவர்களின் காலத்தவர் என்பர். இளஞ்சூரியன், முதுசூரியன் இவர்கள் பெயர் என்பர். இருவரும் உறவு முறையினர். இரட்டையர் என்பதோடு இவர்கள் தெய்வப் புலவர்கள் என்றும் போற்றப்பட்டனர்.

இருவரும் ஆற்றில் துணி துவைக்கும்போது பாடிய பாடல் தமிழுக்குக் கிடைத்த நகைச்சுவை விருந்தாகும்.

'அப்பிலேதோய்த் திட்டு அடுத்தடுத்து நாமதனைத்

தப்பினால் நம்மையது தப்பாதோ- இப்புவியில்

இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரைச்

சொக்கலிங்கம் உண்டே துணை'

**கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்**

இவர் பெயர் சிவக்கொழுந்து. தேசிகர் மரபு. ஊர் பெயர் கொட்டையூர். கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு. தந்தை தண்டபாணி தேசிகர்.

**கிறித்தவமும் தமிழும்**

கிறித்துவம் தமிழ் உலகிற்கு எண்ணற்ற தமிழறிஞர்களை அள்ளிக் கொடுத்துள்ளது. அவர்களின் தமிழ்ப்பணி அளப்பரியதாகும். மேலை நாடுகளில் இருந்து மதம் சார்ந்த பணிகளுக்காகத் தமிழகம் வந்தவர்களும் தமிழைக் கற்றுணர்ந்து தமிழின் மீது தீராக்காதல் கொண்டவர்களாக மாறினர்**.**

**வீராமாமுனிவர்**

வீரமாமுனிவர் என்று அழைக்கப்படும் கான்சுடான்சோ பெசுக்கி என்பவர் இத்தாலிய நாட்டு கிறித்தவ மத போதகர் ஆவார். இவர் இத்தாலி நாட்டிலுள்ள கேசுதிகிலியோன் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் இயேசு சபையைச் சேர்ந்த குரு ஆவார். கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில், 1709ஆம் ஆண்டு இயேசுசபையில் குருவானபின், 1710-ஆம் ஆண்டு தமிழகத்துக்கு அதாவது அவரது 30-ஆவது அகவையில் வந்தார்.

இவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சிறப்பான பணிகளைச் செய்துள்ளார். 23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன், இயேசு கிறித்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பின் வரலாற்றையும் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப "தேம்பாவணி" என்ற பெருங்காவியமாக இயற்றியது இவரின் தமிழ்ப் புலமைக்குச் சான்றாக உள்ளது. சுப்ரதீபக் கவிராயர் மூலம் தமிழில் புலமை பெற்றார்.

**ஜி.யூ.போப்**

ஜி. யு. போப் (,ஏப்ரல் 24, 1820 - பெப்ரவரி 11, 1908) கனடாவில் பிறந்து கிறிஸ்தவ சமய போதகராகத் தமிழ் நாட்டிற்கு வந்து 40 ஆண்டு காலம் தமிழுக்குச் சேவை செய்தவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.

- இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார்.
- 1886-ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார்.
- புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களைப் பதிப்பித்தார்.
- தமிழ் மீது பெரும் பற்று பெற்ற அவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.

முதுமையில் தளர்ச்சியடைந்த சமயம் தமது நண்பரிடம் மூன்று விருப்பங்களைத் தெரிவித்திருந்தார் ஜி.யு.போப்.

இறப்புக்குப் பின் தனது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்ற வாசகம் இடம்பெற வேண்டும்[1](அவரது உயிலிலோ அவரது கல்லறையிலோ அத்தகைய கருத்து சேர்க்கப்படவில்லை).

தமது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையால் அமைய வேண்டும். பச்சையப்பன் கல்லூரித் தமிழ் பேராசிரியர் செல்வக் கேசவராயர் தமிழன்பர்களிடம் நன்கொடை திரட்டி இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்.[1]

கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தையும் உடன் வைக்க வேண்டும்.

**கால்டுவெல்**

இராபர்டு கால்டுவெல் (7 மே 1814–28 ஆகத்து 1891) ஒரு கிருத்துவச் சமயப்பரப்பாளர் ஆவார். தன் 24-ஆம் அகவையில் இந்தியா வந்தடைந்த அவர், விவிலியத்தை வட்டார மொழியில் கற்பிப்பதற்காகத் தமிழைக் கற்றார். இதுவே, பின்னர், அவரைத் தென்னிந்திய மொழிகளுக்கான ஒப்பிலக்கண நூலொன்றை எழுத வைத்தது. அவருடைய நூலில், பழைய ஏற்பாட்டிலுள்ள எபிரேயத்திலும், பழங்கிரேக்கத்திலும், தொலெமி குறிப்பிட்டுள்ள இடங்களிலும் திராவிடச் சொற்கள் உள்ளதாகப் பரிந்துரைத்தார். திருநெல்வேலியில் பணியாற்றிய காலத்தில் அதன் வரலாறு பற்றி ஆய்வுகள் செய்துள்ளார். தகவல் சேகரிப்புக்காகச் சங்க இலக்கியங்களின் ஏட்டுப் பிரதிகளைப் படித்தது மட்டுமன்றி, அகழ்வாய்வுகளில் ஈடுபட்டுப் பல பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும், ஈமத் தாழிகள், நாணயங்கள் முதலானவற்றையும் வெளிக் கொணர்ந்துள்ளார். மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பாண்டிய நாட்டுக் காசுகள் பல இவ்வாய்வுகளில் கிடைத்துள்ளன.

**சீகன்பால்கு**

ஜெர்மனி நாட்டை சேர்ந்த சீகன்பால்கு 1706-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ந் தேதி கடல் மார்க்கமாக தரங்கம்பாடிக்கு வந்தார். பின்னர் தரங்கம்பாடியில் தங்கியிருந்து இன்ஹித்யாவைன் முதல் அச்சுக்கூடத்தை நிறுவினார்.பொறையார் என்னுமிடத்தில் காகித தொழிற்சாலையை நிறுவினார். இவர் நிறுவிய அச்சுக் கூடத்தில் முதல் முதலில் அச்சேறியது 'தம்பிரான் வணக்கம்'.இவர் பைபிளை தமிழில் முதன் முதலில் மொழிபெயர்த்தார்.

**ராபர்ட்-டி-நோபிலி**

தத்துவ போதக சுவாமிகள் (1577 - 1656) என அழைக்கப்படும் இராபர்ட் தெ நோபிலி (Robert de Nobile S.J.) உரோமப் பிரபுத்துவக் குடும்பத்தைச் சார்ந்தவர். 26 வயதில் இயேசு சபையில் சேர்ந்து கத்தோலிக்கக் குருவாகி, தமிழ் நாட்டில்

சமயப்பணியாற்ற விரும்பி, 1605 மே 20இல் கோவா வந்து சேர்ந்தார். 1606-ஆம் ஆண்டில் மதுரையை அடைந்து தமிழ்த்துறவி போல் வாழத்தொடங்கி கத்தோலிக்க மறைபணியாளராகப் பணி புரிந்தார். இறுதியில் மயிலையில் 1656-இல் இறைவன் திருவடி யடைந்தார். இவர் தமிழில் 40 உரைநடை நூல்களை எழுதியுள்ளார். இத்தகைய பங்களிப்பால் இவர் தமிழ் உரைநடையின் தந்தை என்று அறியப்படுகிறார்.

**மாயூரம் வேதநாயகம் பிள்ளை**

மாயூரம் வேதநாயகம் பிள்ளை (சாமுவேல் வேதநாயகம் பிள்ளை) (அக்டோபர் 11, 1826 - ஜூலை 21, 1889) தமிழின் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவர். 1879-ல் இவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் தமிழில் வெளியான முதல் நாவல். இது தவிர பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். தமிழ் உரைநடையை வளம்பெறச் செய்த முன்னோடிகளில் ஒருவராக வேதநாயகம் பிள்ளை கருதப்படுகிறார். வேதநாயகம் பிள்ளை இளமை முதலே தமிழில் செய்யுள் இயற்றும் திறம் பெற்றிருந்தார். நீதிநூல் என்ற செய்யுள் வடிவில் அமைந்த நூல் ஒன்றையும் சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் என்னும் இசைப்பாடல் தொகுப்பையும் இவர் எழுதியிருக்கிறார். பல தனிப்பாடல்களும் இயற்றியிருக்கிறார்.

**ஹெச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை**

என்றி ஆல்பிரட் கிருஷ்ணபிள்ளை (எச். ஏ. கிருஷ்ணபிள்ளை, ஏப்ரல் 23, 1827 - பெப்ரவரி 3, 1900) என்பவர் ஒரு கிருத்தவ தமிழறிஞர், புலவர், ஆசிரியிர் ஆவார். ஹென்றி ஆல்பிரடு என்ற பெயர்களின் சுருக்கமே எச்.ஏ.ஆகும். தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய இவரது படைப்புகள் போற்றித் திருவருகல், இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம் ஆகியவை. இவர் எழுதியனவாகச் சொல்லப்பெரும் இரட்சணிய குரல், இரட்சணிய பாலா போதனை என்பன இப்பொழுது கிடைத்தில. இரட்சணிய மனோகரத்தின் பெரும்பகுதி இரட்சணிய யாத்திரிகத்திலிருந்து எடுத்துத் தொகுக்கப் பெற்றது ஆகும். ஆகையால் இவரை கிருத்துவக் கம்பர் என்று அழைத்தனர்.

தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் போதிய அறிவு பெற்று தகுதிவாய்ந்தவராக இருந்த கிருஷ்ண பிள்ளையைக் கால்டுவெல் ஐயர் தெரிந்தெடுத்துச் சாயர்புரக் கல்லூரியில் தமிழாசிரியராக நியமித்தார்.

**ஆபிரகாம் பண்டிதர்**

ராவ் சாகேப் ஆபிரகாம் பண்டிதர் ஆகத்து 2, 1859 - 1919 ) புகழ்பெற்ற தமிழிசைக் கலைஞர், சித்த மருத்துவர் மற்றும் தமிழ் கிறித்தவ கவிஞர். ஆரம்ப காலத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய ஆபிரகாம் பண்டிதர், பின் தமிழ்

இலக்கியத்திலும், தமிழ் மருத்துவத்திலும் கொண்ட ஆர்வத்தினால், முழுநேர மருத்துவராகப் பயிற்சி பெற்றுப் பணியாற்றலானார். ஆபிரகாம் பண்டிதர் தமிழிசைக்கு ஆற்றிய பணி சிறப்பானது.

பழந்தமிழ் இலக்கியங்களில் தமிழிசையை ஆய்ந்த ஆபிரகாம் பண்டிதரின் ஆராய்ச்சி நூலான கருணாமிர்த சாகரத் திரட்டு, தமிழ் இசை வரலாறு, தமிழ் மருத்துவம், இசையாளர்கள் பற்றிய ஒரு கலைக்களஞ்சியமாக நோக்கப்படுகிறது.[3] இரண்டு பாகங்களாக வெளி வந்த இந்நூலில், மிகவும் அறியப்படாத பல தமிழிசை இராகங்கள் ஆராயப்பட்டு சுமார் 95 பாடல்கள் வெளியிடப்பட்டன.

**இசுலாமியமும் தமிழும்**

இசுலாமியம் எனும் சமயம் கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் அரபு நாட்டில் நபிகள் நாயகம் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இச்சமயம் தோன்றுவதற்கும் கிறித்துவின் பிறப்பிற்கும் முன்பே அரேபியர்கள் தமிழகத்தோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழ் மக்கள் அவர்களைப் பற்றி அறிந்து வைத்திருந்தனர். தமிழ் மன்னர்களும் அரபு நாட்டுக் குதிரைகளின் மீது மோகம் கொண்டிருந்தனர். இத்தொடர்பு இசுலாமிய சமயம் தோன்றிய பின்னரும் நீடித்தது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் கி.பி. 1300 அளவில் வீரபாண்டியனும், சுந்தர பாண்டியனும் வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டபோது தில்லியை ஆண்ட பாதுஷாவின் தளபதி மாலிக்காபூர் சுந்தர பாண்டியனுக்கு உதவுவதாகக் கூறித் தமிழ்நாட்டு அரசியலில் புகுந்தான்.

மதுரை, பாதுஷாவிற்கு அடிமையாகியது இக்காலம் தொடங்கித் தமிழகத்தில் இசுலாமியர் செல்வாக்கு அன்பு அடிப்படையிலிருந்து மாறி ஆதிக்க அடிப்படையில் மேலோங்கியது. மக்கள் தங்கள் வசதிகளுக்காக மதம் மாறத் தொடங்கினர். கிறித்துவத்திற்கு முன்பே இசுலாம் தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கிவிட்டது. இதனால் பழைய மரபுகள் மாறின, புதிய மரபுகள் உருவாகின. இம்மாற்றம் தமிழ் இலக்கியங்களிலும் வெளிப்படத் தொடங்கியது. தில்லியை ஆண்ட முகமதுபின் துக்ளக் காலத்திலிருந்து மதுரையில் பாதுஷாவின் பிரதிநிதிகள் அரசாள்வதும் அரசில் தலையிடுவதும் இயல்பாயிற்று. இந்நிலையில் இசுலாமிய இலக்கியவாதிகள் அரபு, உருது மொழிகளின் இலக்கிய வளத்தைத் தமிழ்மொழியோடு கலந்தனர். பக்திக் காலத்தில் வடமொழிக் கல கலப்பால் தமிழ் வளர்ச்சி பெற்றது போல் இக்காலத்தில் இசுலாமியர் உறவால் தமிழ் வளர்ந்தது.

தமிழ் வளர்த்த இசுலாமியப் புலவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் உமறுப்புலவர், சேகனாப் புலவர், காசிம் புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு,

வண்ணக்களஞ்சியப் புலவர், அலியார் புலவர், செய்குதம்பிப்பாவலர், சவ்வாதுப் புலவர், சையது முகைதீன் கவிராயர், பீர்முகமது அப்பா, கோட்டாறு ஞானியார் சாகிப், சர்க்கரைப் புலவர், முகம்மது உசைன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**உமறுப்புலவர்**

சீறாப்புராணம் இயற்றியவர். தந்தை முகமது நயினார் பிள்ளை. காலம் 1640 1703. அரேபிய நாட்டில் பிறந்த நபி அவர்களின் வாழ்க்கை வரலாறு எனினும் கம்பனைப் போல் தமிழ்க் களத்தையே தனக்குரியதாக எடுத்துக்கொண்டார். தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளை மீறாது காப்பியத்தை அமைத்துள்ளார். இவரை ஆதரித்த வள்ளல் சீதக்காதி. எழுத உதவியவர் சதகத்துல்லா அப்பா அவர்கள்.

இந்நூல் விலாதத்து காண்டம், நுபுவத்து காண்டம், ஹிஜ்றத்துக் காண்டம் என மூன்று காண்டங்களையும், 92 படலங்களையும், 5027 பாடல்களையும் கொண்டது. விலாதத் என்றால் பிறப்பு என்று பொருள். இதில் நபிகளின் பிறப்பு குறிப்பிடப் படுகிறது. நுபுவத்து என்றால் தீர்க்க தரிசனம். நபிகளின் வாழ்க்கையில் (38 வயது முதல் 50 வயது வரை) நடந்த முக்கிய நிகழ்வுகள் விளக்கப்படுகின்றன. ஹிஜ்ரத் நல்லவைக்காக இடம் பெயர்தல் என்பது பொருள். மெக்காவை விட்டு நபிகள் மெதினா சென்ற வரலாறு விளக்கப்படுகிறது.

**சேகனாப் புலவர்**

காலம் 19ஆம் நூற்றாண்டு. சேக் அப்துல் காதிர் நயினார் லெப்பை என்ற பெயரைச் சுருக்கிச் சேகனாலெப்பை என்றனர். காயல்பட்டின இரத்தின -வணிகரின் மகன். 100 செய்யுட்கள் கொண்ட மெக்காக் கலம்பகம் எழுதினார்.

சாகுல் ஹமீது ஆண்டகையின் வரலாற்றைப் புராணமாக்கினார் முகிய் வரலாற்றை 'குத்பு நாயகம்' எனும் புராணமாக்கினார், நபி வரலாற்றை 2044 பாக்களில் திருமணிமாலையாகப் தோத்திரமாலை, சுவர்க்க நீதி, நாகையந்தாதி ஆகிய நூல்கள் பாடியுள்ளார். இவர் அரபி, பார்ஜி, வடமொழி, தமிழ் ஆகியவற்றில் தேர் புலமை மிக்கவர். அட்டபந்தம், நாக பந்தம், கமலபந்தம் ஆகிய சித்தி கவிதைகளையும் பாடியுள்ளார். பாடியுள்

**சர்க்கரைப் புலவர்**

புனித இடமான மெகினாமீது அந்தாதி பாடியுள்ளார். சேதுபதி சமஸ்தானத்தில் புலவராக இருந்தவர், காலம் 17ஆம் நூற்றாண்டு.

**சவ்வாதுப் புலவர்**

இரகுநாத சேதுபதியின் அவைக்களப்புலவர். சர்க்கரைப் புலவரில் மைத்துனர். நபிகள் நாயகத்தின்மீது 'முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். இது தவிர நாகைக் கலம்பகம், ஏகத்திருப்புகழ் நூல்கள் இல் பாடியவை. சமரதவி பாடுவதில் வல்லவர். வசை பாடுவதில் காளமேகத்ை வென்றார் எனச் சில கதைகள் இவரைப் பற்றி உள்ளன. இவரது பிள்ை தமிழ்ப் பாடல்களில் குமரகுருபரரின் தாக்கம் காணப்படும்.

**குணங்குடி மஸ்தான் சாகிபு**

தமிழ் உலகம் நன்கு அறிந்த பெயர் குணங்குடி மஸ்தான். இயற்பெய சுல்தான் அப்துல் காதிறு. இவருடைய பாடல்கள் சந்த நயமிக்கவை. இ அப்துல் காதர் ஜெயிலானியின் வழியைப் பின்பற்றியவர். நபிகல விவசாயியாகக் காணுகின்றார். தாயுமானவரின் தாக்கம் இவர் பாடல்கள் மிகுதி. நபிகளின் பெயர் இருப்பதாலேயே இவரது பாடல்கள் இசுலாமி சமயம் சார்ந்தவை என அறியப்படுகின்றன.

இவர் எழுதிய நூல்கள் நந்தீசர் சதகம், அகத்தீசர் சதகம், மனோன்மனை கண்ணி, முகைதீன் சதகம், நிராமயக் கண்ணி, ஆனந்தக் களிப்பு. சித்த பாடல்களின் சாயல் இவர் பாடல்களில் உள்ளது. சித்து வேலைகள் செ இவரைச் சித்தர் எனக் கூறுவோரும் உண்டு. இவருடைய பாடல்கள தொகுத்தவர் சீயமங்கலம் அருணாசல முதலியார். இவர்மீது அய்யாசா முதலியார் பதிற்றுப்பத்தந்தாதி பாடியுள்ளார். தணிகை சரவணப் பெரும் ஐயர் மஸ்தான் நான்மணிமாலை பாடியுள்ளார். சமயங் கடந்த பற்றி இங்குக் காணமுடிவது மகிழ்ச்சிக்குரியதாகும். பொதுவாக இவர் பா பாடல்களை 'மஸ்தான் சாகிபு பாடல்கள்' என்பர்.

**செய்குதம்பிப் பாவலர்**

இவர் ஒரே நேரத்தில் நூறு செயல்களைச் செய்யும் திறமையால் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் என அழைக்கப் பட்டார்.

நூற்றாண்டில் இன்றுவரை இதுபோன்ற செயல் செய்வாரில்லை எனும் பெற்றவர். இவர் நாஞ்சில் நாட்டிலுள்ள இலங்கடை வள்ளலார் திருவருட்பாவை யாழ்ப்பாணத்து அறிஞர்கள் ஆறுமுக நாவலரும். இந்நிலையில் அவை வென்றவர்செய்குதம்பிப் பாவவர். திரைவேற் பிள்ளையும் மருட்பா எனப் பழித்தனர். சர்ட்பாவே, மருட்பா அன்று என வாதிட்டு

இவர் எழுகிய நூல்கள் திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத் தந்தாதி. திருநாகூர்த்திரிபந்தாதி, நாயகமான்மியமஞ்சரி, நீதிவெண்பா. அழகப்பக் கோவை, ஷம்சுத்தா சீம்கோவை. தமிழ்ப்பணியைப் பாராட்டி தமிழக அரசு 1984இல்

டர்கோவிலில் இவருக்கு மணி மண்டபம் எடுத்தது. இவர் 1950 இல் மறைந்தார் இவருடைய சீரிய நாகைக் கோவை ஆகியவையாகும்.

**வண்ணக்களஞ்சியப் புலவர்**

இவர் ஊர் முதுகுளத்தூர். மீசல் எனும் சிற்றூர். வண்ணங்கள் பல அமைத்துப் பாடும் திறன் பெற்ற தண்டபாணி சுவாமிகளை வண்ணச் சரபம் என்பர். அது போன்று இஸ்லாமிய உலகம் இவரை வண்ணக் களஞ்சியப் புலவர் . எனப் பாராட்டியது. இயற் பெயர் அமீது இபுராஹிம், இராசநாயகம் எனும் துலைப் பாடினார். இந்நூல் கீழக்கரையில் 1807இல் அரங்கேறியது. 46 படலங்களில் 2240 பாடல்களைக் கொண்டு இந்நூல் அமைகிறது.

நபி சுலைமான் எல்லா ஜீவராசிகளுடனும் உரையாடுபவர். காற்றையே அடக்கியதாகக் கூறுவர். இவர்தம் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதே இராசநாயகம். இந்நூல் தவிர குத்புநாயகம், தீன் விளக்கம் ஆகிய எப்பியங்களையும், அலிபாதுஷா எனும் நாடகத்தையும் இயற்றியுள்ளார். இவர் பாடிய முகைதீன் புராணம் சிறப்புமிக்கது.

**காசிம் புலவர்**

இவரின் சொந்த ஊர் காயல்பட்டினம். கி.பி.17ஆம் நூற்றாண்டு. வரகவி என்று போற்றுவர். இவர்பாடிய நூல் திருப்புகழ் எனப்படும் . நபிகள் நாயகம் 'பகரும்" என்று அடியெடுத்துக் கொடுக்க இவர் திருப்புகழ் பாடினார் என்பர். அருணகிரி நாதரைப் பின்பற்றி எழுதப்பட்டது.

**குலாம் காதிறு புலவர்**

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பயின்றவர். காலம் 1833-1908. இவர் இயற்றியவை அரபுத் தமிழ் அகராதி, உமறுபாஷாவின் புத்த சரித்திரம், சமுத்திரமாலை, நாங்க கலம்பகம், நாகூர்ப் புராணம்,மதீனாக் கலம்பகம், மதுரைக் கலம்பகம் முதலியன. நபிகள் மீது இவர் பாடிய மும்மணிக் கோவை சிறப்பானது.

கஸஸ் என்ற அரபுச் சொல்லின் திரிபாகப் பேசப்படும் கிஸ்ஸா எனும் கதை இலக்கிய வகை, தமிழுக்குப் புதிது. தமிழ் கிஸ்ஸா நூற்கள் அரபு, பாரசீக, உருது மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவையாகும். கைத்துரின் கிஸ்ஸா குறிப்பிடத்தக்க நூலாகும். இதைத் தவிர வேறு சில புது இலக்கியங்கள் இசுலாமியர் வரவால் உருவாகின. மாப்.அலா எனும் இலக்கிய வகை தத்துவக் கேள்விகள் அடங்கியது. இது பெரும்பாலும் அம்மானைக்கண்ணிகளால் ஆனது நாலாயிரத் திவ்யப் பிரபந்த உரை போன்று இவை நூறுமஸ்அலா, ஆயிரம்ம அலா என்று அழைக்கப்படுகின்றன. இவ்வகையில் வெண்ணாட்டி மஸ்.அலா சிறப்பானதாகக் கருதுவர். இன்னொரு வகையான இலக்கியம் 'படைப்போ? எனப்படும். இது

இசுலாமைப் பரப்ப ஏற்பட்ட சிறு போர்களைப் பற்றிய இலக்கியம். படைப்போர் இலக்கியத்தில் குஞ்ஞுமுசு லெப்பை காஜி ஆலிம் புலவர் எழுதிய 'இறவு அல் கூல்' சிறப்பு மிக்கது.

சிற்றிலக்கிய வகைகளில் பெரும்பாலானவற்றை இசுலாமிய இலக்கியம் கையாண்டுள்ளது. உலா இலக்கியம் மட்டும் யாண்டும் காணப்படவில்லை. தமிழ் இலக்கிய உலகில் இசுலாமியரின் தொண்டு குறிப்பிடத்தக்க பங்கினைப் பெறுகின்றது.

**வினாக்கள்**

**பகுதி அ** **1X10=10**

1. பிரபந்தம் என்ற சொல்லின் பொருள் யாது?
2. கலம்பகம் எத்தனை உறுப்புகளைக் கொண்டது?
3. நந்த வனத்திலோ ராண்டி...... பாடலைப் பாடியவர் யார்?
4. சித்தர்களின் ஆற்றலில் இரண்டனைக் குறிப்பிடுக.
5. தமிழில் தோன்றிய முதல் உரை நூல் எது?
6. திருக்குறளுக்கு சிறப்பபாக உரை எழுதியவர் யார்?
7. குமரக்குருபரர் பாடிய பிள்ளைத்தமிழ் எது?
8. ஆசுகவியும், சிலேடை பாடுவதிலும் வல்லவர் யார்?
9. 'ஒரு தமிழ் மாணவன்' என்று தம் கல்லறையில் எழுதச் சொன்னவர்?
10. ஒரே நேரத்தில் நூறு செயல்களை செய்யும் வல்லவர் யார்?

**பகுதி ஆ** **5X5=25**

1. பரணி, கலம்பகம்,குறவஞ்சி -குறிப்பு வரைக.
2. இலக்கிய உரையாசிரியர்கள் இருவரை விளக்குக.
3. சித்தர்களின் ஆற்றலை எழுதுக.
4. வீரமாமுனிவரின் தமிழ்ப் பற்றை எழுதுக.
5. குணங்குடி மஸ்தான் சாகிபு, வண்ணக்களஞ்சியப் புலவர் – விளக்குக.

**பகுதி இ** 8X5=40

1. சிற்றிலக்கியங்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து விளக்குக.
2. இலக்கண உரையாசிரியர்கள் – கட்டுரைக்க.
3. பதினெண் சித்தர்களில் அறுவரை – விளக்குக.
4. கிறித்தவம் தமிழுக்கு செய்த தொண்டு – விளக்குக.
5. இசுலாமியம் தமிழுக்கு செய்த தொண்டினைக் கட்டுரைக்க.

## அலகு 4

### பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ்

பத்தொன்பதாம் நூற்றாண்டினை மறுமலர்ச்சிக் காலம் என்பர். அச்சுக்கலை அறிமுகமாகி இலக்கியத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்ட காலம். ஏடுகள் அச்சில் ஏறி அழியாப் புகழ் பெற்ற காலம். ஐரோப்பிய பேராசுக்குக் கட்டுப்பட்டு ஆங்காங்கே சிற்றரசுகளும் ஜமீன்களும் தமிழகத்தை ஆண்ட காலத்தில் பல்வேறு வகையான இலக்கியங்கள் தோன்றின. பதினாறாம் நூற்றாண்டி லேயே அச்சு எந்திரம் அறிமுகமாகியது. அறிமுகமாகிய போதிலும் இரண்டு நூற்றாண்டுகள் இவை மக்கள் கைகளுக்கு வராது பாதிரியார்கள் வசமே இருந்தது. இந்திய மொழிகளில் அச்சிடும் முயற்சி கி.பி. 1577இல் நடந்தது.

முதன்முதல் கிறித்துவ சமயக் கருத்துக்கள் அச்சேறத் தொடங்கின. காலப் போக்கில் தமிழ் இலக்கியங்கள் அச்சேறின. இலக்கிய உலகில் புதியவகை இலக்கியம் வளரத் தொடங்கியது. மொழி பெயர்ப்பு இலக்கியங்களும் வளர்ந்தன. அகராதிக் கலை உருவாகியது. ஐரோப்பியப் பாதிரியார்களும் அறிஞர்களைத் துணையாகக் கொண்டு தமிழைக் கற்று அதன் வழி தங்கள்சமயக் கருத்துக்களைப் பரப்பினர். ஐரோப்பியர்களுடன் இதன் காரணமாகப் பழகிய தமிழ்ப் புலவர்கள் புதிய இலக்கிய வகைகளை அறிந்தனர். ஆங்கிலமும் கற்று அறிவைப் பெருக்கிக் கொண்டனர். இப் பின்னணியில் பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியங்கள் புதிய வளத்தோடு அரங்கேறின.

### இராமானுச கவிராயர்

பிறந்தது இராமநாதபுரம் முகவை. வாழ்ந்தது சென்னை திருக்குறள். குறுந்தொகை, நன்னூல் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். ஜி.யு.போப்பிற்கு ஆசிரியராக இருந்தவர் இராமானுச கவிராயர். மேலும் வின்ஸ்லோவின் ஆங்கிலம் - தமிழ் அகராதி வெளிவரப் பெரிதும் துணையாக

இருந்தார். ஆத்ம போதப் பிரகாசிகை எனும் வடமொழி நூலைத் தமிழ் மொழி பெயர்த்தார். ஆத்திச் சூடி, கொன்றை வேந்தனுக்கு மிக எளிமை உரைதத்தார்.

### சரவணப் பெருமாளையர்

இவர் இராமானுச கவிராயரின் மாணவர். இவரும் விசாகப் பெருமாளையரும் சகோதரர்கள். 1830இல் திருக்குறள் பரிமேலழகர் உரைவை முதன் முதலாக அச்சிட்டார். இவர் உரை எழுதிய நூல்கள் ஆத்திச்சூடி கொன்றை வேந்தன், நன்னெறி, மூதுரை, குறுந்தொகை, வெங்கைக் கோலை பிரபுலிங்க லீலை, திருவள்ளுவ மாலை முதலியன. பதிப்பாசிரியராகவு இருந்துள்ளார்.

**விசாகப் பெருமாளையர்**

நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதியவர். வின்சுலோவின் தமிழ் அகராதித் தொகுப்பில் இவர் பங்கு மிகுதி.

**சரவணப் பெருமாள் கவிராயர்**

இவரது சொந்த ஊர் முதுகுளத்தூர். சிவஞான முனிவரின் மாணவர் சோமசுந்தரம் பிள்ளையிடம் கல்வி பயிலும் பேறு பெற்றவர். சேதுபதியின் அவைக் களத்தில் புலவராய் இருந்தவர். இரட்டைப் புலவர்கள் போன்று நகைச்சுவை உணர்வும், காளமேகம் போன்று வசைபாடும் திறனும் பெற்றவர். இவர் எழுதிய நூல்கள் பணம் விடு தூது, விநாயகர் திருமுக விலாசம், அசுவமேத யாகம்

**மீனாட்சி சுந்தரம் பிள்ளை**

நாளொன்றுக்கு முந்நூறு செய்யுள்கள் பாடிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை கி.பி.1815இல் திரிசிரபுரத்தில் பிறந்தார். இவர் தந்தையார் சிதம்பரம்பிள்ளை சிறந்த கவிஞர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை தம் காலத்தில் சிறந்த தமிழ்ப் புலவர்களாக விளங்கிய விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர், இராமானுசக் கவிராயர் ஆகியோருடன் பழகும் வாய்ப்பினைப் பெற்றவர். திருவாவடுதுறையின் ஆதின வித்துவானாக இருந்து மகா வித்துவான் பட்டம் பெற்றவர்.உ.வே. சாமிநாத ஐயரும், தியாகராயச் செட்டியாரும் இவரது மாணவர்கள். கலியுகக் கம்பன் என்றும் எட்டுக்கம்பன் என்றும் போற்றுவர்.

நூற்றுக்கணக்கான சிற்றிலக்கியங்கள் பாடியுள்ளார். தல புராணங்கள் 16. அந்தாதி 16, பிள்ளைத்தமிழ் 13, மாலை இலக்கியம் 4, கலம்பகம் 2, கோவைச் இயற்றினார் என்பர். இவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் சிறப்பு மிக்கது.

தனியொருவர் பாடிய பாடல்கள் எனும் முறையில் தமிழ் இலக்கியத்தில் மிக அதிக எண்ணிக்கையில் இலக்கியங்களைப் படைத்த சாதனையாளர் இவர் எனலாம்.

**சி.வை.தாமோதரம் பிள்ளை**

பிறந்த ஊர் யாழ்ப்பாணம் சிறுபட்டி. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையருக்கு முன்பே ஒலைச் சுவடிகளைத் தேடிப்பாதுகாத்து, பதிப்பித்த பெருமை இவருக்குண்டு. பல அரிய நூல்களை அச்சேற்றியவர். பதிப்பாசிரியராக இருந்து பதிப்பித்தவர். இவர் இயற்றிய நூல் சிவமகத்துவம் சூளாமணி, கலித்தொகை போன்ற இலக்கியங்களையும் தொல்காப்பியப் பொருளதிகாரம், சேனாவரையம், இறையனார் அகப்பொருள்,வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களையும் பதிப்பித்துள்ளார். இராவ் பகதூர் பட்டம் பெற்றவர்.

**இராமலிங்க அடிகள்**

கி. பி. 1823-1874. சிதம்பரத்தின் அருகிலுள்ள மருதூரில் பிறந்தவர். இவர்தம் பாடல்கள் அருட்பா என வழங்கப்படுகின்றன. இவரது திருவருட்பா 6திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டு, 399 பதிகங்களாக வகைப்படுத்தப்பட்டுள் ளது. 5818 பாடல்கள் கொண்டது. உள்ளத்தை உருக்கும் இவர் பாடல்களா மக்கள் இவரை வள்ளலார் என அழைத்தனர். வாடிய பயிரைக் கண் போதெல்லாம் வாடிய வள்ளலார் வடலூரில் சத்திய தருமச்சாலை, சத்திர ஞானசபை ஆகிய அமைப்புகளை நிறுவினார்.

திருவருட்பா தவிர மனு முறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக ஆகிய உரைநடை நூல்களும் எழுதியுள்ளார். பாடல்கள் பாடியதின் நோக்கத்தை அவர் கூறுகின்றார்.

'ஏன் உரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்

யான் அடையும் சுகத்தினை நீர்தான் அடைதல் குறித்தே'

என நவில்வார். ' நல்ல உள்ளம் கடவுள் நடம்புரியும் கோயில்' என்பார் இறையன்பு எப்படிப்பட்டது என்பதை இவர் பாடலால் உணரலாம்.

'பெற்ற தாய்தனை மகன் மறந் தாலும்

பிள்ளை யைப் பெறும்தாய் மறந்தாலும்

உற்றதேகத்தை உயிர்மறந்தாலும்

உயிரை மேவிய உடல்மறந் தாலும்

கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்

கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்

நற்றவத்தவ ருள்ளிருந் தோங்கும்

நமச்சிவாயத்தை நான்மற வேனே'

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணையாக விளங்கும் இராமலிங்க அடிகளார் தமிழ் வளர்ச்சியிலும், சைவ சமய வளர்ச்சியிலும் தம் வாழ்நாளைச் செலவழித்து புதிய சமரச சன்மார்க்கத்தைத் தோற்றுவித்துத் தம் 57ம் வயதில் மறைந்தார். இவருடைய மார்க்கத்தை இன்றும் பலர் பின்பற்றுகின்றனர். இவர் பாடல்களின் எளிமையைப் பின்னர் வந்த பாரதியாரின் பாடல்களில் காண முடிகிறது.

**கோபாலகிருஷ்ண பாரதியார்**

கீர்த்தனை, கும்மி,சிந்து,கண்ணி போன்ற இலக்கியங்களை இவரி பயன்படுத்தியதால் பாமர மக்களையும் இவர் இலக்கியம் கவர்ந்தது. ஊர் ஆனைத் தாண்டவபுரம். இசை நாடகமாகப் பாடி வந்த நந்தனார் கதையை 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'யாக இயற்றினார். தனிக் கீர்த்தனைகளும் பாடியுள்ளார். இந்நூல் பாமர மக்களிடமும் செல்வாக்குப் பெற்றது. தமிழிசைக்கு இவரால் பெருமை சேர்ந்தது. இவருடைய இசை நாடகங்களின் சந்த நயம் பார்வையாளரைப் பரவசப்படுத்தியது. நந்தனார் தில்லையில் நடராசரை ஆடும் கோலத்தில் கண்டார். உடன் ஆடினார். எப்படி என்பதற்கு இதோ ஒரு பாடல் சான்றாக அமையும்.

குதித்தார் எக்களித்தார் உளங்களித்தார் - பள்ளு

படித்தார் கண்ணீர் வடித்தார் பற்களைக்

கடித்தார் ஒருதரந் துடித்தார் இருதரம் நடித்தார்

இப்படித் தரிசனஞ் செய்தார் நந்தனார் தரிசனம் செய்தாரே!

இசைத்துறைக்குக் கோபாலகிருஷ்ண நிறைவளிப்பதாகும்.

**ஆறுமுக நாவலர்**

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் என அழைக்கப்படுவார் ஊர் இலங்கை யாழ்ப்பாணத்து நல்லூர். இவர்சிதம்பரத்தில் தங்கிச்சைவத்தொண்டு செய்தார் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய, மும்மொழியிலும் புனைம மிக்கவர் இவ து உரை நடை நூல்கள் பள்ளி மாணவர்களுக்கு ஏத்த வகையில் அமைந்துள்ளன. இவரைத் தமிழ் உரை நடையின் தந்தை என்பர்.

இவரின் நன்னூல் காண்டிகை உரை மிகவும் போற்றத்தக்கது பதிப்புலகில் இவரை உ.வே.சாவிற்கு முன்னோடி என்பர். இவர் வில்லிபாரதம், கத்த புராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை முதலான நூல்களைப் பதிப்பித்துத் தமிழுக்கு அருந்தொண்டாற்றியுள்ளார்.

**வேதநாயகம் பிள்ளை**

ஐரோப்பியர் வருகையால் கிறித்துவ மதத்திற்கு மாறிய அறிஞர்களில் வெரும் ஒருவர். சொந்த ஊர் குளத்தூர். மாயூரம் வேதநாயகம் பிள்ளை என அழைக்கப்படுவார். முன்சீப்பாக இருந்தவர். தமிழ் இலக்கியத்தின் முதல் புதினமாகக் கருதப்படும் பிரதாப முதலியார் சரித்திரம் இவர் எழுதியது. மேலும் நீதி நூல், பெண்மதி மாலை, சர்வசமய சமரசக் கீர்த்தனை ஆகிய நூல்களும் இயற்றியுள்ளார்.

**உ.வே.சாமிநாதையர்**

இவர் பிறந்த ஊர் தஞ்சை மாவட்டம். உத்தமதானபுரம் பிறந்த ஆண்டு 1855 சடகோப அய்யங்காரிடம் தமிழ் கற்றார். இவருடைய ஆசான் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையாவார். தமிழ்த் தாத்தா என்றும் உ.வே.சா என்றும் அன்போடு அழைப்பர். தமிழ் ஏடுகளை அழியாது காத்து அச்சில் ஏற்றியவர். கும்பகோணம் அரசுக் கல்லூரியில் பணியாற்றியவர், 1906 இல் மகாமகோபாத்தியாய எனும் பட்டம் பெற்றார். உ.வே.சா 40 நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். 16 உரைநடை நூல்களை இயற்றியுள்ளார். இவர் எழுதிய என்சரித்திரம் ஒரு நாவல் படிப்பது போன்று சுவையானது; நம்பிக்கையை வளர்ப்பது. எனவேதான் இன்றைய அறிஞர்கள் உ.வே.சாவை ஒரு படைப்பாளியாகக் கருதுகின்றனர். இவர் எழுதிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் குரு மீது ஒரு சீடன் கொண்டுள்ள மதிப்பை நன்கு எடுத்துரைப்பது. இவரின் எழுத்து நடை எளிமையானது. படிப்போரைத் தன் வயப்படுத்துவது. பண்டைத் தமிழ் இலக்கியங்களை இவர் தேடியலைந்து பதிப்பித்திராவிடில் அவை கிடைக்காமலே போயிருக்கலாம். கால வரிசைப் படி இவர் பதிப்பித்த நூல்கள் சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகியனவாகும்.

**புதுக்கவிதை**

'கற்பனைகள் ஆசையோடு குதித்தெழும் போது சுவையான கவிதை பிரசவமாகிறது; எண்ணங்கள் தடையின்றி, இதிலிருந்து இதுவரை என்ற வரம்பின்றிப் பிரவாகம் போல் ஓடும் போது அபூர்வமான முத்துக்கள் சிதறுகின்றன' என்பார் கண்ணதாசன். குதித்தெழும் கற்பனைகளுக்கு யாப்புத்

தடையாகிய போது அதனைஉடைத்தெறித்து புது வெள்ளமாய்ப் புறப்பட்டம் தான் புதுக்கவிதை இதனை மு. மேத்தா

'இலக்கணச் செங்கோல்

யாப்புச் சிம்மாசனம்

எதுகைப் பல்லக்கு

மோனைத் தேர்கள்

தனிமொழிச் சேனை

பண்டித பவனி

இவை எதுவுமில்லாத கருத்துக்கள்தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை

எனப்புதுக் கவிதையில் விடைதருவார்.

யாப்பின் கடினம் உணரப்பட்ட போது ஒரு புது முயற்சி உருவானது 'புல்லின் இதழ்கள் என்ற நூலை இயற்றினார். யாப்பின்றி வெளிவந்த இந்நூல் கட்டுப்பாடற்ற கருதப்பட்டது. பிரிட்டனின் ஆளுமையிலிருந்து விடுபட்ட அமெரிக்காவின் சுதந்திர உணர்வாய் இக்கவிதையை அந்நாட்டு மக்கள் கருதினர். யாப்பிலிருந்து விடுதலை எனும் பொருளில் (Free Verse) முதலில் வழங்கப்பட்டது.

யாப்பின்றி மேலை நாட்டு முறையில் தமிழ்க் கவிதையைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற தூண்டுதலில் 1934ஆம் ஆண்டளவில் புதுக்கவிதை முறையைச் சோதனையாக ஆரம்பித்து பார்த்ததாகப் புதுக்கவிதையின் தந்தை எனப்படும் ந.பிச்சமூர்த்தி குறிப்பிடுகின்றார். இக்காலக் கட்டத்திலேயே மணிக்கொடி இதழும் தோன்றியது.மணிக்கொடி எழுத்தாளர்கள் புதுக்கவிதை முயற்சியிலும் ஈடுபட்டனர்.

மணிக்கொடி இதழில் எழுதிய புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன் மணிக்கொடி இதழில் எழுதிய புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன், சி.சு. செல்லப்பா, ந. பிச்சமூர்த்தி போன்றோர் புதுக்கவிதைகளை எழுதினர். இதில் ந.பிச்சமூர்த்தி மட்டுமே நிறைவான வெற்றி பெற்றவர். புதுமைப் பித்தனின் புதுக்கவிதைகளில் எள்ளல் சுவை இருந்தது கவித்துவம் இல்லை. விடுதலைக்கு முன் மணிக்கொடி எழுத்தாளர்களும் தருமு சிவராம், ஷண்முக சுப்பையா போன்றோரும் எழுதிய போதிலும் அதன் வேகம் விடுதலைக்குப் பின்னரே தீவிரமாகியது. மக்கள் மத்தியில் செல்வாக்கான இடத்தைப் பெற்றது. வால்ட் விட்மனிடம் ஈடுபாடு காண்ட பாரதியார் 'வால்ட் விட்மன்' என்ற தலைப்பில் வசன கவிதை முதினார். ந. பிச்சமூர்த்திக்கு முன்பே வசன கவிதையைத் தொட்டு விட்டவர்.

**எழுத்து' காலம்**

மணிக்கொடி கவிஞர்களைப் பெரிதும் பாதித்தவர்கள் படிமவாதிகளே ஹீல்மேதாமஸ் எர்னால்ட் தான் படிமவியல் இயக்கத்தில் இங்கிலாந்து கவிஞர்களில் முதன்மையானவர். அடுத்து ரிச்சர்ட் ஆல்டிங்கடன் அவரது மனைவி ஹில்டா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். புதுக்கவிதைக்கு உரமூட்டிய எஸ்ராபவுண்ட் இந்த இயக்கத்தைச் சார்ந்தவரே. 1906இல் இவரும் ஹில்டாவும் சந்தித்தது புதுக்கவிதை வரலாற்றில் மறக்கமுடியா நிகழ்வாகத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். உலகின் முதல் படிமக்கவிதை 1908 மே 26இல் ஒரு உணவு விடுதியின் விலைச்சீட்டின் பின்புறத்தில் டி.யூ. ஹ்யூமால் எழுதப்பட்டது. தலைப்பு 'கதிரவன் மறைவு ஆகும். இப்படிம யுத்தி தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெரும் வெற்றி பெறவில்லை.

ந. பிச்சமூர்த்தி இதில் ஓரளவு வெற்றி பெற்றார். பின்வந்த தருமு சிவராம், சி. மணி, வைத்தீஸ்வரன், பசவய்யா போன்றோரும் இம்முயற்சியில் ஈடுபட்டனர். மணிக்கொடி நின்று போயினும் அப்பொழுது கிராம ஊழியன் கலாமோகினி போன்ற இதழ்கள் புதுக்கவிதைகளை வெளியிட்டன. இக்காலத்தில் க. நா.சு. வசன கவிதையும் திறனாய்வுக் கட்டுரைகளும் எழுதியதோடு சூறாவளி எனும் இதழையும் வெளியிட்டார். 1942இல் தோன்றிய கலாமோகினி கவிதைகளுக்கு ஊக்கமளித்தது. 1959 சனவரியில் சி.சு. செல்லப்பா அவர்கள் 'எழுத்து' இதழைத் தோற்றுவித்தார்.

எழுத்தின் தொடக்கத்தில் புதுக்கவிதை எழுதியோர் சி.சு. செல்லப்பா, பசுவய்யா (சுந்தரராமசாமி), சி.மணி, தருமு சிவராமு, வைத்தீஸ்வரன் ஆகியோர். இக்காலத்தில் மேலை நாட்டின் பிராய்டிச உளவியல் கோட்பாடுகளுக்குக் கலைவடிவம் காணும் முயற்சியை இவர்கள் மேற்கொண்டனர். இதனை மிகை மெய்மையியல் என்றனர். எல்லாமே பாலியலில் அடங்கும் என்பது ஃபிராய்டின் கொள்கையாகும். க்கோட்பாட்டை மிகுதியும் பின்பற்றிக் கவிதை எழுதியோர் சி. மணியும், ஞமு. சிவராமுவும் எனலாம். எழுத்து இதழ் காலப்போக்கில் சமூக விழிப்புணர்வு கவிதைகளை வெளியிட்டது.

எழுத்துக்காலத்தில் சரஸ்வதி, இலக்கிய வட்டம், நடை, தாமரை, போன்ற இதழ்கள் தோன்றிப் புதுக்கவிதைகளை வெளியிட்டன. ம்1961இல் க.நா.சு தோற்றுவித்த இலக்கிய வட்டம் நல்ல கவிதைகளை வழங்கியது.

**வானம்பாடிக் காலம்**

ஃபிராய்டின் கோட்பாடுகளை எதிர்த்து 1970களில் மார்க்சிய பொருளியல் கோட்பாடுகளைக் கொண்டும், மனித நேயத்தை நோக்கமாகக் கொண்டும் சிலர் புதுக்கவிதைகளை உருவாக்கத் தொடங்கினர். இக்காலத்தில் புதுக்கவிதை புதிய பரிமாணத்தைப் பெற்றது மார்க்சிய சிந்தனைகளை வளர்த்த தாமரை இதழ்களில், தரமான புதுக்கவிதைகள் மலர்ந்தன. தீபம், கணையாழி. தங்கை ஆகிய இலக்கிய இதழ்கள் புதுக்கவிதைகளை வெளியிட்டன. விலையில் வரமடலாக 'வானம்பாடி' இதழ் வலம் வரத் தொடங்கியது. இலக்கியத் தாகம் தேடியலைந்த பறவைகள் இதில் சங்கமித்தன. இதனை வானம்பாடி இதழ் எப்படிக் குறிப்பிட்டது?

'எரிமலையின் உள்மனங்களாய்

அக்கினிக் காற்றில் இதழ்விரிக்கும்

அரும்புகளாய்

திக்குகளின் புதல்வர்களாய்

தேச வரம் பற்றவர்களாய்

அஞ்சாத அமில நதியின்

அலைப் படைகளாய்

மண்ணின் பூக்களாய்

பூமியின் பிரளயங்களாய்

காலத்தின் வசந்தங்களாய்

யுகத்தின் சுவடுகளாய்

நிறங்களின் சிவப்பாய்

மண்ணை வலம்வரும் பறவைகளாய்

விலையிலாக் கவிமடல் வானம் பாடி' எனத் தன்னைப் பறை சாற்றிக்கொண்டது.

புவியரசு, ஞானி, அக்னிபுத்திரன், முல்லை ஆதவன், சிற்பி ஆகியோரே முதன்முதலில் வானம்பாடி இயக்கத்தைக் கண்டோர். பின்னர் இதில் மரபுக் கவிதையிலும் சாதனைப் படைத்த அப்துல் ரகுமான், மீரா, தமிழன்பன்,மேத்தா, சக்திகனல், பிரபஞ்சன், பாலா ஆகியோர் வானம்பாடியில் ஐக்கியமாயினர்.

இக்காலத்தில் வானம்பாடியில் இணையாது ஆனால் புதுக்கவிதையில் தனிமுத்திரை பதித்தோர் இருவர். அவர்கள் நா. காமராசன், இன்குலாப் ஆவர்.

புதுக்கவிதை என்றால் இலக்கணமே இல்லை; எப்படியும் எழுதலாக என்பது தவறாகும். புதுக்கவிதையின் முன்னோடிகளில் எஸ்ராபவுண்ட் புதுக்கவிதையின் இலக்கணம் போல் மூன்றனைக் குறிப்பிடுகின்றார்.

1. எடுத்துக் கொண்ட பொருளைச் சுற்றி வளைக்காது நேராக அணுகுதல்,

2. தேவையற்ற ஒரு சொல் கூட வராதிருத்தல். 3.கடினயாப்பை நீக்கி இசையின் எளிமையைப் போற்றுதல் என குறிப்பிடுகின்றார்.

வானம் பாடிக்குப் பின்னர், புதுக்கவிதைகளைப் பற்றி ஆராவின் அது ஒரு தனிக்கட்டுரையாக அமையும். புதுக்கவிதைக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ந. பிச்சமூர்த்தி, வைத்தீஸ்வரன், புமணி, தருமுது சிவராமு, நா.காமராசன், இன்குலாப், சிற்பி, அக்னிபுத்திரன், புவியரசு, ஞானி ஞானக்கூத்தன், அப்துல் ரகுமான், மேத்தா, மீரா, சண்முக சுப்பையா, பசவய்யா தமிழன்பன், அபி. கங்கை கொண்டான், சக்திக்கனல், இரவீந்திரன், பா செயப்பிரகாசம், பாலா, கோ. இராசாராம், கல்யாண்ஜி, கலாப்பிரியா விக்ரமாதித்தன், மனுஷ்ய புத்திரன், வைரமுத்து, ஆத்மாராம், சேரன் தேவதேவன், கந்தர்வன், பழமலய் ஆகியோரைக் குறிப்பிடலாம். புதுக்கவிதையில் ப பல திறனாய்வு நூல்களும் தோன்றியுள்ளன.

நா.வானமாலை வல்லிக்கண்ணன், பாலா, இல.செ. கந்தசாமி, ந. சுப்பு ரெட்டியார், ஆ செகந்நாதன், தமிழன்பன், ந.வீ. செயராமன் ஆகியோரின் திறனாய்வு நூல்கள் குறிப்பிடத்தக்கன.

1930-45 மணிக்கொடியும், 1950 முதல் 1971 வரை எழுத்துப் பரம்பரையும், 1970முதல் வானம் பாடியும் புதுக்கவிதை உலகை ஆக்கிரமித்தன. வால்ட் விட்மனும் எஸ்ரா பவுண்டும், பிரான்ஸ் நாட்டின் ரிம்போவும் வெளிப்படுத்திய இப்புதிய உலகத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய இருவர் பாரதியும், பிச்சமூர்த்தியும். இவர்கள் காலம் தான் புதுக்கவிதையின் தொடக்ககாலம் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. இவர்களால் தமிழ்க் கவிதை உலகில் 'இதுதான் கவிதை ' எனும் இலக்கணம் மாறியது. எதுதாள் கவிதை இல்லை? எனும் புது இலக்கணம் உருவாகியது. இதனை ந.வீ. செயராமன் 'மனம் என்னும் இருட்டறைக்குள் முடங்கி முடமாகக் கிடந்த கற்பனைகள். வானம்பாடிகளாய்ச் சிறகடித்து இலக்கிய வானில் பறக்கின்றன. இன்றைய புதுக்கவிதை உலகின் அப்பட்டமான உண்மை நிலை இது' என்பர்.

**பாரதியார்**

பாரதியின் வசன கவிதை புதிய முயற்சி எனும் வகையில் வரவேற்கத்தக்கது.

'எல்லா உயிரும் இன்பமெய்துக! எல்லா உடலும் நோய் தீர்க்க!

எல்லா உணர்வும் ஒன்றாத லுணர்க!

'தான்' வாழ்க!

அமுதம் எப்போதும் இன்பமாகுக!

பாரதியின் இந்த வசன கவிதை யாப்பறியாக் கற்பனை மிக்கோரைக் கவிதைபாட அழைத்தது. இவரின் தாக்கத்தால் அடுத்துப் பிச்சமூர்த்தி புதுக்கவிதையில் காலூன்றினார்.

**ந.பிச்சமூர்த்தி**

புதுக்கவிதையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் முதன்மையானவர். மணிக்கொடி குழுவைச் சார்ந்தவர். புதுக்கவிதை முன்னோடிகளாகப் புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா வல்லிக்கண்ணன் ஆகிய நால்வரையும் குறிப்பிடலாம். ஆயின் இத்துறையில் வெற்றி பெற்றவர் ந.பிச்சமூர்த்தியாகும்.

இவரது புதுக்குரல்கள் கவிதைத் தொகுதியே தமிழின் முதற்புதுக்கவிதை தொகுதியெனலாம். சீனிவாசனின் மணிக்கொடியிலும் பின்னர் சி.சு. செல்லப்பாவின் எழுத்திலும் இவரது கவிதைகள் வெளிவந்தன. இவர் எழுதிய நூல்கள் புதுக்குரல்கள், காட்டு வாத்து (1962), கிளிக்குஞ்சு, பிச்சமூர்த்தி கவிதைகள், பூக்காரி, வழித்துணை (1964)

காலை விடியலை 'உஷை' (விடியல் ) எனும் தலைப்பில் நம் கண்முன் கொண்டுவருகிறார்.

கிழக்கென்னும் அரங்கத்தில்

உஷை வந்து நின்றாள்

செம்பட்டுச் சல்லடம் சொகுசாக

உடுத்தி செம்மலர்க் கூடையை

இடுப்பில் இடுக்கி

சதங்கைகள் சிலம்ப

கீழ்வானில் முளைத்தாள்

**புதுமைப்பித்தன்**

சிறுகதை, உரைநடை, புதுக்கவிதை எனத் தமிழில் பல இலக்கியங்களைத் தந்தவர். புதுக்கவிதையில் இவர் வெற்றி பெற்றதாகக் கூற முடியாவிட்டாலும் தொடக்க கால முயற்சி எனும் வகையில் இவை சிறப்படைகின்றன. தம் முதற்கவிதையைப் புதுமைப்பித்தன் புனைபெயரிலேயே வெளியிட்டார். கடவுளுக்குக் கண்ணுண்டு என்பதே அக்கவிதையாகும். இவரது கவிதை கிராம ஊழியனிலும் வெளிவந்தது. மகாகாவியம் என்ற தலைப்பில் வரும் கவிதை

காளான் குடை நிழலில்

கரப்பான் அரசிருக்க

வேளாண் குடியூரின்......

வசனக்கவிதை என்று கூறமுடியாத அளவு மரபுக் கவிதையின் ஓசை நயத்தையும் பெற்றுள்ளது.

**எஸ். வைத்தீஸ்வரன்**

பாலியல் கோட்பாட்டுக் கவிதைகள் மிகுதி. எழுத்தில் எழுதியவர். அழகை ஆதரிப்பவர் உரிமை,உதயநிழல், சகுனம், சவாரி, பயம் போன்ற கவிதைகள் நயமிக்கன.

**சி.மணி**

எழுத்தில் தொடக்கநிலையில் எழுதியவர். ஃபிராய்டின் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர். நரகம் என்ற நெடுங்கவிதை பாராட்டு பெற்ற கவிதையாகும். இவரது கவிதைகள் வரும் போகும். ஒளிச்சேர்க்கை என இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

**சி.சு. செல்லப்பா**

எழுத்து இதழின் ஆசிரியர். மணிக்கொடிக்குப் பின் புதுக்கவிதையை வளர்த்த இதழ்களில் குறிப்பிடத்தக்கது எழுத்தாகும். இவரது கவிதைத் தொகுதிகள் நீ இன்று இருந்தால், மாற்று இதயம் என்பன.

**தருமு சிவராமு**

படிம இயல் கவிதைகளில் நாட்டம் கொண்டவர்.ஃபிராய்டின் கொள்கையில் ஈடுபாடு மிக்கவர். எழுத்துப் பத்திரிக்கையில் இவர்கவிதைகள் வந்தன. படிமமும் குறியீடும் கொண்ட இவரது கவிதைகள் எடுத்தவுடன் புரிந்து கொள்ளும் தன்மையற்றது. கைப்பிடியளவு கடல், மேல் நோக்கிய பயணம் கண்ணாடியுள்ளிருந்து ஆகியவை இவரது கவிதை நூற்களாகும். இவரது இன்னொரு பெயர் பிரமிள். 1998இல் இவரது கவிதைகள் முழுவதும் பிரமிள் கவிதைகள் என வெளிவந்துள்ளன. இவரது 'விடிவு' எனும் கவிதை படிமக் குறியீட்டிற்குச் சிறந்த கவிதையாகத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**பசுவய்யா**

படிமக்கவிஞர். இயற்பெயர் சுந்தரராமசாமி. கருத்தாழமும் கேலியும் கொண்ட இவரது கவிதைகள் தனித்தன்மை வாய்ந்தவை. இவரது படைப்புகள் நடுநிசி நாய்கள், யாரோ ஒருவனுக்காக என வெளிவந்துள்ளன. 107 கவிதைகள் என்ற பெயரிலும் இவர் கவிதைகள் வந்துள்ளன.

**உரைநடை இலக்கிய வரலாறு**

தமிழில் உரைநடை தோன்றிய காலத்தை இதுதான் என்று இட்டமிட்டுக் கூற முடியாது. தொல்காப்பியத்தில் உரைநடை பற்றிய குறிப்புகள் உள்ளன. உரைக்கப்படுவது உரை என்பர். ஆயின் உரை என்பதற்குப் பொருள்கள் உள்ளன. பொருளின் தன்மையை உள்ளவாறு உரைப்பது உரையாகும். செய்யுள் உரையோடு தொடர்புடையதாகக் கருதப்பட்டது. 'உரைச் செய்யுள்' என்ற வழக்கை அ.மு.பரமசிவானந்தம் சுட்டிக்காட்டிச் செய்யுள் வடிவமும் உரையாகக் கொள்ளப்பட்டது என்பர். தொல்காப்பியம்

'தொன்மைதானே

உரையொடு புணர்ந்த பழமை மேற்றே'

என்கிறது. எனவே இதனால் உரைநடை வடிவம் பழமையானது என்பது விளங்கும். தமிழ்ப் பேரகராதியும் செய்யுள் என்பதற்கு உரை என்றும் பொருள் கூறுகிறது. (Tamil Lexicon, Vol III P.1602) நமக்குக் கிடைத்த முதல் உரைநடையாகிய இறையனார் களவியல் உரையும் செய்யுள் அமைப்பு போலவே உள்ளது. பழங்காலத்தில் இராமசரித்திரம், பாண்டவ சரிதம், பெருந்தேவனார் பாரதம், தகடூர்யாத்திரை போன்ற நூல்கள் உரைநடையில் இருந்தன என உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியம் உரை பற்றிக் குறிப்பிடினும் சிலப்பதிகாரத்திலேயே உரைவார்த்தைக் காண முடிகின்றது. 'உரைபெறு கட்டுரை ' 'உரைப்பாட்டுமடை' 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப் பலவாறு பாராட்டப் பெறும் சிலப்பதிகாரம் உரைக்கு ஏற்றம் தருகின்றது.

சிலப்பதிகாரத்தையடுத்து இரண்டாம் நூற்றாண்டில் ஓர் உரைநடை நூல் தோன்றியது. ஆயின் அவ்வுரை நடை செவி வழியாக இருந்து கி.பி எட்டாம் நூற்றாண்டில் நூல் வடிவமாகி நக்கீரனாரின் இறையனார் களவிய உரை என்று ஆயிற்று. இறையனார் களவியலுரைக்குப் பின்னர்ப் பழை நூல்களுக்கு உரையெழுதுதல் மிகுதியாகியது. இலக்கண நூல்களுக்கும், இலக்கியங்களுக்கும் உரை எழுதும் முறை வளர்ந்தது. இவர்கள் உரையாசிரியர்கள் எனப் போற்றப்பட்டனர், காளப் போக்கில் வேற்றுமெ கலப்பினால் மணிப்பிரவாள நடை தோன்றியது. பின்னர் தெலுங்கு, உருது இசுலாமியர், ஐரோப்பியர் மூ புதியதோர் உரைநடை தமிழில் வளரத் தொடங்கியது. கல்வெட்டுக்கு இவற்றின் தாக்கத்தால் உரைநடையை வளர்த்தன. சங்ககால நடுகல் முறையே பின்ன கல்வெட்டாய் வளர்ந்தது. இவற்றில் பிழைகள் மிகுந்திருந்தன. காரண கல்வெட்டு எழுதுபவன் போதிய தமிழ் அறிவு பெறாமையே எனலாம் ஐரோப்பியர் காலத்தில் பாதிரிமார்களின் கடிதங்கள் அக்கால உரைநடையி போக்கினை உணர்த்துகின்றன.

ஐரோப்பியர்கள் பிற நாட்டு மக்களை வசப்படுத்த எளிய வழி அவர் தம் மொழியைக் கற்று அதில் உரையாடுத் என அறிந்திருந்தனர். அவர்களின் இந்தக் கோட்பாட்டால் தமிழ் இலக்கியத்தில் உரைநடை வேகமாக வளர்ந்தது. தமிழ் அறிஞர்கள் சிறந் உரைநடை நூல்கள் எழுதுவதற்கு வழிகாட்டியாய் அமைத்தது ஐரோப்பியர்களால் அச்சு எந்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட போது சமயம் சார்ந்த உரைநடை நூல்கள் வெளிவரத் தொடங்கின.

இந்தியாவிலேயே முதன் முதல் அச்சான நூல் தமிழ் நூல் என்பறு பெருமைக்குரியது. கேரளாவின் கொல்லத்தில் செய்யப்பட்ட எழுத்துக்களைய கொண்டு அம்பலக் காட்டில் 1578ம் ஆண்டு கத்தோலிக்கர் நூலாகத் தம்பிரான் வணக்கம் எனும் இந்தியாவின் முதல் நூல் தமிழில் அச்சேறியது. இதில் மாறுபட்ட கருத்து உள்ளது. கி.பி.1575இல் முதல் தமிழ் நூல் அச்சேறியது என்பர் எஸ். வையாபுரிப்பிள்ளை. 1577இல் வெளிவந்த கிறித்து வேதோபதேசம் முதல் நூல் என்பர் அ.மு.பரமசிவானந்தம். தமிழ் நாட்டின் தரங்கம்பாடியில் தங்கியிருந்த மேலை நாட்டறிஞர் சீகன் பால்குஜயர் (163. 1719) நல்ல தமிழ் நூல்களை அச்சிட்டு உதவினார். 1786இல் முதன் முதலாக சென்னை வேப்பேரியில் அச்சகம் தோன்றியதும் பல உரைநடை நூல்கள் தோன்றின.

தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த மேலை நாட்டு அறிஞர் கர்னல். மெக்கன்சியின் பண அளவிடற்கரியது. கிட்டத்தட்ட 38 ஆண்டுகள் தமிழில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து அவற்றைப் பதிவு செய்தவர். கி.பி.1828இல் பேராசிரியர் வில்சன் அவர்கள் மெக்கன்சியின் குறிப்புகளை நூலாக வெளியிட்டார்.கி.பி. 1865 இல் ஜான் மொர்டெக் அவருக்கு முன் தமிழில் வெளிவந்த நூல்களை எல்லாட் தொகுத்தும் வகுத்தும் பகுத்தும் நல்ல முன்னுரையுடன் ஒரு தொகுதியினை வெளியிட்டார். அக்காலத்தில் தமிழுக்குச் செய்த சிறப்பான பணி இதுவாகும். இவற்றில் பெரும்பாலான நூல்கள் உரைநடை நூல்களாகும்.

இன்று எழுதுகின்ற உரைநடை அளவிற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு திருக்கோவையாருக்குப் பேராசிரியர் எழுதிய உரை சிறப்பாக உள்ளது. 'திரு' என்பதற்கு அவர் கூறும் விளக்கம் நுட்பமாகவும் நயமாகவும் உள்ளது.

**பாரதியார்**

கவிதை உலகில் பெரிதும் பேசப்படும் பாரதியாரின், உரை நடை வீச்சும் சிறப்பு மிக்கது. பாரதியின் கட்டுரைகளில் சிறு கதையின் வேகத்தைக் காண முடியும். சின்ன சங்கரன் கதை, சந்திரிகையின் கதை, ஞானரதம், ஆறில் ஒரு பங்கு போன்ற பாரதியின் படைப்புகள் கதை சொல்லும் உத்தியோடு அவரின் செம்மாந்த உரை நடையினையும் விளக்கும். பத்திரிகைகளில் இவர் எழுதிய கட்டுரைகள்

இவரது நடையின் வலிமையைக் காட்டும். அவரே உரைநடை எப்படி அமைய வேண்டும் என்கிற போது 'கூடியவரை பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி' என்கிறார்.

**மறைமலையடிகள்**

தனித்தமிழ்ச் சிந்தனையாளர். வேதாசலம் எனும் பெயரைத் தனித்தமிழில் மறைமலை என மாற்றிக் கொண்டார். தனித் தமிழ் இயக்கம் இன்று இந்த அளவிற்கு வளர இவரே காரணம், சென்னை கிறித்துவக்

கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். 35 நூல்கள் எழுதியுள்ள இவரது முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி இர றெத்த ஆராய்ச்சி நூல்கள், இவர் எழுதிய குமுதவல்லி நாடகம் தனித் அமைந்தது. மாணிக்கவாசகர் வரலாறும் கால ஆராய்ச்சியும் மிகச்சி கிறனாய்வு நூல். சாகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர் சைவப் பற்றுமிக்க இவர் பழத்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் ஆற்றிய உரை, நூலாக வந்து சைவ சமயத்தின் மேன்மை எடுத்துரைக்கின்றது.

இவருடைய உரைக்கு ஓர் எடுத்துக்காட்டு பேரழகாற் சிறந்த ஓர் தான் போர்த்தியிருந்த நீலப்பட்டாடையினைச் சிறிது சிறிதாக நீக்கி, பின் அதனைச் சுருட்டிக் கீழே எறிந்து விட்டுத் துயில் ஒழிந்து, ஒளி விளக்கு தன் முகம் காட்டி எழுந்ததை யொப்ப, இருட்கூட்டம் சுருண்டு மடங்கி ஐை கடலிற் சென்று அடங்கிவிடுமாறு இளைய ஞாயிறு உருக்கித் திரட்டிய பகம் பொற் திரளைப் போலத் தளதள வெனக் கீழ்த்திசையில் தோன்றவும். (முல்லைப் பாட்டு ஆராய்ச்சி)

**பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்**

நற்றிணைக்கு இவர் எழுதிய உரை மிகுந்த பாராட்டினைப் பெற்றது. மிக நுட்பமாகவும் ஆழமாகவும் செறிவாகவும் அமைந்தது. பல நூல்களும் எழுதியுள்ளார்.

**செல்வக்கேசவராய முதலியார்**

பண்டிதமணி கதிரேசஞ்செட்டியாரின் ஆசிரியர். மறுப்புரைகள் எழுதுவதில் பெயர் பெற்றவர். தமிழில் முதன் முதலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். கம்பநாடர், கண்ணகி கதை, திருவள்ளுவர், வியாச மஞ்சரி, தமிழ் வியாசங்கள் எனப் பல உரைநடை நூல்களை எழுதியவர். அக்பர், ராபின்சன் ஆகியோரின் வரலாற்றை உரைநடையில் எழுதியவர்.

**திரு.வி.க**

தமிழ்த்தென்றல் திரு. வி. க. வின் நடை பொதிகைத் தென்றல் போல் மனத்தை மகிழ்விப்பது. இவர் ஊர் திருவாரூர். தந்தை பெயர் விருத்தாசல முதலியார்.ஊர்

பெயரையும் தந்தை பெயரையும் இணைத்துத் திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் என அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணம் கதிரை வேற்பிள்ளையிடம் தமிழ் பயின்றவர்.

தமிழ்நாட்டில் தொழிற்சங்கம் தோன்ற முன்னோடியாய் விளங்கினார். ரைநடையிலும், கவிதையிலும் தம் புலமையைக் காட்டினார். கிறித்துவின் அருள்வேட்டல், திருமால் அருள் வேட்டல், முருகன் அருள்வேட்டல் கியவை இவர் படைத்த கவிதை நூல்கள். உரைநடையின் பல்வேறு எங்களையும் தொட்டுப் பார்த்தவர். பெண்களை மதிக்கும் எண்ணம். கொண்ட பெரியார். இவரது பெண்ணின் பெருமை அன்றே பெண்ணியம் யது காந்தியடிகளின்பாற் கொண்ட அன்பை 'மனித வாழ்க்கையும் ஞீதியடிகளும்' என்னும் நூல் விளக்கும். முருகள் அல்லது அழகு சிறந்த ாய்ச்சி நூல். இவை தவிர ' இளமை விருந்து'. 'இமயம்' இவரது ஆகிய நூல்களும் சிறந்த உரைநடை நூல்கள்.

தமிழ் உரைநடையின் தந்தை எனப் போற்றப்படுபவர். வைப்பற்று மிக்க இவர் பெரிய புராணத்திற்குக் குறிப்புரையும். மசவத்தின் சமரசம், சைவத்திறவு கோல் ஆகிய நூல்களையும் மழுதியுள்ளார். தமிழ்த்தென்றலும், தமிழ்ச் சோலையும் இவரது உரைநடைத்திறனுக்கு உரை கல்லாக விளங்குவன. 1917இல் தேசபக்தன் இதழில் ஆசிரியராகவும் இருந்தார். ஸ்பென்சர் கம்பெனியிலும் வேலை பார்த்தார். வெஸ்லி கல்லூரியிலும் பணிபுரிந்தார். பலவகைப்பட்ட அனுபவமே இவரைத் தொழிற்சங்கத்தில் முன்னிலைப்படுத்தியது எனலாம். 38க்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். இவரது உரைநடைக்கு ஒரு சான்று....

'ஆல மரநிழலில் அமர்வேன், ஆல் என் விழுதைப் பார் அந்த அரசுக்கு இஃது உண்டா? என்னும் ... வேம்பு' என் நிழல் நலஞ் செய்யும். என் பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா என்னும்...மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலை மீது இவர்வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றும் முற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்'

### வ.உ. சிதம்பரம்பிள்ளை

கப்பலோட்டிய தமிழர், விடுதலை வீரர், தியாகி என்ற அளவிலே வ.உ.சி. அவர்களைப் பலரும் அறிந்து வைத்திருப்பர். அவர் நூலாசிரியர் என்பது பலர் அறியாதது. திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளம் தம் சுயசரிதையைச் செய்யுளில் எழுதியவர். பத்திரிகை ஆசிரியராக இருந்து நூல்களை மொழி பல கட்டுரைகள் எழுதியுள்ளார். ஜேம்ஸ் ஆலனின் நூ பெயர்த்து மூன்று தலைப்புகளில் சிறந்த உரைநடையாக வெளியிட்டவர் மெய்யறிவு, மெய்யகம் இவர் எழுதிய நீதி நூல்கள். இவர் எழுதிய வள்ளியம்மை சரித்திரம் நல்ல வரலாற்று நூல்.

**இராஜாஜி**

கவர்னர் ஜெனரல், தமிழ்நாட்டின் முதல்வர் எனப் பல பதவிகள் வகித்தவர். உரைநடை இலக்கியத்தில் இவர் பெயர் குறிப்பிடத்தக்கது. வியாசர் விருந்து எனும் தலைப்பில் மகாபாரதத்தைப் பாமரரும் ம் படிக்கும் வகையில் உரைநடையாக்கியுள்ளார். சக்கரவர்த்தி திருமகள் எனும் தலைப்பில் இராமாயணத்தை உரைநடையில் தந்துள்ளார். திருமந்திர விளக்கம், பஜகோவிந்தம் சிறந்த ஆன்மீக நூல்கள். சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

**சங்கு சுப்பிரமணியன்**

சங்கு எனும் பத்திரிக்கை நடத்தியதால் இப்பெயர் பெற்றார். சிறந்த கட்டுரையாளர். உரைநடை இலக்கியத்தில் இவரது நடை தனியானது. சுவையானது. வாஸ்கோடகாமா பற்றிப் பலர் பலவிதமாக வரலாறு எழுத சங்கு சுப்பிரமணியம் குறிப்பிடுவது நகைச்சுவையோடு சிந்திக்கத்தக்கது.

'மிளகைத் தேடிவந்த வாஸ்கோடகாமா நம் தலையிலேயே மிளகாய் அரைத்துச் சென்றதை இந்திய தேச சரித்திரத்தில் படிக்கலாம்....' என்பர்.

**எஸ்.வையாபுரிப்பிள்ளை**

சொந்த ஊர் திருநெல்வேலி. திருவனந்தபுரத்தில் தொடக்க காலத்தில் வழக்கறிஞராக இருந்தார். 1926இல் தமிழ் லெக்சிகன் பொறுப்பை ஏற்றார். வையாபுரிப் பிள்ளை 19 ஆய்வு நூல்கள் எழுதியுள்ளார். சிறுகதை நாவல் எழுதும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். உரைநடை இலக்கியத்திற்கு இவர் ஆற்றிய பணி சிறப்பு மிக்கது. இவரது கால ஆராய்ச்சி நூல்களில் கருத்து வேறுபாடு இருப்பினும் அவற்றின் திறனாய்வுப் போக்கை யாரும்

தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நூல்கள், நாடகம் எழு பெற்றவர். சிறுகதை எழுத்தாளர். படைப்பாற்றது வெற்றி பெ இலக்கியத்திறனும், பேச்சுக்கலையும் கொண்டு தமிழ்மக்களால் பேர எனப் போற்றப்பட்டவர்.

**ரா.பி. சேதுப்பிள்ளை**

பேச்சுத்தமிழ், எழுத்துத் தமிழ் இரண்டிலும் வித்தகர், இலக்கிய இன்பம் தொனிக்கப் பேசுவதில் வல்லவர். சென்னை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப்பேராசிரியர். இவரும், பேரறிஞர் அண்ணாவும் சமகாலத்தவர்கள். இருவர் பேச்சும் தமிழ் மக்களை வெவ்வேது கோணங்களில் கவர்ந்தன. சொல்லின் செல்வர் பட்டம் பெற்ற இவர் பு நூல்கள் எழுதியுள்ளார். தமிழில் அக்காலத்தில் பட்டம் பெற்ற மூதறிஞர் ாரும் பேரும், வேலும் வில்லும், தமிழ் விருந்து, காமிழின்பம் சிலப்பதிகார நூல்நயம், திருக்குறள் நூல்நயம், வீரமாநகர், கால்டு வேலம் எனப் பல நூல்கள்

எழுதியுள்ளார். இவரின் தமிழின்பம் சாகித்திய அகாடம் விருது பெற்றது. தமிழகத்தின் ஊர்களைப் பற்றிய சுவையான நகைத் சுவையோடு கூடிய நூல் ஊரும் பேரும். இன்றைய மாணவர்கள் கட்டாயம் படித்துப் பயன் பெற வேண்டிய நூல்.எதுகை, மோனை நயமிக்க அவர் பேச்சிலிருந்து இதோ ஒருபகுதி ...

கடலே! அகத்தியர் பரப்பில் அடுக்கடுக்காக உயர்ந்து ஓங்கிநின்ற குமரி என்ற பெருமலையும் உன் பாழும் வயிற்றில் பட்டு ஒழிந்ததே! ஐயோ நீ எங்கள் மண்ணைக் கடித்தாய்! ஆற்றைக் குடித்தாய் ! மலையை முடித்தாய் இப்படி எல்லாவற்றையும் வாரி எடுத்து வயிற்றில் அடக்கும் உன்னை வாச் என்றழைப்பது சாலவும் பொருத்தம்'.

**மு.வரதராசனார்**

தமிழ் இலக்கியச் சோலையில் புதிய மணம் பரப்பிய தென்றல் தனித்தமிழ் நடையில் புதினங்கள் பல படைத்துள்ளார். மொழித்துறையில் மொழி நூல், மொழி வரலாறு எழுதினார். சங்க இலக்கியங்களை எளிய தமிழில் மக்களுக்கு விருந்தாக்கியவர். சங்க இலக்கியம் பற்றிப் பாமரரும் பேசச் செய்தவர். சிலம்பின் பாத்திரப்படைப்புகள் இவர் எழுத்தால் உரம் பெற்றன. இவரது இலக்கியமரபு, இலக்கியத்திறன், இலக்கிய ஆராய்ச்சி * மூன்றும் சிறந்த இலக்கியத் திறனாய்வு நூல்கள். காந்தியடிகள் இளங்கோவடிகள், பெர்னாட்சா ஆகிய மூன்றும் தனி மனித வரலாற்றை விளக்கும் ஒப்பற்ற நூல்கள் இவர் எழுதிய திருக்குறள் தெளிவுரை இன்றுவரை நூல் விற்பனையில் சிறப்பிடம் பெற்று வருகிறது. இவரை அறிஞர்களும், மாணவர்களும் மு.வ என்று அழைப்பர்.

**சிறுகதை**

கதை சொல்தலும் கேட்டலும் காலம் காலமாக நடந்து வருவன தொல்காப்பியர் காலத்திலேயே செவிலித்தாய் கதை கூறும் முறை இருந்துள்ளமையை

'பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும்

பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்'

என்னும் தொல்காப்பிய வரிகளோடு உரையாசிரியர்கள் தரும் உரை விளக்கும். ஆயின் வை கதைக்கூறுகளே. சிறுகதைகளல்ல.

வரலாற்று அடிப்படையில் நோக்கினால் நாவலுக்குப் பின்னரே சிறுகதை ன்றியது எனலாம். தமிழ் இலக்கியத்திலும் நாவலுக்குப் பின்னரே சிறுகதை

ன்றியுள்ளது.கி.பி. 1876இல் 'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவல் தோன்றிக் டத்தட்ட 35 ஆண்டுகளுக்குப் பிறகே 1910இல் வ.வே.சு ஐயரின் சிறுகதை னத்தங்கரை அரசமரம்' தோன்றியது.

சங்ககால அக இலக்கியங்கள் செய்யுள் வடிவில் இருந்த போதிலும் சிறந்த தைகளின் பண்புகளைக் கொண்டிருந்தன. ஒரு நல்ல கவிதைத் துணுக்கு நல்ல தையாக மலரும் என்ற அகிலனின் கூற்று இங்கு எண்ணத்தக்கதாகும். பிரபல தாளர் சுஜாதா ஒரு பேட்டியில் தனக்குப் பிடித்த சிறுகதை எது என்று கேட்ட இதுவரையில் நான் படித்த சிறுகதைகளில் எனக்குப் பிடித்தது தொகையில் வரும் 'சுடர்த்தொடீஇ கேளாய்...' எனும் பாடல் நுட்பமாய் கும் கதையே' என்று கூறியுள்ளதும் சங்க கால அக இலக்கியங்களின் தத் தன்மையை விளக்கும்.

பக்திகாலம், காப்பிய காலம் என்பது போல் இருபதாம் நூற்றாண்டினைச் தக் காலம் எனக் கணிப்பின் தவறன்று. அந்த அளவிற்குச் சிறுகதைகள் பள்ளன. சிறுகதை இல்லையேல் வார இதழ்கள், மாத இதழ்கள் இல்லை லை உள்ளது. நாவல் எனும் பெருங்கதை நெடிய திருமால் எனின் சிறுகதை ன் வாமன அவதாரம் எனலாம். சிறிய அளவில் பெரிய நிகழ்வுகளைத் டினம். எனவேதான் சிறந்த சிறுகதை எழுதுவது என்பது நாவலைவிடக் கடினமானது என்பர்.

சிறுகதையின் பிறப்பிடம் அமெரிக்கா இதற்கு முன்னோடி அமெரிக்காவின் எட்கர் ஆலன் போ என்பர். இவர் சிறுகதையின் இலக்கணமும் கூறுகின்றார். சிறுகதையின் முதற்வாக்இயமே படிப்போரை ஈர்த்து விட வேண்டும் எனும் கொள்கையினர் ஆலன்போ. சிறுகதையின் தொடக்கமும் முடிவும் குதிரைப் தய போல் இருக்கவேண்டும் என்பர் செட்ஜிக்விக் எனும் செர்மனிய அறிஞர் உணர்ச்சியையொட்டி எழும் சிறுகதைகள் வெற்றிபெறும். கரு, பண்பு, உணர்வு இம்மூன்றும் இழையோடி மெருகேறி நிற்பது சிறுகதை, அனுபவம் நிறைந்த ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாவில் ஒரு சிறுகதையாவது எழுதமுடியும் என்பர் டாக்டர்.மு.வ.அவர்கள்.

சிறுகதையின் முன்னோடியாக எட்கர் ஆலன்போ குறிப்பிடப்படினும் அமெரிக்க எழுத்தாளர் வாசிங்டன் இர்விங் எழுதிய ரிப்வேன் விம்பிள்' (Rip Van Wimble) எனும் கதையையே முதற்கதையாகக் குறிப்பிடுவர். வங்காளமொழியில் பக்கிங் சந்திரரும், தாகூரும் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடி எனலாம். தமிழில் சிறுகதைக் கூறுகள் இருந்த போதிலும் உரை கடையில் கதைகள் பேசப்பட்டது வீரமா முனிவரின் பரமார்த்த குருகதை, தாண்டவராய முதலியாரின் பஞ்ச தந்திரக்கதை, வீராசாமி செட்டியாரின் விநோதரச மஞ்சரி, விக்கிரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை, ஈசாப் கட்டுக் கதைகள் ஆகியனவாகும். உரைநடை வடிவில்

கதை கூறிய போதிலும் இவை சிறுகதைகளுக்குரிய கட்டுக்கோப்பினைப் பெற்றிருக்கவில்லை.

வ.வே.சு. ஐயர் (வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர்) மங்கையர்க்கரசியின் காதல்' எனும் தலைப்பில் எட்டுக் கதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். இதில் ஒருகதையாக அமைவது குளத்தங்கரை அரசமரம்'. இது சிறந்த சிறுகதையாக இன்றும் ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு விளங்குகிறது. வ.வே.சு. ஐயரின் தொகுதியில் தமிழ் மரபோடு எழுதப்பட்ட கதை இதுவாகும்.

வ.வே.சு. ஐயரை அடுத்து மாதவையாவும் சிறுகதைகள் வெளியிட்டுள்ளார். குசிகர் குட்டி கதைகள் எனும் தலைப்பில் அமையும் இவை வ.வே.சு.ஐயர் கதைகள் அளவு சிறப்பினைப் பெறவில்லை. பாரதியாரும் கவிதையோடு சிறுகதைகள் எழுதியுள்ளார். ஆயின் இவருடைய சிறுகதைகள் சிறந்த அமைப்பைப் பெற முடியவில்லை. 'வேடிக்கைக் கதைகள்' 'நவதந்திரக் கதைகள்' எனும் தலைப்பில் இவை அமைகின்றன. உ.வே.சாமிநாதையர் கண்டதும் கேட்டதும் ஸ்வர்ணகுமாரி எனும் தலைப்பில் சிறுகதை எழுதியுள்ளார்.

**மணிக்கொடி காலம்**

சிறுகதை வரலாற்றில் மணிக்கொடி காலம் சிறப்பு மிக்கது. மணிக்கொடிக்கு முன்பே 1920க்கு மேல் காந்தியச் சிந்தனைகள் கொண்ட பத்திரிக்கைகளும், வாரஇதழ்களும் தோன்றின. அவற்றில் சிறுகதைகளும் வெளிவந்தன. டாக்டர். வரதராஜுலு நாயுடுவின் தமிழ்நாடு, திரு.வி. சு.வின் தேசபக்தன், நவசக்தி, டி.எஸ். சொக்கலிங்கத்தின் காந்தி, சங்கு கணேசனின் கதந்திரச் சங்கு, ஆனந்த போதினி, அனுமான், பாரததேவி, பாரதமணி, சுதேச வித்திரன், கலைமகள் எனப் பல பத்திரிக்கைகள் தோன்றிச் சிறுகதைகளையும் வெளியிட்டன.

**கு.ப.ராசகோபாலன்**

கு.ப.ரா. என அழைக்கப்படும் இவர் பாலுணர்ச்சிக் கதைகள் மிகுதியாக எழுதியாகக் கூறுவது மிகையாகும். குடும்பக் கதைகளே தவையெனக் ககுதுமிடங்களில் பாலுணர்வோடு சுட்டிச் செல்கின்றார். சிலகாலம் கிராம பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்தவர். இவரது கதைகள் நான்கு தொகுதிகளாக வந்துள்ளன. அவை புனர் ஜன்மம், கனகாம்பரம். காணாமலே சிறிது வெளிச்சம் ஆகும். க.நா.சு. இவர் 85 கதைகள் எழுதியுள்ளதாகத் தம் ரலில் குறிப்பிடுவர். அடி 'அடி மறந்தால் ஆழம்','நடுத்தெரு நாகரிகம்' சிறந்த சிறுகதைகள்

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலச் சிறுகதை வளர்ச்சியைக் கல்கி துமைப்பித்தன், கு.ப.ரா இவர்களோடு நிறுத்திவிட முடியாது. சுதந்திரத்திற்கு முன்பிருந்தே எழுதிய லா.ச.ரா, தி. ஜானகி ராமன், அழகிரிசாமி ஆகியோர் முகத்திரத்திற்குப் பின்னரே மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றனர்.

**ரஜாஜி**

அரசியலில் புகுந்த காலந்தொட்டுச் சிறுகதை எழுதுவதிலும் ஈடுபாடு தொண்டவர்.இவருடைய சிறுகதைகளை உவமைக் கதைகள் என்பர். எளிமையான தத்துவப் போக்கினை உடையது. ஓர் உண்மையைக் கதை மூலம் சொல்லும் உத்தியைக் கையாள்கின்றார். ராஜாஜியின் குட்டிக்கதைகள் எனும் தலைப்பில் இவரது கதைத் தொகுதி அமையும். கூன் சுந்தரி, அறியாக் குழந்தை,முகுந்தன். தேவானை ஆகியவை சிறந்த கதைகள்.

**தி. நா. சுப்பிரமணியம்**

இவர்தம் சிறு கதைக்குரிய கருவினை வரலாற்றிலிருந்து எடுத்தார். நல்ல கடையோடு கூடிய கதைகள்

**பி.எஸ். இராமையா**

மணிக்கொடிக்கால எழுத்தாளர் மட்டுமின்றி, மணிக்கொடி நின்று போனபோது அதை எடுத்து நடத்தியவர். குடும்பக் கதைகளாக இவரது கதைகள் அமையும். மணிக்கொடி, தினமணிக் கதிரில் இவரது கதைகள் வெளிவந்தன. இவரது கதைகளில் எல்லாம் ஒரு பாத்திரத்தை மட்டும் நிரந்தரமாக உலவ விடுவர். அவர் குங்குமப்பொட்டு குமாரசாமி, 'அடிச்சாரைச் சொல்லி அழு, நட்சத்திரக் குழந்தைகள்' சிறந்த கதைகள்.

**மௌனி**

இலக்கியத் திறனாய்வாளர்க்கிடையே இவரைப் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. புரியாத எழுத்தின் சொந்தக்காரர் மௌனி, சமூகப்பார்ை இவரிடம் குறைவு என்று விமர்சிப்போரும் உண்டு. மௌனி கதைகளால் தமிழ்

சிறுகதைகள் மேலை நாட்டுத் தரத்திற்கு உயர்ந்து விட்டன என்போரும் உண்டு இவருடைய சிறுகதைகள் அழியாச் சுடர், மௌளி சுதைகள்தை தொகுதிகளாக வந்துள்ளன. புதுமைப்பித்தன் இவரைச் சிறுகதையின் திருமூர் என்று பாராட்டுகின்றார். 'மௌனியின் கதைகள் தமிழ் இலக்கிய உலகில் பெருஞ்சிகரம்" என்பர் க. நா. சுப்பிரமணியன்.

1959, 1976, 1978 என மூன்று கட்டங்களாக இவருடைய சிறு தொகுதிகள் மூன்று வெளிவந்துள்ளன. இவரது கதைகள் பெரும்பான்மையும் காதத் தோல்வியைச் சுட்டுவன. இவரது முதற்கதை ஏன்? இதுதவிர குடும்பத்தேர் மாறுதல், மனக்கோலம், அழியாச்சுடர் போன்றவை சிறந்த சிறுகதைகளாகும்.

**லா.ச. ராமாமிருதம்**

மௌனியை அடிப்படையாகக் கொண்டே இவரது கதைகளும் அமைகின்றன. மௌனியை விட இவரது கதைகளில் புரிதல் அதிகம். இவரது கதைகள் ஜனனி, இதழ்கள் எனும் தொகுப்பில் வெளிவந்துள்ளன. இல சொல்லுக்கும் பொருளுக்கும் வேறுபாடு கூடாது என்பவர். சொல்தான் செயல் அந்தச் செயல்தாள் பொருள் என்பவர். நெருப்பு என்றால் வாய் வேசு வேண்டும் என்பர். இவருடைய கதைகளில் நனவோடை உத்திகள் மிகுந்துள்ளன. எனவே பாமரனுக்கும் நடுத்தர ரசிகனுக்கும் இவர் கதைகள் சுவைப்பதில்லை. சலி அபி இவரது படைப்புகளைச் சிறப்பாகத் திறனாய்வு செய்துள்ளார். தரங்கிணி பாற்கடல், சாவித்திரி, இதழ்கள் சிறந்த படைப்புகள்.

**கு.அழகிரிசாமி**

திருநெல்வேலி மாவட்டத்தின் இடசெவல் இவர் ஊர். 'அழகிரி சாமி கதைகள்', அன்பளிப்பு, கற்பகவிருட்சம்', 'சிரிக்கவில்லை' ஆகியவை இவருடைய கதைத் தொகுப்புகள் பாத்திரப் படைப்பில் யதார்த்தம் பளிச்சிடும். மொழிபெயர்ப்புத் துறையில் வல்லவர். அன்பளிப்பு சாகித்ய அகாதெமி பரிசுபெற்றது.

**ந.பிச்சமூர்த்தி**

புதுக்கவிதையின் முன்னோடியான இவர் மணிக்கொடி எழுத்தாளர். இவரது பதினெட்டாம் பெருக்கு, மோகினி, ஜம்பரும் வேஷ்டியும் ஆகிய தொகுதியில் இவரது கதைகள் வெளிவந்தள்ளன.

**கி. இராஜ நாராயணன்**

வட்டார மொழியில் கதை எழுதுபவர். கிராமத்து நடை இவரது நடை கோவில்பட்டி பகுதியைச் சார்ந்தவர். தற்பொழுது பாண்டிச்சேரியில் வசித்து வருகிறார். 'கதை சொல்லி' எனும் இதழை நடத்தி வருகின்றார். 'கதவு' இவரது

மிகச்சிறந்த சிறுகதைத் தொகுதியாகும். தமிழ் நாட்டு நாடோடிக்கதைகள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பன.

**சி.சு. செல்லப்பா**

எழுத்து இதழின் ஆசிரியர். மணிக்கொடி எழுத்தாளர். மலைமேடு அறுபது, வெள்ளை சிறந்த சிறுகதைத் தொகுதிகள்.

மு.வரதராசன்

மு.வ என்று இலக்கிய உலகம் அழைக்கும். விடுதலையா? என்பது இவரது சிறுகதைத் தொகுதி. அதில் வரும் குறட்டை ஒலி மிகச் சிறந்த சிறுகதையாகும்.

**கி.வா. ஜகந்நாதன்**

நகைச்சுவையோடு எழுதுபவர். பவளமல்லிகை இவருடைய நல்ல படைப்பு. அறுந்ததந்தி, கலைஞன் தியாகம் ஆகியவை இவருடைய சிறுகதைத் தொகுதிகள்.

**விந்தன்**

இயற்பெயர் கோவிந்தன். ஏழைகளும் அடித்தள மக்களும் இவருடைய கதைத் தலைவர்கள். இவருடைய கதைப் பாத்திரங்கள் கிராம மணம் வீசும் இவருடைய முல்லைக் கொடியாள் கதைத் தொகுதி சிறப்புமிக்கது.

**அகிலன்**

புதுமைப்பித்தன் கதைகளைச் சாடுபவர்.இவரது கதைகளில் காதல் மென்மையாக இடம்பெறும். மையமாக அமைதலும் உண்டு. கதையில் உணர்வின் ஆழமும் எளிமையும் உண்டு. நிலவினிலே, அமராவதிக் கரையில், செங்கரும்பு. மின்னுவதெல்லாம் சிறந்த தொகுதிகள். இதயச் சிறையில் சிறந்த சிறுகதை. சாந்தி நல்ல உரையாடல் நயமிக்கது. இவர் சிறு கதைகள் 14 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

**ஜெகசிற்பியன்**

'ஒரு பாரத புத்திரன் கதை' 1986 இல் தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது. இவருடைய நரிக்குறத்தி சிறுகதை சாகித்ய அகாதமியின் நூல் வடிவில் இடம் பெற்றுள்ளது.

**தி.ஜானகிராமன்**

தஞ்சை மாவட்டத்தின் எள்ளல் சுவை இவருடைய கதைகளில் மிளிரும். பால் உணர்வுகளைக் கதைகளில் வெளிப்படுத்துபவர். சிவப்பு ரிக்ஷா, கொட்டுமேளம், அக்பர்சாஸ்திரி இவரது கவிதைத் தொகுதிகள். ஆனந்த விகடனில் இவரது கதைகள் வந்துள்ளன. மனித உணர்வுகளைக் கற்போர் உய்வித்து உணரும் வகையில் கதையாக வெளிப்படுத்துவதில் வல்லவர். இவருடைய நாவல்கள் மிகுந்த பரபரப்போடு பேசப்பட்டன. 1979இல் இவரது சக்தி வைத்தியம் தொகுதி (அக்பர் சாஸ்திரி) சாகித்ய அகாதமி விருது பெற்றது. கிராம ஊழியன், கலா மோகினி போன்ற பத்திரிக்கைகளில் எழுதியவர்தி.ஜானகிராமன்.

**சுந்தர ராமசாமி**

சிதம்பர ரகுநாதன் காந்தி பத்திரிக்கை வழியாக நடத்திய புதுமைப்பித்தன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் கலந்து முதற்பரிசு பெற்றுச் சிறந்த சிறுகதை எழுத்தாளராக அறிமுகமானவர். இவரது சிறுகதைத் தொகுதி 1. அக்கரைச்

சிமையிலே 2பிரசாதம். சமீபத்இவருடைய சிறுகதைகள்முழுக்கக் காகம் படித்தோர்களின் பாராட்டைப் பெற்றன.

சன்னல், மேல்பார்வை, நாடார் சார். அகம், கோயில்களையும் உழவுமாடும் சிறந்த சிறுகதைகள்.

**வல்லிக்கண்ணன்**

இவருடைய சிறுகதைகள் காலந்தோறும் ஏற்படும் மாறுதல்களை விளக்குவனவாய் மணிக்கொடி காலம் தொடங்கி அமைகின்றன. சமூக நிலைை நாட்டியக்காரி, கல்யாணி முதலிய கதைகள், ஆண்சிங்கம், பெரியமனுஷி.வாழ அங்கதச்சுவையுடன் எழுதுபவர் சிறுகதைத் தொகுதிகள் வல்லிக் கண்ணள் கதைகள் விரும்பியவள். இவரது முதற்கதை சந்திரகாந்தக்கல்,

**மா. அரங்கநாதன்**

மா.அரங்கநாதன் சிறுகதைகள் சிறப்புமிக்கவை. வீடுபேறு சிறுகதை பெரிய அளவில் பாராட்டுப் பெற்ற சிறுகதை.

**கிருஷ்ணன் நம்பி**

இயற்பெயர் அழகிய நம்பி. முதலில் குழந்தைப் பாடல்கள் எழுதியவர் சுமார் 20 கதைகள் எழுதியுள்ளார். இளம் வயதிலேயே காலமானார். வாசகளை தான்

படைக்கும் சூழலுக்கு இழுத்துச் செல்லும் ஆற்றலுடையவர். சிறுகதைகள் காலை முதல், நீலக்கடல், கிருஷ்ணன் நம்பி கதைகள். அண்மையில் இவரது படைப்புகள் முழுமையும் ஒரே நூலாக வந்துள்ளது.

**பொன்னீலன்**

26க்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். இவரது சிறுகதைத் தொகுதிகள் காயம் செப்பாது, நித்யமானது. இவர் பொதுவுடைமைச் சிந்தனையாளர்.

**தோப்பில் முகமது மீரான்**

பலபரிசுகள் பெற்றவர். முஸ்லீம் மக்களின் உணர்வுகள் இவர் கதைகளில் வெளிப்படும். அன்புக்கு முதுமை இல்லை,தங்கராசு, அனந்த சயனம் காலனி ஆகியவை இவரது சிறுகதைத் தொகுதிகள்.

சிறுசதைகளைப் படைத்துள்ளனர். நாஞ்சில் நாடனின் உப்பு, பேய்க்கொட்டு சிதத்த சிறுகதைத் தொகுதிகளாகும் ஆ மாதவனின் ஆனைச் சந்தம், மாதவன் ததைகள், அரேபியக் குதிரை சிறந்த கதைகள் ஐசக் அருமை ராஜன் இறல்கள் சாவல் பேசப்பட்டவர். இவரது காக்கைத் கூடு சிறுகதைத் தொகும் சிறப்பானது. ஜெயமோகன் இளமை வயதில் முதிர்ந்த எழுத்தாளர். இவரது விஷ்ணுபுரம் நாவல்கள் சிறப்பாகப் பேசப்பட்டயை. இவரது சிறுகதைத் தொகுதிகள் இசைகளின் நடுவே, நதி, வலை, படுகை, மண்முதலியன நாஞ்சில் ஆனத்தனின் விண்ணும் மண்ணும் சிறுகதைத் தொகுதி மாணவர்கள் மத்தியில் திகுந்த செல்வாக்குப் பெற்றது இவர்கள் எல்லாம் குமரி மாவட்டத்தைச்சார்ந்த சிறுகதை எழுத்தாளர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

**ஜெயகாந்தன்**

சிறுகதைகளில் ஜெயகாந்தன் காலம் ஏற்றமிகு காலம் சிறுகதை உலகில் புதுமைப்பித்தனுக்கு அடுத்துச் சிறப்பாகப் பேசப்பட்டவர் ஜெயகாந்தன் புதிய வார்ப்புகள், யுகசக்தி, மாலை மயக்கம், ஒரு பிடி சோறு, குருபீடம் சுமைதாங்கி, X பிரம்மோபதேசம். இனிப்பும் கரிப்பும், உண்மை சுடும், ஜெயகாந்தன் கதைகள் ஆகியவை அவரது சிறுகதைத் தொகுதிகள். 13 தொகுதிகள் வந்துள்ளன. தம் கதையால் தமிழை உயர்த்தியதாக ஜெயகாந்தனே குறிப்பிடுவர். அது உண்மையேயாகும். இதனைத் திறனாய்வாளர் கா. சிவத்தம்பி முழுமையாக ஏற்றுக்கொள்கின்றார்.

இவரது சிறுகதைகள் கசப்பான உண்மையை வெளியிடத் தயங்கவில்லை. பொருள் அடிப்படையில் இவர்கதைகள் பெரும் மாற்றம் செய்து அதில் வெற்றியும் பெற்றன. தமிழ்ச்சிறுகதை ஜெயகாந்தனோடு முடிந்து விட்டது என்று கூறுவோரும் உண்டு. அது தவறாகும். புதுமைப் பித்தனோடு சிறுகதை முடிந்து விட்டது என்ற

போது ஜெயகாந்தன் தோன்றினார். ஜெயகாந்தனோடு சிறுகதை முற்றுப்புள்ளி என்று கூறுவோர் கூற்று ஏற்புடைத்தன்று. எந்தத் தனிமனிதராலும் எந்த இலக்கியமும் முற்றுப் பெற்றுவிட முடியாது என்பதே உண்மையாகும்.

சு. சமுத்திரம், அசோகமித்திரன், கந்தகர்வன், மேலாண்மை பொன்னுசாமி. ம. அரங்கநாதன், சுப்ரபாரதி மணியன், பாவண்ணன், வண்ணதாசன், பூமணி, திலகவதி, பெருமாள், முருகன், இரா. முருகன், உத்தமசோழன், கௌதம சித்தார்த்தன்,தர்மன், எஸ். சங்கரநாராயணன், பிரபஞ்சன், ஜெயகாந்தன் எனப்பலரும், பெண் எழுத்தாளர்களில் தொடக்க காலம் முதல் ஆர். சூடாமணி, சிவசங்கரி, இந்துமதி, அம்பை,அனுராதா ரமணன், வாஸந்தி, லஷ்மி எனப் பலரும் சிறுகதை உலகில் அரும் பணியாற்றி வருகின்றனர்.

1960களில் சிறுகதைகளில் ஒரு மந்தப் போக்கு ஏற்பட்டதாகக் கைலாசபதி குறிப்பிடுவர். ஆயின் இன்று ஆண்டிற்கு 5000ஐத் தாண்டும் அளவிற்குச் சிறுகதைகள் வருகின்றன. அவற்றில் எத்தனை விழுக்காடு தரத்தால் தேர்ச்சி பெறுகின்றன என்பது கேள்விக்குறி. உலகத் தரமிக்க சிறுகதைகளும் தமிழில் வருகின்றன. அந்த எண்ணிக்கையைப் பெருக்குதல் சிறுகதை எழுத்தாளர்களின் கடமையாகும்.

**புதினம் (நாவல்)**

பழமையான காப்பியங்களும் ஒருவகையில் நாவல்களேயாகும். பழமையான இராமாயணக் கிளைக் கதைகளும், மகாபாரதக் கிளைக் கதைகளும் புதின அமைப்பில் பல்வேறு புதினங்களாக அமையும் அளவிற்கு கதைப்பொருள்களைக் கொண்டுள்ளன. கி.பி. 18ஆம் நூற்றாண்டில் தோன்றி புதினம் மிக வேகமாக எல்லா நாடுகளிலும் போட்டி போட்டு வரை தொடங்கியது. நாவல் எனும் சொல் Novellus எனும் இலத்தீன் சொல்லிக் அடியாக ஆங்கிலத்தில் பிறந்தது. புதுமை எனும் பொருள் கொண்ட சொல்லி பிறந்த இவ்விலக்கியத்தைத் தமிழில் புதினம் எனக் குறிப்பிடுத் பொருத்தமாகும்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியா சரித்திரமே தமிழில் முதல் புதினம் எனக் கருதப்படுகிறது. இந்திய மொழியி முதன்முதலாக வெளிவந்த நாவல் வங்காளியில் பக்கிம் சந்திரர் எழுதி துர்க்கேச நந்தினியாகும். இந்நூல் 1865இல் வெளிவந்தது. அடுத்து 1879இ இந்தியாவில் இரண்டாவது நாவல் வெளிவந்தது. அது வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமேயாகும். இதனையடுத்தே 1880 தெலுங்கிலும், 1887ல் மலையாளத்திலும் நாவல்கள் வெளிவந்தன. இதே பிள்ளையின் இரண்டாவது நாவல் சுகுண சுந்தர் 1887இல் வேதநாயகம் பிள்ளையி வெளிவந்தது. வேதநாயகம் பிள்ளை நாவல் எழுதியமைக்குரிய காரணத்தை குறிப்பிடுகின்றார். 'தமிழில் வசன நூல்கள்

இல்லாத பெருங்குறையைத் தீர்ப்பதே நான் இந்தப் புனை கதையை எழுதியதன் நோக்கமாகும்' எனத்தள் ஆங்கில முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

'மாயூரம் வேதநாயகம் பிள்ளைக்கு முன்னர் 1822இல் வீரமாமுனிவர் பரமார்த்த குரு கதையும், 1826இல் தாண்டவராய முதலியார் பஞ்சதந்திரக் கதையும் (மொழி பெயர்ப்பு) 1853இல் ஈசாப்பின் கட்டுக் கதையும், 1855இல் மதன காமராஜன் கதையும், 1869இல் தமிழறியும் பெருமாள் கதையும், பாமர மக்களிடம் செல்வாக்குப் பெற்றன. ஆயின் இவை தமிழ் உணர்வையோ தமிழ் மக்களின் பண்பாட்டையோ சிறிதும் விளக்கவில்லை இதனையுணர்ந்த வேதநாயகம் பிள்ளை புதிய முயற்சியாகப் புதினத்தைட படைத்தார்.

**நாவல் வளர்ச்சியில் இதழ்களின் பங்கு**

ஆனந்த போதினியை அடுத்து ஆனந்தவிகடன் இதழ் வெளிவந்து கஷ்டத்தில் ஒடிக்கொண்டிருந்தது. அதை எஸ்.எஸ். வாசன் வாங்கி 1928இல் தம் சொந்தப் பத்திரிக்கையாக்கினார். அப்போது நவசக்தியில் தேனீ என்ற புனைபெயரில் கட்டுரை எழுதிய ரா.கிருஷ்ணமூர்த்தி ஆனந்த விகடனில் ''கல்கி' எனும் பெயரில் எழுத ஆரம்பித்தார். இவரது முதல் நாவல் வ.ராவின் சுதந்திரன் இதழில் தொடராக வந்தது. விமலா என்று பெயர். அடுத்து, கள்வனின் காதலி வெளியானது. இதனையடுத்துக் கல்கி சரித்திரக்களத்தில் தன் முத்திரையைப் பதித்தார். பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் பொன்னியின் செல்வன் ஆகிய வரலாற்றுப் புதினங்களும் அலை ஓசை எனும் சமூகப்புதினமும் மக்கள் மனத்தை விட்டு நீங்காதவை.

கல்கி சரித்திர நாவல்கள் எழுதி தமக்கென ஒருவாசகர் வட்டத்தை உருவாக்கினார். இவரையடுத்துச் சரித்திரநாவல்களை வெற்றிகரமாக எழுதியோர் சாண்டில்யன், சோமு, கோவி. மணிசேகரன், ஜெகசிற்பியன், அகிலன், நா.பார்த்தசாரதி, விக்ரமன், அரு.இராமநாதன் போன்றோர் எனலாம்.

கல்கியையடுத்து 1943இல் நாமக்கல் கவிஞர் மலைக்கள்ளன் எனும் நாவல் எழுதினார். இந்நூல் மக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றதோடு, எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்துத் திரைப்படமாக வெளிவந்து குடியரசுத் தலைவரின் பரிசையும் பெற்றது.

கு.ப.ரா. குமாரஸ்வாமி, அ.சி. ஜெயராமன், குகப்பிரியை, கா.ஸ்ரீ ஸ்ரீ ஆகியோர் பிறமொழி நாவல்களைக் குறிப்பாக வங்காளமொழி நாவல்களை மிகுதியாகத் தமிழில் மொழி பெயர்த்தனர்.

சங்கரராம் வட்டார நாவல் உலகின் தொடக்க நிலையில் குறிப்பிடத்தக்கவர். இவரின் 'மண்ணாசை' (1940) நாவல் வட்டார மணத்திற்கு எடுத்துக்காட்டு. 11

நாவல்கள் எழுதியுள்ளார். இவருடைய கதையின் களம் திருச்சி வீரமங்கலம். வட்டார நாலப்

வட்டார நாவல்களின் தொடக்க நிலையை கே.எஸ். வேங்கடரமணி சங்கரராம் தொட்டனர் எனின் அதை நிறைவாக்கிய பெருமை சண்முக சுந்தரத்தையே சேரும். கொங்கு நாட்டு மக்கள் வாழ்க்கையை விளக்கும். வகையில் அமைந்த நாகம்மாள் இவரது சிறந்த நாவலாகும். இவருடைய பிற நாவல்கள் சட்டி சுட்டது, அறுவடை, காணாச் சுனை முதலியன. வட்டார நாவல்களில் கி.ராஜநாரயணனின் கோபல்லபுரத்து மக்கள் நீல.பத்மநாபனின் தலைமுறைகள், ஹெப்சிபா ஜேசுதாசனின் புத்தம் வீடு சிறப்பிடம் பெறும்.

க.ந. சுப்பிரமணியன் நாவலாசிரியர் என்பதை விடச் சிறந்த திறனாய்வாளர் என்ற முறையில் மிகுதியும் மதிக்கப்படுபவர். இவரது பொய்த்தேவு சிறந்த யதார்த்த நாவல். இவரது 'முதல் ஐந்து தமிழ் நாவல்கள்' என்னும் நூல் சிறந்த திறனாய்வு நூல் ஆகும்.

அறிஞர் அண்ணா பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் மிக்கவர். அவரது ரங்கோன்ராதா, பார்வதி சிறந்த சமூக சீர்திருத்த நாவல்களாகும்.

டாக்டர். மு. வரதராசன் அவர்கள் சிறந்த இலக்கிய நடையில் நாவல்கள் எழுதினார். நல்ல கருத்துக்களை நாவல் மூலம் இளைஞர்களுக்கு வழங்கினார். அந்தநாள், மண்குடிசை, செந்தாமரை, கயமை, அகல்விளக்கு, அல்லி, மலர்விழி, கரித்துண்டு, வாடாமலர், கள்ளோ காவியமோ, பெற்றமனம் எனப் பல புதினங்கள் புனைந்தவர். 15 நாவல்கள் எழுதியுள்ளார். இவரது அகல்விளக்கு 1961ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றது.

லா.ச. ராமாமிருதம் நாவல்கள் கற்றோர் மத்தியில் செல்வாக்குப் பெற்றவை. சாதாரண வாசகர்கள் இவரது நாவலைப் புரிந்து கொள்ளுதல் கடினமானது. நனவோடை உத்தியை நாவலில் வெற்றிகரமாகக் கையாண்டவர். இவரது 'அபிதா' நாவல் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

வே. கோவிந்தன் என்ற இயற்பெயர் கொண்ட விந்தன் சிறந்த விழிப்புணர்வு கொண்ட நாவலாசிரியர். இவரது பாலும் பாவையும் 1950இல் கல்கியில் தொடராக வந்த போதே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. நூலாக வந்து பத்துக்கு மேற்பட்ட பதிப்புகளைக் கண்டுள்ளது. இதில் வரும் கதைத் தலைவி அகல்யா சூழ்நிலையால் தன் கற்பை இழக்கிறாள் என்பதை இயல்பாக விளக்கிய நாவல் இதுவாகும்.

தி. ஜானகிராமன் நாவல்களில் பால் உணர்வு வெளிப்பாடுகளில் நுட்பங்கள் வெளிப்பட்டன. இவரது மோகமுள், மரப்பசு அம்மாவத்தால் சிறந்த மனோதத்துவ அடிப்படையில் அமைத்த நாவல்கள் மோகமு இரைப்படமாக வெளிவந்தது,

திருமணமான பெண்கள் திருமணத்திற்குபில் வேறு ஆடவனுடன் உறவு கொள்ளுதலைச் சூழ்நிலையில் நியாயப்படுத்தும் போக்கில் இவரது நாவல்கள் அமைவது புதிய உத்தி என்பர். ஆயின் தற்கு முன்பே வ.ரா. பாரதி, மாதவய்யா, நடேச சாஸ்திரி ஆகியோ இக்கருப்பொருளைத் தம் கதைப் பொருளாக்கியுள்ளனர்.\

1960களுக்கு மேல் ஜெயகாத்தன் தமிழ் நாவல்களின் வரலாற்றில் முக்கிய இடம் பெறுகிறார். சிறுகதையில் பெரும் வெற்றி பெற்று நாவலுக்கு வ கின்றார் பாரிசுக்குப் போ. ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், சில நேரங்களில் சில மனிதர்கள், தங்கை எங்கே போகிறாள்? சுந்தர காண்டம் ஜயஜய சங்கரா இவரது சிறந்த நூல்கள். 1972ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருதை இவரது 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்னும் நாவல் பெற்றது.

பெண் எழுத்தாளர்களில் ராஜம் கிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர், செய்திகளைக் கடினப்பட்டுத் தேடி அளிக்கும் தன்மையுடையவர். இவரது மக்களின் ஒலாளர் மணிகள் தூத்துக்குடியில் உப்பெடுக்கும் தொழிலாளர் நிலையைச் சித்தரிக்கும். இதுபோன்றே வளைக்கரம், முள்ளும் மலருகிறது, வேருக்கு நீர், அமுதமா வருக ஆகிய நாவல்களும் ஒள்ளளாடு திருத்திகாதெமி விருதுகக் உன்ண்ம் அகை வனி, 1973ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாவல் இவரது வேருக்கு நீராகும். விளக்கும் கரிப்பு

கண்ணதாசன் கவிதைத் துறையோடு நாவலும் எழுதியுள்ளார். இவரது சேரமான் காதலி நாவல் 1980 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது. எழுத்தாளர் லட்சுமி, காஞ்சனையின் கனவு, பெண்மனம், மிதிலாவிலாஸ், பவானி எனப் பல்வேறு தலைப்புகளில் மிகுதியான நாவல்கள் எழுதியுள்ளார். அவற்றில் 'ஒரு காவிரியைப் போல' நாவல் 1984 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

சா.கந்தசாமியின் விசாரணைக் கமிஷன் நாவல் 1998ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது. இவரது சாயாவனம் சிறந்த நாவல்.

கலைஞர் கருணாநிதி பல்வேறு துறைகளில் தம் தடங்களையும். முத்திரைகளையும் பதித்துள்ளார். ரோமாபுரிப் பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர் ஆகிய வரலாற்று நாவல்களையும், பல்வேறு சமூக நாவல்களையும் படைத்துள்ளார்.

கும்பகோணத்தைச் சார்ந்த எம்.வி. வெங்கட்ராமனின் நாவல்களில் வாழ்க்கைப் போராட்டம், சமூகத்தின் வெளிப்பாடுகள் மையக் கருத்தாக அமையும். இவரது வேள்வித்தீ நெசவுத் தொழிலின் சிக்கல்களை விளக்கும் அருமையான நாவல். இதுதவிர அரும்பு, இருளும் ஒளியும், நித்தியகன்னி, ஒருபெண் போராடுகிறாள் ஆகிய நாவல்களும் எழுதியுள்ளார்.

சுந்தரராமசாமியின் ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள் சிறந்த நாவல்களாகப் பேசப்பட்டவை. சமீபத்து வெளியீடாகிய குழந்தைகள் - பெண்கள்- ஆண்கள்' மனவிகாரங்களை வெளிப்படுத்தும் சிறந்த தாவல்.

நாஞ்சில் நாடனின் நாவல்களில் கருத்துப் புதுமையைக் காண முடியும். நாஞ்சில் நாட்டின் நடையழகோடு அமையும். இவரது மிதவை. தலைகீழ் விகிதங்கள், சதுரங்க குதிரை, மாமிசப் படைப்பு, எட்டுத்திக்கும் மதயானை சிறந்த நாவல் வரிசையில் இடம் பெறுபவை.

இன்றைய முன்னணி எழுத்தாளர்களில் ஜெயமோகன் குறிப்பிடத்தக்கவர். இவரது ரப்பர், விஷ்ணுபுரம் சிறந்த நாவல்கள். பாலகுமரனின் மெர்குரிப் பூக்கள் இலக்கியச் சிந்தனை பரிசும், இரும்புக் குதிரைகள் அண்ணாமலை அரசர் பரிசும் பெற்றவை.

வட்டார நாவல்களில் நீல.பத்மநாபனின் தலைமுறைகள் தமிழ் வாசக உலகம் மறக்க முடியா நாவல். இவரது பள்ளி கொண்டபுரம்,உறவுகள் சிறந் நாவல் வரிசையில் இடம் பெறுபவை. எழுத்தாளர் பாமாவின் கருக்கு, சங்க இரண்டும் தலித் மக்களின் மனக்குமுறலை விளக்கும் நாவல்களாகும்.இ போன்றே சிவகாமியின் பழையன கழிதலும், ஆனந்தாயி நாவலு அமைகின்றன.

பெண் எழுத்தாளர்களில் சிவசங்கரி, அனுராதா ரமணன், வாச ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர். துப்பறியும் நாவல்கள் எழுதுவ ராஜேஷ்குமார், ராசேந்திர குமார், பட்டுக் கோட்டை பிரபாகர் ஆகி குறிப்பிடத்தக்கவர்கள். பட்டுக்கோட்டை பிரபாகர்தம் தடத்தைச் சமூகவி நாவல்களிலும் பதித்து வருகிறார்

பொன்னீலனின் புதிய தரிசனங்கள் 2000க்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்டது. 1994ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது. பொதுவுடைமைக் கருத்துக்களைக் கொண்டு அமையும் இவரது நாவல்கள் வட்டார மணம் வீசுவன.

இன்றைய எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் பிரபஞ்சன். இவரது வானம் வசப்படும், மானுடம் வெல்லும், மகாநதி சிறந்த நாவல்கள். வானம் வசப்படும் 1995ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது. 1996ஆம் ஆண்டிற்கான விருதினை அசோகமித்திரனின் 'அப்பாவின் சினேகிதர்' பெற்றது. தோப்பில் மீரானின் சாய்வு நாற்காலி 1997ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

தொடங்கி இன்று அறிவியல் வரை பல்வேறு துறைகளில் நாவல் உத்திரை கையாண்டு வெற்றி பெற்றுள்ளார். சமுத்திரம். 5. சிவ்னப்பபாரதி போன்றோர் தமிழ் நாவலுக்குப் புதிய களம் அமைத்துள்ளனர்.

தமிழ் நாவல்களைப் பொதுவாக விடுதலைக்கு முன், விடுதலைக்கும் பின் என இரண்டாகப் பகுக்கலாம். சிலர் முதற்காலக் கட்டம் (1879-1910 இரண்டாம் காலக் கட்டம் (1910-1940) மூன்றாம் காலக் கட்டம் (1940 முத இன்றுவரை) எனப் பகுப்பர். மேலும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் நாவலை 1. சமூகநாவல் 2. வரலாற்று நாவல் 3. துப்பறியும் நாவல் 4 மொழி பெயர்ப்பு நாவல் 5. தழுவல் நாவல் எனப் பகுப்பர்.

**வினாக்கள்**

**பகுதி அ** **1X10=10**

1. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடியவர் யார்?
2. இராமலிங்க அடிகளின் பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?
3. உரைப்பா,விடுநிலைப்பா எனப்படுவது எது?
4. எழுத்து இதழின் ஆசிரியர் யார்?
5. பெண்ணின் பெருமை நூலின் ஆசிரியர் யார்?
6. சிறுகதையின் பிறப்பிடம் எது?
7. இசுலாமிய மக்கள் உணர்வுகளைக் கதை வடிமாக்கியவர்?
8. தமிழின் முதல் புதினம் எது?
9. ‘குறிஞ்சி மலர் நாவலின் ஆசிரியர் யார்?
10. நாவலின் வகைகள் இரண்டனை எழுதுக.

**பகுதி ஆ** **5X5=25**

1. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ஆறுமுக நாவலர் – குறிப்பு வரைக.
2. புதுக்கவிதையின் இலக்கணம் எழுதுக.
3. மறைமலையடிகள்,திரு.வி.கவின் உரைநடைப் பணிகளை எழுதுக.
4. சிறுகதையில் பெண் எழுத்தாளர்கலின் பங்கினை எழுதுக.
5. நாவலின் தோற்றம் குறித்து எழுதுக.

**பகுதி இ** **8X5=40**

1. 19ஆம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சி குறித்து விளக்குக.
2. புதுக்கவிதையின் வளர்ச்சியைக் கட்டுரைக்க.
3. உரைநடையின் தன்மைகளை விளக்குக.
4. சிறுகதையின் சிறந்த எழுத்தாளர்களை விளக்குக.
5. நாவலின் வகைகளை எழுதி விளக்குக.

**அலகு 5**

**நாளிதழ்கள்**

நாளிதழ் என்பது ஒவ்வொரு நாளும் அச்சிட்டு வெளியிடப்படும் செய்தி இதழ் ஆகும். தற்காலத்தில் செய்தியல்லாத பிறவற்றையும் முதன்மை நோக்கமாகக் கொண்டு நாளிதழ்கள் வெளியிடப்படுகின்றன ஆயினும், மிகப் பெரும்பாலான நாளிதழ்கள் செய்தி இதழ்களாகவே உள்ளன. எனவே இதை செய்தித்தாள்கள் (News Papers) என்றும், நாள்தோறும் வெளியிடப்படுவதால் தினசரிகள் (Dailies) என்றும் அழைப்பதுண்டு.

**தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட இதழ்களும் அவற்றின் நிறுவனர்களும்**

1882-பிரபஞ்சமித்திரன் மற்றும் ஞானபானு-வ.உ.சிதம்பரம் பிள்ளை & சுப்பிரமணிய சிவா

1906-சர்வஜனமித்திரன்-வேதமூர்த்தி முதலியார்

1907-இந்தியா-சுப்பிரமணிய பாரதியார்

1917-திராவிடன்,தேசபக்தன்,நவசக்தி-திரு.வி.கல்யாணசுந்தரனார்

1917-பாலபாரதி-வ.வே.சுப்பிரமணிய ஐயர்

1920-தமிழ்நாடு-வரதராஜுலு

1930-ஆனந்த விகடன்-எஸ்.எஸ்.வாசன்

1933-மணிக்கொடி-பி.எஸ்.ராமையா

1934-தினமணி- சொக்கலிங்கம்

1936-விடுதலை-பெரியார் ஈ.வே.ரா.

1937-ஜனசக்தி-ப.ஜீவானந்தம்

1940-கல்கி-ரா.கிருஷ்ணமூர்த்தி

1942-தினத்தந்தி-சி.பா.ஆதித்தனார்.

1959-தென்மொழி-பெருஞ்சித்திரனார்

1963 - தீக்கதிர்

- இலக்கிய இதழ்கள், சிறிய இதழ்கள் அல்லது சிறு இதழ்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.
- பெரும்பாலும் சோதனை இலக்கியம் மற்றும் அறியப்படாத எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இதழ்களில் வெளியிடப்படுகின்றன.
- இலக்கிய இதழ்கள், வாசகருக்கு பொழுதுபோக்கு அல்லது கல்வியை வழங்க முயற்சிக்கின்றன.
- இலக்கிய இதழ்கள், இலக்கிய நுட்பங்களின் வளர்ச்சியையும் காட்டுகின்றன.

## இசைத்தமிழ் வரலாறு

தமிழை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பாகுபாடு செய்து முத்தமிழ் என வழங்கினர் முத்தமிழுக்கும் உரிய எண்ணற்ற நூல் களை இயரங்த தமிழை வளர்த்தனர். இன்று சிலப்பதிகாரம் மட்டுமே முத்தமிழுக்கும் உரிய பழந்தமிழ் நூலாக விளங்குகின்றது. இசையின் ஏழுவகையினைக் கண்டறிந்தவர்கள் தமிழர்களே என்பதை தஞ்சாவூர் அபிரகாம் பண்டிதரின் சங்கீத ரத்னாகரம் என்ற நூல் எடுத்துரைக் கின்றது.

இசைத் தமிழ், ஆபிரகாம் பண்டிதர், அண்ணாமலை செட்டியார், முத்தையா செட்டியார் போன்றோரால் மேம்பாடு அடைந்தது.

தொல்காப்பயத்தில் பா வகைகள், பல்வேறு வண்ணங்கள் பற்றிய குறிப்புகள் அகியவை இடம்பெற்றுள்ளது நோக்கத்தக்கது. இசையொடு சிவணிய என்று யாழ் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுவதும் உன்னற் பாலது ஆகும். பாணர்கள், பாடினி கூத்தர் பற்றிய குறிப்புகளும் தொல்காப்பியத்தில் இடம்பெறுவது நோக்கத்தக்கது.

சங்க இலக்கியத்தில பேரியாழ், சீறியாழ் பற்றிய குறிப்புகளும், பாடினியர்கள் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. குரல், துத்தம், கைக்கிளை, உழை. இளி, விளரி, தாரம் என இசைகள் ஏழாகத் தமிழரால் வகுக்கப்பெற்றிருப்பது ஞேர்க்கத்தக்கது. சிலப்பதிகாரம் இசையாசிரியன், இசைக்கருவிகளை இசைக்கும் சிரியர்கள், பற்றிய இலக்கணங்களை எடுத்துரைக்கின்றது. நாயன்மார்கள் இசையுடன் பாடல்களை இயற்றினர்.

## மறைந்த தமிழ் இசைநூல்கள்

முதுநாரை, முதுகுருகு, பெருநரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீபம், சிற்றிசை, பேரிசை, இசை நுணுக்கம் முதலிய இசை நூல்கள் இருந்ததை அடியார்க்கு நல்லார் இறையனார் களவியல் உரையின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

மகேந்திரவர்மன் சங்கீரணம் என்ற தாளத்தைக் கண்டறிந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. மேலும் பரிவாதினி என்ற வீணையை மீட்டுவதில் வல்லவனாக அவன் விளங்கினான். சீவக சிந்தாமணியில் சுரமஞ்சரி இலம்பகமும், காந்தருவதத்தையார் இலம்பகமும் இசை நுட்பங்களை விவரிக்கின்றன.

மராட்டியர் காலத்தில் துளஜாஜி அரசன் காலத்தில் இருந்து தமிழகத்தில் கீர்த்தனைகள் பெருகலாயின எனலாம். அருணகிரிநாதர் தமது திருப்புகழில் 1008 மேளகர்த்தாக்களை அமைத்துப் பாடினார். முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், உள்ளிட்டோர் இசைத் தமிழ் வளர்க்கும் கீர்த்தனைகளை இயற்றினர்

**இசைத் தமிழ் வளர்த்தோர்**

தஞ்சை அபிரகாம் பண்டிதர் தமிழிசைகளைமந்து என்ற இசைநநூலை இயற்றினார். இவரது மகன் அட வரகுண பா கைவழி எனப்படும் யாழ் நால் என்னும் நாலை உருவாக்கினா யாழ்நூல் என்ற நூலை எழுதி பெரும் புகழ் பெற்றார். இந்நூல் பெட்டகமாகத் திகழ்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழிகை தவர்களில் கோபால கிருஷணபாரதியார். வேதநாயகம்பிள்ளை, அந்துர கனம் கிருஷ்ணையர். சுப்பராமையர், கவி குஞ்சரபாரதி ஆகியோரி போற்றுதற்குரியதாகும்.

**ஆபிரகாம் பண்டிதர்**

கருணாமிர்த சாகரம் என்ற இரு பகுதிகள் கொண்ட நூலைத் தந்ததன் மூலம் தமிழிசைக்கு உயிர் ஊட்டியவர் ஆபிரகாம் பண்டிதர். 1346 பக்கங்கள் கொண்ட முதல்பகுதி கருணானந்தர் பொற்கடகம் எனப்படுகிறது. இரண்டாம் பகுதி ராகங்கள், பண்கள் என்பவற்றை விளக்குகிறது. ஆபிரகாம் பண்டிதரின் மகனான வரகுண பாண்டியனார், 'பண்டைக் காலத்தில் வழங்கிய செங்கோட்டி யாழே, தற்காலத்தில் வீணையாக வழங்குகிறது' என்பதைப் பாணர் கைவழி என்ற நூலில் ஆராய்ந்து கூறியுள்ளார். பண்டிதரின் மருமகனான தனபாண்டியன் என்பவர் புதிய ராகங்கள் என்ற இசை நூலை அளித்துள்ளார்.

சிறந்த மருத்துவரான ஆபிரகாம் பண்டிதர் தமிழில் 103 பண்களும், 11,000க்கும் மேற்பட்ட ராகங்களும் இருந்ததை உணர்த்தினார். தாமே புதியதொரு யாழ் செய்து, அதில் தமிழ்ப் பண்களை இசைத்துக் காட்டினார். எட்டு இசை மாநாடுகள் நடத்தி உள்ளார்.

**அண்ணாமலை செட்டியார்**

தமிழிசை இயக்கத்தைத் தொடங்கியவர். இசை நிகழ்ச்சிகளில் தமிழ்ப் பாடல்கள் மட்டுமே இடம் பெறவேண்டும் என வலியுறுத்துவதே தமிழிசை இயக்கம்.

தமிழிசைச் சங்கம் செயல்பட அக்காலத்தில் பொருள் வழங்கியவர். இதனால் 1943இல் இசைக் கல்லூரி எழுந்தது. ஆண்டுதோறும் தமிழிசை மாநாடு நடத்தப்படுகிறது. பண்ணாராய்ச்சி நடைபெறுகிறது. இராஜா சர். அண்ணாமலை செட்டியார் தோற்றுவித்ததே அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

**விபுலானந்தர்**

இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழத்தின் முதல் இசைத்தமி பேராசரியராக விளங்கினார் இவர் இலங்கை நாட்டவர். இவரது இயற்பெயர் மயில்வாகனன் என்பதாகும் இவர் துறவியாகத் தன்னை அர்ப்பணித்துக கொண்டபோது இராமகிருஷ்ண மடலாயத் தலைவர் சர்வானந்தர் குருபட்டம் சூட்டி அவருக்கு விபுலானந்தர் எனப் பெயர் வைத்தார். இவரது யாழ்நூல் இவரின் 14 ஆண்டுகால முயற்சியில் உருவான நூலாகும். இந்நூல் வழக்கொழிந்து போன இசைநூல் இலக்கணத்தை வகுத்துரைப்பது. 103 பண்களின் உருவாக்கத்தைத் தருவது

**தமிழிசை இயக்கம்**

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் 1943-ஆம் ஆண்டில் தமிழிசை இயக்கம் என்ற இயக்கத்தைத் தொடங்கி தமிழிசையை வளர்த்தார் அண்ணாமலை நகரில் முதல் தமிழிசை மாநாட்டினைக் கூட்டிப் பெருமை சேர்த்தார். சென்னையிஸ் தமிழிசைச் சங்கம் அமைய அண்ணாமலை அரசர் பேருதவி புரிந்தார்..

**குடந்தை ப.சுந்தரேசனார், வெள்ளைவாரணனார்**

குடந்தை ப.சுந்தசேனார் பண்ணாராய்ச்சி வித்தகர் என்று போற்றப்படுபவர் அறிவனார் ஆவார். இவர் இயற்றிய பஞ்சமரபு என்ற இசைநூலை ஈரோடு பொள்ளாச்சி மகாலிங்கத்தின் உதவியுடன் வெளியிட்டார். தற்கால அகத்தியர் எனப் புகழப்படும் வெள்ளை வாரணனார் தேவாரப் பண்ணாராய்ச்சியில் சிறந்தவர். விபுலானந்தர் எழுதிய யாழ்நூல் வெளிவர மிகவும் வெள்ளைவரணனார் உறுதுணையாக இருந்தார்.

**கவிகுஞ்சர பாரதியார்**

இவரது இசைப்பணியைப் பாராட்டி இவருக்குச் சிவகங்கை மன்னர் கௌளர் இல்லப மகாராசர் கவிகுஞ்சரம் என்ற பட்டத்தை வழங்கினார். இவர் மதுரை ங்கயங்கண்ணி மீது அடைக்கலமாலை கயற்கண்ணி மாலை, திருவேங்கட மாலை அழகர் குறவஞ்சி,திருமுருக விலாசம் போன்றவற்றையும் பல தனிப்பாடல்கள் இவர் இயற்றித் தமிழ் இசைப் பணி செய்தார்.

**நாடக வரலாறு**

இயல், இசை, நாடகம் என மூவகையில் அமையும் முத்தமிழி கடைசியாக அமைவது நாடகம், நாடகத்தைப் பாமர மக்களின் பல்கலைக்கழகம் என்பர். நாடக வேந்தர் டி.கே. சண்முகம் அவர்கள் பார்த்தும் கேட்டும் மகிழத்தக்க நாடகம் என்பர். நாடகம் தொல்லாப்பியர் காலத்திலேயே நடைமுறையில் உள்ளது. 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம் தொல்காப்பியம் உலகியல் வழக்கிற்கு மாறுபட்டதாக நாடகத்தைச் சுட்டும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தைக் கூத்து என்றும் நடிகர்களை கூத்தாடி என்றும் அழைத்தனர். சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களு கூத்தராற்றுப்படையும் ஒன்றாகும். மேலும் திருக்குறள் 'கூத்தாட் டவைக்குழாத் தற்றே' எனநாடகம் நடைபெறும் இடத்தைக் கூத்தாட்டவை என்றே குறிப்பிடுகிறது.

நாடக அமைப்பு முறையை முதற்கண் விரிவாகச் சுட்டும் சிலப்பதிகாரமாகும். சிலப்பதிகாரத்தில் வரும் அரங்கேற்று கழ நாடகமேடையிலிருந்து அதன் தன்மைகளையெல்லாம் விரிவாகச் சுட்டுகின்றது. இடம். பார்ப்போர் இடம், பக்கவாத்தியக் கருவிகம் நாடகம் நடிப்போர் இட இருக்குமிடம், திரைச் சீலைகளின் அமைப்பு எல்லாவற்றையும் இளங்கோவடிக சிலம்பில் நன்கு சுட்டுகின்றார். அடியார்க்கு நல்லார் உரை அக்காலத்தில் இருந்த பரதம், அகத்தியம், மதிவாணர் நாடகம். பரதசேனாதிபதியம் முதலிய நாடர் நூல்களைச்சுட்டுகின்றது.

நாடகத்தை நடிக்க மட்டும். படிக்க மட்டும், நடிக்க படிக்க இரண்டிற்கும் என மூவகையாகப் பகுப்பர். மேலும் நாடகத்தின் கதையடிப்படையில் நாடகம் இன்பியல், துன்பியல் என இரண்டு வகைப்படும். வேத்தியல்,பொதுவியல் என நாடகத்தை இரண்டாய்ப் பகுக்கும் வழக்கமும் பண்டைநாளில் இருந்தது. உயர்ந்தோர் காண்பது வேத்தியலாகவும், இழிந்தோர் காண்பது பொதுவியலாகவும் கருதப்பட்டது. பொதுவியல் என்பதே பின் வந்தோரால் கூத்து என அழைக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் கிடைக்கும் முதல்நாடகம் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம். இது வடமொழியில் அமைந்தது. கோவில்கள் நாடகம் நடத்திடப் பிற்காலச் சோழர் காலத்தில் பயன்பட்டது. இராசராச சோழனைப் பற்றி இராஜராஜ விஜயம் என்னும் நாடகம் தஞ்சை பெரிய கோயிலில் நடந்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. திருமூலநாயனார் நாடகம், பூம்புலியூர் நாடகம் நடத்தப்பட்டன. பூம்புலியூர் நாடகம் எழுதியமைக்குக் கமலாலய பட்டர்மன்னனிடம் நிவந்தம் பெற்றதைத் தென்னாற்காடு கல்வெட்டால்

அறிகிறோம். திருவிழாக் காலங்களில் மகளிர் நாடகம் நடத்திட மானியம் அளிக்கப்பட்டமையைத் திருநெல்வேலி மாவட்டத்து ஸ்ரீவல்லிபுரத்துக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. குலோத்துங்க சோழ நாடகம் நடத்தப்பட்ட வரலாறும் உள்ளது. இவை பிற்காலச்சோழர் காலத்தில் நாடகத்தின் தன்மையை விளக்கும்.

19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடகங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல ங்கள் அச்சேறின. சாதி பற்றிய நாடகங்கள் தோன்றின. ஓட்ட நாடகம் (கோவிந்த வீராயர்) காராளர் கார் காத்த நாடகம் (கிருஷ்ண சாமி செட்டியார்) சோகி நாடகம் ப்ராயலு முதலியார்). இக்காலத்தில் தோன்றிய நாடோடிக் கதைகளின் சுவையான குதிகள் நாடகமாக்கப்பட்டன. தமிழகத்தில் வழங்கிய கதைகளைத் தழுவிச் சில ள் தோன்றின. அவற்றுள்ஆரவல்லி சூரவல்லி நாடகம், மதுரைவீரன் விலாசம் கியன குறிப்பிடத்தக்கன. வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தேசிங்கு ராசன் 'தேசிங்கு ராஜ விலாசம்' எனவும், சோழவரலாற்றை அடிப்படையாகக் கொண்ட சோழ விலாசம்' எனவும் தலைப்பிட்டு நாடகமாகியது.

தஞ்சை சரபோஜி மன்னன் நாடகத்திற்குப் பெரிதும் ஊக்கமளித்தான். நிம்மன்னன் காலத்தில் நாடகத்தில் உரைநடை மிகுதியும் இடம்பெற்றது. இராமாயணத்தின் பல்வேறு பகுதிகள் இக்காலத்தில் நாடகத்தின் தப்பொருளாயின. பாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டு கீசகவிலாசம், விலாசம், பாரத விலாசம் போன்ற நாடகங்கள் தோன்றின. புகழேந்தி புலவரின் வெண்பா நளவிலாசம், தமயந்தி நாடகம் என அரங்கேறியது. பெரியபுராணமும் டாக்கோலம் பூண்டது. சிறுத்தொண்டர் விலாசம், திருநீலகண்டர் விலாசம் ழுந்தன. கந்தபுராணம் நாடகமாயிற்று. அப்பாவுப் பிள்ளை, காசி விசுவநாத முதலியார், அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், தஞ்சை நவாப் - கோவிந்தசாமி ராவ் ஆகியோர் குறிப்பிடத் தக்க நாடக ஆசிரியர்கள். மாரி மத்துப்பிள்ளையின் அநீதி நாடகம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றது.

இக்காலத்தில் இந்து சமய நாடகம் என்றில்லாது இஸ்லாமிய நாடகங்களும் சுப்பாசு நாடகம், அல்லி பாதுஷா நாடகம்) கிருத்துவ நாடகங்களும் (ஞான சளந்தரியம்மாள், ஞானத்தச்சன்) ஞானசௌந்தரியம்மாள் பின்னர் ஞானசௌந்தரி பெயரில் திரைப்படமாக வந்து பெரும் வரவேற்பைப் பெற்றது. மேலும் நூற்றாண்டில் சேக்ஸ்பியர் நாடகங்கள் தமிழ்ப்படுத்தி நாடகமாக்கப்பட்டன.

மனோன்மணியம் எனும் நாடகக் காப்பியம் தோன்றியது. பேராசிரியர் சோம் பிள்ளையின் இந்நாடகம் கதையைப் பொறுத்த அளவில் தழுவலே (லிட்டன் ன் இரகசிய வழி எனும் நூல்) கவிதை நாடகமாகிய இந்நாடகம். ரநடையாக்கிப் பலரால்

நடிக்கப்பட்டது. பின்னர்த் திரைப்படமாகவும் வளிவந்தது. இக்காலத்தில் பரிதிமாற் கலைஞர் தூயதமிழில் ரூபாவதி, கலாவதி. விசயம் எனும் நாடகங்கள் எழுதினார்.

முன்னர்க் குறிப்பிட்ட நவாப் கோவிந்தசாமி ராவ் இன்றைய ங்களுக்கு முன்னோடி எனலாம். தமிழ் நாடகத்தின் தாத்தா என்பர். இவரையடுத்து இத்துறையில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்தியோர் சங்கரதாஸ் சுவாமிகளும், பம்மல் சம்பந்த முதலியாரும் ஆவர்.

**தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் (1867 1922)**

தமிழ் நாடகத்தின் தலைமையாசிரியர் எனப்போற்றப்படும் இந் மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார். முதலில் நடிகராய் இருந்து அல்லி அர்ச்சுனா, அபிமன்யு சுந்தரி, பவளக்கொடி, சதியனுகயா,சத்ய சாவித்திரி சதிசுலோசனாமுதலியவை குறிப்பிடத்தக்க நாடகங்களாகும் மிகுச்ச எனும் வடமொழி நாடகம், சேக்ஸ்பியரின் ரோமியோஜ அசி மொழி பெயர்த்து மேடை ஏற்றியுள்ளார். நாடக உலகில் பெரிதும் மதிக்கப் டி.கே.எஸ்.சகோதரர்கள், பாடகர் எஸ். கிட்டப்பாபோன்றோர் இவரது

**பம்மல் சம்பந்த முதலியார்**

சுகுணவிலாச சபையை 1891இல் நிறுவியவர். நாடகத்தின் சீர்திருத்தங்களைச் செய்தவர். 90க்கு மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார்மு மனோகரா தாடகம்ங் பின்னர் இது திரைப்படமாகவும் வெளிவந்து புகழ் பெற்ற சிறந்த படைப்பாகும். இவரது ரத்னாவளி, புஷ்பவல்லி, வேதாள உலகம், யயாதி,விஜயா போன்றவை சிறந்த நாடகங்கள். இவரது நாடகங்கள் எள்ளல் சுவை மிக்கட இவரைத் தமிழ் நாடகத் தந்தை எனப் போற்றுவர். இவரது பெருமை கருந் அரசு ராவ்பகதூர் பட்டமும், இந்திய அரசு பத்மபூஷண் பட்டமும் கொடுத்து பாராட்டின. சர்.சி.பி. இராமசாமி ஐயர் இவர் நாடகத்தில் நடித்துள்ளார் ஜெட பெருமைக்குரியதாகும்.

நாடகத்திற்குப் பெண்கள் வருவதே தவறெனக் கருதிய காலத்தி எழுபதுக்கும் மேற்பட்ட பெண்களைச் சேர்த்து நாடகக் கம்பெனி நடத்தி பெருமைக்குரியவர் பாலாமணி அம்மையார். இவரது தாரா சசாங்கள் சிறப்பள் நாடகமாகும். இக்காலத்தில் (1926) விபுலானந்த சுவாமிகள் நாடக இலக்கண எழுதினார். 1944 இல் இந்தியாவிலேயே முதலாவதாக நாடகத்திற்கு மாதாடு கனிய நடத்தப்பட்டது. விடுதலைக்கு முன்பே நாடகங்கள் தமிழில் தனிச் செல்வாக்கும் பெறத் தொடங்கி விட்டன. எஸ். வி. சகஸ்ரநாமம் நாடகக்குழு ஆரம்பித்தது முக நாடகம் நன்கு வளரத் தொடங்கியது. நவாப் ராஜமாணிக்கம் நாடகத்துறைக்க அரும்பணியாற்றியவர். 1933இல் மதுரை தேவி பாலவிரோத சங்கீத சபைை ஏற்படுத்தினார். கண்டிப்பானவர் எனும் பெயர் பெற்றவர். பல்வேறு பட்டங் இவரைத் தேடி வந்தன. சம்பூர்ண ராமாயணம், கிருஷ்ணலீலா பலமுறை இயர் கம்பெனி நடத்திய

நாடகங்கள். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிறுவயதி இந்நாடகமேடையில் பணியாற்றித் தம் நடிப்பை வளர்த்துக்கொண்டார்.

எம்.ஆர். ராதாவின் ரத்தக் கண்ணீர் நாடகம் சிறந்த பாராட்டைப்பெற்றது நேஷனல் தியேட்டர்ஸ் மனோகர் பல்வேறு சமூக, புராண நாடகங்கள அரங்கேற்றினார். டி.கே.எஸ். சகோதரர்கள், அண்ணா, கலைஞர் கருணா பி.எஸ். ராமையா, என்.எஸ். கிருஷ்ணன், சிவாஜி, சோ, கே.பாலச்சந்தர், எஸ்.டி. சுந்தரம், அரு. ராமநாதன், மெரினா, பூர்ணம் விசுவநாதன், தக ஞானமூர்த்தி, மௌலி, கிரேஸிமோகன், சுந்தரம், விசு. எஸ். வி. சேகர் எனப் பலரும் நாடகத்துறை வளர்ந்திடக் காரணமாயினர். இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு தலைப்புகளில் நாடங்கள் கப்பட்டன. அவற்றுள் சிறப்பாகச் சில வகைகளைக் காணலாம்

**மொழி பெயர்ப்பு நாடகங்கள்**

19ஆம் நூற்றாண்டு முதல் தமிழில் மொழி பெயர்ப்பு நாடகங்கள் நான்றின வடமொழி சாகுந்தலம், மிருச்ச சுடிகா, சேக்ஸ் சியவை மொழி பெயர்க்கப்பட்டு நடிக்கப்பட்டன சேக்ஸ்பியரின் மெர்ச்செண்ட சுடிகா சேக்ஸ்பியரின் நாடகங்கள் கேபாலாச்சரியாரா வெனிஸ் வணிகள் என என். வேணு மொழிபெயர்க்கப்பட்டது. இத்தகைய மொழி பெயர்ப்பு நாடகங்களுக்கு இவர் கஃப் வெனிஸ் னோடி எனலாம்.

**விடுதலை இயக்க நாடகங்கள்**

`விடுதலையை மையமாக வைத்துப் பல நாடகங்கள் தோன்றின வள்ளையர் காலத்தில் தம் நாடகத்தில் வெள்ளையரைக் கேலி செய்து என். எஸ். தீஸ்வநாத தாஸ்

கொக்கு பறக்குதடி பாப்பா -அதன்

குறிப்பை உணர்ந்து கொள்வாய் பாப்பா என நாடகமேடையில் அஞ்சாது று எதிர் குரல் கொடுத்தார். தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலரின் கதரின் யெற்றியும், பம்பாய் மெயிலும் சிறந்த விடுதலை இயக்க நாடகங்களாகும்.

**புராண நாடகங்கள்**

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புராண நாடகங்களே திருந்திருந்தன. நவாப் ராஜமாணிக்கமும், கன்னையா நாயுடும், பின்னர் ஆர்.எஸ். ளோகரும் மிகுதியான புராண நாடகங்களை அரங்கேற்றினர். ஆர்.எஸ். ளோகரின் புராண நாடகங்கள் காட்சியமைப்பில் பார்ப்போரைத் விளக்கவைத்தன. மேலும் புராண எதிர்நிலைப் பாத்திரங்களை நல்லவர்களாகச் தரித்தார் (இலங்கேஸ்வரன்,

இந்திரசித், சூரபதுமன்) முக்கிய புராண சாடகங்கள் தசாவதாரம், பகவத்கீதை, ராமதாஸ், பிரகலாதன், துருவன், நந்தனார். யப்பன் முதலியனவாகும்.

**சித்திர நாடகங்கள்**

சமூக நாடகங்களை விடச் சரித்திர நாடகங்கள் அரங்கேற்றுவது பொருட் சேவை மிக்கதாகும். நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர் புராண நாடகங்கள் போ சிறந்த சரித்திர நாடகங்களும் அரங்கேற்றியுள்ளார். காடக முத்தரையன், க்கர் குறிப்பிடத்தக்கன. அரு. ராமநாதனின் இராஜராஜ சோழன் சிறந்த கம் சிவாஜி கணேசனின் வீரபாண்டிய கட்டபொம்மன், ஜஹாங்கீர், னாவின் பிரச்சார நாடகம் சந்திரமோகன், கலைஞரின் மணிமகுடம், ழ்வாணனின் புலித்தேவன் முதலியன.

சமூக நாடகங்கள்

பம்மல் சம்பந்த முதலியார் காலம் முதல் சமூகச் சீர்திருத்த நாடகங்கள் மிகுதியாக அரங்கேறின. டி கே.எஸ். சகோதரர்கள் மிகுதியான சமூக காடகங்களை அரங்கேற்றினர். தி. ஜானகி ராமனின் வடிவேலு வாத்தியார் எஸ்.வி. சகஸ்ரநாமத்தின் நாடகங்கள், அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி தேவன் மயக்கம், கலைஞரின் மந்திரிகுமாரி, நச்சுப் பொய்கை எம்.ஜி.ஆர். நாடக மன்றத்தின் சுமைதாங்கி, எம்.ஆர். ராதாவின் இரத்தக் கண்ணீர், லட்சுமி காந்தன், கே. பாலச் சந்தரின் நீர்க்குமிழி, சர்வர் சுந்தரம் எதிர் நீச்சல், சோவின் முகமது பின் துக்ளக், மனம் ஒரு குரங்கு, யாருக்கும் வெட்கமில்லை போன்றவை சமூக நாடகங்களாகவும். சீர்திருத்த நாடகங்களாகவும் அமைந்து மக்கள் வரவேற்பைப் பெற்றன. கலைவாண என். எஸ். கேயின் நாடகங்கள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த நாடகங்கள்.

**இலக்கிய நாடகங்கள்**

முதல் இலக்கிய நாடகம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம். பாரதிதாசனின் பிசிராந்தையார், சேரதாண்டவம், வ.சுப. மாணிக்கத்தின் நெல்லிக்கனி. மனைவியின் உரிமை, புலவர், குழந்தையில் காமஞ்சரி, பழநியின் அனிச்ச அடி பரிதிமாற் கலைஞரின்கலாவதி, மான விஜயம், கு. ராஜவேலுவின் அணை கடந்த வெள்ளம், சிங்கார வேலனின் வெள்ளி வீதி, ஊமைக்குயில், ஜசக் அருமை ராஜனின் முல்லை மாடம், அரங்கசாமியின் கனகை, அம்பாபலி கு. வெ. பால சுப்பிரமணியத்தின் கயற்கண்ணி, ஆறு அழகப்பனின் நாடகங்கள், அ.ச. ஞானசம்பந்தனின் தெள்ளாறு எறிந்த நந்தி முதலியன சிறந்த

கவிதை நாடகங்களாக விளங்குகின்றன. நாஞ்சில் ஆனந்தனின் இந்திரசித் புதுக்கவிதையில் அமைந்த முதல் நாடகம். இவை தவிர உரைநடையில் இன்று நூற்றுக்கணக்கில் நாடகங்கள் வெளிவந்துள்ளன. இந்திரா பார்த்தசாரதியின் ஔரங்கசீப், இராமானுசர் இன் குலாபின் ஔவை போன்ற நாடகங்கள் பழைய வரலாற்றை எடுத்துக்கொண்டு புதுமை நோக்கில் ஆய்கின்றன. இவர்கள் தவிர அசோகமித்திரன், ச.கலியாணராமன், சுஜாதா, பிரபஞ்சன், பரசுராம் ராமமூர்த்தி, ஜெயகாந்தன், அம்பை, கரிச்சான் குஞ்சு,சுந்தர பாண்டியன், சிற்பி போன்றோர் புதுமையான நோக்கில் நாடகங்கள் படைத்து வருகின்றனர்.

**வீதி நாடகங்கள்**

வீதி நாடகங்கள் எழுபதுகளில் மிகுதியாகத் தோன்றின. சென்னையைக் களமாய்க் கொண்டு அமைந்த நாடகங்கள் மிகுதி. மேடையின்றி, ஒப்பனையின்றி வீதியில் வரும் மக்களைக் கூட்டி வீதியில் நடத்தப்பட்டதால் இவை வீதி நாடகங்கள் எனப்பட்டன. இவை பெரும்பாலும் பகுத்தறிவு நாடகங்களாகவே இருந்தன. தீண்டாமையொழிப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்தல், குழந்தைத் தொழிலாளர்ப் பிரச்சினை, வர்க்கப் போராட்டம் இவைகளை மையமாய்க் கொண்டு எழுந்தன.

**வட்டார மொழி நாடகங்கள்**

அந்தந்த மாவட்ட வட்டார மொழிகளில் எழுதப்பட்ட இந்த நாடகங்கள் பில்லை. மக்கள் இக்கால கட்டத்தில் செறிவான பருமளவில் வெற்றி பெறவில்லை இலக்கிய மொழியையும் ஆதரிக்கவில்லை, கடுமையான தரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பன வட்டார மொழிகளையும்

**வானொலி நாடகங்கள் தொலைக்காட்சி நாடகங்கள்**

தொலைக்காட்சிக்கு முன்பு வரை வானொலி நாடகங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கின. பல வானொலி நாடக ஆசிரியர்கள் திரைப் திலும் நுழைந்து புகழ் ஈட்டினர். வானொலி ஓரங்க நாடகங்களையும், தொடர் நாடகங்களையும் ஒலிபரப்பியது. புத்தானந்த யோகி, துறைவன், சுகி, நாணல், திருச்சி. பேரா. சேஷாத்திரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வானொலி நாடகம் எழுதியோரில்

சுத்தானந்தபாரதி, பூரணம் விசுவநாதன், கோமதி சுவாமிநாதன், ஸ்.டி. சுந்தரம் போன்றோர் வானொலி நாடகத்திலிருந்து மேடை நாடகத்திற்கு வந்து சிறப்புப் பெற்றோர் எனலாம்.

தொலைக் காட்சி வந்ததும் வானொலி நாடகங்கள் செல்வாக்கினை இழக்க *அந்த இடத்தை தொலைக்காட்சிகள் பிடித்துக் கொண்டன. பொதிகை, சன், விஜய், * ஜெயா, ராஜ், கே.டி.வி எனப் பல தொலைக்காட்சி அலைவரிசைகள் போட்டி * போட்டுக்கொண்டு நாடகங்களை ஒளிப்பரப்புகின்றன. அத்துடன் சில நாடகங்கள் பெண்களை தொலைக் காட்சிப் பெட்டி முன் கட்டிப்போட்டு விடுகின்றன.

தொலைக்காட்சி நாடகத்தின் ஆதிக்கம் அந்த அளவு வளர்ந்துள்ளது. இது தாடகத்தின் வளர்ச்சி என்பதைவிட மக்களின் உழைப்பை முடக்கி விடும் என்பது உண்மையாகும்.

திரைப்படம் ஆதிக்கம் செலுத்திய பிறகும் தமிழ்நாட்டில் வீதிநாடகம் பரீக்ஷா, தெருமுனைக் கூத்து, தேடல், விடிவெள்ளி எனப்பல நாடக அமைப்புகள் இயங்கி வந்தன. அவை இன்றைய போட்டி உலகில் தொடர்ந்து காலூன்ற இயலாது பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

**சோதனை நாடகங்கள்**

வானொலியும், தொலைக்காட்சியும் மக்களுக்கு நன்மைதரும் நாடகங்களை அளித்து தொண்டு செய்ய வேண்டும். இத்தகையப் போட்டிகளுக்கிடையே புதிய சிந்தனைகளின் வெளிப்பாடாய் வெளிவரும் சோதனை நாடகங்கள் பெருட சோதனைகளைச் சந்திக்கின்றன. இந்திராபார்த்த சாரதியின் 'நந்தன் கதை நமுத்துசாமியின் 'நாற்காலிக்காரர்', பிரபஞ்சனின் 'முட்டை', ச. முருகபூபதியி தனித்திருக்கப்பட்டவர்கள்'சே. இராமானுசத்தின் 'வெறியாட்டம் ஆகியை குறிப்பிடத்தக்கனவாகும். எனினும் வெளிநாடுகளில் வெற்றி பெற்ற அளவிற்கு சோதனை நாடகங்கள் தமிழில் வெற்றி பெறவில்லை.

**இருபதாம் நூற்றாண்டு தமிழ் வளர்ச்சி**

இருபதாம் நூற்றாண்டு 'தமிழின் மறுமலர்ச்சிக் காலம்' என்று போற்றப்படுகிறது. மேலைநாட்டவர் தொடர்பு, ஆங்கிலக் கல்வி என்பனவும் தொழிற்புரட்சி, அறிவியல் வளர்ச்சி என்பனவும் இந்திய மக்கள் மனத்திலும் தமிழக மக்கள் மனத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தின. தமிழகத்தைப் பொறுத்தவரை, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி புதிய பாதையில் செல்ல,

(1) தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் (நாடகம்)

(2) உ.வே. சாமிநாத அய்யர் (பதிப்பு)

(3) பாரதியார் (கவிதை)

(4) புதுமைப்பித்தன் (சிறுகதை)

(5) பாண்டித்துரை தேவர் (தமிழ்ச்சங்கம்)

(6) திரு.வி.க (உரைநடை)

(7) மறைமலையடிகள் (தனித்தமிழ்)

(8) வையாபுரிப்பிள்ளை (ஆராய்ச்சி)

ஆகியோர் காரணமாய் அமைந்தனர்.

**உரைநடை வளர்ச்சி**

அச்சு இயந்திரங்களின் வரவால் தமிழில் முதலில் மலர்ச்சி பெற்றது உரைநடையே. பல வகையான கட்டுரை நூல்கள், சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்புகள், திறனாய்வு, உரையாசிரியர்கள் எனப் பல பிரிவுகளில் உரைநடை வளர்ந்தது. 1904ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற தமிழ் உரைநடையின் வரலாறு என்ற (History of Tamil Prose) ஆங்கில நூல் வி.எஸ்.செங்கல்வராய பிள்ளை என்பவரால் எழுதப்பட்டது. தொல்காப்பியத்தில் வரும் உரைநடைக் குறிப்புக்கள் தொடங்கி, சுந்தரம் பிள்ளை, சூரிய நாராயண சாஸ்திரியார் வரையிலான தமிழ் உரைநடை வளர்ச்சியைக் காய்தல், உவத்தல் அகற்றி ஆராயும் இந்நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**திரு.வி.க**

தமிழாசிரியராக இருந்து பின் பத்திரிகை ஆசிரியராகி, தொழிலாளர் தலைவராகவும் விளங்கிய திரு.வி. கல்யாண சுந்தரனாரின் உரைநடை எளியது; இனியது. இவரது பத்திரிகைத் தமிழை, தேசபக்தன், நவசக்தி என்ற பத்திரிகைகள் மூலம் அறியலாம். மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை என்ற நூல்களை எழுதியுள்ளார்.

**உ.வே.சாமிநாத அய்யர்.**

தமிழ்த் தாத்தா என்றழைக்கப்படும் உ.வே. சாமிநாத அய்யர் மணிமேகலை கதைச் சுருக்கம், புத்த தர்மம், உதயணன் கதைச்சுருக்கம் போன்ற பல உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**பேராசிரியர். எஸ்.வையாபுரிப் பிள்ளை**

வையாபுரிப் பிள்ளை தமிழ்ச்சுடர் மணிகள், சொற்கலை விருந்து, காவிய காலம், இலக்கியச் சிந்தனைகள், இலக்கிய உதயம் முதலிய உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**பாரதியார்**

பாரதி பரம்பரை என்றொரு பரம்பரையே படைத்திட்ட பாரதி சிறுகதைத் துறையில் மட்டுமன்றி கவிதை, பத்திரிகை, கட்டுரை, விமர்சனம், மொழிபெயர்ப்பு எனப் பல்துறையிலும் சிறந்து விளங்கியவர். இவரது சிறுகதைகள் பல சொந்தக் கதைகள் கட்டுக்கதைகள், நிகழ்வுக் கோவைகளாகவே நின்று விடுகின்றன. உயர்ந்த கலைவடிவம் இல்லை. கதைக்கொத்து, நவதந்திரக் கதைகள்-தொகுதிகள், ஆறில் ஒரு பங்கு, பூலோக ரம்பை, திண்டிம சாஸ்திரி, ஸ்வர்ணகுமாரி என்பன குறிப்பிடத்தக்கன. சின்ன சங்கரன் கதை, சந்திரிகையின் கதை என்ற இரண்டும் நாவலைப் போல் அமைந்தவை. புதுவையில் வசித்த போது 11 தாகூரின் கதைகளை மொழி பெயர்த்து இருக்கிறார். அதன் நடை உள்ளத்தைக் கவர்வது, இதுவே சிறுகதைத் துறைக்குப் பாரதி புரிந்த தொண்டு.

**ரா.பி. சேதுப்பிள்ளை**

பேச்சுத்தமிழ், எழுத்துத் தமிழ் இரண்டிலும் வித்தகர். இலக் இன்பம் தொனிக்கப் பேசுவதில் வல்லவர். சென்னைப் பல்கை கழகத்தின் முதல் தமிழ்ப்பேராசிரியர். இவரும். பேரறிஞர் அண்ணாவும் சமகாலத்தவர்கள். இருவர் பேச்சும் தமிழ் மக்களை வெவ்வேறு கோணங்களில் கவர்ந்தன. சொல்லின் செல்வர் பட்டம் பெற்ற இவர் நூல்கள் எழுதியுள்ளார். தமிழில் அக்காலத்தில் பட்டம் பெற்ற முதறிஞர் ஊரும் பேரும். வேலும் வில்லும், தமிழ் விருந்து. தமிழின்பம் நூல்நயம், வீரமாநகர், கால்டு வே சிலப்பதிகார நூல்நயம், திருக்குறள் நூல்ந எனப் பல நூல்கள் எழுதியுள்ளார். இவரின் தமிழின்பம் சாகித்திய அகாடமி விருது பெற்றது. தமிழகத்தின் ஊர்களைப் பற்றிய சுவையான நகைச் சுவையோடு கூடிய நூல் ஊரும் பேரும். இன்றைய மாணவர்கள் கட்டாயம் படித்துப் பயன் பெற வேண்டிய நூல். எதுகை, மோனை நயமிக்கவர் பேச்சிலிருந்து இதோ ஒருபகுதி.

'கடலே! அகத்தியர் பரப்பில் அடுக்கடுக்காக உயர்ந்து ஓங்கிநின்று குமரி என்ற பெருமலையும் உன் பாழும் வயிற்றில் பட்டு ஒழிந்ததே! ஐயோ நீ எங்கள் மண்ணைக் கடித்தாய்! ஆற்றைக் குடித்தாய் மலையை முடித்தாய் இப்படி எல்லாவற்றையும் வாரி எடுத்து வயிற்றில் அடக்கும் உன்னை வாரி என்றழைப்பது சாலவும் பொருத்தம்'.

**மு.வரதராசனார்**

தமிழ் இலக்கியச் சோலையில் புதிய மணம் பரப்பிய தென்றல் தனித்தமிழ் நடையில் புதினங்கள் பல படைத்துள்ளார். மொழித்துறையில் மொழி நூல், மொழி வரலாறு எழுதினார். சங்க இலக்கியங்களை எளிய தமிழில் மக்களுக்கு விருந்தாக்கியவர். சங்க இலக்கியம் பற்றிப் பாமரரும் பேசச் செய்தவர். சிலம்பின் பாத்திரப்படைப்புகள் இவர் எழுத்தால் உரம் பெற்றன. இவரது இலக்கியமரபு,

இலக்கியத்திறன், இலக்கிய ஆராய்ச்சி மூன்றும் சிறந்த இலக்கியத் திறனாய்வு நூல்கள். காந்தியடிகள். இளங்கோவடிகள், பெர்னாட்சா ஆகிய மூன்றும் தனி மனித வரலாற்றை விளக்கும் ஒப்பற்ற நூல்கள்.இவர் எழுதிய திருக்குறள் தெளிவுரை இன்றுவரை நூல் விற்பனையில் சிறப்பிடம் பெற்று வருகிறது. இவரை அறிஞர்களும், மாணவர்களும் மு.வ என்று அழைப்பர்.

**பிற நாடுகளில் ஹைக்கூ,சென்ட்ரியூ**

**ஹைக்கூ**

ஐக்கூ, கைக்கூ அல்லது ஹைக்கூ (Haiku) மூன்று வரிகளில்[1] முறையே ஐந்து, ஏழு, ஐந்து அசைகள் என 17 அசைகளைக் கொண்டு அமைக்கப்பெறும் இயைபற்ற ஜப்பானியக் கவிதை வடிவம் ஆகும்.[2] ஐக்கூ மிகக்குறைந்த சொற்களைக்கொண்டு நேரடியாகவும் மறைமுகமாவும் அதிக கருத்துக்களை வெளிப்படுத்துகிறது. 17ம் நூற்றாண்டில் பாசோ இதனை மேலும் மெருகூட்டப்பட்ட கலையாக உயர்த்தியபோது இவ்வடிவம் தனித்தன்மையடைந்தது. இது ஜப்பானின் மிகப்புகழ் பெற்ற கவிதை வடிவமாக இருந்து வருகிறது.

ஆரம்ப காலத்தில் ஐக்கூ கவிதை ஒக்கூ (hokku, ஃகொக்கூ) என்றே அழைக்கப்பட்டது. பின்னர் ஐகை என்று திரிந்து ஐக்கூ என்றாயிற்று. ஐக்கூ என்றால் அணுத்தூசி போன்ற சிறிய கவிதை என்று பொருள் கூறுகின்றனர்.ரெங்கா எனப்படும் பெரிய ஜப்பானிய கவிதை வகையின் தொடக்கப் பகுதியாக ஹைக்கூ உருவானது.

**ஜப்பானிய மொழியில் ஹைக்கூ**

ஜப்பானிய மொழியில், ஹைக்கூ பாரம்பரியமாக ஒற்றை வரியாக அச்சிடப்படுகிறது, அதே சமயம் ஆங்கிலத்தில் ஹைக்கூ பெரும்பாலும் மூன்று வரிகளாகத் தோன்றும், இருப்பினும் வேறுபாடுகள் உள்ளன. டாங்கா போன்ற ஹைக்கூவுடன் தொடர்புடைய பல ஜப்பானிய கவிதை வடிவங்களும், ஹைபூன் மற்றும் ஹைகா போன்ற ஹைக்கூவை உள்ளடக்கிய பிற கலை வடிவங்களும் உள்ளன .

ஜென் பௌத்தம் ஹைக்கூ கவிதையின் பிறப்பிடமாகத்திற ஜென் குருக்கள் தமது ஆன்மீகத்தின் கண நேர அனுபவங்களைச் சிக் பதிவு செய்ய வடித்துக் கொண்ட வடிவமே ஹைக்கூக் கவிதையில் ஆகும். இந்த ஹைக்கூ கவிதைகள் ஜப்பானியர்களைப் போன்ற சிறியதாகவும், உள்ளடக்கத்தில் ஆழமாகவும் காணப்படுகின்றன.

இக்கவிதை ஜப்பானில் பிறந்திருந்தாலும் சீனாவில் அதன் ஊன்றியிருக்கிறது காரணம் ஹைகூவை இயற்றிய ஜப்பானிய பெருங்க பௌத்தத்தோடு தொடர்புடையவர்கள். ஜப்பானிய ஹைகூவின் கர்தர்தாக்களாக பாஷோ, பூஸன், ஐசா, ஷிகி என்ற நால்வர் குறிப்பிடப்படுகின்ற இவர்களுள் பாஷோ என்பவரே ஹைகூவின் ஆதிகவி எனச் சிறப்பிக்கப்படுகி ஹைக்கூவின் தொடக்க காலப் பெயர் ஹொக்கூ என்பதாகும். இக்கவிதையின் பெயரை 'ஹெக்கு' என்று பாரதியார் தன் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுவை (ஹை-கடுகு கூ-உலகம்)கடுகு போன்று சிறிய கவிதை வடிவில் உலகள கருத்துக்களைச் செறிவுடன் செறித்து வைக்கச் செப்புப்போல் இடந்தரும்.

எரியும் பிணங்கள்

வெட்டியான் வீட்டில்

சமையல்

அமுதபாரதியின் கவிதையும்.

பசித்த குழந்தைகள்

கஞ்சி காய்ச்சுவான் தந்தை

சுவரொட்டிகள் ஓட்ட

மித்ராவின் கவிதையும் படம்பிடிக்கின்றன. ஆகஸ்ட் 15 நாடு சுதந்திரம் உற்ற நாள். இந்நாளில்

"சுதந்திர தினம்

மனத்திற்குள் துக்கம்

வந்தது ஞாயிற்றுக்கிழமை" (பூக்கள் பறிப்பதற்கில்லை, ப. 32

எனத் துக்க உணர்வு தோன்றுவதாக நவதிலக்கின் கூகவிதை தெளிவுறுத்துகின்றது. நகைச்சுவையுடன் நாட்டின் நடப்பு நிலையை.

"இறுக்கிக் கட்டுங்கள்

இடுப்பு வேட்டியை

போகுமிடம் சட்டசபை" (சூரியத்துளிகள், ப.23)

"நலம் நலமறிய ஆவல்

மற்றவை நேரில்

கையூட்டுக்குக் கடிதம் எழுதியது லஞ்சம்" (கவிமுகில், சூரியத் துளிகள், ப.49)

"மணமகளின் அங்கக் குறை

நிவர்த்தி செய்யப்பட்டு விட்டதே!

தங்கம்" (சு.முரளிதரன், கூடைக்குள் தேசம்.ப.10)

மனக் கவிமுகில், சு. முரளிதரன் ஆகியோரின் கவிதைகள் எடுத்துரைக்கின்றது.

**சென்ரியூ**

ஹைக்கூவின் தத்துவ இறுக்கம் குறைந்த வடிவம் செரி சென்ரியூ என்ற புனைப் பெயரைக் கொண்ட கராய் செசி மோன் என்பவன்ற ஜப்பானியரின் கண்டுபிடிப்பே சென்ரியூ ஆகும் பழைமை, இருக்கம் என்னும் கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட வேண்டும் என்னும் கண்ணோட்ட குறும்பும் நகைச்சுவையும் மிக்க கவிதைகளை 1716 -1790 என்னும் வரையறைக்குள் தேர்ந்தெடுத்துச் சென்ரியூ பதிப்பித்தார் அக்கவிதைத் தெகு அப்பதிப்பாசிரியரின் பெயராலேயே சென்ரிய எனக் குறிக்கப்பட்டது. இந்தை கவிதைகளுக்கும் அப்பெயரே நிலைத்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது

"மதுக்கடைகளிலும் தேநீர்க்கடைகளிலும் ஜப்பானில் வளர்ந்த என்று இக்கவிதையைப் பற்றி ஈரோடு தமிழன்பன் குறிப்பிடு கின்றார் ஹைக் மற்றொரு வகையாகவும் இக்கவிதையை அறிஞர்கள் கருதுகின்றனர். மொழி ஹைகூ வகைப்பாடுகளைக் கொண்டவை என்று இயந்தை ஹைக்கூ (ஹைகூ), மானுட ஹைகூ (சென்ரியூ), இயற்கையும் மானுடமும் இணைந்த ஹைகூ(ஒட்டுமாங்கனி ஹைகூ) என்ற மூன்று பொருண்மைகனைக கொண்டது என்று ஜார்ஜ் ஸ்வீட் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். இவ்வறிகுநடைய கருத்தின்படி சென்ரிய கவிதை என்பது மிகுதியும் மானுடத்தை உள்ளடக்கிய கவிதை வடிவமாகத் திகழ்கின்றது எனலாம்.

சென்ரியூ கவிதைக்குரிய தனித்தன்மையை, 1. ஆழமற்றது 2.வேடிக்கையானது. 3.விடுகதை போன்றது. 4. நகைச்சுவையானது. பொன்மொழி போன்றது. 6. சுதந்திரமானது, 7. அங்கதம் பேசுவது என எலிசப்த் ஜாக்குவாஸ் என்ற அறிஞர் பட்டியலிட்டுக் கூறுகின்றார், ஹைகூவைப் போலலே மூன்று அடிகளில் சென்ரியூ கவிதை அமைந்திருப்பினும், ஹைகூவின் அங்கத் வடிவம் சென்ரியூ,ஹைகூ இயற்கை உலகில் பார்வை செலுத்துகிறது. சென்ர்பூ மக்கள், பொருள், சம்பவங்கள் ஆகியவற்றின் மீது பார்வையைக் குவிப்பது என்ற மேரிகேசல் என்பவரின் விளக்கம் ஹைகூவிலிருந்து சௌரியூவை வேறுபடுத்திக் காட்டுகிறது. மானுடத்தை முதன்மையாகக் கொண்டு நடைபெறும் நிகழ்வுகளை அங்கதச் சுவையோடும் நகைச்சுவை உணர்வோடும் செறிவான கவிதை வடிவத்தில் பதிவு

செய்து சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் நோக்குடையனவாக சென்ரியூ கவிதைகள் அமைந்துள்ளன எனலாம்.

தமிழில் அதிகமான அளவிற்கு சென்ரியூ கவிதைத் தொகுப்புகள் வெளிவரவில்லை. ஈரோடு தமிழன்பனின் ஒரு வண்டி சென்ரியூ என்னும் நூலே தமிழின் முதல் சென்ரியூ தொகுப்பாக விளங்குகிறது.

தொகுதிதான் முடிவாகவில்லை

தோல்வி முடிவாகி விட்டது"

தமிழன்பன் வெளிப்படுத்துகின்றார். மேலும்,

"ஆயிரம் பேரோடு

வேட்பு மனுத்தாக்கல்

ஐம்பது வாக்குகள்

சட்டம் ஒழுங்கைக்

காப்பாற்ற முடியவில்லை

சட்டசபையில்"

என்னும் கவிதைகளும் அரசியல் அங்கதத்தையே புலப்படுத்துகின்றன.

"மழைநாள் கவலை

காளான்களை எண்ணுவதா?

கட்சிகளை எண்ணுவதா?"

என்ற கவிதை இயற்கையின் வழிப்பட்ட அரசியல் அங்கதமாக அமைகின்றது.

கல்லூரியிலிருந்து

மகன் கடிதம்

கடன்களால் படிக்கும் அப்பா”

என்ற சென்ரியூ கவிதை நிகழ்கால நடுத்தர வர்க்கப் பொருளாதாரப் போராட்டத்தை தெளிவுறுத்துகிறது.

**வினாக்கள்**

**பகுதி அ 1X10=10**

1. விடுதலை நாளிதழின் ஆசிரியர் யார்?
2. இசையின் ஏழு வகைககளை கண்டறிந்தவர்கள் யார் ?
3. தமிழிசை இயக்கத்தைத் தொடங்கியவர்?
4. ஆபிரகாம் பண்டிதரின் இசைத்தமிழ் நூல் எது?
5. நாடக அமைப்பு முறையை விரிவாகச் சுட்டும் காப்பியம்?
6. தமிழ் நாடகத்தின் தலைமையாசிரியர் எனப்போற்றப்படுபவர்?
7. ரா.பி.சேதுப்பிள்ளையின் சாகித்திய அகாடெமி விருது பெற்ற நூல் எது?
8. திரு.வி.க வின் பத்திரிக்கை எது?
9. நாடகத்தின் வகைகள் இரண்டனைக் குறிப்பிடுக.
10. ஹைக்கூ எந்த நாட்டில் தோன்றியது?

**பகுதி ஆ 5X5=25**

1. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ஆறுமுக நாவலர் – குறிப்பு வரைக.
2. புதுக்கவிதையின் இலக்கணம் எழுதுக.
3. மறைமலையடிகள்,திரு.வி.கவின் உரைநடைப் பணிகளை எழுதுக.
4. சிறுகதையில் பெண் எழுத்தாளர்கலின் பங்கினை எழுதுக.
5. நாவலின் தோற்றம் குறித்து எழுதுக.

**பகுதி இ 8X5=40**

1. நாளிதழ்களின் வரலாற்றை விளக்குக.
2. இசைத்தமிழின் வளர்ச்சியைக் கட்டுரைக்க.
3. நாடகத்தின் வகைகளை எழுதி விள்க்குக.
4. இருபதாம் நூற்றாண்டு தமிழ் வளர்ச்சியை கவிஞர்கள் வழி விளக்குக.
5. ஹைக்கூ,சென்ட்ரியூ கவிதைகளை ஆராய்க.

**பார்வை நூல்கள்**


1. தமிழ் இலக்கிய வரலாறு,மது.ச.விமலானந்தன்,அபிராமி பதிப்பகம், சென்னை,2002
2. தமிழ் இலக்கிய வரலாறு,கி.ராசா,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை,2020
3. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழண்ணல்,பாரி நிலையம், சென்னை,2022
4. தமிழ் இலக்கிய வரலாறு, மு.வரதராசன்,சாகித்திய அகாதெமி,புது தில்லி
5. 4. தமிழ் இலக்கிய வரலாறு,,மு.அருணாச்சலம்,முனைவர் இராஜா வரத் ராஜா, ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை



**முனைவர் ஆ.உஷா,**

உதவிப்பேராசிரியர்,

தமிழியல் துறை,

மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி.

9489303608

ushaskv23@gmail.com